# தேசிய சமாதானப் பேரவையின் அறிக்கைகள்

2008-2011

இலங்கை தேசிய சமாதானப் பேரவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேசிய சமாதானப் பேரவையின் அறிக்கைகள்

2008–2011

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசிய சமாதானப் பேரவையின் அறிக்கைகள்

## 2008–2011

ஜெஹான் பெரேரா

இலங்கை தேசிய சமாதானப் பேரவை

2014

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| தலைப்பு | : | தேசிய சமாதானப் பேரவையின் அறிக்கைகள் 2008-2011 |
| தமிழாக்கம் | : | மா.செ. மூக்கையா |
| பதிப்பு | : | 2014 |
| வெளியீடு | : | இலங்கை தேசிய சமாதானப் பேரவை<br>12/14, புராண விஹாரை வீதி, கொழும்பு - 06<br>தொ.பே.இல.- 0094 11 28818344, 2854127<br>தொலைநகல் - 0094 11 2819064<br>இணையத்தளம் - www.peace.srilanka.org<br>மின்னஞ்சல் - info@peace-srilanka.org |
| அச்சு | : | குமரன் அச்சகம், kumbhlk@gmail.com |
| ISBN | : | 978-955-1274-68-9 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

இலங்கையின் சமகால வரலாற்றில் பெருமளவு முக்கியம் வாய்ந்த காலப்பகுதியில் எழுதப்பட்ட ஊடக அறிக்கைகளே இந்நூலில் உள்ளடக் கப்பட்டுள்ளன. யுத்தத்தின் இறுதிகாலப்பகுதியில் மென்மேலும் உயிர் அழிவுகளை தடுத்து நிறுத்துவதற்காக மேற்கொள்ளப்பட்ட கடுமையான முயற்சிகள், எவ்விதமான அனுதாபமும் அற்ற வகையில் உதாசீனமாக பொதுமக்கள் நடத்தப்பட்டமை என்பவற்றையும் இறுதியாக புதிய ஆரம்பத்தின் மீது நம்பிக்கையினை வளர்த்தலின் முக்கியத்துவம் போன்றவற்றை இக்காலப்பகுதி கொண்டுள்ளது. இக்காலப்பகுதியில் சிவில் சமூகத்தின் குரல் மற்றும் யுத்தத்தின் அதிருப்தியாளர்களது குரல்கள் ஒடுக்கப்பட்டிருந்தன. இதற்கெல்லாம் பிரதான காரணம் ஒழுக்கம் மற்றும் அரசியல் சார்ந்த தடைகள் ஏதுமின்றி யுத்தத்தினை முன்னெடுத்து சென்று நடத்தியதாகும். அக்காலத்தில் நிலவிய அனைத்து பிரதான தேசிய பிரச்சினைகள் பொறுத்தும், அப்போது சமூகங்கள் கடுமையான முனைவாக்கம் பெற்றிருந்த நிலையிலும், தேசிய சமாதான பேரவையானது தனது கடமைகளை செய்வதில் பின்னிற்கவில்லை என்பதனை இவ்வெளியீடு பிரதிபலிப்பதாயிருக்கும்.

தேசிய சமாதான பேரவையானது, தான் ஒரு சமாதானத்துக்கான நிறுவனம் என்ற வகையில் யுத்தத்தினை முடிவுற செய்வதற்கான சிறந்த வழி பேச்சுவார்த்தை மூலமாகவே ஏற்பட வேண்டும் என்ற கருத்தினை தொடர்ந்தும் பின்பற்றி, அதன் கருத்துக்களை தடையின்றி வெளியிடுவதில் உறுதியாக இருந்து வந்துள்ளது. ஒவ்வொரு மனித உயிரின் மீதும் நாம் உறுதியாக ஏற்படும் என எதிர்பார்க்கப்பட்ட நன்மை முழு அளவில் மக்களுக்கு கிடைத்துள்ளது. மற்றையவர்களது வாழ்க்கை, துயரம் மற்றும் நம்பிக்கைகள் இன்னும் வரையரைக்குட் பட்டதாகவே காணப்படுவதில் சந்தேகங்கள் மற்றும் புதிய பிளவுகள் என்பனவும் எழுச்சியுற்றுள்ளன. இராணுவமயமாக்கம் மற்றும் மீள் குடியேற்ற பிரச்சினைகள், வாழ்வாதாரம் காணாமற்போனவர்களுக்கு நடந்தது என்ன? பிரச்சினைகளுக்கு நடந்தது என்ன என்பதை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டறிதல் என்பன தொடர்ந்தும் மக்களின் வாழ்க்கையை பாதித்த வண்ணம் உள்ளன. நாடு ஆட்சிப்பரப்பினை பொறுத்து ஐக்கிய படுத்தப்பட்ட போதிலும், மக்களது இதயங்களும் சிந்தனைகளும் அதிகரித்த வகையில் பிளவுக்குள்ளாக்கப்பட்டிருப்பதனையே புதிய சமயங்கள் ரீதியான பதட்டங்கள் எடுத்துக்காட்டுவனவாக உள்ளன.

பேராதனைப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் புவியியற்றுறை பேராசிரியரும், கிழக்குப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தருமான பேராசிரியர் மா.செ. மூக்கையாவிற்கு எனது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறேன். நீதி மற்றும் தேசிய நல்லிணக்கத்தில் பேராசிரியர் மூக்கையா கொண்டுள்ள பற்றும், அவற்றிற்கான அர்ப்பணிப்பின் அடையாளமுமே தேசிய சமாதான பேரவையின் ஊடக அறிக்கைகளை தமிழாக்கம் செய்த அவரது இப்பணியாகும் என நான் நம்புகிறேன். தேசிய சமாதான பேரவையின் பணிப்பாளர் சபையின் அங்கத்தவராகக் கடந்த பல வருடங்களாகப் பணியாற்றி வருவதுடன், இந்நூலில் பிரசுரிக்கப்பட்டுள்ள ஊடக அறிக்கைகளின் மூலம் தேசிய சமாதான பேரவையின் கொள்கைகளை உருவாக்குவ தற்கு பொறுப்பானவர்களில் அவரும் ஒருவராவார்.

ஒவ்வொரு ஊடக அறிக்கையும் பல்லின, பல்சமய அங்கத்த வர்களால் நீதியையும் நல்லிணக்கத்தினையும் பேணும் வகையில் உருவாக்கப்பட்டதாகும். தமிழாக்கம் செய்யப்பட்டவை ஆங்கில மூலத்தின் கருத்துக்களை வழுக்கள் எதுவுமின்றி காட்டுவதுடன், தமிழ் மொழியில் வாசிப்பவர்கள் விளங்கி கொள்ளும் வகையில் எழுதப்பட்டும் உள்ளமை சிறப்பு அம்சமாகும்.

**ஜெகான் பெரேரா**
நிர்வாக பணிப்பாளர்
இலங்கை சமாதானப் பேரவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

ஏறத்தாழ கடந்த 20 வருடங்களாக இலங்கையில் நிலவும் அரசியல் முரண்பாடுகளுக்கு, குறிப்பாக சிறுபான்மையினரது அரசியல் அபிலா சைகளை பேச்சுவார்த்தைகள் மூலமும், சனநாயக தத்துவங்களின் அடிப்படையிலுமே தீர்க்கப்படல் வேண்டும் என்பதனை பிரதான நோக்கமாகக் கொண்டு தேசிய சமாதானப் பேரவை செயற்பட்டு வருகிறது. இச்செய்முறையின்போது தேசிய சமாதானப் பேரவை நாட்டில் காலத்திற்குக் காலம் ஏற்படும் அசம்பாவிதங்கள், அரசியல் எதிர்நடவடிக்கைகள், அரசியல் மாற்றங்கள் உட்பட்ட முக்கிய நிகழ்வு களின் தொடர்பில், தனது நிலைப்பாடு குறித்து கருத்துக்களை அறிக்கை வடிவில் வெளியிட்டு, அவை தொடர்பில் மக்களிடம் விழிப்புணர் வினை ஏற்படுத்தி வந்துள்ளதுடன், அவற்றுடன் தொடர்புபட்டுள்ள வர்களும், தீர்மானங்கள் எட்டுவதில் பங்கு வகிப்பவர்களுமான தரப்பினரை அவை தொடர்பில் மீள சிந்திக்க வைக்க அழுத்தங்களை ஏற்படுத்தியும் வந்துள்ளது. அவ்வாறான அறிக்கைகள் சில சந்தர்ப்பங் களில் தேசிய சமாதானப் பேரவையினால் தனித்தும், வேறு சில சந்தர்ப்பங்களில் ஏனைய அரசு சாரா நிறுவனங்களுடன் இணைந்தும் வெளியிடப்பட்டுள்ளன.

இவ்வறிக்கைகள் பெரும்பாலும் அச்சு ஊடகங்கள் மூலமாகவே வெளியாகி வந்துள்ளன. 'தேசிய சமாதானப் பேரவையின் அறிக்கை கள்' (2008-2011) என்னும் இந்நூல் 03-01-2008 முதல் 02-04-2011 வரையான 39 மாத காலப்பகுதியில் தேசிய சமாதானப் பேரவை யினால் வெளியிடப்பட்ட 74 அறிக்கைகளின் தொகுப்பாகும்.

எதிர்வரும் காலத்தில் இலங்கையின் இனமுரண்பாடுகள் பற்றிய ஆய்வுகளை மேற்கொள்பவர்கள், அரசியல் துறை மாணவர்கள் மற்றும் அரசியல் ஆர்வலர்கள் உட்படப் பல்வேறு சாராருக்கும் தேவையான தகவல்களை வழங்குவதாக இருக்க வேண்டும் என்ப தற்காக, இவ்வறிக்கைகள் நூல் வடிவில் வெளியிடப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேசிய சமாதானப் பேரவையின் ஆளுனர் சபை அளித்த அங்கீகாரத்துடனும், பொறுப்புடனும் வெளியிடப்பட்ட இவ்வறிக்கைகளை தமிழாக்கம் செய்ய எனக்குத் தரப்பட்ட சந்தர்ப்பம் குறித்து அப்பேரவைக்கும் அதுவும் குறிப்பாக அதன் நிர்வாகப் பணிப்பாளர் கலாநிதி ஜெஹான் பெரேராவுக்கும் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

தமிழாக்கம் செய்யப்பட்ட பிரதிகளை மொழிப் பயன்பாடு குறித்து வாசித்து கருத்து தெரிவித்த தினக்குரல் தினசரி பத்திரிகையின் தலைமை ஆசிரியர் திரு.தனபாலசிங்கம் மற்றும் கணினியில் தட்டச்சு செய்த செல்வி பிரியா, செல்வி விமலேஸ்வரி ஆகியோருக்கும் தேசிய சமாதானப் பேரவையின் அலுவலர் திரு.பெனட் ஏ.சமந்தவிற்கும் தேசிய சமாதானப் பேரவையின் சார்பில் மனமார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொள்கிறேன்.

**பேராசிரியர் மா.சே.மூக்கையா**
தேசிய சமாதானப் பேரவை
2013

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | கைதான இணையத்தள ஆசிரியருக்கு நீதி வழங்குவதை உறுதிப்படுத்துங்கள் | 1 |
| 2. | தேசிய சமாதானப் பேரவை மீதான விசாரணை தொடர்பில் ஆளுனர் சபையின் அறிக்கை | 3 |
| 3. | கலாநிதி பாக்கியசோதி சரவணமுத்துக்கு சமாதானத்திற்கான பிரஜைகள் பரிசு | 7 |
| 4. | வெள்ள நெருக்கடியை எதிர்கொள்ள சிவில் சமூக, சர்வதேச உதவிகள் தேவை | 10 |
| 5. | இலங்கையின் தேசிய கீதம் இரு மொழிகளிலும் அவசியம் | 13 |
| 6. | சனாதிபதியின் இரண்டாவது பதவிக்காலத்தில் நாம் காண விரும்பும் மாற்றங்கள் | 16 |
| 7. | கற்றுக்கொண்ட பாடங்கள், நல்லிணக்க ஆணைக்குழுவின் உயர் நோக்கம் | 20 |
| 8. | எதிர்ப்புகள் மீது கவனம் செலுத்தி நல்லிணக்கத்தைக் காட்டுவோம் | 23 |
| 9. | ஒரு பக்கச் சார்பான யாப்பு சீர்திருத்தம் அறிவற்ற செயல் | 26 |
| 10. | வட, கிழக்கு மக்களின் கோரிக்கைகள் கவனத்தில் எடுக்கப்படுவது அவசியம் | 29 |
| 11. | புலிகளின் போர் நிறுத்த அறிவிப்பும் நம்பிக்கை குறித்த நெருக்கடியும் | 32 |
| 12. | கடந்த கால தவறுகளை மீண்டும் செய்யாதிருப்போம் | 35 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| 13. | நல்லிணக்கத்திற்கு பாதகமாக அமையும் எதேச்சாதிகார நடவடிக்கைகள் | 38 |
| 14. | ஐரோப்பிய ஒன்றியத்தின் கோரிக்கைகளை நிறைவேற்றினால் சர்வதேச ஆதரவு அதிகரிக்கும் | 41 |
| 15. | ஐரோப்பிய யூனியனின் வாய்ப்பை இலங்கை பயன்படுத்த வேண்டும் | 45 |
| 16. | எதிர்கால சவால்களை எதிர்நோக்க நல்லிணக்கத்திற்கான தேவைகள் | 48 |
| 17. | யாழ். மக்களின் அச்ச உணர்வுகளை தாமதமின்றி அகற்றுவது அவசியம் | 51 |
| 18. | நேச நாடுகளுடனான தனது உறவை இலங்கை கட்டியெழுப்ப வேண்டும் | 54 |
| 19. | தேசிய நல்லிணக்கத்தை விரைவுபடுத்த அரசுக்கு தேசிய சமாதான பேரவை ஆதரவு | 56 |
| 20. | நம்பகத்தன்மையை பாதுகாக்க நேர்மையுடன் செயற்படுங்கள் | 58 |
| 21. | மக்கள் எழுச்சியை ஒடுக்கும் சட்டங்கள் நீக்கப்பட வேண்டும் | 61 |
| 22. | தேர்தலின் பின்னர் நாடு எதிர்நோக்கும் சவால் | 65 |
| 23. | சனாதிபதித் தேர்தலில் வாக்களிக்க மக்களை ஊக்குவிக்க வேண்டும் | 68 |
| 24. | மக்களின் அபிப்பிராயத்தை பிளவுபடுத்தும் வகையிலான தேர்தல் பிரசாரங்கள் | 70 |
| 25. | இரக்க உணர்வு கூடிய வகையில் கொள்கைகளில் மாற்றங்கள் தேவைப்படுகின்றன | 74 |
| 26. | புதிய மீள் குடியேற்றப் பகுதிகளுக்கு அரசு சாரா நிறுவனங்கள் சென்றுவர அனுமதி வழங்கப்படுதல் வேண்டும் | 77 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

27. ஊடகவியலாளர்களது சுதந்திரத்தினையும் பாதுகாப்பினையும் உறுதி செய்யும் கடமை அரசாங்கத்திற்கு உண்டு 81

28. பயங்கரவாத தடுப்புச் சட்டம் பத்திரிகையாளர்களுக் கானதல்ல 84

29. இடம்பெயர்வுக்குள்ளாகிய மக்களுக்கு சனநாயக ரீதியிலான தெரிவுகளுக்கு வழிவிட வேண்டும் 86

30. உள்நாட்டில் இடம்பெயர்ந்தோர்களுக்கு சிறப்புப் பாடசாலை பரீட்சைகளை ஏற்பாடு செய்து அவர்களது நம்பிக்கையினை புதுப்பிக்கலாம் 89

31. மனித உரிமைகளுக்காக செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்தவும் 91

32. சட்டம் செயலற்று போயுள்ளமை தொடர்பாகவும் தமிழ் மக்கள் தண்டணைகளுக்காளாக்கப்படுகின்றமை தொடர்பாகவும் அரசாங்கம் ஆவன செய்தல் வேண்டும் 93

33. மாறுபட்ட அபிப்பிராயங்களுக்கான வாய்ப்புக்கள் குறைந்து செல்கின்றன 95

34. இலங்கையில் இடம்பெறும் முரண்பாடுகளுக்கு சமாதான முறையிலும் ஒழுங்குக்குட்பட்ட வகையிலும் முடிவினை கொண்டு வருவதற்கான சர்வதேச ஈடுபாட்டின் முக்கியத்துவம் 100

35. முரண்பாடு நிலவும் வலயங்களில் கண்காணிப்பு இருந்தால் மனிதாபிமானத்திற்கான மாற்றங்கள் ஏற்படுவது ஊக்குவிக்கப்படும் 103

36. குறுங்கால இலாபங்களுக்காக நீண்டகால ஸ்திரத்தினை இழந்து விடலாகாது 106


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

37. யுத்த களத்தைவிட்டு வெளியேறி
வரும் பொது மக்களது அச்சம்
அகற்றப்படுதல் வேண்டும் ஊடக அறிக்கை 108

38. போர் நடவடிக்கைகள் முற்றுப்பெற உத்தர
வாதங்கள் தேவை 110

39. தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம்
மீதான தடையும் சிக்கிக் கொண்ட பொதுமக்களும் 113

40. லசந்த விக்ரமதுங்கவின் படுகொலை 115

41. பாராளுமன்ற ஆய்வுக் குழுவின்
இடைக்கால அறிக்கை பற்றிய எமது கருத்து 117

42. மும்பாய் தாக்குதல் தொடர்பான
முக்கியத்துவமிக்க எதிர்நடவடிக்கை 119

43. சமாதான தலைவர்களது மனிதாபிமான
முயற்சிகளை ஆதரிப்போம் - ஊடக அறிக்கை 2 121

44. மனிதாபிமான நெருக்கடிகளின்போது சமயத்
தலைவர்கள் தலையிட முன்வந்துள்ளனர் 123

45. போர் நிறுத்தத்திற்கான புதிய பிரேரணை
அரசியற் சட்டவரம்பின்றி சாத்தியமாகாது 127

46. போதிய பாதுகாப்பளிக்கும் கடமை
அரசாங்கத்திற்கு உண்டு 129

47. மனித உரிமைகளுக்கான சட்டவல்லுனர்
மீதும் மற்றும் சிவில் சமூகப் பணியாளருக்கும்
எதிரான குண்டுத் தாக்குதல் அபாயகரமான
போக்கினையே குறிப்பதாகும் 132

48. மனிதாபிமான நோக்கங்களுடனான
நிறுவனங்களால் இப்போது முக்கிய
பங்கு வகிக்க முடியும் 134


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

49. இராணுவத்தின் அவசர தேவைகளுக்காக பொது மக்களது நலன்களை பாதுகாக்கும் நிலைவரங் களுடன் சமரசம் செய்து கொள்ளக் கூடாது 138

50. யூலை 1983 நினைவுநாள் : தொடர்ந்தும் இருக்கப்போகும் இணைப்புப் பாலங்கள் 141

51. தேசிய சமாதானப் பேரவையின் நிறைவேற்றுப் பணிப்பாளருக்கு சர்வதேச விருது 145

52 அரசியலமைப்புச் சபைக்கு புத்துயிர் வழங்கச் செய்து நல்லாட்சியினை உறுதி செய்வதற்கான வாய்ப்பு 147

53. முரண்பாடான கொள்கை பிரகடனங்கள் முழு நாட்டிற்கும் தீமையை ஏற்படுத்தும் 151

54. கிழக்கு மாகாண தேர்தலின் பின்னர் சனநாயகப் பெறுமானங்களை அதிகரிக்கச் செய்தல் வேண்டும் 153

55. ஊடக சுதந்திரம் மீது காட்டப்படும் முரண்பாடான நிலைப்பாட்டினால் குற்றவாளிகளை தண்டனையில் இருந்து விலக்களிப்பது ஊக்குவிக்கப்படுகின்றது 156

56. தண்டிக்கப்பட வேண்டியவர்களை பாதுகாக்கும் சூழலை சுதந்திர நிறுவனங்கள் சோதிக்கலாம் 159

57. பத்திரிகையாளர் கடத்தப்பட்டு பின்னர் விடுதலைச் செய்யப்பட்டார்: குற்றமிழைத்துவிட்டு தண்டனையிலிருந்து பாதுகாப்பு பெறும் நிலைமைகளை ஒரு முடிவுக்கு கொண்டு வருவோம் 162

58. தவறான சனநாய அமைப்பில் யுத்தத்திற்கு எதிராக குற்ற வழக்கு தொடர்வதால் சமாதானத்தை வென்றெடுத்துவிட முடியாது 164


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

59. மனித உரிமைகளுக்கு மதிப்பளிக்குமாறு
வெசாக் காலத்தில் விடுக்கும் கோரிக்கை 166

60. கிழக்கு மாகாணசபை தேர்தல்கள் மேலும்
மனமுறிவுக்கு வழிவகுத்துவிடக்கூடாது 170

61. உலகளாவிய பெறுமானங்கள்
பேச்சுவார்த்தைக்கு அடிப்படையை வழங்குகின்றன 174

62. வன்முறை வழியும் யுத்தமும் பெரும்
செலவினத்தைக் கொண்டனவாகும் 176

63. மடு மாதா புனிதத்தலம் போரின்
பாதிப்புக்களில் இருந்து பாதுகாக்கப்பட வேண்டும் 178

64. பத்திரிகையாளரை கைதுசெய்வது,
அவர்கள் எந்தளவுக்கு பாதிப்புக்குள்ளாகக்
கூடியவர்கள் என்பதனை சுட்டிக்காட்டுகின்றது 180

65. சட்டத்தின் அடிப்படையிலான ஆட்சி,
மனித உரிமைகள், அதிகாரப் பரவலாக்கம் என்பவற்றை
பன்மைவாத மாநாடு முக்கியப்படுத்துகின்றது 182

66 சனநாயக சட்ட வழியிலான ஆட்சிக்கு
படுகொலைகள் நேர் எதிர் முரணானவை 184

67 குண்டுவீச்சு வெறுப்பினையே
உருவாக்குவதுடன் சமரசம் ஏற்படுவதனை
மேலும் கடினமாக்கும் 186

68. மனித உயிர்கள் தொடர்ந்தும் காவு கொள்ளப்படுவதால்
யுத்த நடவடிக்கைகளில் மாற்றம் தேவைப்படுகிறது 188

69. போர் நிறுத்த ஒப்பந்தம் கைவிடப்படுமானால்
வன்முறைகள் கிடுகிடுவென உயரலாம் 191

70. தீவிரவாதமும் சுயநலமும் கொண்ட
அரசியலை ஒழித்துவிட்டு சர்வதேச
சட்டத்தினை நிலைநிறுத்துவோம் 194

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

71. சர்வதேச மனிதாபிமான நிறுவனங்களுடனான சிவில் சமூகத்தின் கூட்டொருமைப்பாடு 197

72. வன்முறை கலாசாரம் முழுநாட்டிலும் பரவிவிடலாம் என்னும் அச்சுறுத்தல் 204

73. பயங்கரவாதத்திற்கு எதிரான யுத்தம் அதிகரித்தளவிலான வன்முறையினை தோற்றுவிக்கின்றது 206

74. போர் நிறுத்த உடன்படிக்கை விட்டொழிக்கப்படுமேயானால் வன்முறை படிப்படியாக உயர்ந்து செல்லும் 210


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிக்கை -01

## கைதான இணையத்தள ஆசிரியருக்கு நீதி வழங்குவதை உறுதிப்படுத்துங்கள்

02-04-2011

இவ்வருடம் (2011) மார்ச் மாதம் 31ஆம் திகதி பொலிஸாரால் 'இலங்கை ஈ நியூஸ் (மின் - செய்தி)' இணையத்தள ஆசிரியர் பென்னட் ரூபசிங்க கைது செய்யப்பட்டு ஏப்ரல் 8ஆம் திகதி நீதி மன்றத்தில் ஆஜர் செய்யப்படும்வரை பிணையில் செல்வதற்கான அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. இந்த இணையத்தள செய்தி நிறுவனம் ஒரு வருடத்திற்கு மேலாக கடுமையான தாக்குதல்களுக்கு உள்ளாகி வருகின்றது.

இந்த இணையத்தள ஆசிரியரது கைதுக்கு முன்னர், இவ்வருடம் ஜனவரி மாதம் இவருடைய இணையத்தள அலுவலகம் தாக்கப்பட்ட தோடு அதன் கருவிகளும் நாசமாக்கப்பட்டன. அதன் நிருபர்களில் ஒருவரான பிரகீத் எக்னாலிகொட ஒருவருட காலமாக காணாமல் போயிருப்பதுடன், பொலிசார் இவ்விடயத்தில் எதுவித தகவலையும் இதுவரை கண்டறியத் தவறியுள்ளனர்.

பரந்தளவில் வாசிக்கப்பட்டு வரும் இந்த இணையத்தளம் (வெப்சைட்), அரசாங்கத்தைப் பற்றி விமர்சிப்பதுடன் எதிரணியினரது கருத்துக்களை ஆதரித்தும் செய்திகளை வெளியிட்டு வந்துள்ளது. அவ்வாறான ஊடகத்தின் ஆசிரியரை கைது செய்து தடுத்து வைத் திருப்பது தொடர்பாக தேசிய சமாதானப் பேரவை பெரிதும் கரிசனை கொண்டுள்ளது.

சுதந்திரமான அல்லது எதிரணிக்கு சார்பானதான ஊடகங்களுக்கு எதிரான தாக்குதலில் ஈடுபடுவோரை குற்றங்களுக்கு தண்டனையளிப் பதிலிருந்து விலக்களிக்கப்படும் கலாசாரம் தொடர்ந்தும் இருந்து வருகிறது. திரு.ரூபசிங்க தனது இணையத்தள அலுவலகத்தை தீ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைத்து அழிக்கச் செய்த சதித் திட்டத்திற்காகவும் அதன் மூலம் அரசாங் கத்திற்கு அகௌரவத்தை ஏற்படுத்தியமைக்காகவும், தீ வைப்பதற்கு ஒப்பந்தத்தின் அடிப்படையில் அவரால் ஏற்பாடு செய்திருந்த சந்தேகத் திற்குரிய நபரின் குடும்பத்தாரை அச்சுறுத்தியமைக்காகவும் பொலி சாரால் அவர் கைது செய்யப்பட்டதாக அரச ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

ஊடகங்கள் சுதந்திரமாக கருத்து வெளியிடும் உரிமையே சனநாய கத்தின் அடிப்படைத் தூணாகும். இருந்தபோதிலும் அரசினதும், தனியாரதும் ஊடகங்களினால் அது துஷ்பிரயோகம் செய்யப்படு கின்றது. அரசு சாரா நிறுவனங்களைச் சார்ந்த பிரிவினருக்கு எதிராக அதுவும் குறிப்பாக சமாதானத்தை கட்டியெழுப்புதல், நல்லிணக்கம், மனித உரிமைகள் என்பவற்றிற்காக பணிபுரியும் சாராரை அவர் களுடைய உணர்வுகள் மீது குற்றஞ்சாட்டியும் அவர்களை இழிவு படுத்தியும் தனிப்பட்ட முறையில் தாக்குதல்களுக்கு உள்ளாக்கியும் துன்புறுத்தும் சம்பவங்கள் இடம்பெற்று வருகின்றன.

எவ்வாறாயினும், சில அரசியல் காரணங்களுக்காக ஊடகவிய லாளர்களை சிறையிலடைப்பதனை தவிர்க்க முடியாதிருக்கலாம். பென்னட் ரூபசிங்கவின் கைது முன்னர் கூறிய பண்புகளை கொண்ட தாயிருப்பதால், நாம் அரசாங்கத்திடம் அவர் தொடர்பான பொலிஸ் விசாரணையை விரைவுபடுத்தி முடிவுக்கு கொண்டு வந்து நீதி வழங்கு வதனை உறுதி செய்யுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அறிக்கை - 02**

# தேசிய சமாதானப் பேரவை மீதான விசாரணை தொடர்பில் ஆளுனர் சபையின் அறிக்கை

22-03-2011

தேசிய சமாதானப் பேரவையின் (தே.ச.பே.) நிறைவேற்றுப் பணிப் பாளர் இலங்கை பொலிஸ் துறையின் குற்றவியல் புலனாய்வுத் திணைக்களத்தின் தலைமையலுவலகத்திற்கு கடந்த வாரம் அழைக்கப் பட்டிருந்தார். குற்றவியல் புலனாய்வு பிரிவினர் (கு.பு.பி.) அப்போது தாம் நிறுவனத்தின் (தே.ச.பே.) நிதி பெறப்படும் மூலங்கள், அதன் பங்காளர்கள், அதன் நடவடிக்கைகள் தொடர்பாக ஒரு பரிசீலனை செய்ய விரும்புவதாக அவரிடம் தெரிவித்தனர். குற்றவியல் புலனாய்வுப் பிரிவினர் தே.ச.பே. ஆற்றும் பணிகள் பற்றியும் வேறு பல தகவல்களையும் கேட்டறிந்தனர்.

இந்தப் புலனாய்வின் பின்னர் தேசிய சமாதானப் பேரவைக்கு எதிரான விமர்சனங்கள் அரச ஊடகங்களினாலும் தனியார் ஊடகங் களின் சில பிரிவினராலும் மேற்கொள்ளப்பட்டன. அவ்விமர்சனங் களின்படி தேசிய சமாதானப் பேரவை ஏனைய அரசுசாரா நிறுவனங் களுடன் சேர்ந்து யுத்தம் முடிவுற்றதன் பின்னரும் வெளிநாட்டு நிதி வழங்குநர்களிடமிருந்து நிதியினைப் பெற்று நிதிவழங்கும் பங்காளி களது ஆர்வங்களை பூர்த்தி செய்து வருவதாக குற்றஞ்சாட்டப் பட்டுள்ளது.

கண்கூடான சாட்சியோ அல்லது ஏதேனும் குற்றவியல் நடவடிக் கையில் ஈடுபட்டதாக குறிப்பான குற்றச்சாட்டுகளோ ஏதும் இல்லாத நிலையில், ஏன் கு.பு.பி. எம்மை விசாரணைக்கு அழைத்தனர் என்பது எமக்குப் புதிராகவுள்ளது. நிருவாக நிறுவனம் ஒன்றினால் பரிசீலனை செய்யப்பட்டிருக்கலாம். மாறாக குற்றவியல் புலனாய்வு திணைக்களப் பிரிவினால் எமது நிறுவனம் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டதனால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆளுனர் சபை கவலையடைந்துள்ளது. குற்றவியல் புலனாய்வு திணைக்களப் பிரிவினர் கோரிய தகவல்களில் பெரும்பாலானவை, ஏற்கனவே பாதுகாப்பு அமைச்சின் கீழ் இயங்கும் அரசாங்கத்தின் அரசு சாரா நிறுவனங்களுக்கான செயலகத்திடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அவற்றில் எமது செயற்றிட்டங்கள், நிதி பெறும் மூலங்கள், நிதி மற்றும் கணக்குப் பரிசோதனை அறிக்கைகள், அலுவலர்களின் சம்பள விபரங்கள் மற்றும் ஆண்டு அறிக்கைகள் என்பன உள்ளடங்கும்.

எனவே, குற்றவியல் புலனாய்வு பிரிவினர் எம்மை ஏன் புலனாய் வுக்கு உட்படுத்தினர் என்பதனை எம்மால் புரிந்துகொள்ள முடியா துள்ளது. அரசாங்கத்தினால் அரசுசாரா நிறுவனங்களை கண்காணிப்ப தற்கும், மேற்பார்வை செய்து ஒழுங்குபடுத்துவதற்குமான நிறுவன மான 'அரசுசாரா நிறுவனங்களுக்கான செயலகத்திற்கு' தே.ச.பே. அலுவலர்கள் முழுமையாக ஒத்துழைப்பு வழங்கியிருந்தனர்.

யுத்தம் அதிகரித்துச் சென்ற 1995ஆம் ஆண்டு காலப்பகுதியில் சமாதானத்திற்கான பிரசைகளது இயக்கத்திற்கு ஆதரவு வழங்கும் வகையில் தேசிய சமாதானப் பேரவை ஸ்தாபிக்கப்பட்டது. இலங் கையில் நிலவும் இன முரண்பாடுகளுக்கு வன்முறைகளற்ற வகையில் பேச்சுவார்த்தைகள் மூலம் ஐக்கியப்பட்ட இலங்கைக்குள்ளேயான அரசியல் தீர்வினையே நாம் நம்பிவந்ததுடன் இப்போதும் அதனையே நம்புகிறோம்.

யுத்தம் முடிவுற்று அரசாங்கப் படைகள் அதில் வெற்றியீட்டியுள்ள நிலையில், சிறுபான்மையின சமூகங்கள் அரசாங்கத்துடனும் பெரும் பான்மையினத்துடனும் நல்லிணக்கம் கொள்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பு. இத்தகைய நல்லிணக்கம் ஏற்படுவதற்கு சிறுபான்மையின சமூகங்கள் அரசாங் கத்துடனும் பெரும்பான்மையினத்துடனும் நல்லிணக்கம் கொள்வ தற்கான ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும் என்பதனையே நாம் விரும்புகின்றோம். இத்தகைய நல்லிணக்கம் ஏற்படுவதற்கு சிறு பான்மையின சமூகங்களிடம் அதிகார பரவலாக்கம் செய்யப்பட்டு அவர்களுடைய பொதுத்துறைசார்ந்த நிருவாக விவகாரங்களை தமிழ் மொழியிலும் செய்து கொள்ளக்கூடிய வகையில் ஏற்பாடுகள் செய்யப் படுதல் வேண்டும். எனவே, இன முரண்பாடுகளுக்கு ஓர் அரசியல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீர்வே உகந்தது என்பதிலும் அதற்காக சமூகங்களிடையேயும் இன்றைய அரசாங்கத்துக்கிடையேயும் நல்லிணக்கம் தேவை என்பதனையும் தேசிய சமாதானப் பேரவை தொடர்ந்தும் உறுதியாகக் கூறி வருகிறது.

தேசிய சமாதானப் பேரவை, அடிப்படையில் விழிப்புணர்வினை ஏற்படுத்துவதற்கும் ஆதரவளிப்பதற்குமான ஒரு நிறுவனமாகும். நாம் எமது நாட்டிலும் எமது மக்கள் மத்தியிலும் மனித உரிமைகள், சனநாயக உரிமைகளின் பாதுகாப்பு தொடர்பாக ஆதரவினை வழங்கு கிறோம். இன அல்லது சமய ரீதியிலான சிறுபான்மை மக்களது பிரச்சி னைகளுக்கு நியாயபூர்வமான தீர்வு தேவை என்பதனை பெரும்பான்மை மக்களிடையே உணரவைப்பது எமது நீண்டகால நோக்கமாகும். எமது அரசியலமைப்பின் அடிப்படையிலும், ஐக்கிய நாடுகள் சபையினால் உருவாக்கப்பட்டுள்ள பிரகடனங்கள், அவற்றுடன் தொடர்பாக செய்யப் பட்ட பிரகடனங்களது பெறுமானங்கள் மற்றும் தத்துவங்கள் என்ப வற்றை ஆதரித்தும் செயற்படுவதே எமது பணியாகும்.

எவ்வகையிலும் நாம் அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடப் போவதில்லை. நாம் புரியும் காரியங்கள் யாவும் பொதுவாழ்வுடன் தொடர்புடையதும் வெளிப்படையானதுமான காரியங்களேயாகும். தேசிய சமாதானப் பேரவையின் கடந்தகால வரலாறு முழுவதிலுமே அது எதுவித பிரிவினரையும் ஆதரிப்பதாக இருந்ததில்லை. இலங் கையின் சமாதானப் பேரவை மற்றும் ஊழியர்கள் ஆகியோர் வேறு பட்ட இனங்களையும் சமயங்களையும் அரசியல் நம்பிக்கைகளையும் சார்ந்தவர்களாகவே உள்ளனர்.

தற்போது ஏற்பட்டுள்ள குற்றவியல் புலனாய்வுத் துறையினரது புலனாய்வு நடவடிக்கைகள் தேசிய சமாதானப் பேரவையின் ஊழியர்கள், அவர்களது குடும்பத்தினர் யாவரையும் அச்சுறுத்துவதாக உள்ளதுடன், தாராளமானதும் சனநாயக பெறுமானம் கொண்ட கருத் துக்கள் தொடர்பாக உத்தியோகபூர்வமான சகிப்புத்தன்மை இல்லை என்பதே, பரந்த சமூகத்திற்கு அனுப்பும் எதிர்மறைச் செய்தியாக இருக்கும் என ஆளுனர் சபை கவலையடைந்துள்ளது.

இவ்வருடம் ஐ.நா. சபையின் மனித உரிமைகள் தினத்தின் கருப் பொருளாக ஐ.நா. பிரகடனத்தில் கூறியுள்ளவாறு 'மனித உரிமைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்பான பணியாளர்களை பாதுகாப்பதே அங்கத்துவ நாடுகளின் கடமை' என்பதே தெரிவுசெய்யப்பட்டுக் கொண்டாடப்படுகிறது.

தேசிய சமாதானப் பேரவையின் நிதி அறிக்கைகள் எமது வருடாந்த அறிக்கைகளில் வெளியிடப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டுள்ள 'நிறுவனங்களுக்கான சட்டத்தின்படி' (Company Law) அந்த நிதி அறிக்கைகள் பொது ஆவணங்களாகும். அவை இரகசிய ஆவணங்களும் அல்ல. எமது அனைத்து நிகழ்ச்சித்திட்டங்களும், நிதி வழங்கப்படுவோரது நிதிகளும் வருடாந்தம் பிரைஸ் வோட்டஹவுஸ் மற்றும் கூப்பர்ஸ் நிறுவனத்தினால் பரிசீலனை செய்யப்பட்டே வருகின்றது.

அவ்வாறு பரிசீலனை செய்யப்பட்ட கணக்கு விபரங்கள் 'நிறுவனங்களின் பதிவாளர்' (Registar of companies) அலுவலகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டு, பொதுமக்கள் எவராலும் பார்க்க வழிவகையும் செய்யப்பட்டுள்ளது. குற்றவியல் புலனாய்வுத் துறையினரது புலனாய்வு விரைவாக செய்யப்பட்டு அவர்கள் கண்டறிந்த முடிவுகளை எமக்கு அறிவிப்பர் என நாம் நம்புகின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலாநிதி பாக்கியசோதி சரவணமுத்துக்கு சமாதானத்திற்கான பிரஜைகள் பரிசு

14-02-2011

இலங்கை தேசிய சமாதானப் பேரவையின் 2010 ஆம் ஆண்டுக்கான சமாதானத்திற்கான பிரசைகளுக்கு வழங்கப்படும் முதற்பரிசு மாற்றுக் கொள்கைகளுக்கான மையத்தின் நிர்வாகப் பணிப்பாளர் கலாநிதி பாக்கியசோதி சரவணமுத்துவுக்கு வழங்கப்பட்டுள்ளது.

இப்பரிசு வழங்கப்படவுள்ளதாக 2010ஆம் ஆண்டு நவம்பர் மாதம் அறிவிக்கப்பட்டதன் பின்னர் 52 பெயர்கள் பிரேரிக்கப் பட்டிருந்தன. இவ்வாறான பரிசுக்கு நன்கறியப்பட்ட ஒரு சிவில் சமூக நிறுவனத்தில் முக்கிய பொறுப்பினை வகிக்கும் ஒருவர் அவருடைய ஊக்கமிக்க பணிகளினாலும் இடர்களை எதிர்நோக்கியும் பலவருடங் களாக நிலையான கருத்துக்களை பின்பற்றியும் வந்ததுடன், சமூகத் தினால் அறியப்பட்ட ஒருவராக இருக்க வேண்டும் என்ற தேசிய சமாதானப் பேரவையின் எதிர்பார்ப்புக்கு ஏற்ற வகையில் ஒருவர் தெரியப்பட்டமை குறித்து அது மகிழ்வடைகின்றது.

கலாநிதி சரவணமுத்து நாட்டின் இனப்பிரச்சினைக்கு ஓர் அரசியல் தீர்வு ஏற்பட வேண்டும் என்பதனை தொடர்ச்சியாக ஆதரித்து வந்துள்ளார். இதுவே தேசிய சமாதானப் பேரவையின் அடிப்படையான கொள்கையுமாகும். யுத்தம் நிகழ்ந்த காலப்பகுதியில் மாற்றுக் கொள்கை களுக்கான மையத்தின் தலைவர் என்ற வகையிலும் ஓர் அரசியல் விமர்சகர் என்ற தனது சொந்த பெருந்திறனின் அடிப்படையிலும் நிலையான வகையில் பேச்சுவார்த்தைகளின் மூலமாக ஒரு நீதியான அரசியல் தீர்வு பற்றியே பேசிவந்தார். கடந்த காலங்களில் மனித உரிமைகள், நல்லாட்சி, வேறான இனச் சமூகங்களுக்கிடையேயான அதிகாரப் பரவலாக்கம் என்பனவே இன முரண்பாடுகளுக்கான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீர்வின் முக்கிய பகுதி என்பதனை வலியுறுத்தும் ஆதரவாளராக இருந்து வந்திருக்கின்றார்.

கலாநிதி சரவணமுத்துவின் கடந்த காலப் பல்வேறு பணிகளில் இரண்டு பெரும் பணிகள் எம்மைக் கவர்ந்துள்ளன. குற்றமிழைத்தவர்களை தண்டனைகளிலிருந்து பாதுகாக்கும் கலாசாரத்திற்கும், விசாரணையில்லாத வகையிலான உயிர் கொலைகள், பயங்கரவாதம், சுதந்திரமாக அரசியல் அபிப்பிராயங்களை வெளியிடுபவர்கள் மீது சகிப்புத்தன்மை காட்டாத பண்பு என்பவற்றிற்கும் எதிராக அச்சமற்று, தனது பேச்சுக்களிலும் செய்கைகளிலும் ஊக்கத்துடன் செயற்பட்டவர் என்பது ஒன்றாகும். இத்தகைய அவருடைய பண்புகள் மூலம் சிவில் சமூகத்தில் உள்ள பலருக்கும் ஊடகத் துறையினருக்கும் தமது கருத்துக்களை வெளியிடுவதற்கும், சனநாயகமொன்றில் பிரசைகளுக்கு அளிக்கப்பட்டுள்ள சுதந்திரத்தின் அடிப்படையிலும் அரசியல் வாழ்வின் தத்துவங்களின் அடிப்படையிலும் விவாதங்களில் ஈடுபடுவதற்குமான தலைமைத்துவத்தை வழங்கியிருக்கிறார்.

யுத்தம் நிகழ்ந்து கொண்டிருந்த 2007ஆம் ஆண்டில் இலங்கை அரசாங்கம் கொழும்பில் தற்காலிகமாக வாழ்ந்து வந்த தமிழ் மக்கள் அனைவரையும் கொழும்பை விட்டு வெளியேறுமாறு விடுத்த அச்சுறுத்தலுக்கு எதிராக அவர் எடுத்த நீதிமன்றம் மூலமான எதிர் நடவடிக்கையாகும். மாற்றுக் கொள்கைகளுக்கான மையத்தின் தலைவர் என்ற வகையில் உயர் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்தார். அதன் மூலம் பிரசைகளது உரிமைகளை பாதுகாக்கும் வகையில் நீதித்துறை செயற்படுகின்றது என்ற நம்பிக்கையினை நிலவச் செய்வதனை எடுத்துக் காட்டியுள்ளமையை அவருடைய இரண்டாவது முக்கிய பணியாக நாம் மதிக்கிறோம்.

சிவில் சமூகத்தில் உள்ள தனிப்பட்டவர்கள் மனித உரிமைகளை பாதுகாக்கவும் மதிக்கவும், தகராறுகளை அமைதியான முறையில் தீர்த்துக் கொள்ளவும் சமூகங்களிடையேயும் சமூகங்களுக்குள்ளேயும் அதிகரித்த வகையில் புரிந்துணர்வை ஊக்குவிப்பதற்காக ஊக்கமளித்ததுடன், கருத்தில் உறுதியாகவும் செயற்பட்டமைக்காக அவர்களை கௌரவித்து ஊக்கப்படுத்தும் நோக்கத்துடன் 2010ஆம் ஆண்டு தேசிய சமாதானப் பேரவை 'பிரசைகள் சமாதானப் பரிசு' வழங்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திட்டத்தை உருவாக்கியது. அத்துடன் இலங்கை பிரசைகள் இலங் கைக்குள் நிலவிய போர்ச்சூழலில் ஆற்றிய பணிகள், தியாகங்கள் என்பவற்றிற்காகவும் அவர்களை கௌரவிப்பதனையும் இப்பரிசுத் திட்டம் நோக்கமாக கொண்டிருந்தது.

பரிசுக்கான அறிவித்தல் நாட்டின் தேசிய மொழிப் பத்திரிகைகள் மூலமாகவும் இணையத்தளம் மூலமாகவும் அறிவிக்கப்பட்டு, ஐந்து பேர் கொண்ட குழுவினால் பரிசுக்குரியவர் தெரிவு செய்யப்பட்டு சிபாரிசு செய்யப்பட்டு, அது இருபது அங்கத்தவர்களைக் கொண்ட ஆளுனர் பேரவையினால் ஏற்கப்பட்டு, பின்னர் ஒன்பது அங்கத்த வர்களைக் கொண்ட பணிப்பாளர் சபையினால் இறுதியாக அங்கீகரிக் கப்பட்டது. சங்காய் நகர அரசாங்கம் வழங்கிய சமாதானப் பரிசு ஒசாகா இசுமி, சர்வதேச மாதர் சுழற்கழக உறுப்பினர் (Soroptimist) நிறுவனம் மற்றும் தேசிய சமாதானப் பேரவை என்பவற்றினால் வழங்கப்பட்ட நிதியுதவி மூலமே இப்பரிசினை வழங்குவது சாத்திய மானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெள்ள நெருக்கடியை எதிர்கொள்ள சிவில் சமூக, சர்வதேச உதவிகள் தேவை

16–01–2011

இலங்கையில் அண்மைக் காலத்தில் பெய்த கடும் மழையினால் வெள்ளமும் நிலச்சரிவுகளும் ஏற்பட்டதனால் ஆயிரக்கணக்கானோர் வீடுகளை இழந்த அதேவேளை பலர் இறந்தனர். இலட்சக்கணக் கானோர் பாதிக்கப்பட்டுள்ளனர். வெள்ளத்தினால் ஏற்பட்டுள்ள நெருக்கடி தொடர்ந்து வருகிறது.

வெள்ளத்தினால் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கும் கிழக்குப் பகுதி ஏற்கனவே நீண்டகால யுத்தத்தினாலும் 2004 ஆம் ஆண்டு சுனாமி யினாலும் பாதிக்கப்பட்ட பகுதியாகும். சுனாமியுடன் ஒப்பிட்டுப் பார்க்கும் போது வெள்ளத்தினால் உயிரிழந்தவர்களது எண்ணிக்கை குறைவானாலும் விவசாய நிலங்கள் அழிந்துள்ளமை, உட்கட்ட மைப்புக்களின் அழிவு, வாழ்வாதார அழிவு என்பன யாவும் சேர்ந்து சுனாமியை விடக் கூடிய அழிவினை ஏற்படுத்தியுள்ளது எனலாம்.

அரசாங்கம் பாதுகாப்பு படையினரை பயன்படுத்தி உடனடி நடவடிக்கைகளை எடுத்த போது பாதுகாப்பு படையினரது உதவி நடவடிக்கைகளுக்கு உள்ளூராட்சி அமைப்புக்கள் ஆதரவினை வழங்கின. அத்துடன் உள்ளூர் மற்றும் சர்வதேச அரசு சாரா நிறுவனங் களது ஒத்துழைப்புடனும் பாதிப்புக்குள்ளாகிய பகுதிகளுக்கு அண்மை யில் உள்ள கிராமங்கள், நகரங்களை சார்ந்த சமூகத்தினரையும் சேர்த்து உதவிபுரிந்து வருகின்றனர். பேரிழப்புக்களை முகாமைத்துவம் செய்வதற்கான அரசாங்க அமைச்சர்களும் அதனுடன் இணைந்த அமைச்சர்களும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு விரைந்து சென்றனர். அரசாங்கம் தற்போது உடனடியாக வழங்கக்கூடிய நிவாரணங்களிலேயே தனது கவனத்தைச் செலுத்தி வருகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசாங்கம் எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய பிரச்சினைகள் தொடர் பாகவும் அறிந்திருக்கும்.

வெள்ளத்தினால் ஏற்படக்கூடிய கொள்ளை நோய்களை விட வெள்ளத்தின் பின்னர் அரிசிக்கான தட்டுப்பாடுகளும் ஏற்படலாம். ஏனெனில், இவ்வெள்ளம் காரணமாகப் பெருமளவிலான நெல் வயல் களும், விவசாயிகள் பெருமளவில் தமது பயிர்ச் செய்கை நடவடிக்கை களுக்காக தங்கியிருக்கும் நீர்ப்பாசன வசதிகளும் பெரும் பாதிப்புக் குள்ளாகியுள்ளன.

வெள்ளப் பாதிப்பின் காரணமாக நாடு உடனடியாகவும் குறுங்காலப் பகுதியிலும் ஒரு கடுமையான நிலைவரத்தினை எதிர்நோக்கியுள்ளது. இருந்த போதிலும் அரசினால் அவசரகால நிலைமை பிரகடனம் இன்னும் செய்யப்படவில்லை. அப்படி செய்தால் தாராளமான வகையிலும் விரைவாகவும் சர்வதேச ரீதியாக உதவி வழங்குபவர்கள் எமது துயரத்திற்கு தீர்வு காண வருவார்கள். இவ்வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அரசாங்கத்தினால் செய்யக்கூடிய அனைத்து உதவிகளையும் செய்து உதவுமாறு நாம் பரிந்துரை செய்கிறோம்.

தமது உடைமைகளை யுத்தத்தினாலும், சுனாமியினாலும் இழந் தவர்களுக்கு இப்போது ஏற்பட்டிருக்கும் பாதிப்பு, வாழ்க்கையினை மீண்டும் முதலில் இருந்து ஆரம்பிக்க வேண்டிய நிலைக்கு அவர்களைத் தள்ளுவதால் இவ்வாறான ஊக்கமிழப்பு தவிர்க்க முடியாத வகையில் ஏற்படுவதாக இருக்கும். இம்மக்கள் கடந்த பல வருடங்களில் பல்வேறு முறைகளில் கடும் தாக்குதல்களுக்கும் பின்னடைவுகளுக்கும் உள்ளாகி துயருற்றவர்கள் என்பதால் அவர்கள் மீது விசேட அக்கறை செலுத் தப்பட வேண்டும் என தேசிய சமாதானப் பேரவை கருதுகிறது.

வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களிடம் அவர்கள் எதிர் காலத்தில் தனித்து நின்று இப்பிரச்சினையினை சமாளிக்க வேண்டிய நிலை இல்லை என்றும் அரசாங்கமும் அரசு சாரா நிறுவனங்களும் அவர்களுடன் நீண்டகாலப் போக்கில் இணைந்து செயற்படுவார்கள் என்ற நம்பிக்கையினையும் உறுதியினையும் அவர்கள் மத்தியில் ஏற்படுத்துதல் முக்கியமானது என தேசிய சமாதானப் பேரவை நம்புகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த நெருக்கடியானது மிகப் பெரியதாக இருப்பதனால், சர்வதேச ரீதியாக உதவி வழங்குபவர்களதும் செயலூக்கம் மிக்கதும் பலமானது மான அரசு சாரா நிறுவனங்கள் மற்றும் சிவில் சமூகத் துறையினரதும் உதவிகள் என்பவை பெரிதும் பாராட்டுக்குரியதான வகையில் இருப்ப துடன், அரசாங்கத்தின் முயற்சிகளுக்கு துணையாகவும் அமையும். இவ்வாறான நிலைவரங்களை கவனத்திற்கொண்டு அவசரகால தேவைகளுக்கான பொறிமுறை ஒன்றினை இவ்வாறான இடங்களில் உதவிபுரியும் பங்காளிகளுடன் இணைந்து உருவாக்க வேண்டியது அரசாங்கம் மேற்கொள்ள வேண்டிய முக்கிய பணியாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் தேசிய கீதம் இரு மொழிகளிலும் அவசியம்

14-12-2010

இலங்கையின் அரசியலமைப்பில் (யாப்பில்) சிங்களமும் தமிழும் உத்தியோகபூர்வமான மொழிகளாக அங்கீகரிக்கப்பட்டுள்ள நிலையில் அரசாங்கமானது அனைத்து உத்தியோகபூர்வமான அரச விழாக்களிலும் தேசிய கீதம் சிங்களத்தில் மட்டுமே இசைக்கப்பட வேண்டும் என தீர்மானித்துள்ளதாகவும் வெகுவிரைவில் அரசாங்கத்தின் ஆணை ஒன்று இது தொடர்பாக அனுப்பப்படவிருப்பதாகவும் செய்திகள் வெளிவந்துள்ளன.

அப்படியானால் தமிழர்கள் பெரும்பான்மையாகவும், சிங்களம் பொதுவாகப் பேசப்படாத பகுதிகளிலுமுள்ள மக்கள், அவர்களால் விளங்கிக் கொள்ளமுடியாத மொழியிலேயே தேசிய கீதத்தினை இசைக்க வேண்டிவரலாம்.

ஒரு நாட்டின் ஐக்கியத்திற்கும், ஐக்கியமின்மைக்கும் ஒரு மொழி யானது பெருமளவுக்கு ஆற்றல்வாய்ந்த கருவி என்பதனை தேசிய சமாதானப் பேரவை அறிந்துள்ளது. இலங்கையில் ஆங்கிலம் அரச கரும மொழியாக இருந்தமையினை 1950ஆம் ஆண்டுகளில் அகற்றிய போது டாக்டர் கொல்வின் ஆர்.டி. சில்வா என்பவர், இரண்டு மொழிகள் என்றால் ஒரு அரசு இருக்கும். ஒரு மொழி மட்டும் தான் என்றால் இரண்டு அரசுகள் உருவாகி விடலாம் என்றும் எச்சரித்திருந்தார். இலங்கை சமூகத்தின் சிங்கள, தமிழ் இனங்களிடையே பிளவினை உண்டாக்கிய முக்கிய கருவியாகவும் கடந்த முப்பது வருட யுத்தத் திற்கான முன்னணிக் காரணமாகவும் இந்த மொழிப் பிரச்சினை காணப்பட்டதை கடந்த காலங்களிலிருந்து நாம் கற்றுக் கொள்ளத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தவறக் கூடாது. ஒரு மொழிக்கு ஏற்படும் அச்சுறுத்தல் அல்லது அந்தஸ்தினை குறைத்தல் என்பது அம்மொழி சார்ந்த சமூகத்திற்கான அச்சுறுத்தல் அல்லது அந்தஸ்து குறைத்தலாகவே பார்க்கப் படுகின்றது.

குறிப்பாக யுத்தத்தின் பின்னர் அரசாங்கம் பெரும்பான்மை இனமும் சிறுபான்மை இன சமூகங்களும் அமைதியாகக் கூடிவாழ்வது தொடர்பான பிரச்சினைகள் பற்றி சிந்திக்க வேண்டும். அத்துடன் அனைவரும் சமத்துவம் கொண்ட பிரசைகள் என்ற உணர்வைப் பெறுவதற்கான வாய்ப்பினையும் ஏற்படுத்த உறுதி செய்ய வேண்டும். கனடாவில் இரண்டு பெரிய சமூகங்களிடையில் பதற்றங்கள் நிலவியதால் அரச விழாக்களில் இரண்டு மொழிகளிலும் தேசிய கீதம் இசைக்கப்பட்டதுடன், வழக்கமாக தேசிய கீதத்தில் ஆங்கிலம், பிரான்சிய மொழிகளிலான கவிதை அடிகள் இணைக்கப்பட்டே இசைக்கப்பட்டது.

ஏழு மில்லியன் மக்களையே கொண்ட சுவிற்சர்லாந்தில் ஜேர்மன், பிரான்ஸ், இத்தாலி, ருமான்ட்ஸ் ஆகிய நான்கு மொழிகளிலும், தென்னாபிரிக்காவில் ஸோசா, ஆப்ரிக்கன், ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும் நாலு மில்லியன் மக்களையே கொண்ட நியூசிலாந்தில் இரண்டு மொழிகளிலும் தேசிய கீதம் இசைக்கப்படுகின்றது.

நியூசிலாந்தில் ஆங்கிலம், மாவோரி மொழிகளில் தனித்தனியே தேசிய கீதம் உருவாக்கப்பட்டுள்ளதுடன், மாவோரி மொழியிலேயே முதலில் தேசிய கீதம் இசைக்கப்படும். 4 மில்லியன் மொத்தக் குடித்தொகையில் மாவோரி மொழி பேசுபவர்கள் ஐந்து இலட்சத் திற்கும் குறைவான 13 வீதமானோரே என்பதும் கவனத்தில் கொள்ள வேண்டிய விடயமாகும்.

கடந்த வருடம் சனாதிபதி மகிந்த ராஜபக்ச தமிழ் மொழிக்கும் இலங்கை தமிழ் மக்களுக்கும் உலகளாவிய தமிழ் மக்களுக்கும் கௌரவமளிக்கும் வகையில் இலங்கையின் தலைவராக முதன்முதலில் உரையாற்றியபோது தமிழிலும் உரையாற்றினார். இவ்வாறான உணர்வுடனான பாணியில் தேசப் பற்றுவாய்ந்த தலைவராகவும் எமது அரசியலமைப்பில் சிங்களமும் தமிழும் அரசகரும மொழி என

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழங்கியுள்ள உறுதி மொழியை கௌரவிக்கும் வகையிலும் தேசிய கீதத்தை இரண்டு மொழிகளிலும் இசைப்பதனை உறுதிப்படுத்து மாறும் அரசாங்கத்திடம் தேசிய சமாதானப் பேரவை கேட்டுக் கொள்கின்றது.

அத்துடன் இரு மொழிக் கொள்கையினை மதித்து தேசிய சமூக ஒருமைப்பாட்டினை உறுதி செய்யுமாறு பாராளுமன்றப் பிரதிநிதி களிடமும் வேண்டிக் கொள்கின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சனாதிபதியின் இரண்டாவது பதவிக்காலத்தில் நாம் காண விரும்பும் மாற்றங்கள்

19-11-2010

இலங்கையின் அரசியலில் அதி உயர்ந்த அதிகாரமுடைய பதவிக்கு சனாதிபதி ராஜபக்ச இன்று சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார். நாட்டில் யுத்தத்தினையும் பயங்கரவாதத்தினையும் ஒழித்துக்கட்டு வதற்குத் தேவையான தலைமைத்துவத்தினை வழங்கிய இலங்கையின் ஆயுதப் படைகளின் உயர் தளபதியாக இலங்கையின் பெரும்பாலான மக்களின் நம்பிக்கைக்கு அவர் பாத்திரமாகியுள்ளார்.

இவருக்கு முன்னர் பதவி வகித்தவர்களைப் போன்று சனாதிபதி ராஜபக்ச, தனது இரண்டாவது தவணையின் போது ஆயுத அல்லது ஏனைய சவால்களை எதிர்நோக்கப் போவதில்லை.

அவருடைய செல்வாக்கும் அதிகாரமும் காரணமாக சனாதிபதி சமாதானம், அமைதி மற்றும் சனநாயக வழியில் நாட்டை இட்டுச் செல்லக்கூடிய நிலையில் இருக்கின்றார். நாட்டில் சமாதானத்தை கட்டியெழுப்புவதற்கு அல்லது அபிவிருத்தியை ஏற்படுத்துவது தொடர்பாக இலங்கை எதிர்நோக்கும் பிரதான சவால் யுத்தத்தின் பின்னர் இன முரண்பாடுகளுக்கேற்ற அரசியல் தீர்வினைக் கொண்டு வருவதாகும்.

இதில் முக்கியமானவை யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட சிங்கள, தமிழ், முஸ்லிம் சமூகங்களைச் சார்ந்த அனைத்து மக்களும் ஏற்றுக் கொள்ளக் கூடியதானதும், நாட்டின் வெவ்வேறு பகுதிகளிலும் காலகட்டங்களிலும் இடப்பெயர்வுக்கு ஆளாக்கப்பட்டவர்களுக்கு நட்டஈடுகளை வழங்கி அவர்களை தனிப்பட்டவர்களாகவும் சமூகம் என்ற வகையிலும் மீள வலுவூட்டப்பட்டவர்களாகவும் உருவாக்குவ தாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனைத்து சமூகங்களையும் உள்ளடக்கியதான முழுமையான தேசிய கொண்டாட்டமே அனைத்து துறைகளிலும் சுதந்திரமான கூட்டு நடவடிக்கைகளின் ஆரம்பமாக இருக்கும். சனாதிபதி சத்தியப்பிரமாணம் செய்வதனை கொண்டாட வெகுவிமரிசையாக ஏற்பாடு செய்யப் பட்டிருந்த நிகழ்ச்சிகள் யாவற்றிலுமே மூன்று தசாப்த காலமாக முரண்பாடுகளின் துயரங்களை சுமந்து கொண்ட வடக்கு, கிழக்கு சமூகங்கள் சிறியளவில் கூடப் பங்கேற்காமை பெரும் ஏமாற்றத்தை அளித்துள்ளது.

உண்மையிலேயே நல்லிணக்கத்தை ஊக்குவிப்பதாக இருக்கு மானால், நாட்டில் ஏற்பட்டுள்ள சமாதானத்தின் நன்மைகளும் தேசிய நட்பின் சமரசங்களும் அச்சமூகங்களை சேர்ந்த மக்களுடனும் பகிர்ந்து கொள்ளப்படுதல் அவசியமாகும். அரசாங்கத்தின் சார்பில் இலங் கையிலும் வெளிநாடுகளிலும் இலங்கையின் சார்பில் பேச்சாளர்களாக பணியாற்றிய பல அரசாங்க அங்கத்தவர்கள் தமிழீழ விடுதலைப் புலிகளை இராணுவம் போர்களத்தில் தோற்கடித்ததனால் நாட்டின் பிரதான பிரச்சினை தீர்க்கப்பட்டு விட்டதாகவும் இப்போது அபிவிருத் திக்கான கதவுகள் திறக்கப்பட்டு விட்டதாகவும் கூறிவருகின்றனர். ஆனால், தமிழ் மக்களது அபிவிருத்திக்கும் அவர்களது வாழ்க்கைத்தர உயர்வுக்கும் சிறுபான்மையினம் மறைந்து காணாது போய்விட வேண்டியதில்லை.

ஏனைய நாடுகளின் அனுபவங்களிலிருந்து காலம் காலமாக நாம் அறிந்து கொள்ளக்கூடிய முக்கிய உண்மை ஒன்றுண்டு. அதாவது, மக்கள் பொருளாதார ரீதியாக அபிவிருத்தியடைகையில் அவர்கள் ஏதோ வகையில் சுயாட்சியினை பெற்றுக்கொள்ளவும் கூடியளவில் வற்புறுத்தி வருவார்கள் என்பதாகும். அதனை வேறான முறையில் ஆர்வத்துடன் வழங்கப்படாத விடத்தில் தீவிரவாதம் தோன்ற முடியும். தென்பகுதியில் தீவிரவாதம் தோன்றியது. வடக்கு கிழக்கில் பயங்கர வாதம் தோன்றியது. இவற்றின் தோற்றங்களுக்கு அங்குள்ள பிரச்சி னைகள் பூர்த்தி செய்யப்படாமையே காரணம் எனப்படுகிறது.

சனாதிபதி அவர்கள் இன முரண்பாடுகளுக்கான மூல காரணத்தை யும் யுத்தத்திற்கு பொறுப்பான காரணத்தையும் கண்டறிய வேண்டும். தமிழீழ விடுதலைப் புலிகளை வென்றுவிட்டதனால் அவ்வாறான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரணங்கள் நிலவவே இல்லை என்று கருதாது, முறையான அபிவிருத்தியினை ஏற்படுத்துவதன் மூலமே இனரீதியான கோரிக்கைகளை ஒழியச் செய்யலாம் என்றும் தேசிய சமாதானப் பேரவை பரிந்துரை செய்கிறது.

அரசியல் ஸ்திரத்தன்மை மற்றும் சமாதானமும் நீதியும் என்பன நிலவ வேண்டுமானால் சனநாயகம், மனிதவுரிமைகள் சுதந்திரமான நிறுவனங்களது பிரசன்னம் என்பவற்றின் மூலமாக ஏற்படக்கூடிய சட்டத்தின் வாயிலான ஆட்சியினாலேயே ஏற்பட முடியும் என்பது சர்வதேச சிந்தனைகளின் போக்காகும். நிறுவன ரீதியான பாதுகாப்புக்களால் மாத்திரம் பதவிகளை வகிப்பவர்கள், தம்மை நியமித்தவர்களது பிடிக்கு அடிமைப்படாது சுதந்திரமாக செயற்படுவர் என்றும் கூற முடியாது.

எனவே, நீதியை நிலைநாட்டும் நிருவாகத்தோடு தொடர்பான பதவிகளுக்கு உண்மை, நியாயம் என்பவற்றிற்கு மனச்சாட்சியின்படி மதிப்பளிக்கும் ஆண்களும் பெண்களும் எமக்கு தேவைப்படுகின்றனர். இவ்வாறான உயர் பதவிக்கானவர்களை நியமிப்பதற்கான எதுவித தங்கு தடையுமற்ற அதிகாரம் 18ஆவது திருத்தச்சட்டத்தின்படி சனாதிபதிக்கே வழங்கப்பட்டிருப்பதால் அதிகாரங்களையும் அந்தஸ்துக்களையும் கோரி நிற்காததும் நம்பிக்கைகுகந்ததுமான தனிப்பட்டவர்களை சரியாக தெரிந்து நியமிப்பது அவரது கடமையாகும்.

சனாதிபதி மகிந்த ராஜபக்ச தனது சனாதிபதி பதவியின் இரண்டாவது தவணையின்போது நாட்டை ஒரு சுபீட்சமான சகாப்தத்திற்கு இட்டு செல்ல உறுதிபூண விரும்புகிறார். இதற்காக அரசாங்கமானது உலகில் அங்கீகரிக்கப்பட்ட தத்துவங்களை நன்கு அறிந்து கொள்ள வேண்டியுள்ளது. உலகம், சட்டத்தின் வாயிலான ஆட்சி, அதிகாரத்தை பகிர்ந்து கொள்ளுதல், அபிவிருத்தியில் சிவில் சமூகங்களின் பங்கேற்பினை ஏற்றுக் கொள்ளுதல் ஆகிய தத்துவங்களில் ஊறிப்போயுள்ள காலம் இது.

இலங்கை சிறியளவு பண்ணையாளர்களையே கொண்டும் பெருமளவு கிராமிய குடித்தொகையினை கொண்ட நாடாகவும் இருப்பதனால், எமக்கு மக்களை மையமாகக் கொண்டதும் மக்களால் செயற்படுத்துவதுமான அபிவிருத்தியே தேவைப்படுவதால் அதற்காக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனைத்து சமூக மக்களையும் வலுப்படுத்தக்கூடிய அதிகாரப் பரவலாக்கம் தேவைப்படுகின்றது. இவற்றோடு வர்த்தகம், சுற்றுலாத் தொழில், வெளிநாட்டு முதலீடு என்பவற்றிற்காக மட்டுமன்றி, ஓர் இறைமை கொண்டதும் சுபீட்சமிக்கதுமான அரசாகவும் திகழுவதற்காக இலங்கை அதன் அயல்நாடுகளுடனும் சர்வதேச சமூகங்களுடனும் சுமுகமான உறவைப் பேணி பராமரித்து வருதல் வேண்டும்.

சனாதிபதி பதவியின் இரண்டாவது தவணை பதவிக் காலத்தில் இவற்றிற்கான மாற்றங்களையே நாம் காண விரும்புகிறோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிக்கை - 07

# கற்றுக்கொண்ட பாடங்கள், நல்லிணக்க ஆணைக்குழுவின் உயர் நோக்கம்

21-10-2010

தேசிய சமாதானப் பேரவை அண்மையில் சனாதிபதி நியமித்த 'கற்றுக் கொண்ட பாடங்களும் நல்லிணக்கமும்' தொடர்பான ஆணைக் குழுவிடம் தனது கருத்துக்களை சமர்ப்பிப்பதற்கான சந்தர்ப்பத்தை பயன்படுத்திக் கொண்டது. மே 2010ஆம் ஆண்டு, ஏன் யுத்த நிறுத்த ஒப்பந்தமும் சமாதான செய்முறைகளும் தோல்வியடைந்தன என்பத னையும் அதன் பின்னர் ஏற்பட்ட முரண்பாடுகளை ஏன் தவிர்க்க முடியாது போனது என்பதனையும், யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட வர்களுக்கு எவ்வாறு நஷ்டஈட்டை வழங்கலாம் என்பதனையும் தீர்மானிப்பதற்காக இவ்வாணைக்குழு நியமிக்கப்பட்டது.

யுத்தத்தின் இறுதிக் காலகட்டத்தில் மனித உரிமைகள் மீறப்பட்டு யுத்தக் குற்றங்கள் இழைக்கப்பட்டதாக நிலவும் அபிப்பிராயம் காரணமாக சுதந்திரமான சர்வதேச ஆணைக்குழுவை நியமித்து அவை தொடர்பாக விசாரிக்க வேண்டும் என்னும் சர்வதேச ரீதியான கருத்துக் களையும் கவனத்தில் கொண்ட வகையிலேயே இவ்வாணைக்குழு நியமிக்கப்பட்டது.

இலங்கையில் நிலவும் இனரீதியான முரண்பாடுகளுக்கு ஓர் அரசியல் தீர்வு ஏற்பட வேண்டும் என்னும் கருத்து தொடர்பான விழிப்புணர்வினை ஏற்படுத்துவதற்கும் அக்கருத்திற்கு ஆதரவு தெரிவிப்பதற்கும் தன்னை ஈடுபடுத்திக் கொண்டுள்ள தேசிய நிறுவனம் என்ற முறையில், எமது கருத்துக்களை உத்தியோகபூர்வமாக பதிவு செய்து கொள்ள கிட்டிய இவ்வாய்ப்புக் குறித்து நாம் பெரிதும் மகிழ்ச்சியடைகிறோம். ஆணைக்குழுவுக்கு வழங்கப்பட்டுள்ள ஆணை,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யுத்த நிறுத்த உடன்படிக்கை காலப்பகுதியை பற்றியும் அது ஏன் முறிவடைந்தது என்பது பற்றியும் இருந்ததுடன் அவ்வாணையைச் சூழ்ந்தே ஊடகங்களும் தமது கவனத்தை குவியச் செய்துள்ளமை யினையும் நாம் முற்றாக ஏற்றுக் கொள்கிறோம்.

யுத்த நிறுத்த உடன்படிக்கைக்கு உடன்பட்டதற்கான காரணம், அதற்கான பின்புலம் என்பன கேள்விக்குரியதாகியுள்ளன. அக்காலப் பகுதியில் நாடு சமாதானத்திற்கான மனப்பான்மையுடன் இருந்ததுடன் அப்போதைய அரசாங்கம் யுத்த உடன்படிக்கைக்கு ஒப்புக்கொண்ட மைக்கு நல்லெண்ணமே காரணமாயிருந்தது என்பதில் எதுவித ஐயமுமில்லை.

ஆணைக்குழுவுக்கு வழங்கப்பட்ட ஆணைகளும், அது சனாதிபதி யினால் நியமிக்கப்பட்டது என்பதனால் அதற்கு இருக்கும் சுதந்திரமும் தொடர்பான முரண்பாடான கருத்துக்கள் பற்றியும் நாம் அறிந் துள்ளோம். இவ்வாறான கருத்து வேறுபாடுகள் காரணமாக இவ் ஆணைக்குழு கருத்து வழங்க வருமாறு விடுத்த அழைப்பை சர்வதேச நிறுவனங்களான சர்வதேச மன்னிப்புச் சபை, மனித உரிமைகள் விழிப்புக்குழு, சர்வதேச நெருக்கடிகள் தொடர்பான குழு என்பன நிராகரித்துள்ளன. அத்துடன் இந்த ஆணைக்குழு யுத்த நிறுத்த உடன் படிக்கை பற்றியும் அதன் விபரங்கள் பற்றியும் கண்டறிந்து வெளியிட வுள்ளமை குறுகியதும், குறுகிய ஆர்வத்துடனுமான அரசியல் நோக்கங் களுக்கு பயன்படுத்தப்படலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டின் பல பகுதிகளிலும் விசாரணைகளை குறிப்பாக வடக்கு, கிழக்குப் பகுதிகளில் மேற்கொள்வதனால் ஆணைக்குழுவுக்கு அதன் ஆணை உள்ளடங்கும் காலப்பகுதி பற்றி பல நேர்மையான தகவல்கள் பற்றிய சான்றாதாரங்களை பெற்றுக்கொள்ளக் கூடியதாயிருக்கும். தேசிய சமாதானப் பேரவையைப் பொறுத்தமட்டில் யுத்த நிறுத்த ஒப்பந்தமும் சமாதான செய்முறையும் ஏன் முறிவுற்றன என்பது பெருமளவுக்கு அறிவுசார் தொடர்புபட்டதாகவே இருக்கும் என்றே கருதப்படும். ஏனெனில், அக்காலத்தில் நிலவிய பிரச்சினைகள் இப்போது நடைமுறையில் இல்லாதிருப்பதனாலாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவேதான் ஆணைக்குழு கவனித்து செயற்பட வேண்டிய உயர் நோக்கங்களும் மிக முக்கியமான பிரச்சினைகளும் எம்மைப் பொறுத்ததே. யுத்த காலத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதியானதும், விரைவானதுமான முறையில் அவர்களது இழப்புக்களுக்கான மாற்றீடு களை வழங்க வழிமுறைகளை கண்டறிந்து கூறுவதுடன், நாட்டின் இனங்களுக்கு இடையே நியாயத்தையும் நல்லிணக்கத்தையும் கொண்டு வருவதற்கான அரசியல் தீர்வுக்கான வழிகாட்டலை ஊக்கு விக்கவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எதிர்ப்புகள் மீது கவனம் செலுத்தி நல்லிணக்கத்தைக் காட்டுவோம்

07-10-2010

முன்னாள் இராணுவத் தளபதியும் சனாதிபதி பதவிக்கான கூட்டு எதிரணியினரது வேட்பாளருமான ஜெனரல் சரத்பொன்சேகாவுக்கு 30 மாத சிறைத்தண்டனை இராணுவ நீதிமன்றத்தால் விதிக்கப்பட்ட துடன், அவருக்கு கடூழிய சிறைத்தண்டனையும் சனாதிபதியினால் நடைமுறையில் உள்ள சட்டத்தின் அடிப்படையில் உறுதி செய்யப் பட்டுள்ளமை தொடர்பில் மாறுபட்ட எதிர்மறையான பொது அபிப் பிராயம் நிலவுகிறது.

இதேவேளை, எதிரணியினரில் சில பிரிவினர் தீர்ப்புக்கு எதிராகவும் ஜெனரல் பொன்சேகா வைக்கப்பட்டுள்ள சிறையில் உள்ள நிலைமை தொடர்பிலும் பகிரங்கமாக எதிர்ப்பு தெரிவித்துள்ளனர். எதிரணியின் தலைவர் பாராளுமன்றத்தில் சனாதிபதிக்கு யாப்பில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைப் பயன்படுத்தி ஜெனரல் பொன்சேகாவுக்கு மன்னிப்பு வழங்கும்படியும் அல்லது இராணுவச் சட்டத்தினைப் பயன்படுத்தி சிறைத்தண்டனையை தள்ளிவைக்குமாறும் கேட்டுக் கொண்டார்.

ஜெனரல் பொன்சேகா சனாதிபதித் தேர்தலில் நாற்பது இலட்சம் வாக்குகளுக்கு மேலாக பெற்றவர் என்பதை அரசாங்கம் கவனத்தில் கொள்ளத் தவறக்கூடாது. அவருக்கு ஆதரவாக கூட்டு எதிர்க்கட்சி களில் இருந்து பிரசாரம் செய்தவர்கள் சிலர் இப்போது அரசாங்கத்துடன் இணைந்து கொண்டுள்ளனர். அவருக்கு வாக்களித்த ஏனையோர் அவர் சனாதிபதி பதவிக்கு போட்டியிட்டமைக்கு எதிராகவே தண்டிக் கப்பட்டுள்ளதாகவும் அவர் விடுதலை செய்யப்படவேண்டும் என்றும் பிரசாரம் செய்கின்றனர். அவருடைய பாராளுமன்ற பிரதிநிதித்துவம் பறிக்கப்பட்டமை இவற்றின் மீதான நம்பிக்கையை அதிகரிக்கச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யும். அமைதியாக இருக்கும் பெரும்பான்மையினர் அரசாங்கம் தனது பெருந்தன்மையினைக் காட்டி, அவரை தாமதமின்றி விடுதலைச் செய்யும் என்ற நம்பிக்கையுடனும் இருக்கின்றனர்.

யுத்தத்தின் பின்னரான நல்லிணக்கம் அர்த்தம் உள்ள வகையில் ஏற்படுவதானால் அது அரசியல் பேதங்களை மறந்து சமூகத்தின் அனைத்துப் பிரிவினரையும் உள்ளடக்கிய வகையில் ஏற்படுத்தல் வேண்டும். முன்னாள் போராளிகளுடனும் நேரடியாகவும் மறைமுக மாகவும் பாதிப்புக்குள்ளாகியவர்களுடனும் நல்லிணக்கம் ஏற்படுதல் நிலைத்து நிற்கும் பண்புடையதாக முடியும்.

ஜெனரல் பொன்சேகா இலங்கை இராணுவத்தை தலைமை தாங்கி தமிழீழ விடுதலைப் புலிகளை வென்றமைக்காக மாத்திரமன்றி, எதிரணித் தலைவர்கள் தொல்லைகளுக்கு ஆளாக்கப்படக் கூடாது என்பதாகவும் பொதுசன அபிப்பிராயம் எழுந்துள்ளது. அவருக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளும், விசாரணை முறைகளும் பல்வேறு குறைபாடுகளை கொண்டிருந்ததாக எதிரணியினர் எடுத்துக் கூறினர்.

இராணுவத்தினர் பதவியிலிருந்து (சீருடை அணிந்திருக்கையில்) அரசியலில் ஈடுபடுவதனை நாமும் அங்கீகரிக்கவில்லை. எதிரணி யினரது வாதங்களின் படி இராணுவ சீருடை அணிந்த நிலையில் அரசியலில் ஈடுபடுவதும் கொள்வனவுகளின்போது முறை தவறிய மைக்கும் குற்றம் சுமத்தப்படுவதாயின் அதற்காக இன்னும் பலரும் குற்றவாளிகளாக்கப்பட வேண்டியிருக்கும் தருணத்தில், ஜெனரல் பொன்சேகா மட்டும் தனித்து குற்றம் சாட்டப்பட்டுள்ளமை அநீதி எனக் கூறப்பட்டது. இவற்றைவிட இராணுவ நீதிமன்றத்தில் அங்கம் வகித்த விசாரணைக் குழு பற்றியும் பிரச்சினைகள் எழுப்பப்பட்டிருந்தன. அத்துடன் ஜெனரலின் பதவிக்காலத்தில் அவருக்கும் கனிஷ்ட நிலையில் இருந்து இவருடைய மேற்பார்வையில் தளபதி என்ற அந்தஸ்தில் ஒழுக்க நடவடிக்கைகளுக்கு உட்படுத்தப்பட்டவர்களும் அந்த மன்றத்தில் இருந்தமை ஏற்றுக்கொள்ளப்பட முடியாதது எனவும் கூறப்பட்டது.

தேசிய சமாதானப் பேரவை அரசாங்கத்தை பொதுசன அபிப் பிராயத்திற்கும் எதிரணியினரது அபிப்பிராயத்திற்கும் மதிப்பளித்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயற்படுமாறு கேட்டுக் கொள்கிறது. அரசாங்கத் தலைவர்களும் சனாதிபதியும் கூட ஜெனரல் பொன்சேகா சில ஒழுங்கு முறைகளைப் பின்பற்றினால் சனாதிபதி அவருக்கு மன்னிப்பு வழங்கும் வாய்ப்புக்கள் உள்ளதாக அபிப்பிராயம் தெரிவித்துள்ளதாக அறிகிறோம். எதிரணித் தலைவரின் கோரிக்கையும் கூட சனாதிபதியினால் கவனத்தில் எடுத்து ஆலோசிக்கக்கூடியதொன்றாகும்.

அண்மையில் ஐக்கிய நாடுகள் சபைக்கு சனாதிபதி ராஜபக்ச சென்றிருந்த போது, யுத்தத்தின் பின்னரான நல்லிணக்கத்தை ஏற்படுத்த இலங்கையின் அனுபவங்களை ஏனைய நாடுகள் ஒரு முன்மாதிரியாகப் பயன்படுத்த முயற்சிக்கலாம் எனக் கூறியுள்ளார். சனாதிபதியின் முதல் தவணையின் முடிவோடு ஆரம்பிக்கவுள்ள அவருடைய இரண் டாவது தவணையின்போது தேசிய அரசியலுக்கும் எதிரணியினருடன் கருத்தொருமையினை கட்டியெழுப்புவதற்கும் ஏற்ற புதிய அணுகு முறை முக்கியத்துவம் வாய்ந்ததாக அமையும் என நம்புவோமாக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிக்கை - 09

## ஒரு பக்கச் சார்பான யாப்பு சீர்திருத்தம் அறிவற்ற செயல்

03-09-2010

ஏற்கனவே மேலதிகமான அளவில் அதிகாரங்களை மையப்படுத்தி வைத்திருக்கும் நிறைவேற்று அதிகாரம் கொண்ட சனாதிபதி என்னும் நிறுவனத்திடம் இன்னும் கூடிய அதிகாரங்களை கையளிப்பதற்காக அரசாங்கம் யாப்பில் சில திருத்தங்களை கொண்டுவர ஏற்கனவே தீர்மானம் செய்திருப்பதுடன், அதற்காகப் பாராளுமன்றத்திடம் இவ் வருடம் (2010) செப்டம்பர் 8ஆம் திகதியன்று அங்கீகாரம் பெற்றுக் கொள்வதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

அவற்றின் மூலமாக சனாதிபதி பதவிக்கு ஒருவர் இரண்டு முறைக்கு மேல் போட்டியிட முடியாது என்ற வரையறையினை நீக்குவதற்கும் 17ஆவது திருத்தச் சட்டத்தை நீக்கி அதனிடத்தில் சனாதிபதிக்கு மேலும் கூடிய அதிகாரங்களை வழங்குவதற்குமான மாற்றுத் திருத்தத்தினை கொண்டு வரவும் ஏற்பாடுகள் செய்யப்படு கின்றன. அரசாங்கம் செய்துள்ள திட்டத்தின்படியே அவை நடை முறைப்படுத்தப்படுமேயானால், அத்திட்டம் பற்றி பொதுமக்களுக்கு அறிவித்த இரண்டு வாரங்களுக்குள் அது நிறைவேற்றப்பட்டும் விடும்.

ஸ்திரமானதும், வெற்றிகரமானதுமான அரசியல் முறைகளைக் கொண்ட நாடுகளினால் யாப்பில் மாற்றங்களைக் கொண்டு வருவ தானால் அதற்காகப் பொதுமக்களுக்கு அம்மாற்றங்களைப் பற்றி அறிவூட்டவும் மக்களிடம் அவை பற்றி கலந்தாலோசிக்கவும் கணிசமான கால அவகாசம் கொடுப்பது நவீன கால வழக்கமாகும்.

அரசாங்கம் மூன்றிலிரண்டு பங்கு பெரும்பான்மைக்காக எதிரணி யிலிருந்த பல பாராளுமன்ற உறுப்பினர்களை தன்பக்கம் சேர்த்துக் கொள்வதில் வெற்றியடைந்தவுடனேயே தான் செய்யப்போகும் யாப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருத்தத்தினைப் பற்றி எதுவித காலதாமதமும் இன்றி அறிவித்தது. ஆனால், அரசாங்கம் தேசிய நலன்கள் தொடர்பான ஆர்வங்களை அடிப்படையாகக் கொண்டு செயற்படுவதாகவும் தேசப்பற்றுடனான மனப்பான்மையோடு எதிரணியினரை பிளவுபடுத்த எண்ணாது அவர் களுடன் பாராளுமன்றத்தில் முறையாக கலந்தாலோசித்து அதன் மூலம் யாப்பு திருத்தத்திற்கு உடன்படுவதற்கான ஆதரவைப் பெற்றுக் கொண்டிருக்க வேண்டும் என்றும் தேசிய சமாதானப் பேரவை கருதுகின்றது.

கடந்த காலங்களில் அதிகாரத்திலிருந்த அரசாங்கங்கள் யாப்பு மாற்றங்களை ஒரு தலைப்பட்சமாக எதிரணியினரது ஆதரவின்றி குருட்டுத்தனமான பற்றுடன் தம்மை காத்துக் கொள்ளும் வகையில் செய்த அனுபங்களே இந்நாட்டில் எமக்கு உள்ளன. சனாதிபதியின் பதவி, தவணைக்காலம் தொடர்பான வரையறைகள் பலம்வாய்ந்த சனாதிபதி முறைகளைக் கொண்ட பெரும்பாலான நாடுகளிலும் நிலவுகின்றன. அதற்கு நியாயமான காரணங்கள் உள்ளன. வரையறை யின்றி பதவியிலிருப்பவர்கள் பதவி விட்டு மாறாதிருக்கும் நிலையில், பெருமளவான அதிகாரத்தினை மையப்படுத்தியுள்ள பதவியிலிருக்கும் போது தனது அதிகாரத்தினை தவறாக பயன்படுத்தவும் தவறான ஆட்சிக்கு வழிவகுக்கவும் இடம் ஏற்படும்.

சனாதிபதியின் கையில் அதிகரித்த வகையில் அதிகாரம் இருப்ப தனால் அதனை சமநிலைத்தத்துவத்தின் அடிப்படையில் (Checksa and balances) கட்டுப்படுத்துவதற்காக 2001 ஆம் ஆண்டு 17ஆவது திருத்தம் பாராளுமன்றத்தில் அங்கீகரிக்கப்பட்டது. பன்மைவாத அரசியலும் பல்லின மக்களைக் கொண்டதுமான நாடொன்றில் அனைத்துப் பிரிவினரதும் ஆதரவின்றி செய்யப்படும் யாப்பு மாற்றங்கள் பின்னர் காலத்தால் ஏற்படும் சோதனைகளுக்கு நின்று பிடிப்பது சாத்தியமாகாது. எதிர்க்கட்சிகளும் அடுத்து ஏற்படலாம் என எதிர்பார்க்கப்படும் யாப்புத் திருத்தங்களின் கடுமைத் தன்மை பற்றி மக்களுக்கு தெளிவுபடுத்தும் நடவடிக்கைகளுக்கு தலைமைத்துவத் தினை வழங்கத் தவறுவது மாத்திரமன்றி, உள்ளுக்குள் சண்டை பிடித்துக் கொண்டிருப்பது பற்றி தேசிய சமாதானப் பேரவை பெரிதும் ஏமாற்றமுற்றுள்ளது என்பதனை எடுத்துக் கூற விரும்புகிறது. இந்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலையில் அனைவரதும் பங்கேற்றலுடனான சனநாயகமும் பொறுப்புக் கூறும் பண்பினதான ஆட்சியுமே முக்கியமானவையாகும்.

யாப்பு சீர்திருத்தத்திற்கான செய்முறையின் போது அரசாங்கம் எதிர்க்கட்சியினரிடம் கலந்தாலோசித்து அதன் மூலமாக பொதுமக்களது பங்கேற்பினையும் உண்மையான முறையில் இடம்பெறச் செய்வதாக இருக்குமானால், அப்போது அரசாங்கம் செய்து முடிக்க விரும்பும் காரியங்கள் மற்றும் இலக்குகள் மீது அவர்கள் பெரும் நம்பிக்கையினை கொண்டிருப்பர்.

எனவே, இத்தகைய அணுகுமுறையினை அரசாங்கம் பின்பற்றினால் அது ஏற்படுத்த விரும்பும் யாப்பு மாற்றங்கள் பிரச்சினைகளை தீர்க்கக்கூடியன என்ற நம்பிக்கைக்கும் அவற்றின் வாயிலாக நிலைத்து நிற்கக்கூடிய நல்லாட்சி நாட்டிற்கு கொண்டுவரப்படலாம் என்ற நம்பிக்கையும் ஏற்படலாம் என நாம் நம்புகிறோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வட, கிழக்கு மக்களின் கோரிக்கைகள் கவனத்தில் எடுக்கப்படுவது அவசியம்

04-08-2010

யுத்தத்தின் பின்னர் நல்லிணக்கத்தை ஊக்குவிப்பதனை தனது நிகழ்ச்சி நிரலின் ஒரு பகுதியாகக் கொண்டுள்ள தேசிய சமாதானப் பேரவை, வடக்கு கிழக்குப் பகுதிகளிலிருந்து (30) முப்பது பத்திரிகையாளர்களை தென்பகுதிக்கு கூட்டிவந்தது. ஏற்கனவே, இந்தப் பத்திரிகையாளர்கள் வட பகுதிக்கு வந்து சென்றுள்ள தென்பகுதியைச் சார்ந்த ஊடகவிய லாளர்கள் மற்றும் சிவில் சமூகத்தினருடன் கலந்துரையாடியுள்ளனர்.

வடக்கிலிருந்து வந்த பத்திரிகையாளர்கள் தமது தென் பகுதி பயணத்தின் போது அரசாங்க அதிகாரிகள் மற்றும் அரசியல் சிவில் சமூகத்தினர் போன்ற பல பிரிவினர்களையும் சந்தித்தனர். அவர்களால் கொழும்பு, காலி ஆகிய நகரங்கள் உட்படத் தென்பகுதிகளில் பெற்ற எதிர்மறையற்ற கலந்துரையாடல்கள் மூலம் வழமை நிலைக்கு திரும்புதலுக்கும் நல்லிணக்கத்திற்கும் எதிர்மறையற்ற வகையிலான உள்ளார்ந்த வளங்கள் இருப்பதனைக் காண முடிந்தது.

தமக்கு இடையூறாகக் காணப்படும் பல பிரச்சினைகள் பற்றி பத்திரிகையாளர்கள் தமது விவாதங்களின் போது இனங்காட்டினார்கள். வடக்கு, கிழக்கில் இப்போது ஏற்பட்டு வரும் பாரிய வீதி அபிவிருத்தி திட்டங்கள் பற்றி கூறி, அவற்றினை நிர்மாணிக்கும் ஒப்பந்தக்காரர்கள் வெளிப்பகுதிகளிலிருந்து வந்துள்ளதோடு தொழிலாளர்களையும் வெளிப்பகுதிகளிலிருந்து கூட்டி வந்திருப்பதனையும் சுட்டிக்காட்டி னார்கள். அவர்கள் தமக்கு நன்மையினை அளிக்கக்கூடிய நீர்ப்பாசன வசதிகளும், மீன்பிடி துறைமுகங்களும், புனருத்தாரணம் செய்யப் படுதல் வேண்டும் எனக்கூறினர். வானொலி மற்றும் தொலைக்காட்சி பயன்பாடு திறன்மிக்க வகையில் ஒலி மற்றும் ஒளிபரப்புக்களை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யத் தேவையான வசதிகளை அரசாங்கம் செய்யத் தவறியுள்ளதால், அரசாங்கத்தின் நடவடிக்கைகள், திட்டங்கள் என்பன பற்றி சரியாக தெரிந்து கொள்ள முடியாதுள்ளதாகவும் குறைப்பட்டனர்.

தென் பகுதியிலிருந்து வடபகுதி வந்து சென்ற பத்திரிகையாளர் களிடம் வடபகுதி மக்களின் பிரச்சினைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து தமது ஆக்கங்களை வெளியிடும்படியும், அவை தவிர்ந்த விடயங்களை தவிர்த்துவிட்டு இவற்றை தென்பகுதி மக்களிடம் கொண்டு செல்வதில் கூடிய ஆர்வம் காட்டுமாறும் கேட்டுக் கொண்டனர். உதாரணமாக கிளிநொச்சியில் சனாதிபதியும் அமைச்சரவை அமைச் சர்களும் நடத்திய கூட்டமாகும்.

விவாதங்களின் போது வடக்கு, கிழக்குப் பத்திரிகையாளர்கள் பொறுமையிழந்தவர்களாக தமது வாழ்க்கைக்கான மேம்பாடுகள் விரைவாக ஏற்பட வேண்டும் என்பதனை வற்புறுத்திக் கூறினார்கள். வடக்கு, கிழக்குப் பகுதிகளில் மீள இராணுவ மயமாக்கம் ஏற்படுவது பற்றிய முறைப்பாடே அவர்கள் செய்த முறைப்பாடுகளில் மிகவும் முக்கியமானதாகும். யுத்தம் முடிந்த பின்னர் குறைந்தபட்சமாக அடை யாளத்திற்காகவது சிறியளவிலான இராணுவக் குறைப்பு செய்யப் பட்டிருக்க வேண்டும் என்பது, அப்பகுதி மக்களது நியாயமான எதிர்பார்ப்பாக உள்ளது.

அது பெருமளவுக்கு நியாயமானதே. அரசாங்கப் பேச்சாளர்கள் யுத்தம் முடிந்து ஒரு வருடம் தான் முடிந்துள்ளது என்பதனை மீண்டும் மீண்டும் எடுத்துக் கூறி, எதிர்காலத்தில் இப்பிரச்சினை தொடர்பாக மேம்பாடுகள் ஏற்படும் என உறுதிகூற முயன்றனர். எவ்வாறாயினும் அரசாங்கம் வடக்கு, கிழக்குப் பகுதிகளை இராணுவத்தின் கட்டுப் பாட்டிற்குள் வைத்திருப்பதுடன், இராணுவத்தின் அளவை அதிகரித்து இராணுவத் தேவைகளுக்காக கூடியளவு நிலங்களை கையேற்று அவற்றில் வீடுகளை நிர்மாணித்து இராணுவ வீரர்களது குடும்பங்களை குடியேற்றும் திட்டங்களையும் கொண்டுள்ளது எனத் தெரிய வந்துள்ளது.

அரசாங்கம் கடந்த காலப் பிரச்சினைகள் யாவற்றையும் ஒரே வருடத்தில் தீர்த்து விட முடியாது என்பதனையும் அம்முயற்சியில் பல இடையூறுகள் உள்ளன என்பதனையும் தேசிய சமாதானப் பேரவை ஏற்றுக் கொள்கிறது. ஆனால், பெரும்பான்மையான தமிழ் மக்களது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதயங்களையும் எண்ணங்களையும் வெல்ல அரசாங்கம் நினைக்கு மானால், அவர்களது தேவைகளை விரைவாக செய்து முடிப்பதற்காக வழிகளை கண்டறிய வேண்டும்.

நல்லாட்சிக்காக சிறந்த வழிமுறைகளைக் கொண்ட அரசியல் துறைசார்ந்த மாற்றங்களை உடனடியாக அரசாங்கம் கொண்டு வர முடியும் என தேசிய சமாதானப் பேரவை நம்புகின்றது. அத்துடன் யுத்தத்தினால் வடக்கு, கிழக்கில் அழிவுக்குள்ளாகிய பௌதீக வளங் களான கட்டிடங்கள், வீதிகள் போன்றவற்றைக் கட்டியெழுப்புவதிலும், மக்களை மீள குடியமர்த்துவதிலும் கால தாமதம் ஏற்பட்டு வருகின்றது. இத்தகைய பின்னணியில் இப்போது யாப்பில் உள்ள 13வது திருத்த சட்டமூலத்தையும் அனைத்து கட்சி பிரதிநிதிகள் குழுவின் பிரேரணை களையும் அடிப்படையாகக் கொண்டு, நாட்டில் பரஸ்பரமாக ஏற்றுக் கொள்ளக்கூடியதானதும் சிறந்ததுமான ஆட்சிக்கு வழி வகுக்குமாறு நாம் அரசாங்கத்திற்குப் பரிந்துரை செய்கிறோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிக்கை – 11

# புலிகளின் போர் நிறுத்த அறிவிப்பும் நம்பிக்கை குறித்த நெருக்கடியும்

29–07–2008

இலங்கையில் யூன் 26ஆம் திகதி முதல் ஆகஸ்ட் 4ஆம் திகதி வரையில் எட்டு தென்னாசிய நாட்டு தலைவர்கள் பங்கு கொள்ளும் சார்க் உச்சி மகாநாடு நடைபெறவுள்ள காலப்பகுதியில் தமிழீழ விடுதலைப் புலிகள் தமது தரப்பிலிருந்து போர்நிறுத்தத்தினை அறிவித்துள்ளனர். இவ்வாறு அவர்கள் அறிவிப்பது இதுவே முதற்தடவையல்ல.

அரசாங்கத்தின் இராணுவத் தாக்குதலில் இருந்து ஓய்வு பெறுவதற்கான இடைவேளைக்காகவும் சர்வதேச சமூகத்தின் அனுதாபத்தைப் பெற்றுக்கொள்வதற்காகவும் செய்யும் சதித்திட்டம் என அரசாங்கம் கூறி இந்த யுத்த நிறுத்தத்தினை நிராகரித்துள்ளது. அத்துடன், தமிழீழ விடுதலைப் புலிகள் ஆயுதங்களை கீழே வைத்தால் மாத்திரமே பேச்சுவார்த்தைக்கு வரமுடியும் என அண்மையில் அரசாங்கம் கூறியுள்ளமையினை தமிழீழ விடுதலைப் புலிகள் நிராகரித்துள்ளனர்.

இலங்கையில் நடைபெறவுள்ள சார்க் உச்சி மகாநாட்டில் பல நாடுகளிலிருந்தும் வருகை தரும் முக்கிய தலைவர்கள் கலந்து கொண்டிருக்கும் சந்தர்ப்பத்தில் வன்முறைகளை தவிர்ப்பதற்கான ஏற்பாடுகளை செய்யும் பொறுப்பு இலங்கை அரசாங்கத்தினைச் சார்ந்ததாகும்.

சார்க் நாடுகளின் தலைவர்கள், மகாநாடு நடைபெறவுள்ள அடுத்து வரும் நாட்களில் இலங்கையில் இருக்கும் போது அரசாங்கத்திற்கும் அதேபோல தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் தாம் அரசியல் பேச்சுவார்த்தைகள் மூலமான தீர்வுக்கு தம்மை அர்ப்பணித்துக் கொண்டவர்கள் என்பதனை எடுத்துக்காட்டிக் கொள்ள சிறந்த தருணமாகும். அத்தோடு கடந்த காலங்களில் குறைபாட்டுடன் காணப்பட்டதான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதேச ஒத்துழைப்பையும் ஒருமைப்பாட்டினையும் எடுத்துக்காட்டவும் சிறந்த அரங்காகவும் பயன்படுத்திக்கொள்ள முடியும். தமிழீழ விடுதலைப் புலிகள் தமது ஆதரவினை வழங்குவதற்கான காரணம் எதுவாக இருந்தாலும் உச்சி மகாநாட்டினது கேந்திர முக்கியத்துவத் திற்கு அவர்கள் மதிப்பளிப்பது தெரிய வருகிறது.

யுத்த நிறுத்தத்திற்கான நோக்கம் எதுவாயிருந்தாலும் கூட அது சமாதானத்திற்கு ஒரு வாய்ப்பினையும் இடத்தினையும் அளிப்பதாக இருப்பதால் அதனை எளிதாக நினைத்து நிராகரித்து விடலாகாது. சிறிய அடியை எடுத்து வைத்தாலும் கூட பின்னர் அது நம்பிக்கைக்கும் புதிய சமாதான செய்முறைக்குமான புதிய அசைவாகவும் மேலும் சில வாய்ப்புக்களை அளிப்பதாகவும் கூட உருவாக முடியும்.

பேச்சுவார்த்தைகளுக்கும், போர்நிறுத்தத்திற்கும் அரசாங்கமும் தமிழீழ விடுதலைப் புலிகளும் முன்வருவது தொடர்பாக சர்வதேச சமூகங்கள் சார்பாக நடந்து கொள்ளாமைக்கு காரணம் உண்டு. இவ்விரு தரப்பினர் மீதும் அவர்கள் எந்தளவுக்கு நம்பும் தன்மையினை கொண்டிராது காணப்படுகின்றனர் என்பதனை விளங்கிக் கொள்ளுதல் அவசியமாகும்.

அவ்வாறு விளங்கிக் கொண்டதன் பின்னர் அதற்கு ஏற்ற வகையில் அவர்கள் தத்தமது கடந்தகால நடத்தைகளை மீள மதிப்பீடு செய்து, அதன் வழியே நம்பும் தன்மையை கட்டி எழுப்பிக் கொள்ள வேண்டியது தேவையாக உள்ளது. தமிழீழ விடுதலைப் புலிகள் ஒருதலைப்பட்சமாக போர் நிறுத்தத்திற்கு முன்வருதலை அரசு அங்கீகரிப்பதானால், அதற்காக அவர்கள் தெளிவாகவும் நம்பிக்கை தரும் வகையிலும் அதாவது, மனதளவில் மாற்றங்களை ஏற்க விரும்புகின்றனர் என்பதனையும், அரசியல் மற்றும் பேச்சுவார்த்தைகள் மூலமாக முரண்பாடுகளுக்கு தீர்வுகாண்பதில் ஆர்வம் கொண்டுள்ளனர் என்பதனையும் நிரூபிக்கும் வகையில் நடந்து கொண்டால் தான் அவர்களது இத் தீர்மானத்தின் மீது மற்றவர்களுக்கு நம்புதிறன் ஏற்படமுடியும். அத்துடன் தமிழீழ விடுதலைப் புலிகள் தமது போர் நிறுத்தத் தீர்மானத்தை அரசுடன் அதன் பிரதிநிதிகள் மூலமாக பேச்சுவார்த்தைகளை நடாத்தி அதன் பின்னர் இவ்வாறான ஒரு தீர்மானத்தை எடுத்திருந்தால் அது கூடியளவுக்கு ஊக்குவிக்கப்படக் கூடியதாக இருந்திருக்கும். மாறாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறைமுகமாகவும் ஊடகங்கள் மூலமாகவும் மட்டும் விடப்படும் அறிக்கைகளாக இருப்பதால் இத்தகைய தீர்மானங்கள் எதிர்த் தரப்பினரால் போதிய அளவில் அங்கீகரிக்கப்படுவதில் இடையூறுகள் காணப்படுகின்றன.

எவ்வாறாயினும், தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் செய்துள்ள ஒருதலைப்பட்சமான யுத்த நிறுத்த தீர்மானத்தில் உள்ள சார்பான அம்சங்களை உதாசீனப்படுத்தாது, அதிலிருந்து நன்மை ஏற்படக்கூடிய விருத்தி நிலைமைகளை கட்டியெழுப்புதல் பயனுடையதாயிருக்கும் என தேசிய சமாதானப் பேரவை நம்புகிறது.

எதிர்காலத்தில் புதிய போர் நிறுத்த உடன்படிக்கையினை ஏற்படுத்த தேவையான நிலைமைகளை உருவாக்குவதில் சர்வதேச சமூகங்களுக்கும் முக்கிய பங்கு உண்டு. சர்வதேச சமூகங்களிலிருந்தும், உள்நாட்டிலிருந்தும் இனங்காணப்படும் சமாதான தூதுவர்கள் தமிழீழ விடுதலைப் புலிகளைச் சந்தித்து போர் நிறுத்தத்திற்கான பேச்சுவார்த்தைகளைச் செய்ய வன்னிப் பிரதேசம் செல்வதனை எதிர்த்து அவர்கள் மீது தடைகளை ஏற்படுத்தக் கூடாது என நாம் அரசாங்கத்திடம் வேண்டிக் கொள்கிறோம். ஐரோப்பிய யூனியனின் பாராளுமன்ற தூதுக்குழுவை கிழக்கு மாகாணம் சென்று வர அனுமதிக்காதது பெரிதும் ஏமாற்றத்தினையே அளிக்கிறது.

அவர்கள் அங்கு சென்றிருந்தால் சர்வதேச பிரதிநிதிகளுக்கு அரசாங்கம் அங்கு வழமை நிலையை மீண்டும் ஸ்தாபிக்க மேற்கொள்ளும் நல்லெண்ண முயற்சிகளை மதிப்பீடு செய்ய திட்டவட்டமான ஒரு வாய்ப்பு உருவாகியிருக்க முடியும்.

தற்போது இடம்பெற்றுவரும் யுத்தம், இலங்கையில் பாரியளவிலான துன்பங்களை மக்களுக்கு அளித்து வருவதுடன் மனித உரிமை மீறல்களையும் உருவாக்கியுள்ளது. சமாதானத் தீர்வினை காண முயற்சிப்பது மனிதாபிமான கடமையாகும். வாழ்வதற்கான உரிமை அனைவருக்கும் இருக்க வேண்டும். அத்துடன் அனைவரும் சமாதானமாக வாழ்வதும் அத்தியாவசியமானதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கடந்த கால தவறுகளை மீண்டும் செய்யாதிருப்போம்

26-07-2010

1983ஆம் வருடம் ஜுலை மாதம் 23ஆம் திகதி இலங்கையின் பல்வேறு பகுதிகளிலும் தமிழர்களுக்கு எதிரான சதி நிகழ்ச்சி ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டு, அதில் அப்பாவித் தமிழ் மக்களுக்கு எதிரான வன்முறைகளில் தீவிரமாக சில குழுவினர் பங்குபற்றினர். கொழும் பிலும் ஏனைய பகுதிகளிலும் வாழ்ந்த பல அப்பாவித் தமிழர்கள் பயங்கரமான கொடுமைகளை எதிர்நோக்கினர். இவ்வன்முறைகள் படிப்படியாக வளர்ந்து ஒரு முழு யுத்தமாகவே வளர்ந்துவிட்டது.

கடந்த பல வருடங்களாக ஜுலைமாதத்தில் ஒரு வாரத்திற்கு 'கறுப்பு ஜுலை' என பெயரிடப்பட்டு சிவில் சமூகத்தினரால் நினைவு கூரப்பட்டு வருவதுடன், சில சந்தர்ப்பங்களில் அரசாங்கம் கூட அதனை நினைவுகூர்ந்துள்ளது. ஆனால், இவ்வருடம் அதற்கு மிகவும் குறைந்த கவனமே செலுத்தப்பட்டது. 1983 ஜுலை மாத சம்பவங்களை ஒதுக்கிவிட சமூகம் தயாராக இருக்குமானால் யுத்தத்தின் பின்னர் உண்மையாக நாட்டில் நல்லிணக்கம் ஏற்படுவது பொருத்தமானதாக இருக்கும். ஆனால், கவலைக்குரிய வகையில் இரண்டு சமூகங்களுக்கு மிடையேயும் இன்னமும் நல்லிணக்கம் ஏற்படாமல் உள்ளது. கடந்த காலத்திலும் நிகழ்காலத்திலும் நிலவும் யதார்த்தங்களையும் உண்மை களையும் ஏற்றுக்கொள்வதன் மூலமாகவே நல்லிணக்கம் ஏற்பட முடியும்.

அப்பாவி மக்கள் பலியாகியமை தொடர்பாக அவர்களை நினைவு கூருதல் பலகாரணங்களுக்காகத் தேவையாகின்றது. தமிழ் தீவிரவாதம் தோன்றுவதற்கு காரணமானவற்றிற்கு தீர்வு காணத் தேவையான அரசியல் தீர்வினை எட்டுவதில் எதுவித முன்னேற்றமும் இன்னமும் ஏற்படவில்லை என்பதே முதலாவது காரணமாகும். அடுத்ததாக தமிழீழ விடுதலைப் புலிகள் எனச் சந்தேகிக்கப்பட்டு கைதாகியவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்பாக எதுவித நேர்மையான நடவடிக்கைகளும் எடுக்கப்பட வில்லை.

வடக்கில் இராணுவ நடவடிக்கைகளுக்காகப் பொதுமக்களுடைய நிலங்களை சுவீகரித்தமை தொடர்பான தெளிவான விளக்கங்களும் இல்லை. கொழும்பில் தமிழ் மக்களை பொலிசில் மீண்டும் பதிவு செய்யும்படி கோரப்பட்டுள்ளமை, வடபகுதியில் பணிபுரியும் அரசு சாரா நிறுவனங்கள் மீதான புதிய நிர்ப்பந்தங்களை ஏற்படுத்தியுள்ளமை, வடபகுதியிலிருந்து இடப்பெயர்வுக்கு உள்ளாக்கப்பட்டவர்களை தமது வாழ்க்கைக்காக விவசாயிகளாகவும், மீன்பிடியாளராகவும் தொழில்புரிந்த அவர்களது சொந்த இடங்களில் மீளக் குடியேற்ற போதிய வளங்களை ஒதுக்கீடு செய்யாமை என்பன அப்பாவி மக்களது துயரங்களுக்கான காரணங்களாக உள்ளன.

யுத்தம் முடிவுற்று இப்போது ஒரு வருடத்திற்குமேல் ஆகிவிட்டது. கடந்த வருடத்தில் யுத்தம் முடிந்ததனால் பலதரப்பட்ட நன்மைகள் ஏற்பட்டிருந்தன. பெரும்பாலான வீதிகள் மீளத் திறக்கப்பட்டு சாதாரண மக்களுக்கு நாட்டில் அநேகமான பகுதிகளுக்கும் சுதந்திரமாக சென்றுவர முடிகின்றது. சில விவசாய நிலங்களும் கடற்பகுதிகளும் மீள பொருளாதார நடவடிக்கைகளுக்காகப் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளன. வெளிநாடுகளில் வாழும் இலங்கையர்கள் இலங் கைக்கு வந்து செல்லவும் தமது உறவினர்களை பார்த்துச் செல்லவும் மற்றும் பொருளாதார நடவடிக்கைகளில் ஈடுபடவும் முடிந்துள்ளது.

இருந்த போதிலும் இப்போது கவனிக்கத் தவறியுள்ள சிலவற்றை மறைக்கவோ பூசி மறைக்கவோ முடியாதும் உள்ளது. கடந்தகாலங் களில் ஏற்பட்ட தவறுகளை நினைவுபடுத்தி செயற்படுவதன் மூலம் எதிர்காலத்தில் சிறந்த முறையில் வாழ்வதற்கு வழி வகுத்துக் கொள்ள முடியும்.

நாம் பலருமே மகிழ்ச்சிக்குரியதல்லாதவற்றை மறந்துவிட விரும்பு கிறோம். ஆனால், பாதிப்புக்குள்ளாகியவர்களால் அது முடியாது போகலாம். இவற்றை ஒத்தவகையில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்க அங்கத்தவர்களும் ஏனைய சமூகத்தினரான சிங்கள, முஸ்லிம் மக்களுக்கு பாதிப்புக்களை ஏற்படுத்தியுள்ளனர். இவ்வாறான செயல்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிர்வரும் காலங்களில் மீண்டும் நிகழாதிருக்கும் வண்ணம் நாம் எம்மை அர்ப்பணித்துக் கொள்ளுதல் வேண்டும்.

அப்பாவி மக்கள் பாதிப்புக்குள்ளாகி துயருற்றமையினை நினைவுகூரும் வகையில் அனைத்து சமூகங்களைச் சார்ந்த அப்பாவி மக்களும் இன முரண்பாடுகள் காரணமாக பல்வேறுபட்ட வகைகளால் பாதிக்கப்பட்டு துயருற்றமைக்காகவும், கொல்லப்பட்டமைக்காகவும், பொதுவான ஒரு நினைவு பிரார்த்தனை நாள் ஒன்றினை அடையாளப் படுத்தி, அந்நாளை நினைவுநாளாகவும் அனுசரிக்க தேசிய சமாதானப் பேரவை பிரேரணை ஒன்றை சமர்ப்பிக்க விரும்புகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நல்லிணக்கத்திற்கு பாதகமாக அமையும் எதேச்சாதிகார நடவடிக்கைகள்

16-07-2010

தமிழ் மக்களை பொலிஸ் நிலையங்களில் பதிவு செய்து கொள்ளச் செய்யும் நடைமுறை மீண்டும் ஆரம்பிக்கப்பட்டு அம்மக்களை இலக்காகக் கொண்டு தேடுதல் வேட்டைகள் நடைபெறுவது பற்றி தமிழ் ஊடகங்களில் செய்திகள் வெளியாகியுள்ளன. இதனால் பெரும் பாலான தமிழ் மக்களிடையே தமக்கு பாதுகாப்பின்மை ஏற்பட்டுள்ள துடன் தமக்கு எதிராக அநீதி இழைக்கப்படுகின்றது என்னும் உணர்வு களும் ஏற்பட்டுள்ளமை தேசிய நல்லிணக்கத்திற்கு உகந்ததல்ல.

யுத்தமும் பயங்கரவாதமும் நிலவிய காலப்பகுதியில் தமிழ் மக்களை பதிவு செய்தல், தனிப்பட்டவர்களுடைய வீடுகளில் இரவு நேரங்களிலும் கூட தேடுதல் வேட்டைகளைச் செய்தல் என்பன இடம்பெற்றன. ஆனால் இன்று யுத்தம் முடிந்து 14 மாதங்கள் முடிந்து விட்டன. தீவிரவாத நடவடிக்கைகளோ அல்லது பயங்கரவாத நடவடிக் கைகளோ இடம்பெறவுமில்லை. அவ்வாறு ஏதும் இடம்பெறாத நிலையில் கடந்த காலத்தில் பின்பற்றப்பட்ட கடும் நடவடிக்கைகள் ஏன் மீண்டும் இடம்பெற வேண்டும் என்ற கேள்வி எழுகின்றது.

இரண்டு மாதங்களுக்கு முன்னர் பாராளுமன்றம் சில அவசரகால சட்டவிதிகளை நீக்கியதால் உலகெங்கும் நாட்டில் வழமை நிலை திரும்பி விட்டதான எண்ணத்தை தோற்றுவித்திருந்தது. ஆனால், கள நிலையில் தமிழ் மக்களைப் பொறுத்தமட்டில் அவர்களது வழமை வாழ்க்கை மிக மோசமாகியுள்ளது. சனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன் சனாதிபதி மகிந்த ராஜபக்சவிடம் கொழும்பு வெள்ளவத்தை பொலிஸ் பிரிவில் தமிழ் மக்களை பொலிஸ் பதிவுக்கு ஆளாக்கும் நடவடிக்கைகளை நிறுத்த தலையிடுமாறும், இல்லாவிடின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டில் முன்னெடுக்கப்படும் நல்லிணக்க உணர்வுகளுக்கு எதிரான வேறுபாட்டுணர்வினையே அது உருவாக்கும் எனவும் கூறியுள்ளார்.

எமது யாப்பில் இனம், சாதி வேறுபாடு எதுவுமற்ற வகையில் அனைவரும் சமத்துவமாக நடாத்தப்பட வேண்டும் என்னும் உறுதி மொழியை அரசாங்கம் மதித்து நடைமுறைப்படுத்த வேண்டும். இந்நாட்டில் ஒரு தேசியம் மட்டுமே உண்டென சனாதிபதியே அறிவித்துள்ளார். ஆனால், வெள்ளவத்தையில் வாழும் தமிழர்களை வேறுபடுத்தி, அவர்களை மட்டும் வெள்ளவத்தை பொலிஸ் நிலையத்தில் பதிவு செய்யும்படி கடந்தவாரம் கூறப்பட்டுள்ளது. கொழும்பின் வேறு சில இடங்களில் வாழும் தமிழர்களும் பதிவு செய்யும்படி கோரப்பட்டுள்ளதாகவும் செய்திகள் வெளிவந்துள்ளன.

இவ்வாறான நிலைமைபற்றி பொலிஸ் பேச்சாளர் ஒருவரிடம் ஊடகங்கள் விளக்கம் கேட்டபோது அவர், பொலிஸ் துறைச் சட்டத்தின் அடிப்படையில் இவ்வாறான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகக் கருத்து தெரிவித்துள்ளார். குற்றவாளிகளை கண்டறியவும் குற்றங்கள் ஏற்படாது தடுக்கவுமே சட்டம் பொலிசுக்கு அதிகாரம் வழங்கியுள்ளது. அதனை ஓர் இனத்திற்கு எதிராக எதேச்சாதிகாரமான முறையில் பயன்படுத்தக் கூடாது. கொழும்பின் பதில் பொலிஸ்மா அதிபரான எச்.என்.பி.ஹேரத் இதுபற்றி கருத்து கூறுகையில், உயர் அதிகாரிகள் தமிழர் உட்பட அனைவரையுமே பதிவு செய்யுமாறு பணித்ததாகவே குறிப்பிட்டுள்ளார்.

சரியான முறையில் சிந்திப்பவர்கள் அனைவருமே சனநாயகம் என்பது சட்டத்தின் வழியிலான ஆட்சி என்றே நம்புவார்கள். மாறாக ஆளுபவர்களது விருப்பப்படி அனைத்தையும் செய்யக்கூடாது. ஆட்சியாளர்களும் கூட சட்டங்களுக்கு சமமான முறையில் உட்பட்டவர்களே. எனவே யாப்பின்படியே அனைவரும் செயற்பட வேண்டும்.

தமிழர்களை இலக்காக வைத்தோ அல்லது இலங்கை மக்களின் வேறு எந்த ஒரு பிரிவினரையும் குறியாக வைத்தோ வேறுபடுத்தி நடத்தாது இருப்பதனை உறுதிசெய்யுமாறு தேசிய சமாதானப் பேரவை அரசாங்கத்திடம் கேட்டுக்கொள்கின்றது. பாதுகாப்பு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்பதனை நாம் அங்கீகரிக்கும் அதே வேளையில், எந்தவொரு சமூகத்தையும் தனிமைப்படுத்தி இவ்வாறான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடவடிக்கைகளுக்கு உட்படுத்துதல் சனநாயக பெறுமானங்களின் அடிப்படையில் தவறானது என்பதால் நாம் எமது எதிர்ப்பினைத் தெரிவித்துக் கொள்கின்றோம். எதிர்மறையற்ற வகையில் கற்றுக்கொண்ட பாடங்களும் நல்லிணக்கத்திற்குமான ஆணைக்குழுவினை நியமித்து, சர்வதேச மனித உரிமைகள் தொடர்பாக ஏற்பட்ட விமர்சனங்களினது நம்பகத் தன்மைக்கு அரசாங்கம் சவால் விடுத்துள்ள வேளையில், அதுவே இவ்வாறான ஒடுக்கும் பண்பினதான ஆட்சி முறையிலான ஏனைய நடவடிக்கைகளினால் தனது நிலையை கொச்சைப்படுத்திக் கொள்ளக்கூடாது.

தேசிய சமாதானப் பேரவை இத்தருணத்தில் பொலிசார்- செயற் படுத்தும் வெறுக்கத்தக்கதான பயங்கரவாதத் தடைச்சட்டம் மற்றும் அவசரகாலச் சட்டங்களை நீக்கும்படி அரசாங்கத்திடம் கேட்டுக் கொள்கின்றது. பாதுகாப்பு என்பது தனியே சந்தேகப்படுவதினால் மாத்திரம் ஏற்படுவதல்ல. அது நல்லிணக்கத்தினால் வெளிவரக்கூடிய நம்பிக்கை பொறுப்புணர்வுகளினால்தான் ஏற்பட முடியும் என்று நாம் கூறிக்கொள்ள விரும்புகிறோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிக்கை - 14

## ஐரோப்பிய ஒன்றியத்தின் கோரிக்கைகளை நிறைவேற்றினால் சர்வதேச ஆதரவு அதிகரிக்கும்

28-06-2010

ஐரோப்பிய யூனியன் ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச் சலுகைகளை தொடர்ந்து வழங்குவதற்கு விதித்திருந்த பதினைந்து நிபந்தனைகளும் எமது தேசிய இறைமையினை மீறுவனவாயிருப்பதால் அவற்றை நிராகரிப்ப தாக இலங்கை அரசாங்கம் அறிவித்துள்ளது. அத்துடன் அண்மையில் நடந்து முடிந்த உள்நாட்டு யுத்தம் தொடர்பான மனித உரிமைகள் தொடர்பாக ஐ.நா.சபை செயலாளர் நாயகம் பான் கீ மூனுக்கு ஆலோசனை வழங்க நியமிக்கப்பட்டுள்ள நிபுணர்குழு அங்கத்தவர்கள் மூவருக்கும் இலங்கை வர விசா கொடுக்கப்போவதில்லை என்றும் அரசாங்கம் அறிவித்துள்ளது.

இலங்கை அரசாங்கத்தின் அபிப்பிராயத்தின்படி ஐரோப்பிய யூனியனும், ஐ.நா. சபையின் செயலாளர் நாயகமும் இறைமை கொண்ட அரசின் விவகாரங்களில் தலையிடுவதாகவும் அவை ஏற்றுக் கொள்ளப்பட முடியாதவை என்றும் கூறப்படுகிறது.

இலங்கை ஒரு சனநாயக நாடு என்ற வகையில் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை பிரகடனங்களுக்கும் ஜெனிவா ஒப்பந்தங் களுக்கும் உடன்பட்டிருப்பதால் அவை தொடர்பான கடப்பாடுகளை நிறைவேற்றுதல் அதன் கடமையாகும். அதேபோல் ஐரோப்பிய ஒன்றியத்தின் கோரிக்கைகளும் கூட நாம் நிறைவேற்றக் கடமைப் பட்டுள்ள எமது யாப்புக்கு அமையவே காணப்படுகின்றன. எமது தேசிய இறைமையினை பாதுகாப்பது என்பது எமது நாட்டின் மனித உரிமைகளையும் மனிதாபிமான சட்டங்களையும் பாதுகாப்பதோடு இணைந்தே செயற்பட வேண்டியனவாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யுத்தத்தின் இறுதிக்காலக்கட்டத்திலும் கடந்த சில வருடங்களிலும் இலங்கை அவற்றை மீறிச் செயற்பட்டுள்ளதாக சர்வதேச சமூகங்களின் சில பிரிவினர் நம்புகின்றனர். எனவே, நாம் அவ்வாறு செயற்படவில்லை என்று உலகத்தை நம்பவைக்கும் வகையில் செயற்பட வேண்டியது அரசாங்கத்தின் கடமையாகும். இரண்டாம் உலகயுத்தத்தின் போது யுத்தம் தொடர்பான சட்டங்கள் மீறப்பட்டதனாலேயே டிரெஸ்டன் மீது கம்பளம் விரித்தாற்போல் முழுமையாக குண்டு வீசியமையும், ஹிரோசிமா மற்றும் நாகசாகி என்பன மீது அணுகுண்டு தாக்குதல் நடத்தப்பட்டது என கருதியதனாலேயே அவற்றிற்கு எதிராக ஏற்பட்ட பொதுவான எதிர்ப்பு காரணமாக யுத்தம் முடிவுற்றதும் ஐக்கிய நாடுகள் சபை நிறுவப்பட்டது. அதனுடன் இணைவாக சர்வதேச மனித உரிமை பிரகடனம் உலகின் அனைத்து பிரதான சமயங்களைச் சேர்ந்த புகழ் வாய்ந்த நபர்களாலும் உருவாக்கப்பட்டது. பௌத்த சமயத்தினை யூதான்ட் பிரதிநிதித்துவம் செய்தார்.

முரண்பாடுகளிலிருந்து கற்றுக் கொண்ட பாடங்கள் பற்றிய ஆணைக்குழுவினை நியமித்திருப்பதனால் அரசாங்கம் சரியான அடி எடுத்து வைத்திருப்பதாக நாம் நம்புகின்றோம். துரதிஷ்டவசமாக கடந்த அனுபவங்களிலிருந்தும், ஆணைக்குழுவில் அடக்கப்பட்டுள்ள நபர்களைப் பொறுத்தும் அவர்களது பொறுப்புகள் பற்றியும் அவர்கள் ஆற்றவேண்டிய விசாரணைகளைப் பொறுத்தும் காட்டப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து தாம் கொண்டுள்ள ஆர்வங்களை அது நிறை வேற்றுமா என்பதில் ஐ.நா சபைக்கு நம்பிக்கை ஏற்பட்டுள்ளதாகத் தெரியவில்லை.

இப்போதைய நிலைவரங்களை அரசாங்கம் கவனத்திற் கொண்டு ஐ.நாவுடன் இணைந்து எமது ஆணைக்குழுவின் பொறுப்பாணைகளை விஸ்தரிப்பதன் மூலம் ஐ.நா. சபை இன்னுமொரு ஆணைக்குழுவினை நியமிக்க வழிகோலாது பார்த்துக் கொள்ளுதல் அவசியமாகும்.

ஐரோப்பிய ஒன்றியம் விதித்துள்ள பதினைந்து (15) நிபந்தனை களைப் பொறுத்தமட்டில் அவை இலங்கை சர்வதேச ஒப்பந்தங்களில் தனது ஒப்புதலை கையெழுத்திட்டு அறிவித்துள்ள வகையில் அது இலங்கையில் பின்பற்ற வேண்டிய உள்நாட்டில் (நல்) ஆட்சி செய்வது மற்றும் மனித உரிமைகள் பற்றிய பிரச்சினைகளேயாகும். ஐரோப்பிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யூனியனால் எழுப்பப்பட்டுள்ள இப்பிரச்சினைகள் இலங்கையில் எதிரணியினரும் சிவில் சமூகக் குழுக்களும் கூட ஏற்கனவே எழுப்பி யுள்ள சனநாயக முறையிலான பிரச்சினைகள் தான். இவ்வாறான நிலையில் ஐரோப்பிய யூனியன் விதித்துள்ள நிபந்தனைகளை இலங்கை அரசாங்கம் நிராகரித்துவிடாது எதிர்மறையற்ற வகையில் அனுசரித்து ஆவன செய்ய வேண்டும் என தேசிய சமாதானப் பேரவை நம்புகிறது.

வெளி விவகார அமைச்சு ஐரோப்பிய யூனியனின் நிபந்தனை களைப் பொறுத்து அவை எவ்வாறு இலங்கைக்கு பொருந்தாது என விளக்கியமையை ஒத்ததாக ஐரோப்பிய யூனியனுடன் பேச்சுவார்த்தை களை தொடர்வதே மென்மேலும் அவர்களுடைய நிபந்தனைகளை திருத்தி அமைப்பதற்கான வழிமுறையாகும். விதிக்கப்பட்ட நிபந் தனைகள் நாட்டின் தேசிய ஆர்வங்கள் தொடர்பாக உடன்பட முடியாதவை என்பதற்கான ஏற்றதும் சரியானதுமான காரணங்களை அரசாங்கத்தினால் கூறக் கூடியதாக இருக்குமானால், ஐரோப்பிய யூனியனும் திறந்த மனதுடன் இலங்கையின் கருத்துக்களை பார்க்க வேண்டிய தேவையும் உண்டு.

ஐரோப்பிய யூனியனது கருத்துக்களை இலங்கை எதிர்மறையற்ற வகையில் அனுசரித்து நடப்பதனால் இரண்டு நன்மைகளுக்கு வாய்ப்புண்டு. இவற்றை படிப்படியாகவும் நிர்ணயிக்கப்பட்ட ஒரு திட்டவழிமுறையின் அடிப்படையில் ஐரோப்பிய யூனியனுடன் விவாதித்தும் அதன் மூலமாக செய்து கொள்ளும் உடன்படிக்கையின் மூலமும் நடைமுறைப்படுத்தலாம். முதலாவது நன்மை ஜி.எஸ்.பி. பிளஸ் சலுகையினை தக்க வைத்துக்கொள்ளலாம். இது இலங்கையின் பொருளாதாரத்திற்கும் அதன் தொழிலாளர் பிரிவினருக்கும் நன்மை பயப்பதாகும். இரண்டாவது இலங்கை அரசாங்கம் நல்லாட்சியும், மனித உரிமைகள் பாதுகாப்பும் அதன் மக்களை பாதிப்பவை என்பதனை உணர்ந்து நேர்மையுடன் செயற்பட உள்ளதென்னும் செய்தியை பரந்தளவிலான சர்வதேச சமூகத்திற்கு அனுப்புவதுடன் சர்வதேச மட்டத்தில் அது ஏற்றுக்கொண்ட அர்ப்பணிப்புகளுக்கு உட்பட்ட வகையில் செய்யப்படுவதாகவும் இருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐரோப்பிய யூனியனுடைய நிபந்தனைகளை மேலதிக பேச்சு வார்த்தைகள் மூலம் பேசித்தீர்த்து பூர்த்தி செய்யும் இலங்கை அரசாங்கத்திற்கு ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் எழுப்பியுள்ள பிரச்சினைகளுக்கு பதிலளிக்கவும் இலங்கையின் ஆர்வங்களுக்கான ஆதரவினை பரந்தளவிலான சர்வதேச சமூகத்திடம் பெற்றுக்கொள்வதற்காகவும் பிரசாரம் செய்ய ஏற்ற வாய்ப்பாகிவிடும். அனைத்து இலங்கையர்களுக்கும் அவர்களது அரசியல், பொருளாதார, சமூக வாழ்வின் அந்தஸ்து உயர்த்தப்படுவது அதனால் ஏற்படும் இறுதியான நிகர விளைவாயிருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐரோப்பிய யூனியன் தரும் வாய்ப்பை இலங்கை பயன்படுத்த வேண்டும்

24-06-2010

இலங்கை ஏற்றுமதி செய்யும் பொருட்களுக்கு ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகைகளை 2010ஆம் வருடம் ஆகஸ்ட் 15ஆம் திகதியோடு நிறுத்திவிட ஐரோப்பிய யூனியன் செய்த தீர்மானத்தை மீள பரிசீலிப் பதற்காக இலங்கைக்கு கொடுத்துள்ள வாய்ப்பினை இலங்கை அரசாங்கம் பரிசீலிக்கத் தீர்மானித்துள்ளது. ஐ.நா. சபையின் மனித உரிமைகள் தொடர்பான மூன்று ஒப்பந்தங்களை இலங்கை நிறை வேற்றுவதில் பல குறைபாடுகள் காணப்படுவதாக ஐரோப்பிய ஆணைக்குழுசெய்த புலனாய்வுகள் மூலம் தெரிந்து கொண்டதால் ஐரோப்பிய யூனியன் ஏற்கனவே அது வழங்கும் வரிச்சலுகையினை இலங்கைக்கு வழங்கப் போவதில்லை என முடிவு செய்திருந்தது.

அவையாவன 1. சர்வதேச சிவில் மற்றும் அரசியல் உரிமைகள், 2. சித்திரவதை மற்றும் கொடூரங்களுக்கும் மனிதாபிமானமற்றதும் தரங்குறைந்ததுமான வகையில் நடாத்துதல் அல்லது தண்டனைகளை வழங்குதல் தொடர்பான ஒப்பந்தம், 3. பிள்ளைகளின் உரிமைகள் பற்றிய ஒப்பந்தம் என்பனவாகும்.

2010ஆம் ஆண்டு ஜுலை மாதம் முதலாம் திகதிக்கு முன்னராக இலங்கை அரசாங்கம் குறிப்பான சில மனித உரிமைகள் தொடர்பான நிபந்தனைகளை நிறைவேற்ற எழுத்தில் உத்தரவாதம் தரும்பட்சத்தில் ஐரோப்பிய ஒன்றியம் தான் ஏற்கனவே விதித்த வரிச்சலுகை நீக்கத்தை ஆறுமாதத்திற்கு நிறுத்திவைக்க முன்வந்துள்ளது. 17ஆவது திருத் தத்தினை (யாப்பு) அமுலாக்கம் செய்தல், அவசரகால சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டவர்களை விடுதலை செய்தல், பயங்கரவாதத் தடைச் சட்டம் என்பவற்றை நீக்குதல் என்பன அந்நிபந்தனைகளில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளடங்கும் சிலவாகும். இவை யாவும் நாட்டில் சனநாயக செய்முறை கள் மூலமாக எதிரணியினரும் சிவில் சமூகத்தினரும் செய்த பிரசாரங் களில் உள்ளடங்குபவை. இவற்றின் மூலம் நீண்டகாலமாக நடைபெற்ற உள்நாட்டு யுத்தத்தின் பின்னர் நாட்டினை வழமை நிலைக்கு கொண்டு வந்து நல்லிணக்கத்தினை ஏற்படுத்தும் செய்முறையினை ஏற்படுத்து வதனையே நோக்கமாக கொண்டுள்ளது.

ஐரோப்பிய யூனியனுக்குள் 7200 உற்பத்திகளை வரிகள் ஏதுமின்றி ஏற்றுமதி செய்ய 14 உலக நாடுகள் சலுகை பெற்றுள்ளன. அவற்றில் இலங்கை மாத்திரமே ஒரே ஆசிய நாடு. ஐரோப்பிய யூனியனது செய்முறைகள் மிகவும் தெளிவானது. அது விதித்துள்ள நிபந்தனைகள் நடைமுறையில் செயற்படுகின்றனவா என்பதனை புலனாய்வு செய்து தெரிந்து கொள்ள அது ஆவன செய்யும். மனித உரிமை நிலைமைகள் தொடர்பாக பல ஐ.நா. அறிக்கைகள் வெளியாகியுள்ளன. இலங்கையை பொறுத்தமட்டில் தமிழீழ விடுதலைப் புலிகளின் போராட்டத்தை முடிவுக்கு கொண்டு வருவதற்கு 18 மாதங்களுக்கு முன்னரேயே இதுபற்றிய புலனாய்வு செய்வதற்கான ஏற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டு விட்டன.

பல்வேறு கசப்புணர்வுகளுக்கும் எதிர்மறையான பிரசாரங் களுக்கும் மத்தியிலும் அரசாங்கம் கணிசமான அளவில் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகையினை தக்க வைத்துக் கொள்ள கடந்த பல மாதங்களாக முயன்று வந்துள்ளது. பல சிரேஷ்ட அதிகாரிகளையும் சமயத் தலைவர்களையும் கூட ஐரோப்பிய யூனியனுக்கு அனுப்பி பேச்சுவார்த்தைகளை நடாத்த பல முயற்சிகளை மேற்கொண்டுள்ளது. இப்பேச்சுவார்த்தைகளின் பின் சில விளைவுகளும் ஏற்பட்டுள்ளன. யுத்தத்தினால் இடப் பெயர்வு களுக்கு உள்ளாகியவர்களை மீள குடியேற்ற பல ஏற்பாடுகளை செய்தும், முன்னாள் தமிழீழ விடுதலைப் புலிகளை விடுதலை செய்தும் மறுவாழ்வளித்தும் கற்றபாடங்களும் நல்லிணக்கத்திற்குமான ஆணைக் குழுவை நியமித்தும் சில நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. அரசாங்கம் முன்னாள் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தினருக்கு புனர்வாழ்வளிப்பதற்காக அவர்களை ஐரோப்பிய யூனியனுக்கு தனது உற்பத்திகளை ஏற்றுமதி செய்யும் ஆடைக் கைத்தொழிற்சாலைகளில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழிலுக்கமர்த்த ஏற்பாடு செய்துள்ளதாகவும், ஜி.எஸ்.பி. பிளஸ் சலுகை நீக்கப்படுவதால் அரசாங்கம் செய்துள்ள ஏற்பாடுகளுக்கு பெரும் பாதிப்பினை ஏற்படுத்தலாம் என்றும் அரசாங்க அதிகாரிகள் அச்சம் தெரிவித்துள்ளனர்.

யுத்தம் முடிந்த ஒரு வருடத்தின் பின்னர் சர்வதேச நிறுவனங்களான ஐரோப்பிய யூனியன், ஐ.நா. சபை உள்ளிட்ட பல நிறுவனங்கள் தன்னை அநீதியான நெருக்கடிகளுக்கு உள்ளாக்குவதாக இலங்கை அரசாங்கம் அனுமானிக்கின்றது. ஐ.நா. சபையின் செயலாளர் நாயகம் பான் கீ மூன் இலங்கையில் நிலவும் மனித உரிமைகள் தொடர்பான பிரச்சினைகளைப் பற்றி தனக்கு ஆலோசனை கூற மூன்று அங்கத்தவர்களைக் கொண்ட சர்வதேச ஆலோசனைக் குழு ஒன்றினை நியமித்துள்ளார்.

இருந்த போதிலும் ஆதிகாலம் முதலான அதன் (இலங்கை) நீதியான / நேர்மையான ஆட்சி, நவீனகாலத்தின் சனநாயக சம்பிரதாயம், என்பன காரணமாக இலங்கை அரசாங்கத்திற்கு மீண்டும் நல்லாட்சி மற்றும் மனித உரிமைகளை மதித்து நடப்பது பற்றியும் அவற்றிற்கான தனது ஈடுபாடுகள் பற்றியும் எந்த ஒரு சாராருக்கும் அஞ்சத் தேவையில்லை. சர்வதேச ஆர்வங்கள் தொடர்பாக அவற்றிற்கு எதிராக நாட்டை பாதுகாப்பு செய்யும் நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு பதிலாக சர்வதேச சமூகங்களுடன் ஆட்சி தொடர்பான அவற்றின் கரிசனங்களுடன் தனது ஈடுபாட்டை எதிர்மறையற்ற முறையில் செலுத்தி ஐரோப்பிய யூனியனிலிருந்து வர்த்தக சலுகைகளை தொடர்ந்தும் பெற்றுக் கொள்வதில் அக்கறை காட்டுவது மிக முக்கியமானதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எதிர்கால சவால்களை எதிர்நோக்க நல்லிணக்கத்திற்கான தேவைகள்

20-05-2010

சனாதிபதி மகிந்த ராஜபக்ச எட்டு அங்கத்தவர்களைக் கொண்ட 'கற்றுக் கொண்ட பாடங்களும் நல்லிணக்கத்திற்குமான ஆணைக்குழு' ஒன்றினை நியமித்து, அடுத்து வரும் ஆறுமாதங்களில், பெப்ரவரி 2002ஆம் ஆண்டு முதல் மே மாதம் 2009ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் இடம்பெற்ற சம்பவங்களைப் பற்றி நுணுகி ஆராய்ந்து இனிமேல் இவ்வாறானவை இடம்பெறாத வகையில் என்ன செய்யலாம் என்பதற்கான சிபாரிசுகளை செய்யுமாறு பணித்துள்ளார்.

ஆணைக்குழுவுக்கு வழங்கப்பட்டுள்ள காலம் குறுகிய ஆறு மாத காலப்பகுதியே என்பதால் சர்வதேச நிறுவனங்களும், அரசாங்கங் களும் கூடிய ஆர்வமும் அக்கறையும் கொண்டுள்ளதான யுத்தத்தின் இறுதிக் காலப் பகுதியான ஜனவரி 2008ஆம் ஆண்டிலிருந்து யுத்தம் முடிவுற்ற காலப்பகுதி வரையான இடைவெளியில் ஏற்பட்ட யுத்த நடவடிக்கைகளை மையப்படுத்தி விசாரித்து, சிபாரிசுகளை செய்வது அரசாங்கத்திற்கு பெரும் பயனுடையதாக இருக்கும் என தேசிய சமாதானப் பேரவை நம்புகின்றது.

சமாதான ஒப்பந்தம் ஏற்பட்ட பெப்ரவரி 2002ஆம் ஆண்டு முதல் ஜனவரி 2008ஆம் ஆண்டுவரையான காலப்பகுதி பற்றிய சம்பவங் களைக் கூறும் பெருமளவான பிரசுரங்கள் கிடைக்கக்கூடியதாக உள்ளமை பற்றி தேசிய சமாதானப் பேரவை நன்கறியும். இவ்வாறான தகவல்களை நிபுணர்கள் குழு நன்கு ஒப்பிட்டுப் பார்த்து இப்போதைய ஆணைக்குழுவுக்கு வழங்கியுள்ள ஆணைகளுக்கு உட்பட்ட வகையில் தேசிய நல்லிணக்கத்திற்கான சிபாரிசுகளை வழங்க முடியும். கள அளவீடு ஒன்றை மேற்கொண்டால் யுத்தத்தினால் பாதிப்புக்குள்ளாகிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேறுபட்ட பகுதிகளிலும் அனைத்து சமூகங்கள் மத்தியிலும் யுத்தத்தின் காரணமாக கொல்லப்பட்டவர்கள், ஊனமுற்றவர்கள், அழிவுக் குள்ளான வீடுகள், அழிவுக்குள்ளாகிய பொது நிறுவனக் கட்டடங்கள், வணக்கத்தலங்கள், பாடசாலைகள் மற்றும் நீர், மின்சாரம் உட்பட பொதுப்பயன்பாட்டு வசதிகளில் ஏற்பட்ட பாதிப்புக்கள், யுத்தத்தினால் ஏற்பட்ட மொத்த செலவினங்கள் மற்றும் இவ்வாறான சம்பவங்களுக்கு பொறுப்பாயிருந்த காரணங்கள் பற்றி நன்கு அறிந்து கொள்ள முடியும்.

யுத்தத்தினால் பாதிக்கப்பட்டவர்களுடன் பேட்டி காண்பதன் மூலம் அவர்களுடைய கருத்துக்களை தெரிந்து கொள்ள முடிவதுடன், அவர்களிடம் அவர்களுடைய துயரக் கதைகளை செவிமடுப்பதால் அது காயங்களை ஆற்றும் செய்முறையின் ஆரம்பப்படியாகவும் பங்காற்றும். அத்துடன் நிலைமைகளின் உண்மைத் தன்மைகளை அறிந்து கொள்ளவும் முடியும். அரசாங்கம் திறன்மிக்க வகையில் செய்யவேண்டிய ஆவணப்படுத்தும் நடவடிக்கையில் மிக முக்கிய மானது பாதிப்புக்குள்ளாகியவர்களின் உடலில் ஏற்பட்ட கடுமையான தாக்கங்களுக்கான நஷ்டங்கள் அங்கீகரிக்கப்பட்டு அதற்கு ஏற்ற நஷ்டஈட்டினை வழங்கி நீதி வழங்கப்பட்டதாக நம்ப வைப்பதாகும். தேசிய சமாதானப் பேரவை உட்பட பல அரசு சாரா நிறுவனங்களும் சிவில் சமூகக் குழுக்களும் ஏற்கனவே நல்லிணக்கத்தினை ஊக்கு விக்கும் முயற்சிகளில் ஈடுபட்டுள்ளன. அத்துடன் அவற்றை நம்பத் தகுந்த வழிமுறைகள் மூலமாக தகவல் திரட்டும் பணிக்குழுவாகவும், காயங்களை ஆற்றவும் நல்லிணக்கம் ஏற்படுத்தவும் வந்திணையும்படி அழைப்பு விடுக்கலாம்.

கற்றுக்கொண்ட பாடங்களுக்கும் நல்லிணக்கத்திற்குமான ஆணைக் குழுவை அரசாங்கம் நியமித்த அதேநேரத்தில் நாட்டின் வடக்கு, கிழக்கு பகுதிகளில் குறிப்பாக யாழ்ப்பாணத்தில் மனிதப் பாதுகாப்பு தொடர்பான நிலைமைகளில் சீர்குலைவு ஏற்பட்டுள்ளமை துர்ப்பாக்கிய மானது என நாம் கருதுகிறோம். யாழ்ப்பாண வீதிகளில் மீண்டும் உயர்ந்தளவிலான பாதுகாப்புப் படையினரின் பிரசன்னம் ஏற்பட் டிருப்பதன் காரணமாக மக்கள் இனந்தெரியாத நபர்களினால் ஏற்படும் ஆட்கடத்தல், கொலைகள் பற்றி அச்சமடைந்துள்ளனர். இவ்வாறானவை பெருமளவில் கடந்த காலங்களில் ஏற்பட்டவை போன்றே தொடர்ந்தும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடைபெறுவதுடன் அவை எவ்வாறு ஏற்படுகின்றன என்பது புதிராக வும் இரகசியமாகவும் கபட திறமையுடனும் நிகழ்கின்றன. எனவே, அரசாங்கம் இவ்வாறான நடவடிக்கைகளை உடனடியாக நிறுத்த ஆவன செய்வதுடன் கற்ற பாடங்களும் நல்லிணக்கமும் தொடர்பாக கடுமையான தனது ஈடுபாட்டை வெளிக்காட்ட வேண்டும்.

நல்லிணக்கம் யதார்த்தத்தில் இடம்பெற வேண்டுமானால் யுத்தத் தினால் பாதிப்புக்குள்ளாகிய மக்கள் தமது அனுபவத்தில் கண்டு அனுபவித்த துயரங்களையும் இழப்புக்களையும் எடுத்துக் கூறுபவர் களுக்கு தாம் பாதுகாப்புடன் இருப்பதாக உணரக்கூடியதாக இருத்தல் வேண்டும். அத்துடன் அரசாங்கம் அவர்களை நம்புவதாகவும், அரசியலின் ஓர் அங்கமாகக் கருதுவதாகவும் அவர்கள் உணரவும் வேண்டும். அரசாங்கப் பேச்சாளர்கள் இதுபற்றி கூறுகையில் தாம் கண்டறிபவை, எடுக்கும் தீர்மானங்கள் என்பவற்றில் உள்ளூர் பெறுமானங்களும் அனுபவங்களும் நிச்சயமாக வலியுறுத்தப்படும் எனக் கூறியிருக்கிறார்கள்.

அப்படி உள்ளூர் அனுபவங்கள் கவனத்தில் எடுத்துக் கொள்ளப் படுவதாயின், அது சிறுபான்மையினத்தவர் மீதான நம்பிக்கையினை அடித்தளமாகக் கொண்டதாக இருக்க வேண்டும். அத்துடன் அவர் களுக்கு நீதி வழங்கப்பட்டு அவர்களுடைய சொந்த வாழ்விடப் பகுதிகளில் பாதுகாப்பாகவும் கௌரவத்துடனும் வாழக்கூடியதாகவும் இருத்தல் வேண்டும். சமாதானமும் நம்பிக்கையும் கடனாக வாங்கப்பட முடியாதவை. அத்துடன் நிச்சயமாக அவை முறிவடையாத நம்பிக்கை மீதே கட்டியெழுப்பப்படவும் முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ் மக்களின் அச்ச உணர்வுகளை தாமதமின்றி அகற்றுவது அவசியம்

09-05-2010

அரசாங்கத்தின் 'வடக்கின் வசந்தம்' அபிவிருத்தி நிகழ்ச்சிகளால் யாழ்ப்பாண தீபகற்பத்தில் இப்போது ஒப்பீட்டளவில் குற்றங்களின் அளவு குறைந்துள்ளதுடன் பொருளாதார மலர்ச்சியும் ஏற்பட்டுள்ளதாக அரசின் ஊடகங்கள் பரந்தளவில் விளம்பரம் செய்து வருகின்றன. அத்துடன் அங்குள்ள பாதுகாப்பு நிலைவரம் தொடர்பாகப் பொறுப்பற்ற சக்திகள் தவறான முறையில் பிரசாரம் செய்து வருவதாகவும் எச்சரித் துள்ளன.

கடந்த வருடம் மே மாதம் யுத்தம் முடிவுற்றதன் பின்னர் கள நிலையில் சில மேம்பாடுகள் ஏற்பட்டிருந்த போதிலும், இப்போது யாழ்ப்பாண தீபகற்பத்தில் அச்சுறுத்தல்கள், ஆட்கடத்தல், கொலைகள், அச்சுறுத்தி பணம் பறித்தல் என்பன இடம்பெறுவது காரணமாக நிலைமை சீர்குலைந்துள்ளதாக அறிக்கைகள் கிடைக்கப்பெற்றுள்ளன.

யாழ்ப்பாணத்தில் ஆட்கடத்தல், கப்பப் பணம் கோரல், குழந்தை ஒன்றை கொன்றமை என்பவற்றிற்கான விசாரணையை செய்துவரும் நீதிவானுக்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளமையினை எதிர்த்து அங்குள்ள 'யாழ்ப்பாண வழக்கறிஞர்கள் சங்கத்தின்' அங்கத்தவர்கள் நீதிமன்றம் செல்லாது பணி பகிஷ்கரிப்பில் ஈடுபட்டுள்ளனர். பெற்றோர் கள் முன்னர் போன்று தமது தொழிலை விட்டுவிட்டும் கூட தமது பிள்ளைகளை பாதுகாப்பாக அழைத்துச் செல்லும் கலாசாரம் அங்கு நிலவும் பாதுகாப்பின்மை காரணமாக மீண்டும் ஆரம்பித்துள்ளது.

யுத்தத்தின் போது இருந்ததைப் போன்றே யாழ்ப்பாணத்தில் இப்போதும் இறுக்கமான பாதுகாப்பு ஏற்பாடுகள் உயர்ந்த அளவில் தொடர்ந்தும் காணப்படுகின்றன. பொலிஸ் சேவை மத்திய அரசினது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடவடிக்கையாக இருப்பதால் அங்கு ஏற்படக் கூடிய எந்தக் குற்றங் களுக்கும் அரசாங்கமே பொறுப்புக்கூற கடமைப்பட்டுள்ளது. மறுபுறத் தில் பொலிஸ் துறையின் கடமைகளை உள்ளூர் அதிகார சபைகளிடம் விட்டுவிடுவது பற்றி தீவிரமாக அரசாங்கம் சிந்தித்து அதிகார பரவலாக்கம் செய்வதும் தேவையாகும். அத்துடன் வடமாகாண தேர்தல்களின் போது, தேர்தல் சுதந்திரமாகவும் நியாயமான முறை யிலும் நடைபெறுவதும் உறுதிப்படுத்தப்படுதல் வேண்டும். அரசாங்கம் நடைமுறை சார்ந்து சமயோசிதமாக நடந்து வடபகுதியின் நல்லாட்சி யின் பொறுப்பினை வடபகுதி மக்களிடமும் அவர்களது தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளிடமும் விட்டுவிடும் என நம்புகிறோம்.

சட்டத்தினையும் ஒழுங்கினையும் பராமரிக்கும் நிறுவனங்கள் வெளியாரின் அதிகாரத்திலிருப்பதாக மக்கள் நம்புவார்களேயானாலும் ஆட்சியில் மக்களது குரலும் பங்கேற்பும் இல்லாத நிலையிலும், நிலைத்து நிற்கக்கூடியதான நல்லாட்சிக்குத் தேவையான மக்களது ஒத்தாசை கிடைக்காது போய்விடலாம். சட்டம், ஒழுங்கு என்பவற் றிற்கான அதிகார பிரிவினரை வெளியார் எனப் பார்க்கப்படும் போது பிரிவினை வேண்டும் என எண்ணுபவர்களுக்கு அது சாதகமாகிவிடும் ஆபத்துமுண்டு.

போர் முடிவுற்று ஒரு வருடம் முடிந்த பின்னரும் கூட, யாழ்ப் பாணத்தில் நிலைமைகள் சீர்குலைந்தே காணப்படுவதாக அங்குள்ள மக்களிடம் உணர்வுகள் காணப்படுவதன் காரணமாக நாட்டின் ஏனைய பகுதிகளில் வளர்ந்துள்ள சமாதானம் மற்றும் வழமை நிலை என்பவற்றி லிருந்து வட பகுதி இன்றும் வேறுபட்டு காணப்படுவதாகவே கூற வேண்டும். எனவே, வட பகுதி மக்கள் பாதுகாப்பின்மை நிலவுவதாக கொண்டுள்ள உணர்வுகள் காரணமாக அவர்கள் மனதில் நம்பிக்கை யின்மை ஏற்படுவதுடன் சனநாயக முறையின் மீதும் நம்பிக்கை இழந்து விடக்கூடிய விளைவும் ஏற்படலாம் என்பதால், தேசிய சமாதானப் பேரவை உடனடியாக நிலைமைகளில் மாற்றங்களை ஏற்படுத்தப்பட வேண்டும் எனக் கோருகிறது.

கடந்த சில வாரங்களாக பாதுகாப்பு அமைச்சின் சிரேஷ்ட அதிகாரி கள் சிலர் நடைமுறை சார்ந்ததும், புத்தி சாதுார்யமானதுமான முறையில் சிந்தித்து, தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்களுக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளூர் மற்றும் சர்வதேச மட்டங்களில் பிரிவினைவாதத்திற்கான ஆதரவினை ஊக்குவிப்பவர்களுக்கும் எதிரான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமானால் அதற்காக அதிகார பரவலாக்கம் செய்யப்படுதல் வேண்டும் என்னும் கருத்தினை வற்புறுத்தி வருவதாக அறிகின்றோம்.

நாட்டினதும் அதன் மக்களினதும் ஐக்கியத்தை உறுதி செய்யத் தேவையான அரசியல் சீர்திருத்தத்தின் ஒரு பகுதியாக வழமை நிலையினை திரும்பவும் நிலைநாட்டுதல் என்பதன் முழுமையான அர்த்தத்துடனும் சட்டத்தை சமமான முறையில் அனைவருக்கும் குறிப்பாக வடக்கு, கிழக்கு உட்பட அனைத்து பகுதிகளிலும் நடைமுறைப்படுத்தல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நேச நாடுகளுடனான தனது உறவை இலங்கை கட்டியெழுப்ப வேண்டும்

09-05-2010

சுவீடன் அரசாங்கம் இலங்கையில் உள்ள தனது தூதுவராலயத்தை மூடிவிட்டு இருதரப்பு திட்டநிகழ்ச்சிகளை அடுத்த வருடத்தோடு ஒரு முடிவுக்கு கொண்டுவரப் போவதாக அறிவித்துள்ளது.

சுவீடன் கடந்த ஐம்பது வருடங்களுக்கு மேலாக இலங்கையில் அபிவிருத்தியுடன் தொடர்பான உறவுகளை வைத்திருந்தது. இந்த நீண்டகாலப் பகுதியில் சுவீடன் இலங்கையின் அபிவிருத்தி முயற்சிகளுக்கு தாராளமாக உதவி செய்து வந்திருக்கின்றது. குறிப்பாக, கிராமிய உட்கட்டமைப்பு வசதிகளை கட்டியெழுப்புதல், கல்வி முறையை தரமுயர்த்தல், பொலிஸ் படையின் புலனாய்வுத் திறன்களை பலப்படுத்தல், மனித உரிமைகளையும் சமாதானத்தையும் பாதுகாக்கும் நிறுவனங்களை பலப்படுத்துவதற்கான உதவிகள் என்பவற்றை வழங்கியிருந்தது.

சுவீடன் அரசாங்கம் தனது செலவுகளை குறைக்கும் நோக்கம் காரணமாகவும், உலகின் மிகக் கூடிய வறுமையான நாடுகள் மீது கூடிய கவனம் செலுத்தும் நோக்கமாகவுமே தனது தூதுவராலயத்தை மூடத் தீர்மானித்துள்ளதாக காரணம் தெரிவித்துள்ளது.

இலங்கையில் அண்மைக் காலங்களில் ஏற்பட்டுள்ள கூடிய அளவினதான வளர்ச்சி வீதம் காரணமாக அது மத்திய வருமான நாடுகளின் தரங்களை அடைந்திருக்கிறது. இருந்த போதிலும் கடந்த இரண்டு வருடங்களாக இலங்கை அரசாங்கம் சர்வதேச சமூகங்களுடன் கொண்டிருந்த முரண்பாடான உறவுகளும் சுவீடனது தீர்மானத்தினை நிர்ணயித்த தவிர்க்க முடியாத காரணமாயிருக்கலாம். அதுவும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பாக ஐரோப்பிய யூனியனின் சில நாடுகளுடன் கொண்டிருந்த முரண்பாடுகள் காரணமாகியிருக்கலாம்.

சுவீடனின் வெளிவிவகார அமைச்சர் கார்ல்பில்ட் என்பவருக்கு இலங்கை அரசாங்கம் விசா வழங்க மறுப்பு தெரிவித்தமை, இரண்டு அரசாங்கங்களுக்கும் இடையேயான உறவுகளை மேம்படுத்துவதில் காணப்படும் குறைபாடாகும். இலங்கை அரசாங்கம் திரு.பில்ட் இலங்கைக்கு சிறிது காலத்தின் பின்னர் வரமுடியும் என கூறியுள்ள போதிலும், பிரித்தானிய, பிரான்சிய நாட்டு வெளிவிவகார அமைச்சர் களுடன் இலங்கை வந்து நாட்டில் நிலவிய மனிதாபிமான நெருக்கடி களை மதிப்பிட்டு, அவற்றை நீக்குவதற்கான உதவிகளை வழங்க முன்வந்த போது இந்த விசா பிரச்சினை பல தசாப்தங்களாக இரண்டு நாடுகளுக்குமிடையே நிலவிய சிநேகபூர்வமான உறவுகளுக்கு ஏற்றதாயிருக்கவில்லை.

இலங்கையில் சுவீடன் தூதுவராலயம் மூடப்பட்டதாலும் இரு தரப்பு நிகழ்ச்சிகளும் அபிவிருத்தி உதவிகளும் முடிவுக்கு கொண்டு வரப்பட்டுள்ளதாலும் இவ்வாறான உதவிகள் தேவைப்படும் இலங்கை மக்களின் ஒரு பிரிவினருக்கு இது பெரும் இழப்பாகிவிடும். அத்துடன் இலங்கையில் சனநாயகம் தொடர்பான சமநிலை பேணும் தத்துவத்தை கண்காணிக்கும் சிவில் சமூகங்களும் பாதிப்படையலாம். யுத்தத்தின் பின் ஏற்படக்கூடியதும், முன்னெப்போதையும் விட கூடியளவில் ஏற்படக்கூடியதுமான எதிர்மறையற்ற மாற்றங்களோடு இணைந்ததாக இலங்கையிலிருந்து சுவீடன் வெளியேறுவது தொடர்பாக தேசிய சமாதானப் பேரவை கவலையடைகிறது.

நீண்ட காலமாக இலங்கைக்கும் அதன் மக்களுக்கும் ஆதர வளித்து வந்த நாடுகளுடன் இலங்கை அரசாங்கம் தனது உறவுகளைக் கட்டியெழுப்ப ஆவன செய்ய வேண்டுமென நாம் பரிந்துரை செய் கின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசிய நல்லிணக்கத்தை விரைவுபடுத்த அரசுக்கு தேசிய சமாதான பேரவை ஆதரவு

16-04-2010

சனாதிபதித் தேர்தலிலும் பொதுத் தேர்தலிலும் அரசாங்கம் பெற்றுள்ள அமோக வெற்றி அரசியலில் முனைவாக்கத்திற்குப் பதிலாக நீண்டகால அரசியல் ஸ்திரத்தன்மைக்கு வழிவகுக்க முடியும். அரசாங்கம் பாராளு மன்றத்தில் மூன்றிலிரண்டு பெரும்பான்மைக்கு அருகில் இருப்பதால் சமூகத்தில் ஆழ வேரூன்றிவிட்ட பல பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்கான தலைமைத்துவத்தினை வழங்க சிறந்த நிலையிலுள்ளது. மூன்று தசாப்தங்களின் பின்னர் இலங்கை முதன் முறையாக அரசு சாராத, அரசியல் வன்முறையிலான அச்சம் ஏதுமில்லாத நிலைமையை அடைந்துள்ளது.

சனாதிபதி ராஜபக்சவுக்கும் அரசாங்கத்திற்கும் அவர்கள் என்றுமே இதுவரை கண்டிராத அளவில் பெற்றுள்ள தேர்தல் வெற்றிக்காக தேசிய சமாதானப் பேரவை தனது பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கிறது.

இப்போது உலகின் பார்வை இலங்கையின் யுத்தத்திற்கு பிற்பட்ட காலப்பகுதி பற்றியே உள்ளது என்பதால், அரசாங்கம் எடுக்கப்போகும் தேசிய நல்லிணக்கம் தொடர்பான நடவடிக்கைகளுக்கு தேசிய சமாதானப் பேரவை தனது ஆதரவினை வழங்க விரும்புகிறது. அதேநேரத்தில் நடந்து முடிந்த பொதுத் தேர்தலில் வாக்களிப்பு முதல் முறையாக மிகவும் குறைந்த அளவிலேயே காணப்பட்டமை தொடர் பாகவும் நாம் மிகவும் அக்கறையுடன் இருக்கின்றோம். அதுவும் குறிப்பாக வடபகுதியில் மிகக் குறைவாகவே வாக்குகள் இடப் பட்டுள்ளன. ஆட்சியில் சிறுபான்மையினரது பங்கேற்றல் போதியளவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்படாதபோது பெரும்பான்மையினத்தவரால் உருவாக்கப்படும் அரசாங்கம் சனநாயகத்தை கொண்டிருப்பதாகாது.

மகாத்மா காந்தி கூறியது போன்று மக்கள் தொகையின் அனைத்து பிரிவினரிடையேயும் நம்பிக்கையினை மீள கட்டியெழுப்புதல் வேண்டும். ஏனெனில், அனைவரினதும் நல்வாழ்க்கை பற்றியதே உண்மையான சனநாயகமாகும். அத்துடன் அனைவரையும் உள்ள டக்கிய வகையிலான தீர்மானங்களை செய்யவேண்டுமெ ஒழிய எதிரணியினரை உதாசீனம் செய்தும் தடாலடியாய் மேவியும் செய்யக் கூடாது. இவ்வாறான வழியில் எதிர்மறையற்ற முறையில் செயற் படுவதால் இலங்கையின் மக்கள் தொகையில் மிகப்பெரும்பான்மை யினரது ஆதரவினை பெற்றுக் கொள்ள முடிவதோடு சிவில் சமூகம், சர்வதேச சமூகம் என்பனவும் அவற்றின் ஆதரவினை தரலாம். இவற்றின் வாயிலாக இலங்கையில் சனநாயக ஆட்சியினை ஒன்று திரட்டி ஏற்படுத்தவும் முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நம்பகத்தன்மையை பாதுகாக்க நேர்மையுடன் செயற்படுங்கள்

15-03-2010

தேர்தலில் நேர்மையற்ற வகையில் நடைபெற்றவை தொடர்பாக தற்போது கண்காணித்து வரும் இலங்கை சர்வதேச டிரான்ஸ்பெரன்சி நிறுவனத்தின் தலைவரும், மனித உரிமைகள் வழக்கறிஞருமான ஜே.சி.வெலியமுன என்பவர் கைது செய்து தடுப்புக் காவலில் வைக்கப் படலாம் என ஊடக செய்தி அறிக்கைகள் வாயிலாக தெரிய வந்துள்ளது.

இதனோடு மாற்றுக் கொள்கைகளுக்கான நிறுவனத்தின் நிறை வேற்றுப் பணிப்பாளரும் தேர்தல் வன்முறைகளை கண்காணிக்கும் நிறுவனத்தின் இணை இயக்குநருமான கலாநிதி பாக்கியசோதி சரவணமுத்துவும் 'சுதந்திர ஊடக இயக்கத்தின்' செயலாளரான சுனில் ஜயசேகரவும் அரசியல் எதிரணியை ஆதரிக்கும் சிவில் சமூக ஆர்வலர்கள் பட்டியலில் இடம்பெற்றுள்ளதாகவும் தெரியவருகிறது. இந்நிறுவனங்களும், அவற்றுடன் இனங்காணப்பட்டவர்களும் தேசிய சமாதானப் பேரவை இன ஐக்கியத்தை கட்டியெழுப்புதல், மனித உரிமைகளுக்கு மதிப்பளித்தல் மற்றும் நாட்டில் தேசிய நல்லிணக்கத்தை ஏற்படுத்துதல் என்பவற்றிற்காக இணைந்து செயற்பட்டவர்களாவர்.

திரு.வெலியமுன தொடர்பான அறிக்கைகள் குறித்து நம் அக்கறை யாக இருக்கின்றோம். சர்வதேச டிரான்ஸ் பெரன்சியின் இலங்கை கிளைக்கு எதிரான பல்வேறு குற்றச்சாட்டுக்கள் அரச ஊடகங்களினால் கடந்த சில வாரங்களாக வெளியிடப்பட்டு வருகின்றன. அந்நிறுவனம் நிதியினை துஷ்பிரயோகம் செய்துள்ளதாகப் பிரசுரிக்கப்பட்ட அறிக் கைகள் சோடிக்கப்பட்டதும் முற்றிலும் தவறானதுமென அந்நிறுவனத் தினர் பகிரங்கமாக மறுத்துள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2008ஆம் ஆண்டு செப்டெம்பர் 28ஆம் திகதி திரு.வெலியமுன வின் வீட்டிற்கு இரண்டு கிரனைட் குண்டு வீச்சுகள் நடத்தப்பட்டுள்ளன. ஒன்று வெடித்து கட்டடத்தை சேதமாக்கியுள்ளது. இன்னொன்று வீட்டினுள் வீசப்பட்டுள்ளது. அது வெடித்திருக்குமேயானால் திரு.வெலியமுனவையும் அவரது குடும்பத்தாரையும் கடுமையாக தாக்கியிருக்கும். தேசிய சமாதானப் பேரவை, சட்டக் கழகம் மற்றும் மனித உரிமைக் கழகங்கள் உட்பட்ட பல நிறுவனங்களது கடும் எதிர்ப்பு உள்நாட்டில் இது தொடர்பாக ஏற்பட்டது. இருந்த போதிலும், இதுவரை இக்குண்டு தாக்குதல் பற்றி எதுவித புலனாய்வும் செய்யப் பட்டதாக தெரியவில்லை என்பதுடன், எமக்குத் தெரிந்த வரையில் இன்னும் எவரும் இதுதொடர்பாக கைது செய்யப்படவும் இல்லை.

நாமும் சிவில் நிறுவனம் ஒன்றைச் சார்ந்தவர்கள் என்ற வகையில் மேலே கூறப்பட்ட நிறுவனங்கள், சமூகப், பொருளாதார, அரசியல் நிறுவனங்களைப் பற்றி திறனாய்வு செய்து கவனிக்கப்படாதுள்ள அநீதிகளை எடுத்துக்காட்டி திருத்தப்பட வேண்டியவை தொடர்பாக ஆவன செய்ய வேண்டும் என்பதனை எடுத்துக்காட்டும் உரிமை கொண்டவை என்றே நம்புகிறோம். இவ்வாறான விமர்சனங்கள் அவை மேற்கொள்ளப்பட்ட நோக்கங்களின் அடிப்படையில் ஊழல் களை ஒழிக்கவும், மனித உரிமைகளையும் சனநாயக ஆட்சியினை ஊக்குவிக்கவும் தேவையாக உள்ளன.

ஐக்கிய நாடுகள் சபையினதும் ஏனைய சர்வதேச மனித உரிமைகள் உடன்படிக்கைகளிலும் தனது ஒப்புதலைக் கூறி இலங்கை கையெழுத் திட்டுள்ளது. கருத்து வேறுபாடுகளை ஏற்றுக் கொள்வதற்கும் கருத்துக் கூறும் சுதந்திரத்திற்கும், மனித உரிமைகளுக்கும் இலங்கையின் யாப்பில் (அரசியல் அமைப்பு) மதிப்பும் கௌரவமும் அளிக்கப் பட்டுள்ளன. எந்தவொரு அரசாங்கமும் யாப்பின் பிரகாரமே நடந்து கொள்ள வேண்டும் என எதிர்பார்க்கின்றோம். அது மாத்திரமன்றி, நல்லாட்சி என்பது தனியே அரசாங்கத்தினது பொறுப்பு மாத்திரம் என்றும் கூறி விடாது அது ஒவ்வொரு இலங்கை பிரசையினதும் பொறுப்புமாகும் என்றும் நம்புகிறோம். இவ்வாறான கடமையை செய்த நிறுவனங்களையும் ஆர்வலர்களையும் தான் இப்போது குறிவைத்து தாக்கியுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனித உரிமைகள் மீதான வன்முறைகளுக்கு ஆளும் தரப்பினர் ஆதரவளிப்பார்களேயானால் இலங்கையும், எமது நாட்டு மக்களுமே இறுதியில் இழப்புக்களுக்கு ஆளாகப் போகின்றார்கள். அரசாங்கம் மனித உரிமைகள் மற்றும் நல்லாட்சி தொடர்பாக ஆவன செய்யாததன் காரணமாக இவ்வருடம் பெப்ரவரி மாதம் ஐரோப்பிய யூனியன் இலங்கைக்கு ஜி.எஸ்.பி. வரிச் சலுகைகளை நிறுத்தப் போவதாக எச்சரித்து உறுதியும் செய்துள்ளது. இதனைத் தொடர்ந்து ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகமும் தனக்கு இலங்கையில் மனித உரிமைகள் தொடர்பாக ஆலோசனை கூற ஒரு நிபுணர்கள் குழுவை அமைக்கப் போவதாக அறிவித்துள்ளார்.

இது இலங்கை அரசாங்கத்தின் கடுமையான விமர்சனத்திற் குள்ளாகியுள்ளது. ஐரோப்பிய யூனியனையோ அல்லது ஐக்கிய நாடுகள் சபையையோ அல்லது சர்வதேச சமூகத்தினையோ விமர்சிப்ப தால் நீண்டகாலப் பார்வையில் இலங்கையர்களுக்கு ஏதும் நன்மைகள் ஏற்படப் போவதில்லை. சிலவேளைகளில் சில அரசாங்கப் பேச்சாளர் களால் செய்யப்படும் அவ்வாறான உலக நிறுவனங்களுக்கு எதிரான கண்டனங்கள் தேர்தலுக்கு முன்னர் சில இலாபங்களை அளிப்பனவாக இருக்கலாம்.

சட்டமா அதிபர் (Attorney General), வெளிநாடுகளுக்குத் தப்பியோடி யுள்ள பத்திரிகையாளர்களை தாமாக நாடுதிரும்பும்படி கோரியுள்ளதாக ஊடக அறிக்கைகளின் வாயிலாக அறிகிறோம். இது ஒரு எதிர்மறை யற்ற சார்பான கூற்றாகும். எனவே, தேசிய சமாதானப் பேரவை அரசாங்கத்திடம் அதன் உள்நோக்கம் கொண்ட கடந்த கால செய்கை களை நேர்மையாக உரிய முறையில் செய்ய முன்வருமாறு கேட்டுக் கொள்வதுடன் சுதந்திரமான பேச்சுரிமைக்காகவும், மனித உரிமை களுக்காகவும் பொதுவாழ்க்கையில் ஊழல்களை ஒழிப்பதற்காகவும் பிரசாரம் செய்யும் திரு.வெலியமுனவையும் மற்றவர்களையும் அச்சுறுத்தல்களிலிருந்து மீட்டு அவர்களுடைய பாதுகாப்பை உத்தர வாதம் செய்யுமாறும் கேட்டுக் கொள்கின்றது. இவ்வாறான உத்தர வாதங்கள் கிடைத்தால் அவர்கள் நாட்டை விட்டு வெளிநாடுகளுக்கு தப்பியோடமாட்டார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்கள் எழுச்சியை ஒடுக்கும் சட்டங்கள் நீக்கப்பட வேண்டும்

16-02-2010

அண்மையில் நடந்தேறிய சனாதிபதி தேர்தல்கள் அண்மைக்காலங்களில் இடம்பெற்ற தேர்தல்கள் எதனையும் விட நாட்டு மக்கள் அனைவரும் பங்கேற்றமைக்காகவும் நீண்டகாலமாக நிலவி வந்த போர் காரணமாக நாடு பிளவுபட்டிருந்தமை மீண்டும் ஐக்கியப்படுத்தப்பட்டு விட்ட தாகவும் சிலாகித்து பரந்தளவில் வரவேற்கப்பட்டு விளம்பரம் செய்யப் பட்டுள்ளது. இருந்த போதிலும் தேர்தலின் பின்னரான அரசியல் சார்ந்த விருத்திகள் நாட்டில் அரசியல் நெருக்கடிகள் வளர்ந்து செல்வதனையே குறிப்பதாகவும் ஏனைய நடவடிக்கைகள் சனநாயகம் மற்றும் நல்லாட்சி தொடர்பானவற்றினை மீறுவனவாகவுமே காணப் படுகின்றன.

இவ்வாறான முறைகேடான விருத்திகளுக்கு மத்தியில் சனாதிபதித் தேர்தலில் தோல்வியுற்ற ஜெனரல் சரத் பொன்சேகா கைது செய்யப் பட்டுள்ளார். இவரே எதிரணிகளின் கூட்டணி சார்பாக தேர்தலில் போட்டியிட்டு இன்றைக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர் தேர்தலில் 40 இலட்சம் வாக்குகளுக்கு மேல் பெற்றிருந்தார். அவ்வாக்குகளில் கணிசமாக சிறுபான்மையின வாக்குகள் உள்ளடக்கப்பட்டிருந்தன.

கைது செய்யப்பட்ட போது ஜெனரல் பொன்சேகா, சனாதிபதி மகிந்த ராஜபக்ச பெற்றிருந்த பெரும்பான்மை வாக்குகளுடனான வெற்றியின் நியாயத்தன்மை பற்றி சவால் விடுத்திருந்தார். உயர்நீதி மன்றத்தில் தேர்தல் மனு ஒன்றை தாக்கல் செய்யவும் ஏற்பாடுகளைச் செய்து கொண்டிருந்தார். ஆனால், தேர்தல் மனுத்தாக்கல் செய்யும் நேரத்தில் அவர் மீது திணிக்கப்பட்ட பல்வேறு இடையூறுகளினால் அவரால் முறையாக மனுவை தாக்கல் செய்ய முடியாது போயிற்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சனாதிபதித் தேர்தலில் போட்டியிட ஒருங்கிணைந்த எதிரணியினரது கூட்டணியை தொடர்ந்தும் பேணி எதிர்வரும் ஏப்ரல் 8ஆம் திகதி நடாத்த தீர்மானிக்கப்பட்டுள்ள பாராளுமன்றத்திற்கான பொதுத் தேர்தலிலும் போட்டியிடப் பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டிருந்தார்.

ஜெனரல் பொன்சேகா கைது செய்யப்பட்ட விதம் தொடர்பாக கூறப்பட்டுள்ளவை பற்றி அறிந்து தேசிய சமாதானப் பேரவை பெரிதும் கவலையடைந்துள்ளது. ஜெனரல் பொன்சேகா தேசிய அரசியல் கட்சிகளுடனான அரசியல் கூட்டம் ஒன்றில் கலந்து கொண்டிருந்தபோது இழுத்துச் செல்லப்பட்டமையும் அவ்வாறு கைது செய்ய அவர்மீது சுமத்தப்பட்டிருந்த குற்றச்சாட்டுக்கள் என்ன என்பது பொதுமக்களுக்கு தெரியாத வகையிலும் காணப்படுகின்றமை எமக்கு பெரிதும் கவலையை அளிப்பதாகவுள்ளது. அக்குற்றச்சாட்டுகள் என்ன என்பதனை பொதுமக்களுக்கும் அறிவிக்குமாறு தொடர்புடைய அதிகாரிகளைக் கேட்டுக் கொள்கிறோம்.

பௌத்த உயர் பீட தலைவர்கள், கிறிஸ்தவ பேராயர்கள் உட்பட்ட சிவில் மற்றும் சமய நிறுவனங்கள் ஜெனரல் பொன்சேகா கைது செய்யப்பட்டமை தொடர்பாக பொது அறிக்கைகளை வெளியிட்டு எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர். அரசியல் ரீதியாக பிளவு ஏற்படுத்தும் வகையில் வீதிகளில் இது தொடர்பான எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களும் இடம்பெற்றுள்ளன. ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் உட்படப் பல சர்வதேச ரீதியாக ஊடகங்களினால் தெரிவிக்கப்படும் எதிர்மறையான விமர்சனங்கள் சர்வதேச ரீதியாக எமது நாட்டின் மீதான மதிப்புக்கு பங்கம் விளைவிக்கும் வகையில் உள்ளன.

நாட்டில் இப்போது சனநாயகத்திற்கும் நல்லாட்சிக்கும் எதிராக நெருக்கடிகள் தோன்றியுள்ளதாக தெரிகிறது. சனநாயகமும் நல்லாட் சியும் நிலவுவதற்கு மக்களின் அடிப்படை அரசியல் உரிமையான சுதந்திரமானதும், நியாயமுமான தேர்தலில் பங்கேற்றல், சுதந்திரமாக அரசியல் கருத்து கூறல், தேர்தல்களில் முழுமையான பாதுகாப்போடு போட்டியிடல் என்பன அச்சுறுத்தல்களுக்கும் ஒடுக்குதல்களுக்கும் ஆளாகியுள்ளன. ஜெனரல் பொன்சேகாவின் கைதுக்கு எதிர்ப்பு தெரிவித்த எதிரணி ஆதரவாளர்கள் அச்சுறுத்தல்களுக்கு ஆளாகி யுள்ளமை எதிர்காலத்தில் சனநாயக ரீதியாக அரசியலில் பங்கேற்பது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்பாக பயங்கரமான விளைவுகளையே ஏற்படுத்தும். கடந்த காலங்களில் சனநாயக செய்முறைகள் நலிவடையச் செய்யப்பட்டதால் ஒரு தடவைக்கு மேலாகவே இவ்வாறான அடக்குமுறை காரணமாக எவ்வாறு அவை உருமாற்றமடைந்து வன்முறைகளுக்கு வித்திடப் பட்டது என்பதனை பற்றி சிந்திக்கும்போது அது அதிரவைப்பதாக வுள்ளது.

1980ஆம் ஆண்டுகளில் சனாதிபதி ஜே.ஆர். ஜயவர்தன மக்கள் விடுதலை முன்னணியை சட்டவிரோத கட்சியாக அடையாளம் செய்து அவர்களை அமைதியாக எதிர்ப்புக்களைக் காட்டவிடாது அடக்கு முறையை கையாண்டதால், அவர்கள் பாதாள உலகிற்குத் தமது எதிர்ப்பு நடவடிக்கைகளைக் கொண்டு சென்று செயற்பட்டதன் விளைவு களை நாம் கண்டிருக்கின்றோம். நாடு இதன் காரணமாக பின்னர் ஒரு பாரதூரமான செலவினை எதிர்நோக்க வேண்டி ஏற்பட்டது.

சில வகையான முறைகளிலேயே சட்டத்தின் வாயிலான ஆட்சி, தேசிய, உள்ளூர் மட்டங்களில் நிலவுவதால், தன்னிச்சையாக கைது செய்யப்படுகின்றமை, சட்ட விரோதமாக தடுத்து வைக்கப்படு கின்றமை, குற்றம்புரிந்து விட்டு தண்டனைகளிலிருந்து பாதுகாக்கப் படும் சட்டவிரோத நடவடிக்கைகள் என்பன இடம்பெறுகின்றமை காரணமாக நாட்டின் அரசியலில் ஆர்வத்துடன் செயற்படும் பிரிவினர் மீது அச்சுறுத்தலும், பீதியடையச் செய்வதுமான நிலைமைகள் ஏற்பட்டுள்ளன. இவ்வாறான சனநாயகத்திற்கு ஏற்பட்டுள்ள நெருக் கடிகளுக்கு மேல் கூறப்பட்டனவே காரணங்கள் என தேசிய சமாதானப் பேரவை நம்புகின்றது. இவற்றோடு நீடிக்கப்பட்டதும், தேவையில்லாத வகையில் பயன்படுத்தப்படும் அவசரகால சட்டம், பயங்கரவாத தடுப்புச் சட்டம் என்பன அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்வதற்கு வசதி செய்துவருவதாக நாம் நம்புகிறோம். எட்டு மாதங்களுக்கு முன்னரேயே தமிழீழ விடுதலைப் புலிகளுடனான யுத்தம் முடிவுற் றுள்ளதால் நாட்டில் இவ்வாறான கடுமையான சட்டங்கள் தொடர்ந்தும் நடைமுறையில் பயன்படுத்தப்படுவதனை நியாயப்படுத்த முடியாது.

பல்லின பன்மைவாத சமூகத்தில் பிரஜைகள் அனைவரதும் குரல்கள் மூலமாகவே சனநாயகத்தின் மையமான மாறுபட்ட கருத்துக் களின் ஒன்றிணைப்பு ஏற்படமுடியுமாதலால் அரசாங்கம் அவர்களது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குரலுக்குப் போதியளவு மதிப்பு அளிக்க வேண்டும் என தேசிய சமாதானப் பேரவை பரிந்துரை செய்கிறது. அத்துடன் அவசரகால ஆட்சியும் மற்றும் அடக்குமுறை சட்டங்களும் உடனடியாக மீளப் பெறப்படுவதனை உறுதி செய்யவேண்டியதும் எதிர்க்கட்சியினரது பொறுப்பு என உறுதியாக நம்புகிறோம். நாட்டின் முழு அரசியலிலும் சட்ட ரீதியான ஆட்சி இடம்பெறுவதனை உறுதி செய்யவும் அரசாங் கத்தின் ஓர் அங்கமாக ஒரு அறம் நலந்தரும் (Virtuous) ஆட்சியினை மலரச் செய்யவும் அதாவது, ஒரு முற்று முழுதான நல்லாட்சி இடம் பெறுவதில் எதிர்க்கட்சியினர் முக்கிய பங்காற்ற வேண்டும்.

இன்றைய நிச்சயமற்றதான காலகட்டத்தில் சனநாயகத்திற்கும் சட்டத்தின் வாயிலான ஆட்சிக்குமாக ஒரு நியாயமான நிலைமை யினை வகித்த உயர்நீதிமன்றம் மற்றும் சட்ட அமைப்பின் ஏனைய அங்கத்தவர்கள் ஆகியோருக்கு நாம் எமது பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேர்தலின் பின்னர் நாடு எதிர்நோக்கும் சவால்

01-02-2010

ஜனவரி மாதம் 26ஆம் திகதி நடைபெற்ற சனாதிபதித் தேர்தலில் எதிர்பாராத வகையில் அதிக பெரும்பான்மையுடன் சனாதிபதி மகிந்த ராஜபக்ச இரண்டாவது முறையும் வெற்றியீட்டியுள்ளார். இவருடைய தேர்தல் முடிவுகள் தொடர்பாக எதிரணி வேட்பாளரான ஜெனரல் சரத் பொன்சேகாவினால் வினாக்கள் எழுப்பப்பட்டுள்ளன. அரச தொலைக்காட்சியினால் ஒளிபரப்பப்பட்ட தேர்தல் முடிவுகள் சிறு பான்மை இனத்தவர்கள் மத்தியில் அவர்களுடைய எதிர்பார்ப்புக்கள் தொடர்பான சிந்தனைகளில் மாத்திரமன்றி பிளவுகளை ஏற்படுத்தி யுள்ளன. பெரும்பான்மை மக்களிடமும் பிளவுகளை ஏற்படுத்தி யுள்ளன.

தமிழ், முஸ்லிம் மக்கள் அதிகளவு வாழும் வடக்கு, கிழக்கு, மத்திய மலைநாட்டுப் பகுதிகளில் சனாதிபதி ராஜபக்ச ஒரு சிறிய விகிதாசார வாக்குகளைப் பெற்றிருந்தார். அதேபோன்று தமிழர்களும் முஸ்லிம்களும் கூடியளவில் வாழும் தலைநகரமான கொழும்பு நகரிலும் கூட அவர் குறைந்த விகிதாசாரத்திலேயே வாக்குகளைப் பெற்றிருந்தார். ஆனால், சிங்களவர்கள் பெரும்பான்மையாக வாழும் நாட்டின் ஏனைய பகுதிகளில் சனாதிபதிக்கு வெற்றியை தரக்கூடியள வில் பெருமளவாக வாக்குகள் அளிக்கப்பட்டுள்ளன.

நாட்டின் வடபகுதியில் தேர்தல் நடவடிக்கைகளில் குறிப்பாக வாக்காளர்கள் வாக்களிக்க செல்வதற்கான நடைமுறைத் தேவைகளான பொதுப்போக்குவரத்து வசதிகள் போன்றவை வழங்கப்படாததால் வாக்காளர்களுக்கு வாக்குச் சாவடிகளுக்கு செல்லவே வாய்ப்பளிக் கப்படவில்லை என்பது குறித்து தேசிய சமாதானப் பேரவை கவலை யடைகிறது. தேர்தல் கண்காணிப்பில் பங்கேற்ற எமது அங்கத்தவர்கள், இடம்பெயர்வுக்கு ஆளாக்கப்பட்ட வாக்காளர்கள் பலமணித்தியாலங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போக்குவரத்து வசதிக்காக காத்திருந்தும் அது கிட்டாது போனதால் வாக்களிக்க முடியாது போய் விரக்தியுற்றமை பற்றியும் யாழ்ப்பாணப் பகுதிகளில் தேர்தல் நாளன்று ஏற்பட்ட 'கிரனைட்' குண்டு வெடிப்பால் அச்சுறுத்தல்களுக்கு ஆளாகி வாக்களிக்க செல்லாது ஒதுங்கிக் கொள்ள வேண்டிய நிலைமை பற்றியும் அறிந்து கொண்டோம்.

வடபகுதியில் மிகக் குறைந்த விகிதாசாரமானவர்களே வாக்களிப்பில் பங்கு கொண்டமை, அங்கே மக்கள் முழுமையாக பங்கேற்று தமது அரசியல் உணர்வுகளுக்காக குரல் கொடுக்க முடியாது போனதோடு அவர்கள் சனநாயக வாழ்வினை அடைய இன்னும் நெடுந்தூரம் பயணிக்க வேண்டியுள்ளமையினையும் தெளிவுபடுத்துகின்றது.

மறுபுறத்தில் சனாதிபதி சிறுபான்மையினத்தவரது வாக்குகள் மூலமாக பெற்றுள்ள ஆதரவு சிறியளவினதானாலும் கூட முக்கியத்துவம் குறைந்தது அல்ல என்பதும் அரசியலின் பிரதான நீரோட்டத்தில் யுத்தம் முடிந்த சில வருடங்களின் பின்னர் மீள கலந்து கொள்ளக் காட்டும் விருப்பத்தினை எடுத்துக்காட்டுவதாகவும் நம்பலாம். சனாதிபதி ராஜபக்சவுக்கு சிறுபான்மையின மக்களிடம் அவர்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள மன முறிவு கொண்ட உணர்வு தொடர்பாக ஆவன செய்ய வேண்டியுள்ளதோடு அவர்களுடைய பிரச்சினைகள் மற்றும் மனக்குறைகள் தொடர்பாக அதிகாரப் பரவலாக்கம் உட்பட்ட அரசியல் தீர்வினை வழங்க வேண்டிய பிரதான சவால்களும் உள்ளன.

பெரும்பாலான தேர்தல் பிரசாரங்களில் இரண்டு பிரதான வேட்பாளர்களுமே இனங்களுக்கு இடையேயான இசைவு மற்றும் நல்லிணக்கம் தொடர்பாக குறிப்பிடத்தக்க அளவு கவனத்தை செலுத்தியிருந்தனர். ஆனாலும் தேர்தல் பிரசாரத்தின் இறுதிக் கட்டத்தில் எதிரணி வேட்பாளர் தமிழ் கட்சியுடன் இரகசிய ஒப்பந்தம் ஒன்றினை செய்திருப்பதாகவும் அவ்வொப்பந்தம் நடைமுறைப்படுத்தப்பட்டால் நாடு பிரிவுக்குள்ளாக்கப்படும் என்றும் தவறான பிரசாரம் செய்யப்பட்டதன் காரணமாக இன ரீதியான உணர்வுகளுக்கு தூபமிடப்பட்டது.

சனாதிபதி ராஜபக்ச, தான் ஏன் சனாதிபதித் தேர்தலை உரிய காலத்திற்கு முன்னரேயே நடத்த தீர்மானிக்க வேண்டி வந்தது என்பதற்கும் ஒரு காரணம் கூறினார். முன்னர் நடந்த தேர்தலில் தமிழீழ விடுதலைப் புலிகளின் அச்சுறுத்தல் காரணமாக வடக்கு, கிழக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் தேர்தல்களில் வாக்களிக்க முடியாது போனது என்றும் தான் இப்போது அம்மக்களது ஆணையை பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதற்காகவே இத்தேர்தலை அவ்வாறு நடாத்துவதாகவும் குறிப் பிட்டுள்ளார்.

தேர்தல் முடிந்தவுடன் தமிழ் வாக்காளர்கள் தேர்தலில் பங்கேற்றமை, தான் தன்னை அர்ப்பணித்துக் கொண்ட கொள்கையான சனநாயகம் அடைந்த வெற்றி என்றும் கூறிக்கொண்டார். வாக்காளர்கள் தமது வாக்குகளை அளிப்பதற்குப் பலதடைகள் இருந்திருந்த போதிலும், தேர்தலின் பின்னர் சனாதிபதி உணர்வு பூர்வமாக வெளியிட்டுள்ள வற்றிற்கு தேசிய சமாதானப் பேரவை நல்வரவு கூறுகின்றது. சனாதிபதி தான் கூறியவற்றை நிலைநிறுத்தி, கருத்துவெளியிடும் சுதந்திரம், கருத்தை தெரிவுசெய்து கொள்ளும் சுதந்திரம், சட்டத்தின் வாயிலான நல்லாட்சி, அவரது முன்னைய பதவித் தவணைக் காலத்தில் இடம் பெற்ற ஆட்கடத்தல், சட்டத்திற்கெதிரான கொலைகளை ஒழித்தல் உட்பட்ட சனநாயக ஆட்சியை கொண்டுவருவாரென்றும் நம்புகிறோம். சனாதிபதியின் இரண்டாம் தவணை ஆட்சிக்கு எமது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் நிலைத்து நிற்கக்கூடிய சமாதானம், நல்லிணக்கம் ஆகியவற்றை அடைய நாம் எம்மை அர்ப்பணித்தும் கொள்கிறோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சனாதிபதித் தேர்தலில் வாக்களிக்க மக்களை ஊக்குவிக்க வேண்டும்

20-01-2010

தமிழீழ விடுதலைப் புலிகளுடனான யுத்தம் இப்போது முடிவுற்றுள்ளதால், அடுத்து இடம்பெறவுள்ள சனாதிபதித் தேர்தலிலேயே நீண்டகாலத்தின் பின்னர் முதன்முதலாக நாட்டின் அனைத்துப் பகுதிகளில் உள்ள மக்களும் வாக்களிக்கப் போகின்றனர். இதன் விளைவாக கடந்த இரண்டு தசாப்தங்களின் பின்னரே தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் வாழ்ந்த மக்களும் கடந்த காலங்களில் வாக்களிக்க முடியாதிருந்தவர்களும் முதல் முறையாக சனநாயகச் செய்முறையில் பங்கேற்கப் போகின்றனர்.

இந்தப் புதிய வாக்காளர்கள் தமது வாக்குகளை இடுவதற்கு அனைத்து ஊக்குவிப்புக்களும் அவசியம். ஏனெனில் அதன் மூலமாக அவர்கள் சனநாயக செய்முறையில் பங்கு கொள்ளும் வாய்ப்பு ஏற்படுகின்றது. தேர்தலில் பங்கு கொள்வதால் இன ரீதியான பிளவுகள் குறைவதுடன், நாட்டில் ஐக்கியத்தினையும் அதிகரிக்கச் செய்யமுடியும்.

வடக்கு, கிழக்கு முரண்பாட்டு வலயங்களில் வாழ்ந்த மக்களிடையேயுள்ள சனநாயக செய்முறைகள் மீதான நம்பிக்கையின்மையை ஒழித்து மீண்டும் பழைய நிலைக்கு கொண்டு வரவேண்டிய தேவை உண்டு. சனாதிபதி பதவிக்கு போட்டியிடும் பிரதான வேட்பாளர்கள் வடக்கு, கிழக்குப் பகுதிகளில் பிரச்சினைகளை எதிர்நோக்கியவர்களுக்கு தாம் எவ்வாறு அப்பிரச்சினைகளை தீர்த்து வைக்க தேவையான அரசியல் தீர்வினை கொண்டுவர எண்ணுகின்றனர் என்பதனை எடுத்துக் கூறினால், அது அப்பிரதேச தேர்தல் தொகுதி (வாக்காளர்களை)யில் உள்ள மக்களை ஆர்வம் கொள்ள தூண்டுவிக்கும் என தேசிய சமாதானப் பேரவை நம்புகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலைத்து நிற்கக்கூடிய பொருளாதார அபிவிருத்தி, நாட்டில் ஏற்படத் தேவையான சமாதானத்திற்கான சூழல், நல்லிணக்கம் மற்றும் சட்டத்தின் அடிப்படையிலான ஆட்சி என்பன ஏற்பட வேண்டுமானால் அதற்குத் தேர்தல்களில் அவர்கள் பங்கு கொள்வது அத்தியாவசிய மானதாகும். இத்தகைய பின்னணியில் தேர்தலுடன் தொடர்பான வன்முறைகள் மற்றும் தேர்தல் சட்டங்களை புறக்கணித்தல் என்பன அதிகரித்து செல்வது காரணமாகவும் தேசிய சமாதானப் பேரவை பெரிதும் கவலையடைந்துள்ளது. தேர்தல் ஆணையாளர் சுதந்திரமும் நியாயமுமான முறையில் தேர்தலை நடாத்தவும் தற்போதைய தேர்தல் பிரசாரம் தொடர்பாக சட்டத்தினையும் ஒழுங்குகளையும் மீண்டும் பழைய (நல்ல) நிலைக்கு கொண்டுவரவும் உதவிக்கரம் நீட்டுமாறு அரசாங்கத்திடமும் நாட்டின் அனைத்து கட்சிகளிடமும், தேசிய சமாதானப் பேரவை வேண்டுகோள் விடுக்கின்றது.

அரசாங்கம் இவ்வேண்டுகோளை உடனடியாக நடைமுறைப் படுத்த வேண்டிய தேவை உண்டு. மேற்கூறிய பெறுமானங்கள் மீது வேட்பாளர்கள் உடனடியாக நம்பிக்கையுடனும் அர்ப்பணத்துடனும் செயற்படுவர் என நம்புகிறோம். அவ்வாறு செய்வார்களேயானால் அவர்கள் வெளிப்படையாகக் கூறும் வார்த்தைகள் மற்றும் அவர்கள் கடைப்பிடிப்பன வாயிலாக அமைதியானதும் நியாயமானதுமான தேர்தலுக்கும் நாட்டின் எதிர்கால அபிவிருத்திக்கும் வழி சமைக்க முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மக்களின் அபிப்பிராயத்தை பிளவுபடுத்தும் வகையிலான தேர்தல் பிரசாரங்கள்

**23-12-2009**

இலங்கையின் அண்மைக்கால வரலாறு இங்கே ஆட்சியானது கடுமையான நெருக்கடிகளை சந்தித்தமையினை காட்டுவதாகவே உள்ளது. இந்நெருக்கடிகளினால் இந்நாடு அடைய வேண்டிய முழுமையான உள்ளார்ந்த வளங்களையும் பெற்றுக்கொள்ள முடியாது தடைக்கு உள்ளாகியது. அத்துடன் எமது சுதந்திரங்களும் பறிபோயின. இவையில்லாது இங்கே சனநாயகமும் இல்லை என்றாயிற்று.

சனநாயகம் என்பது பெரும்பான்மையினர் விரும்பியதனை மட்டும் செய்வதாகாது. அவ்வாறாயின் அவற்றிற்கு சம்மதம் தெரிவிக்காத சிறுபான்மையினரது ஆர்வங்கள் பாதிக்கப்படுவதுடன் அவர்களுடைய ஆர்வங்களுக்கு எதிராகவும் செயற்படுவதாகிவிடும். தேசிய சமாதானப் பேரவை சனநாயகமும் சுதந்திரமும் ஒன்றுடன் ஒன்று இணையாக கைகோர்த்துச் செல்ல வேண்டியவை என்றே நம்புகிறது. சுதந்திரமானதும் அதாவது, சட்டத்திற்கு உட்பட்ட ஆட்சியின் வாயிலாக அமுலாக்கப்படும் ஊடக சுதந்திரம், கருத்து கூறும் சுதந்திரம் என்பன உட்பட்ட சுதந்திரங்கள் இல்லாது சனநாயகம் இல்லை.

தற்போது நாட்டில் சனாதிபதித் தேர்தல் நடக்கவேண்டிய காலத்திற்கு முன்னதாகவே நடத்தப்பட உள்ளது. அதனால், சிக்கலான இந்த சனாதிபதி தேர்தலினால் நாட்டு மக்கள் பிளவுக்காளாக்கப்படுவதுடன் மனக் குழப்பத்திற்கும் ஆளாகியுள்ளனர். அதிகாரத்தை கைப்பற்றுவதற்கான வழிமுறையில் நாட்டை ஆளுவதும், தேர்தல்களில் வெற்றி பெறுவதும் எந்தளவுக்கு சட்டரீதியானவை என்பதே முக்கியமாக கலந்துரையாட வேண்டிய சிக்கல்களாகத் தென்படுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒழுக்க நெறிமுறைகளுக்கு உட்பட்ட ஆட்சி தமக்கு வேண்டுமா அல்லது வேண்டாமா என்பதனை மக்கள் தீர்மானிக்க வேண்டிய காலம் வந்துவிட்டது. உலகின் மிகச் சிறந்த அரசியல் தத்துவ ஞானி களான பிளேட்டோ, அரிஸ்டோட்டல், காண்ட் எவருமே அரசியலை ஒழுக்க நேர்மையிலிருந்து ஒதுக்கிப் பார்த்ததில்லை. ஆனால், மாக்கியாவல்லி, கௌதில்யர் போன்றோர் வித்தியாசமானவர்கள். இவர்கள் அரசின் விவகாரங்களை நடாத்துவதற்காக ஆட்சியாளர்கள் தமது அதிகாரத்தை தக்க வைத்துக் கொள்ளவதற்காக ஒழுக்கம், நேர்மை போன்ற பெறுமானங்களை உதாசீனம் செய்வதனையும் ஆதரித்தவர்களாக கருத்துக்களை கூறியிருந்தனர்.

நாம் கௌதம புத்தரது கோட்பாட்டை ஏற்றுக்கொண்ட பாரம் பரியத்தினை கொண்டிருந்த அதேநேரத்தில், இந்திய உபகண்டத்தின் பெரும்பாலான பகுதிகளை ஐக்கியப்படுத்தி ஆண்ட பேரரசர் சந்திரகுப்தர் காலத்து கௌதில்யரின் அரசியலையும் அறிந்தவர்கள். புத்தர் கௌதில்யரின் அரசியல் சித்தாந்தத்தை ஏற்றுக்கொள்ளவில்லை. பேரரசர் அசோகனும் இறுதியில் கௌதில்யரது அரசியலை உதறிவிட்டு தனது பேரரசை ஆளுவதற்கு பௌத்தரது ஒழுக்க நேர்மை நெறிகளை ஏற்றுக்கொண்டார்.

நடைபெற்றுக்கொண்டிருக்கும் சனாதிபதித் தேர்தல் பிரசாரத்தில் மத்தியப்படுத்தப்பட்ட அதிகாரம் தொடர்பான கருத்துக்கள் முன் கொண்டுவரப்பட்டுள்ளன. சனாதிபதி பதவிக்கான பிரதான எதிரணி போட்டியாளர் ஓய்வுபெற்ற ஜெனரல் சரத் பொன்சேகா, தான் பதவிக்கு வந்த ஆறு மாதங்களில் நிறைவேற்று அதிகாரம் கொண்ட சனாதிபதி பதவியையே ஒழித்துவிடப்போவதாக மேடைகளில் பிரசாரம் செய்து வருகிறார். இப்போது பதவியில் இருக்கும் சனாதிபதி மகிந்த ராஜபக்ச வும் தனது 2005ஆம் ஆண்டு நிறைவேற்று அதிகாரம் கொண்ட சனாதிபதி பதவிக்கான தேர்தல் பிரசாரத்தின் போது இப்பதவியை அழித்துவிடப் போவதாக உறுதி மொழி கூறியிருந்தார்.

இன்னும் இரண்டு முக்கிய பிரச்சினைகள் தொடர்பாகவும் இச் சனாதிபதி தேர்தலில் பிரசாரங்கள் செய்யப்படுகின்றன. ஒன்று யாப்பில் செய்யப்பட்ட 13ஆவது திருத்தச் சட்டத்தின் படியான மாகாணங் களுக்கிடையேயான அதிகாரப் பரவலாக்கம் பற்றியதாகும். இரண்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டாவது 17ஆவது திருத்தம் மூலமாக அரசின் முக்கிய நிறுவனங்களி லிருந்து அரசியலை ஒழிப்பதும், அதனால் அரசியல் உயர் அதிகாரம் கொண்ட பதவிகளுக்கு நியமனங்கள் செய்யும்போது சனாதிபதியின் ஒருதலைப்பட்சமான அதிகாரங்களை ஒழிப்பதுமாகும்.

கடந்த மூன்று தசாப்தங்களாக இலங்கையில் அழிவினைத் தரும் வகையிலான வன்முறைகள் ஏற்பட்டு வந்தமையினை, அதிகாரம் அளவுக்கு மீறியளவில் மையப்பட்டிருந்தமையோடும் ஒழுக்கப் பெறுமானங்கள் சீர்குலைந்தமையோடும் இனங்காணமுடியும். தற்போதைய தேர்தல் பிரசாரத்தில் கூறப்படும் இலங்கையின் எதிர்கால நல்லாட்சிக்கான மூன்று உறுதி மொழிகளையும் உற்று நோக்கினால் இலங்கை அரசியலின் படிமுறை வளர்ச்சி பற்றிய முடிவுக்கும் வரலாம்.

இப்போது சனாதிபதி தேர்தலுக்கான செய்முறைகள் ஆரம்பமாகி விட்டன. இருந்தாலும் கூட அரசாங்கம் அதற்கான ஜனவரி 26, 2010இல் நடைபெற உள்ள தேர்தலை நடாத்தாது எதிரணியிடம் சனாதிபதி பத்வி முறையினை ஒழித்துவிடுவது பற்றி பேச்சுவார்த் தைகளை நடத்த இன்னும் காலங்கடந்து விடவில்லை என்றே தேசிய சமாதானப் பேரவை கருதுகின்றது. சனாதிபதி பதவியை ஒழித்ததுடன் யாப்பின் 13ஆவது, 17ஆவது திருத்தங்களுக்கான சீர்திருத்தங் களையும் கூட்டாகவே கொண்டுவரலாம். அத்துடன் நாட்டின் எதிர்கால நேர்மையான ஆட்சிக்கு தேவையான கூறுகளையும் திட்டவட்டமாக அவற்றோடு சேர்த்து அறிமுகம் செய்யலாம் என்றும் தேசிய சமாதானப் பேரவை கருதுகிறது.

நாட்டின் பொதுசன அபிப்பிராயத்தை மென்மேலும் பிளவுபடுத்தும் வகையிலும், சர்வதேச ரீதியாக நாட்டின் கௌரவத்தினை பாதிக்கும் வகையிலும் மனக்கசப்பினை ஏற்படுத்தி நேர்மையற்ற முறைகளில் தேர்தல் பிரசாரங்கள் இடம்பெறுகின்றன. இதன் காரணமாக தேசிய சமாதானப் பேரவை பெரும் ஏமாற்றத்திற்கு ஆளாகியுள்ளது. பிரதான போட்டியாளர்கள் நாட்டையும் தம்மையும் மீட்க முடியும் என்பதற்கு போதிய முன்னுதாரணங்கள் உள்ளன. 1953ஆம் ஆண்டு மே மாதம் 29ஆம் திகதி நியூசிலாந்து நாட்டு எட்மண்ட் ஹில்லரி என்பவரும் அவருடைய வழிகாட்டி டென்சிங் நோர்கேயும் உலகின் அதியுயர்ந்த மலைச்சிகரமான மவுண்ட் எவரெஸ்ட் மலையுச்சியை அடைந்ததற்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சான்றாக எட்மண்ட் ஹில்லரி டென்சிங் நோர்கேயை படம் பிடித்தார். பின்னர் பத்திரிகையாளர்கள் மலையேறிய குழுவில் யார் முதல் முதலாக மலையுச்சியை அடைந்தவர் என வினவிய போது அந்த மலையேறும் பயணக்குழுவின் தலைவர் ஜோன்ஹன்ட் (John Hunt) அவர்கள் அனைவரும் ஒரு குழுவாக சென்றடைந்தனர் என்றே பதிலளித்தார்.

ஒரு பொது இலக்கிற்காக அவர்கள் ஒன்று சேர்ந்திருந்தனர். ஒவ்வொருவரும் தாம் சாதித்தவற்றிற்காக தனக்கே அந்த புகழ் வந்துசேர வேண்டும் என்று எண்ணவில்லை. மனித ஒழுக்கம், நேர்மை என்பவற்றை பெருமளவில் இழந்தும் விலையாகக் கொடுத்தும் அடைந்த இராணுவ வெற்றியினை அடிப்படையாகக் கொண்டு தமது பிரபல்யத்தினை கட்டியெழுப்ப முயலாதிருப்பதற்கு எவரெஸ்ட் உச்சியை அடைந்தவர்களது நடத்தை நமது இரண்டு போட்டியாளர் களுக்கும் நல்லபாடமாக அமையும் என நம்புவோமாக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரக்க உணர்வு கூடிய வகையில் கொள்கைகளில் மாற்றங்கள் தேவைப்படுகின்றன

04-12-2009

அரசாங்கத்தின் அண்மைக்கால நடவடிக்கைகளில் A9 வீதிவழியாக வடக்கு, கிழக்கு தொடர்புகளை மீள ஏற்படுத்துதலும் அடைத்து வைக்கப்பட்டிருந்த இடப்பெயர்வுக்குள்ள மக்களது படிப்படியான மீள்குடிப்பெயர்வும் உள்ளடங்குகின்றன. இவை யாவும் நீண்டகால மாகவே தேவைப்பட்டதாக உணரப்பட்ட கொள்கை மாற்றங்களாகும், என்றே தேசிய சமாதானப் பேரவை கருதுகின்றது. என்றாலும், இப்போதாவது இதுபற்றிய எண்ணம் தோன்றியமைக்காகவும் இலங் கையையும் அதன் மக்களையும் மீள ஐக்கியப்படுத்தக்கூடிய இந் நடவடிக்கைகளை தேசிய சமாதானப் பேரவை பாராட்டி வரவேற்கின்றது.

சிறுபான்மை தமிழ் மக்களுக்கு இவை ஓரளவில் ஆதரவு தரும் நடவடிக்கைகள் என்றாலும், அவர்கள் வாழும் பகுதிகளில் ஏலவே உட்கட்டமைப்பு வசதிகள் பெருமளவில் அழிக்கப்பட்டுள்ளன. அவற்றை சீர்திருத்துவதில் சில நிருவாகத் தடைகள் ஏற்படலாம் என அவர்கள் அஞ்சுகின்றனர். இடப்பெயர்வுக்குள்ளான மக்கள் இன்னும் முகாம்களில் வாழ்வதாகவும் அவர்களுடைய அசைவுகள் வரையறை களுக்கு உட்பட்டதாக காணப்படுவதாகவும் அறிக்கைகள் கிடைக்கப் பெற்றுள்ளன.

ஏ9 பெருந்தெருவழியான பொதுப் போக்குவரத்து தொடர்ந்தும் தாமதமாகவே நடைபெறுகின்றது. இதற்கு இப்போக்குவரத்திற்கான பஸ்வண்டிகள் பல வாகனங்களுடன் கூட்டம் கூட்டமாகவே செல்ல வேண்டும் என்னும் தேவை இருப்பதனாலாகும் எனவும் தெரிய வந்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடப்பெயர்வுக்குள்ளான மக்களது சுதந்திரமான அசைவுகளை அவர்களை முகாம்களை விட்டு வெளியேற அனுமதிப்பதால் மாத்திரம் பூர்த்தியடைந்ததாகக் கூற முடியாது. அதனுடன் இணைந்ததாக அவர் களுடைய வாழ்வாதாரத்திற்கான அத்தியாவசியத் தேவைகளையும் வழங்குதல் அவசியமாகும். மீள்குடியேற்றத்திட்டங்கள் விரைவுபடுத் தப்பட்டுள்ளமை உண்மையானாலும், வீடுதிரும்பும் இடப்பெயர்வுக் குள்ளான மக்களது முக்கிய தேவைகளில் குறிப்பாக அவர்களுக்கு தேவையான நம்பத்தகுந்தவகையிலான தகவல்களை பெற்றுக் கொள்வதனை உறுதி செய்தல், உணவு, தங்குமிட வசதி, பாதுகாப்பு, சுகாதார பராமரிப்பு என்பனவற்றில் பெரும் குறைபாடுகள் நிலவுவ தாகத் தெரிகிறது.

மீளகுடியேற்றப்படுபவர்கள் கைக்கு எட்டும் வகையில் கிடைக்கக் கூடியதாயுள்ள நிதி வளங்களின் அளவை அவர்கள் இழந்தவற் றுடனும் மற்றும் தமது வாழ்க்கையை மீண்டும் கட்டியெழுப்ப தேவையானவற்றுடனும் ஒப்பிடுகையில் மிகவும் சொற்பமாகவே அவை காணப்படுகின்றன. நிருவாக மற்றும் கொள்கையின் அடிப்படை யிலான இதுபோன்ற அதிருப்தியினை ஏற்படுத்தும் விதைகளையே விதைக்கும் ஆபத்திருப்பதால் மேலும் அனுதாபத்துடனும் இரக்கத் துடனுமான கொள்கை உருவாக்கம் மூலமே அவ்வாறான அதிருப்தி களை ஏற்படாது செய்ய முடியும்.

அவர்களுடைய அடிப்படை மானிட தேவைகளை வழங்குவதற்கு கிடைக்கக்கூடியதாக உள்ள உள்ளூர் மற்றும் சர்வதேச வளங்களை உடனடியாக ஒருங்கு திரட்டி அவர்களுடைய துயர நிலவரங்களை நீக்க வேண்டியுள்ளது. சர்வதேச அரசு சாரா நிறுவனங்கள் உட்பட்ட சிவில் சமூகம், சுனாமி அழிவைத் தொடர்ந்து வழங்கிய முக்கிய பங்களிப்பினை இப்போதும் ஆற்ற முடியும். உலகளாவிய வகையில் பொருளாதார பின்னடைவு நிலவும் காலக்கட்டத்தில் அரசாங்கத்திடம் நிதியினை கேட்டு பல்வேறு சாராராலும் அழைப்புக்கள் விடுக்கப் பட்டுள்ளன. இந்நிலையில் சிவில் சமூகத்திற்கும் அரசாங்கத்திற்கும் இடையே ஏற்படுத்தக்கூடிய ஆக்கபூர்வமான கூட்டிணைப்பின் மூலமாக புனர்நிர்மாண மற்றும் மீள்குடியேற்ற நடவடிக்கைகளை அமுலாக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யத் தேவைப்படும் வளப்பற்றாக்குறைப் பிரச்சினைகளை சமாளிக்க முடியும் என தேசிய சமாதானப் பேரவை நம்புகிறது.

சிவில் சமூகத்தினரை வன்னிப் பிரதேசத்திற்கும் யாழ்ப்பாண தீபகற்பத்திற்கும் சுதந்திரமாக போய்வருவதற்கான வெளிப்படை பண்பினைக் கொண்ட கொள்கையினை அரசாங்கம் உருவாக்குவதன் வாயிலாக மக்கள் மீள் குடியேற்றம் மற்றும் மீள்நிர்மாணப் பணி களடங்கிய திட்டங்களை அரசாங்கம் நடைமுறைப்படுத்த அது உதவியாயிருக்கும் என நாம் தெரிவித்துக்கொள்கிறோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய மீள் குடியேற்றப் பகுதிகளுக்கு அரசு சாரா நிறுவனங்கள் சென்றுவர அனுமதி வழங்கப்படுதல் வேண்டும்

12-11-2009

சர்வதேச நாடுகளிலிருந்தும் உள்ளூரிலிருந்தும் வரும் கடுமையான அழுத்தங்கள் காரணமாக தடுப்பு முகாம்களை வைக்கப்பட்டிருந்த பெருமளவினதான பொதுமக்களை இலங்கை அரசாங்கம் தற்போது இடமாற்றம் செய்து வருகின்றது. யுத்தத்தின் இறுதிக் காலகட்டத்தின் போது 280,000 பேராவது இடம்பெயர்ந்திருப்பார்கள். அவர்கள் நலன்புரி மையங்களில் வெளியே செல்ல முடியாதவாறு தடுத்து வைக்கப்பட்டிருந்தனர். மீள்குடியேற்ற செய்முறைகள் விரைவாக்கப் படுவது வரவேற்கத்தக்க செயலாகும். அதனால், இடப்பெயர்வுக்காளாகிய மக்களுக்கு சுதந்திர நடமாட்டம் மற்றும் தமது வாழ்க்கையை மீள ஆரம்பிப்பதற்கான வாய்ப்புக்கள் என்பன ஏற்படமுடியும். அரசாங் கத்தில் மீள்குடியேற்ற நோக்கங்கள் நாட்டின் எதிர்கால நல்லிணக்கம் மற்றும் அபிவிருத்தி தொடர்பாக முக்கியமானதாகும். மீள்குடியேற்றம் நிலைத்து நிற்கக் கூடிய பண்பினதாக அமையவும் இது முக்கியம் வாய்ந்ததாகும். இருந்த போதிலும் கூட மக்களுடைய முழுத் தேவை களும் பூர்த்தி செய்யப்படுவதனை உறுதிசெய்யும் வகையில் அரசாங்கம் விரைவாக செயற்பட வேண்டிய தேவை உள்ளது.

2004ஆம் ஆண்டு ஏற்பட்ட சுனாமியின் தாக்கங்களால் ஏற்பட்ட விளைவுகளுக்காக இலங்கைக்கு சர்வதேச ஆதரவு மிகப் பெரிய அளவில் கிட்டியது. சுனாமி ஏற்பட்டு ஐந்து வருடங்களின் பின்னர் அரசாங்கம், சர்வதேச உள்ளூர் பங்காளிகள் ஆகியோரின் நடவடிக் கைகள் காரணமாக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் வெற்றியினை யளித்த ஒன்றாகவே கருதப்பட்டன. சுனாமியினால் ஏற்பட்ட அழிவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களைப் பற்றி தொலைக்காட்சியில் கண்ணுற்ற 250க்கு மேற்பட்ட அரசு சாரா நிறுவனங்கள், உலகின் பல பாகங்களில் இருந்தும் இலங்கைக்கு விரைந்து வந்து செய்த பங்களிப்புகள் காரணமாகவே இவ்வாறான வெற்றி சாத்தியமானது என்பதனை அங்கீகரிக்கவும் தவறக்கூடாது. இப்போது உள்நாட்டு முரண்பாடுகளால் வடபகுதியில் பாதிப்புக்குள்ளாகியுள்ள இடப்பரப்பினை விட அதிகமான நிலப்பரப்பு அப்போது சுனாமியினால் பாதிப்புக்குள்ளாகியிருந்தது.

கிடைக்கக்கூடிய தகவல்களில் இருந்து உள்நாட்டு முரண்பாடுகள் காரணமாக வடக்கில் மாத்திரம் 230,000 வீடுகள் அழிக்கப்பட்டுள்ளன எனத் தெரிய வருகிறது. இது சுனாமியினால் ஏற்பட்ட அழிவை விட இரண்டு மடங்கு அதிகமாகும். ஆயினும் துரதிஷ்டவசமாக வடக்கில் ஏற்பட்ட அழிவுகளின் அளவுகள் பற்றி பொது மக்கள் அறிந்துள்ளமை மிகக் குறைவாகும்.

உட்கட்டமைப்பும் கணிசமான அளவுக்கு அழிவடைந்துள்ளது. அதேயளவிலோ அல்லது அதிகமாகவோ மனித அழிவுகளும் துயர்ங் களும் இடப்பெயர்வுகளை தொடர்ந்து ஏற்பட்டுள்ளன. அண்மைக் காலத்தில் தான் முரண்பாடுகளினால் ஏற்பட்ட பாதிப்புக்கள் பற்றி பெருமளவில் மக்களால் அறியப்பட்டுள்ளன. அதனைப் போன்றே கடந்த கால வரலாற்றில் ஏற்பட்ட இடப்பெயர்வுகளினாலும் பல்லாயிரக் கணக்கானோரது வீடுகளும் நிலங்களும் அழிவுகளுக்குள்ளாகின. வடபகுதி முஸ்லிம்கள் பலவந்தமாக வெளியேற்றப்பட்டதால் பெரியளவிலான ஒரு மக்கள் தொகை இன்னும் நிச்சயமற்ற நிலையில் வாழ்ந்து வருகின்றனர்.

பலர் இலங்கையை விட்டு வெளியேறியும் விட்டனர். அவ்வாறு வெளியேறியவர்கள் அருகாமையில் உள்ள இந்திய கரையோரப் பகுதிகளில் தொடர்ந்தும் வாழ்ந்து வருவதுடன், தமது ஊருக்கு வந்து குடும்பங்களுடன் இணைவது பற்றிய நம்பிக்கையுடனேயே வாழ்ந்து வருகின்றனர். கடந்த காலங்களில் இடப்பெயர்வுகளுக்கு ஆளாகிய மக்களைப் பற்றி இப்போது மறந்துவிடக் கூடாது.

ஆயிரக்கணக்கானோர் முகாம்களில் நலிவடைந்த நிலையில் வாழ்ந்துக் கொண்டிருக்கையில் இன்னும் பல்லாயிரக்கணக்கானோர் பாதுகாப்பாக வீடு திரும்பும் நாளை எதிர்பார்த்த வண்ணம் வாழ்ந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருகின்றனர். போதிய உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குவது மிக முக்கியமானது. அதன் வாயிலாகவே மீள்குடியேற்றம் பாதுகாப்பாக அமையும் என்பதனை உறுதி செய்ய முடிவதுடன், உள்நாட்டில் இடம்பெயர்ந்த மக்களது வாழ்க்கையினை நிலைத்து நிற்கக்கூடிய வகையில் தொடரவும் வழிவகை செய்ய முடியும்.

இவற்றைத் தொடர்ந்து நாடும் அபிவிருத்தியடைய முடியும் என்றும் எதிர்பார்க்கலாம். நடைமுறையின் முன்னுரிமைத் தேவைகளை அரசாங்கம் பரிசீலனை செய்து, நிதிகளை மீள்பரம்பலுக்குள்ளாக்கு வதன் மூலம் பிரசைகளினது தேவைகளுக்கான வளங்களைப் பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருக்கும். அண்மைக் கால அறிக்கைகளிலிருந்து இதுவரை உளளூரிலேயே இடம் பெயர்வுகளுக்குள்ளாகிய 130,000 பேர் தமது உறவினர்கள் மற்றும் பயன்படுத்தாதிருந்த வீடுகளில் மீளக் குடியேற்றப்பட்டுள்ளனர் எனத் தெரிய வந்துள்ளது. அம்மக்களது நீண்டகாலப் பிரச்சினைகளை இத்தகைய தற்காலிக ஏற்பாடுகளினால் மட்டும் தீர்த்துவிட முடியாது. இம்மக்கள் தாம் பாரம்பரியமாக வாழ்ந்த இடங்களில் மீண்டும் அவர்களை குடியேற்றப்படுவதனை அரசாங்கம் மீள்உறுதிசெய்ய வேண்டிய தேவை உண்டு.

அடிப்படை மனிதத் தேவைகளை வழங்குவது சிவில் சமூகங்களது அடிப்படை செயற்பாடாகும். எனவே, நடமாடும் சுகாதார சேவைகள், சமூக மனோதத்துவ ஆதரவு மற்றும் வீடு நிர்மாணம் போன்ற பொறி முறைகள் மூலம் அவர்களது அவசர பூர்த்தி செய்வதற்கு தேவைப்படும் சிவில் சமூகங்களுக்கு தேவைகளை வளங்களை கூடிய பட்சமாக வழங்கும்படி அரசாங்கத்திடம் கேட்டுக் கொள்கிறோம். நம்பிக்கை உணர்வை மீளக் கட்டியெழுப்பவும், தொடர்ந்து உரையாடல்களுக்கு தளம் அமைத்து இருசாராரும் திறமையாக இணைந்து செயற்பட்டு இடம் பெயர்ந்தவர்களுக்கு உதவி செய்வதற்கும் சிவில் சமூக குழுக்களுக்கு வசதிகளை செய்து கொடுக்குமாறும் அரசாங்கத்திடம் பரிந்துரை செய்கின்றோம். உள்ளூரில் இடம்பெயர்வுக்காளாகிய மக்களுக்கு வாழ்வதற்கு வேண்டிய அடிப்படைத் தேவைகளையும் வாழ்வை மீளக்கட்டியெழுப்புவதற்கான சாதனங்களையும் வழங்குவ தற்கான கரிசனங்களை காட்டுவதன் மூலம் நல்லிணக்கச் செய்முறைக் கான அத்தியாவசிய கூறான அரசாங்கத்திற்கும் இடம்பெயர்ந்தவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களுக்குமிடையேயான நம்பிக்கையினை கட்டியெழுப்பவும் அதனால் வழி ஏற்பட முடியும்.

பாதிப்புக்குள்ளாகிய சமூகங்களினது மனிதாபிமான மற்றும் மீள்குடியேற்றத் தேவைகள் தொடர்பாக நடவடிக்கைகளை மேற் கொள்ளவும், அரசாங்கத்துடனும் உள்ளூர் மட்டத்திலும் பங்காளிகளாகப் பணிபுரிய அலுவலர்களைக் கொண்டிருக்கும் சர்வதேச மற்றும் உள்ளூர் அரசு சாரா நிறுவனங்களை மீள்குடியேற்ற செய்முறைகளில் ஈடுபடவும் அனுமதிக்குமாறு நாம் பரிந்துரை செய்கின்றோம். அரச நிர்வாகத் தினால் உடனடியாக வழங்க முடியாத சில சேவைகளை வழங்கி மக்களது தேவைகளை பூர்த்தி செய்ய சில அரசு சாரா நிறுவனங்கள் பயனுள்ளதாக இருக்க முடியும் என தேசிய சமாதானப் பேரவை நம்புகிறது. அவ்வாறான சேவைகளின் மூலம் போதிய வாழ்விடம், சுகாதார பராமரிப்பு, கல்வி மற்றும் அடிப்படைத் தேவைகளை மக்களுக்கு வழங்க முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஊடகவியலாளர்களது சுதந்திரத்தினையும் பாதுகாப்பினையும் உறுதி செய்யும் கடமை அரசாங்கத்திற்கு உண்டு

03-11-2009

இலங்கையில் நன்கு பிரபலமான இரண்டு பதிப்பாசிரியர்களான பிரடிரிகா ஜான்ஸ், முன்சா முஸ்தாக் ஆகியோருக்கு அச்சுறுத்தும் கடிதங்கள் பெயர் குறிப்பிடாத நபர்களால் தபால் மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. கடிதத்தின் பொதுவடிவமைப்பு, சொற்பிரயோகம் கடிதத்தின் நோக்கம் என்பன யாவுமே முன்னாள் 'சன்டேலீடர்' பத்திரிகை ஆசிரியர் லசந்த விக்கிரமசிங்கவுக்கு அனுப்பப்பட்டிருந்த கொலை அச்சுறுத்தலை ஒத்ததாக இருந்தது. அவருக்கு கடிதம் வந்த சில வாரங்களில் கொலை செய்யப்பட்டார். தேசிய பாதுகாப்பிற்காக ஊடக சுதந்திரத்தினை கட்டுப்படுத்துவது தேவையானது என அனுமானிக்கப்பட்டதனை தொடர்ந்து இவ்வாறான சம்பவங்களும் ஏற்பட்டுள்ளன.

பொறுப்புமிக்க பொதுமக்களுக்கு சரியான தகவல்களும் சுதந்திர மான சிந்தனைகளும் இன்றியமையாதவை. அவர்களுக்கு வாக்களிக் கவும் அல்லது கல்வி வசதிகளை அணுகக்கூடியமையும் எந்தளவுக்கு முக்கியமான உரிமைகளோ, அந்தளவுக்கு ஊடகங்களினது சுதந்திரமும் இன்றியமையாதவையாகும். அத்தியாவசியமாக தேவைப்பட்டால் மாத்திரமே அதுவும் ஆகவும் குறைந்தபட்சமாகவே ஊடகங்களின் சுதந்திரம் வரையறைகளுக்கு உட்படுத்தலாம் என்றும் அதனை அவற்றின் உரிமைகளில் பாதிப்பினை ஏற்படுத்தும் அளவில் மேற் கொள்ளக்கூடாது என்றும் தேசிய சமாதானப் பேரவை நம்புகிறது. வெவ்வேறான இனப்பின்னணிகளைக் கொண்ட ஊடகவியலாளர்களும் அச்சுறுத்தல்களுக்கு ஆளாக்கப்படுவதிலிருந்து இந்த ஒடுக்குமுறை தனி ஒரு இனக்குழுவுக்கு எதிரானது என்று மாத்திரம் கூறமுடியாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமக்கு கூறப்படுபவை பற்றி விமர்சன ரீதியாக சிந்திக்க முடியாது போகின்றமைக்கு காரணம், முன்னர் சனநாயக மற்றவகையில் ஆட்சி நடைபெற்றதன் விளைவாக ஏற்பட்ட குணாதிசயங்கள் தான் என்பதனை பற்றி சிந்திக்கும் போது மன அமைதி குலைகிறது. யுத்தம் முடிவுற்ற காலப்பகுதியின் பின்னரும் கூட உண்மையை சிதைத்து, தகவல்களை ஏற்றுக்கொள்ள முடியாத வகையில் கட்டுப்படுத்துகின்றமை அரசாங் கத்தின் மீதான நம்புதிறனை பாதிப்பது மாத்திரமன்றி, உண்மை நிலைவரங்கள் பற்றி திரித்தும் தவறான செய்திகளை பரவச் செய்வ தற்குமான வாய்ப்பினை அளிப்பதாக்கி விடும்.

எமது மக்களது பின்னணி எதுவென்பது என்ற வேறுபாடு ஏதுமின்றி அவர்கள் அனைவரதும் சுதந்திரம் இப்போது பாதிப்புக் குள்ளாகியுள்ளது. எவ்வாறயினும் நாம் ஏனையவரது சுதந்திரம் கட்டுப்பாடுகளுக்கு உள்ளாகும் தருணங்களில் அவை இடம்பெறுவ தனை அனுமதிக்கும் பண்பாட்டுக்கு நாம் பழக்கப்பட்டு விட்டதுடன், அவ்வாறு தனது அதிகாரங்களை துஷ்பிரயோகம் செய்பவர்களை மன்னிக்கவும் பழகிவிட்டோம். இதனால் எமது சொந்த சுதந்திரத் தினையே அச்சக்திகளால் பறிக்கப்படும் போதும் கூட ஊக்கமற்ற வர்களாக அமைதியாகவே இருந்து விடுகிறோம்.

எமது பொதுவான சுதந்திரங்களை பாதுகாப்பதற்காக தமது உயிரையே பணயம் வைத்து செயற்படுபவர்கள் மீது நாம் மிகுந்த கரிசனம் காட்ட வேண்டும் என தேசிய சமாதானப் பேரவை கருது கின்றது. எனவே, மக்களுடைய உரிமைகளை பாதுகாப்பதற்காக பணிபுரியும் ஊடகங்கள் அபாயகரமான சக்திகளினால் அச்சுறுத்தப் படுவதிலிருந்து பாதுகாக்கப்பட வேண்டும் என அரசாங்கத்திடம் பரிந்துரை செய்கின்றோம். சனாதிபதி மகிந்த ராஜபக்ச சன்டே லீடர் பதிப்பாசிரியர்கள் மீதான கொலை பயமுறுத்தல்கள் தொடர்பாக சுதந்திர விசாரணை செய்ய தீர்மானத்திருப்பதனை நாம் வரவேற்கின்றோம். இவ்விசாரணை மூலம் இவ்வாறான அச்சுறுத்தல்கள் விடுப்பவர்கள் இனங்காணப்படுவர் என்றும் திருமதி ஜான்ஸ் மற்றும் முஸ்தாக் ஆகியோர் துன்புறுத்தப்படாதிருப்பதனை உறுதி செய்யுமாறும் அரசாங் கத்திடம் கேட்டுக் கொள்கிறோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வட, கிழக்கு வெளியீட்டாளரான வெற்றிவேல் ஜசீகரனும் அவர் மணம்புரியப்போகும் ஏ.சி.வளர்மதியினதும் விடுதலையினையும் வரவேற்கிறோம். இவர்கள் ஒருவருடத்திற்கு முன்னர் கைது செய்யப் பட்டவர்கள். ஜசீகரனது வாக்குமூலம் பலவந்தமாக பெறப்பட்டது என்பதால் வழக்கில் குற்றவாளியல்ல என விடுதலையானார். ஆயினும் சிறைவாசத்தின்போது சித்திரவதைகளுக்கு ஆளாக்கப்பட்டதாகவும் தெரிய வந்துள்ளது. மறுபுறத்தில் 'மாதாந்த வட கிழக்கு' வெளியீட்டின் பதிப்பாசிரியர் ஜே.எஸ்.திஸ்ஸநாயகம் அடுத்து வரும் (இருபது) 20 வருடங்களுக்கு சிறையிலேயே இருக்கப் போகிறார்.

அது தொடர்பாக மேல்விசாரணைக்கு மனுசெய்யப்பட்டுள்ளது. சனாதிபதியை அவருடைய ஆளுமைமிக்க தலைமைத்துவ பண்பு களின் வெளிப்பாடாக திஸ்ஸநாயகத்தை மன்னித்து விடுதலை செய்யுமாறு கேட்டுக் கொள்கிறோம். மென்மேலும் சனநாயக ரீதியான ஆரோக்கியமிக்க சூழலில் நாம் வாழ்ந்து சுபீட்சமடைய இவ்வாறான முயற்சிகளில் அரசாங்கத்திற்கு ஆதரவு வழங்குமாறு எமது சக பிரசை களிடமும் நாம் கோரிக்கை விடுக்கின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பயங்கரவாத தடுப்புச் சட்டம் பத்திரிகையாளர்களுக்கானதல்ல

06-09-2009

'மாதாந்த வட கிழக்கு' பத்திரிகையின் பதிப்பாசிரியரும் சிரேஷ்ட பத்திரிகையாளருமான ஜே.எஸ்.திஸ்ஸநாயகத்திற்கு 20 வருட கடூழியத் தண்டனை விதித்துள்ளமை பத்திரிகைகளது சுதந்திரத்தையும், சுதந்திரமான அரசியல் கருத்துக்களை வெளியிடும் உரிமையினையும் சீராட்டி வருபவர்களுக்கு பெரும் ஏமாற்றத்தினை அளித்துள்ளது. இப்போது நடைறையிலுள்ள முக்கியமான விடயங்கள் தொடர்பாக ஆர்வங்காட்டும் உள்ளூர், வெளிநாட்டு ஆர்வலர்களது கவனத்தை இந்த வழக்கு பெரிதும் ஈர்த்துள்ளது.

கொழும்பு உயர் நீதிமன்றம் திரு.திஸ்ஸநாயகம் நாட்டின் பயங்கர வாத தடுப்புச் சட்டத்தை மீறியுள்ளார் என முடிவு செய்து குற்ற வாளியாக இனங்கண்டுள்ளது. அவர் இன உறவுகளில் இணக்கம் இன்மையினை ஏற்படுத்தும் வகையிலான கட்டுரைகளை எழுதியுள்ள தாகவும் சட்டத்திற்கு விரோதமான ஒரு பிரசுரத்தினை வெளியிட பணம் சேகரித்தமைக்காகவும் குற்றவாளியாக்கப்பட்டதாக கூறப் பட்டுள்ளது.

இவ்வாறான கடுமையான சிறைத்தண்டனைக்கு பயங்கரவாத தடைச் சட்டமே பொறுப்பாயுள்ளது என தேசிய சமாதானப் பேரவை நம்புகிறது. அச்சட்டம் பயங்கரவாதிகளை கைது செய்து தண்டிப்ப தற்கான ஒரு கடுமையான சட்டம். தாம் வாழும் சமூகத்தின் அரசியல் கருத்துக்களில் செல்வாக்கு செலுத்த தமது எழுதுகோலை பயன்படுத்தி வருபவர்கள் பத்திரிகையாளர்கள். இவாகள் வாளை பயன்படுத்துப வர்கள் அல்ல. எனவே கடுமையான பயங்கரவாத தடைச் சட்டத்தை இவர் மீது பயன்படுத்தியது பொருத்தமானதல்ல. சமூகத்தின் இன

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறவுகளில் ஒவ்வாத தன்மையை ஏற்படுத்தும் நோக்கம் இல்லாதவர் என்றும் பொதுவாக யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களின் உரிமை உட்பட்ட மனித உரிமைகளுக்காகவே பாடுபடுவர் என்றும் விசாரணையின் போது பல குறிப்பிடத்தக்க முக்கியஸ்தர்கள் இவரைப் பற்றி சாட்சியமளித்துள்ளனர். இதுவே எமது நம்பிக்கையும் கூட. அரசாங்கத்தின் சில பிரிவினர்கள் இத்தீர்ப்புக்கு எதிராகக் கருத்து கூறுபவர்களை, இத்தீர்ப்பு தொடர்பான எதுவிதமான விமர்சனங்களும் நீதிமன்றத்தை அவமதித்ததாகும் எனக்கூறி அச்சுறுத்தி வருகின்ற மையும் கரிசனத்துடன் கவனிக்க வேண்டியதொன்றாகும்.

இலங்கையில் நெடுங்காலமாகவே சுதந்திரமாக கருத்து வெளி யிடுதல் அடிப்படை உரிமைகளில் ஒன்று என நிலவிவந்த சுதந்திர உணர்வு இதன் காரணமாக இப்போது திணறலுக்கு உள்ளாகியுள்ளது. எனவே, பயங்கரவாத தடைச்சட்டத்தை ஊடகங்களுக்கு எதிராகப் பயன்படுத்துவதன் காரணமாக இச்சட்டத்தினை நீக்குமாறு தேசிய சமாதானப் பேரவை அரசாங்கத்தினைக் கேட்டுக் கொள்வதுடன் யுத்தம் முடிவுற்றிருப்பதால் இச்சட்டத்தினை பயன்படுத்துவது தொடர்பாக மீள்பரிசீலனை செய்யுமாறும் கேட்டுக் கொள்கின்றது.

இனரீதியாக முனைவாக்கம் பெற்றுள்ள நிலையில் சனாதிபதி மகிந்த ராஜபக்சவை தனது தேசிய தலைமைத்துவ பண்பினை நடத்திக் காட்டும் படியும் சனாதிபதியினது சிறப்புரிமையின் அடிப்படையில் மன்னிப்பினை வழங்கி ஊடகங்களினது சுதந்திரத்தையும் கருத்துக் களையும் சுதந்திரமாக வெளியிடும் உரிமையினையும் ஆதரிக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இடம்பெயர்வுக்குள்ளாகிய மக்களுக்கு சனநாயக ரீதியிலான தெரிவுகளுக்கு வழிவிட வேண்டும்

25-08-2009

அரசாங்கத்தின் நலன்புரி நிலையங்களில் தடுத்து நிறுத்தி வைக்கப் பட்டுள்ள இரண்டரை இலட்சத்திற்கு அதிகமான மக்களது மனிதாபிமான நெருக்கடிகள் அண்மைக் காலங்களில் வடபகுதிகளில் மேலும் கூடிய வேதனைகளுக்கு ஆளாக்கப்பட்டுள்ளன. இந்நெருக்கடிகளை அரசாங்கம் கையாளும் விதம் பொறுத்து தமிழ் மக்களிடையே பெரும் அதிருப்தி நிலவி வருவதுடன் சர்வதேச விமர்சனங்களும் இதனால் ஏற்பட்டுள்ளன. அண்மைக் கால கடும் மழை காரணமாக நலன்புரி நிலையங்கள் வெள்ளப் பாதிப்புக்குள்ளாகியுள்ளதுடன் கூடாரங்களின் கூரைப் பகுதிகளிலிருந்து நீர் ஒழுக்குகளும் ஏற்பட்டுள்ளன.

கழிவு நீக்க வசதிகளிலும் ஸ்தம்பிதம் ஏற்பட்டுள்தாகவும் அதனால் நோய்கள் அதிகரிப்பதற்கான வாய்ப்புக்கள் ஏற்பட்டுள்ளதாகவும் கூறப்படுகின்றது. மொன்சூன் மழை இன்னும் சில வாரங்களில் ஏற்படலாம். அது இப்போதைய மழையைவிட அதிகமாக இருக்கப் போவதால் மாபெரும் பாதிப்புக்கள் பற்றிய அச்சுறுத்தல்கள் வரும் காலங்களில் ஏற்படும் ஆபத்தும் காணப்படுகிறது.

நலன்புரி நிலையங்களில் இப்போதுள்ள வசதிகளை தரமுயர்த்த தேவையான உதவிகளை இலங்கை அரசாங்கத்திற்கு வழங்கும்படி தேசிய சமாதானப் பேரவை சர்வதேச சமூகங்களிடம் பரிந்துரை செய்கிறது. தற்போது சர்வதேச சமூகங்களில் சில இந்த நலன்புரி நிலையங்களுக்கு வசதிகளை மேம்படுத்தவும் நிரந்தர அமைப்புக்கான வசதிகளை வழங்கவும் தயக்கம் காட்டுவதாகவும் தெரிய வருகிறது. அவ்வாறு நிரந்தர அமைப்புக்கான வசதிகளை வழங்கும் பட்சத்தில் இடப்பெயர்வுகளுக்குள்ளான மக்கள் அங்கே நீண்ட காலம் இருத்தி விடப்படலாம் என்ற அச்சம் காரணமாகவே தயங்குவதாகத் தெரிகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எவ்வாறாயினும் மக்கள் எவ்வளவு காலம் அங்கே இருக்கப் போகின்றனர் என்பதனை கவனத்திற் கொள்ளாது மேம்பட்ட வசதிகள் அம்மக்களுக்கு வழங்கப்பட வேண்டும் என்பதனை நாம் நம்புகிறோம். யுத்தத்தின் இறுதிகட்டத்தின் போது மீண்டும் மீண்டும் இடம்பெயரச் செய்ததன் காரணமாக மன உளைச்சல்களுக்கும் அதிர்ச்சிகளுக்கும் அம்மக்கள் ஆளாகியுள்ளனர்.

பாதுகாப்புக் காரணங்களைக் கூறி இடம்பெயர்வுகளுக்குள்ளாக்கப்பட்ட மக்களை தொடர்ந்தும் அடைத்து வைத்திருப்பதால் நீண்ட காலத்தில் அரசாங்கத்திற்கு எதிராக குற்றம் கூறப்படும் நிலைமை ஏற்படக்கூடியமை தொடர்பாக அரசாங்கத்தை தனது கொள்கைகளை மீள்பரிசீலனை செய்யுமாறு தேசிய சமாதானப் பேரவை பரிந்துரை செய்கிறது. அம்மக்ளிடையே அதிகரித்தளவிலான அமைதியின்மை காணப்படுகின்றது. அந்தளவுக்கு பெரியதான ஒரு மக்கள் தொகையை அடைத்து வைத்திருப்பதால் அது அவர்களிடையே கசப்புணர்வினை தூண்டுவித்து மனமுறிவினை ஏற்படுத்துவதுடன் கிளர்ச்சிகளை ஏற்படுத்தி நீண்ட கால அச்சுறுத்தல்களுக்கும் வழி வகுக்கலாம்.

தொடரும் மனிதாபிமான நெருக்கடிகளைப் பயன்படுத்தி, அரசாங்கத்திற்கு எதிரான பிரசாரங்களையும் அரசாங்கத்திற்கு எதிராக தூண்டுதல் பிரசாரங்களையும் இலங்கையிலும் சர்வதேச ரீதியாக வெளிநாடுகளில் வாழ்வோர் மத்தியிலும் மேற்கொள்ள வாய்ப்பேற்படலாம்.

மன்னார், யாழ்ப்பாணம், திருகோணமலை மற்றும் மட்டக்களப்பு பகுதிகளை வசிப்பிடமாகக் கொண்ட தற்போது நலன்புரி நிலையங்களில் வாழ்ந்தவர்களில் பலர் விடுவிக்கப்பட்டு இப்போது தமது சொந்த இடங்களுக்கு சென்று மீளக் குடியேற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக நாம் அறிந்துள்ளோம். அவை பிரதான யுத்த வலயத்திற்கு அப்பால் இருந்த பகுதிகளாகும். இது வரவேற்கத்தக்க முன்னேற்றமாகும்.

மீளக் குடியேறுபவர்களுக்கு சர்வதேச உதவிகளுடன், கணிசமான உதவிப் பொதிகள் வழங்கி அவர்களது வாழ்வாதாரத்திற்கான வாய்ப்புக்களை உயர்த்த ஆவன செய்தலும் அவசியமாகும். ஆனால் அது மிகவும் மெதுவாகவும் சிறியதாகவுமே இடம்பெறுவதாகத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெரிகிறது. மொன்சூன் மழை ஆரம்பிப்பதற்கு முன்னர் இவற்றை வழங்க ஆவன செய்தல் அத்தியாவசியமானதாகும்.

வன்னியிலிருந்து இடம்பெயர்ந்தவர்களை புலனாய்வு செய்யும் நடவடிக்கைகளை விரைவுபடுத்தி, புலனாய்வு செய்யப்பட்டவர்களை எதுவித தாமதமும் இன்றி சுதந்திர நடமாட்டத்திற்கு அனுமதிக்கும்படி தேசிய சமாதானப் பேரவை அரசாங்கத்திடம் கோருகின்றது. மக்கள் நலன்புரி மையங்களைவிட்டு தமது வீடுகள் அல்லது இவர்களை வைத்து பராமரிக்க விரும்பும் வீடுகள் உள்ள பகுதிகளில் கண்ணி வெடி நீக்கம் செய்யப்பட்டிருந்தால் அவற்றிற்கு செல்ல அவர்கள் விரும்பினால் அனுமதிக்கப்படுதல் வேண்டும்.

மாறாக அவர்கள் தமது விருப்பப்படி நலன்புரி நிலையங் களிலேயே இருக்க விரும்பினால் அவ்வாறு இருக்கவிடலாம். இடம்பெயர்வுகளுக்குள்ளான மக்களுக்கு தாம் விரும்பிய வகையில் இருக்க விரும்புவதனை சனநாயக முறையில் அனுமதிக்க வேண்டும். அவ்வாறும் அனுமதிக்காது போனால் பாதுகாப்புக் காரணங்களுக்காக மறுக்கப்படும் அந்த நிலைப்பாட்டின் விளைவுகள் எதுகாரணத்திற்காக மறுக்கப்பட்டதோ அதன் முக்கியத்துவமே பின்னர் நலிவடைந்தும் போய்விடலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்நாட்டில் இடம்பெயர்ந்தோர்களுக்கு சிறப்புப் பாடசாலை பரீட்சைகளை ஏற்பாடு செய்து அவர்களது நம்பிக்கையினை புதுப்பிக்கலாம்

03-07-2009

முப்பது வருடங்களாக ஏற்பட்ட துயரங்களில் இருந்தும் உள அதிர்ச்சி களிலிருந்தும் மீண்டு வழமைக்கு திரும்புதலுக்கும், நல்லிணக்கத்தினை மீண்டும் கொண்டுவருவதற்குமான வாய்ப்புக்கள் யுத்தம் முடிவுற்றதன் மூலம் ஏற்பட்டுள்ளன. இருந்த போதிலும் உள்ளூரிலேயே இடம் பெயர்ந்தவர்கள் ஏறத்தாழ 3 இலட்சம்பேர் வவுனியாவில் உள்ள நலன்புரி நிலையங்களிலேயே இன்னும் வைக்கப்பட்டிருப்பது துயரங் களுக்கும் மனவேதனைகளுக்கும் காரணமாயுள்ளது. இந்த முகாம்களின் நிலைமைகள் மிகவும் மோசமான நிலைமையில் காணப்படுவதாகவும் அவற்றைப் பற்றி தெரிந்து கொள்வதற்கு அங்கே எவரும் செல்ல அனுமதிக்கப்படுவதில்லை எனவும் தெரியவந்துள்ளது. எனவே, இவ்வாறான நலன்புரி நிலையங்களில் உள்ள மக்கள் மீள குடியேற்றப் படுவதற்காக எப்போது அவர்களை விடுவிக்கலாம் என்பதற்கான காலக்கெடுவினை, ஒரு முன்னுரிமை கொண்ட தேவையாக கருதி அறிவிக்க அரசாங்கம் முன்வர வேண்டும் என தேசிய சமாதானப் பேரவை பரிந்துரை செய்கின்றது.

நலன்புரி மையங்களில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் மக்களை ஒழுங்குமுறையாகவும், வெளிப்படையான முறையிலும் பரிசீலித்தும் பதிவு செய்தும் பின்னர் குடும்பங்களிலிருந்து பிரிந்துள்ளவர்களை மீள ஒன்றுசேர்வதற்கும் தாமதமின்றி ஆவன செய்வதும் முக்கியமான தேவைகளாக உள்ளன. இவற்றோடு சேர்ந்த இன்னுமோர் முக்கிய தேவை சிறுவர்களினதும் குழந்தைகளினதும் கல்வியாகும். வெளி வந்துள்ள அறிக்கைகளிலிருந்து நலன்புரி நிலையங்களில் 35,000

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதல் 50,000 வரையிலான பாடசாலை செல்லும் வயதினர் உள்ளதாக தெரிய வந்துள்ளது. அவர்களில் 750 பேரளவில் எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் நடைபெறவுள்ள கபொத (உ/த) பரீட்சைக்கு தோற்ற வேண்டிய வராவார். இருந்த போதிலும் கடந்த சில மாதங்களில் ஏற்பட்ட பல தடங்கல்கள் காரணமாக இம்மாணவர்களுடைய கல்விப் பயிற்சிகள் பாதகமான முறையில் பாதிப்புக்குள்ளாகி உள்ளன என்பதும் தெரிய வந்துள்ளது.

இப்போது நலன்புரி நிலையங்களில் வாழ்பவர்கள் அனைவரும் இவ்வருடம் மே மாதம் வரை வடபகுதியின் யுத்த வலயத்திலேயே வாழ்ந்திருப்பர். பெரும்பாலானோர் தமது வீடுகளிலிருந்து இடம் பெயர்ந்து மிகவும் குறைந்ததும் மோசமானதுமான வசதிகளுடனேயே வாழ்ந்திருப்பர். அவர்கள் கபொத (உ/த) பரீட்சைக்கு தோற்றுவதற்கு தயார் செய்வதற்கு இன்னும் கால அவகாசம் தேவைப்படும். எனவே, அவர்களை சற்று தாமதித்து இப்பரீட்சைக்கு தோற்றுவதற்கு வசதியாக இன்னுமோர் சிறப்புப் பரீட்சைக்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என தேசிய சமாதான்ப் பேரவை பரிந்துரை செய்கிறது.

நலன்புரி நிலையங்களில் உள்ள மாணவர்களுக்காக இதற்கான ஏற்பாட்டினை செய்யுமாறு வேண்டி கல்வி அமைச்சருக்கு நாம் எழுத்தில் வேண்டுகோள் விடுத்திருக்கின்றோம். இவ்வாறான ஏற்பாடு களுக்கு முன்னுதாரணம் ஏற்கனவே பல சந்தர்ப்பங்களில் ஏற்பட்டுள் ளமையை நாம் நினைவு கூரலாம். இந்த ஏற்பாட்டுடன் மேலே கூறிய ஏனைய ஏற்பாடுகளையும் முறையாக மேற்கொள்ளும் பட்சத்தில் உளளூரில் இடம்பெயர்ந்த மக்களுடைய வாழ்க்கை மீதான நம்பிக்கை புதுப்பிக்கப்படும் என்பதுடன், தற்போது பெரும்பாலான மக்களுக்கு வழமை வாழ்வினயும் நல்லிணக்கத்தையும் மீட்டுக் கொடுக்க அரசாங்கம் காட்டும் அர்ப்பணிப்பும் அனைவராலும் நம்பத்தகுந்த தாகிவிடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிக்கை- 31

# மனித உரிமைகளுக்காக செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்தவும்

04-06-2009

வெள்ளை வேன் ஒன்றில் வந்த இனந்தெரியாத குழுவினரால் 'தொழில்புரியும் பத்திரிகையாளர்கள் ஒன்றியத்தின்' செயலாளர் போத்தல ஜயந்த பாரதூரமாக தாக்கப்பட்டு கடத்தப்பட்டுள்ளார். முன்பின் அறியப்படாத கட்சி எழுதிய எதிர்ப்பார்ப்புக்களுடன் மாற்றுக் கொள்கைகளுக்கான மையத்தினை ஒத்துப்போகும்படி அச்சுறுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. யுத்தம் முடிந்த பின்னர் மக்களை அவதூறு செய்தும், தேசவிரோதிகளாக இனங்காட்டியும் முன்னெப் போதும் இடம்பெறாத அளவில் இவ்வாறான நடவடிக்கைகள் இடம் பெற்றுள்ளன.

இவ்வாறான நடவடிக்கைகள் அரசாங்கம் ஊடக சுதந்திரத்திற்கு தன்னை அர்ப்பணித்துள்ளமையினை இழிவுபடுத்துவதாக உள்ளது என்பதுடன், அச்சுறுத்தல் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிரானது மட்டுமன்றி ஏனையோருக்கும் எதிரானது என்பதனையே காட்டுவ தாகவும் உள்ளது. இப்போது தமிழீழ விடுதலைப் புலிகளை தனது கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்து விட்ட நிலையில் நாம் ஒரு ஐக்கியப்பட்ட நாடாக முன்னோக்கி செல்ல வேண்டுமானால் அரசாங்கம் நாட்டில் நிலவும் ஏனைய அச்சுறுத்தல்களை அகற்றுதலும் வேண்டும்.

அரசாங்கத்தின் அங்கத்தினர்கள் குறிப்பிட்டுக் கூறாது சில ஊடக வியலாளர்களும் அரசு சாரா நிறுவனங்களும் தமிழீழ விடுதலைப் புலிகளினால் வழங்கப்படும் கொடுப்பனவுகளைப் பெற்றுக் கொண்ட தாகக் கூறும் அறிக்கைகளால் தேசிய சமாதானப் பேரவை அமைதி இழந்துள்ளது. அரசாங்கத்திடம் அவ்வாறாக சட்ட விரோதமானதும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குற்றவியல் தொடர்பானதுமான வகையில் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் தொடர்புகள் கொண்டவர்களோ அல்லது நிறுவனங்களோ பற்றிய ஆதாரங்களும் சாட்சியங்களும் இருக்குமானால் அதனை நேரடியாகவே வெளிப்படுத்தலாம். மாறாக, வெறுமனே சரியாக குறித்து கூறாது வெறுமனே மொட்டை அறிக்கைகள் வெளியிடப் படுவதன் காரணமாக வெவ்வேறு தரப்பினரும் பல்வேறு வகைகளில் அவர்களால், 'காட்டிக் கொடுப்பவர்கள் என நம்பப்படுபவர்களுக்கு', எதிராக அவர்கள் இழைக்கக்கூடிய அநீதிகளுக்குத் தண்டனை ஏதுமின்றி விலக்கு பெற்று செயற்படுவதற்கு வாய்ப்புக்கள் அளிக்கப்படுவ தாகவே அமையும். எமது நாட்டில் ஐக்கிய அமெரிக்காவின் மேற்கு மாநிலங்களில் ஆரம்ப காலங்களில் ஏற்பட்ட காட்டுத் தர்பார் நீதி நிலையை ஒத்த நிலை ஏற்படக்கூடாது என விரும்புகிறோம். அதற்கு மாறாக மனித உரிமைகளுக்கான உரிய கௌரவமும் சட்டத்தின் வாயிலான ஆட்சியும், சனநாயக பெறுமானங்களுமே இடம்பெற வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறோம்.

இப்போதைய சூழலில் இனங்களிடையே நல்லிணக்கத்தினை உருவாக்கி, யுத்தத்தின் காயங்களை ஆற்றுவதே முக்கிய தேவையே ஒழிய எமது யாப்பில் புனிதமாகப் பேணப்படுகின்ற மனித உரிமை களையும் அடிப்படை உரிமைகளையும் உண்மையாக நம்புவர்கள் மீது குற்றஞ்சாட்டி பதற்றங்களை உருவாக்கிப் பேணிவருவதல்ல. சனாதிபதி மகிந்த ராஜபக்ச தாம் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் மேற்கொண்ட யுத்தம் தமிழர்களுக்கு எதிரான யுத்தம் அல்ல என்றும் மக்கள் ஐக்கியப்பட்டு ஒன்று சேருமாறும் விடுத்திருக்கும் அறிக்கையை நாம் வரவேற்கின்றோம். சட்டத்தை நடைமுறைப்படுத்தியும், குற்ற வாளிகளை கைது செய்தும், குற்றமிழைத்தவர்களுக்கு தண்டணைகளி லிருந்து விலக்களிக்கும் கலாசாரத்தை ஒரு முடிவுக்கு கொண்டு வருவதன் மூலமாகவே அரசாங்கம் சர்வதேச அரங்கங்களில் தான் மனித உரிமைகளை பாதுகாக்க தேசிய செயற்றிட்டத்தினை அமுலாக்கம் செய்யப்போவதாக கூறும் உறுதி மொழிகளை அர்த்தமுள்ளதாக்க முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சட்டம் செயலற்றுப் போயுள்ளமை தொடர்பாகவும் தமிழ் மக்கள் தண்டணைகளுக்காளாக்கப்படுகின்றமை தொடர்பாகவும் அரசாங்கம் ஆவன செய்தல் வேண்டும்

14-05-2009

இலங்கையின் வட பகுதியில் யுத்தத்தின் இறுதிக்காலகட்டத்தில் மனிதாபிமான நெருக்கடிகள் மீது கவனம் குவிந்துள்ள இச்சந்தர்ப் பத்தில் இலங்கை மக்களது விதியின் மீது அக்கறை கொண்ட சர்வதேச மற்றும் உள்நாட்டு சக்திகள் உடனடியாகக் கவனம் செலுத்த வேண்டிய பிரபல்யமடையாத நெருக்கடி ஒன்றுண்டு. சட்டமும் ஒழுங்கும் செயலற்று போயுள்ளமை, கடத்தப்பட்டவர்களுடைய தலைவிதி, கொலைகள், பணம்பறிப்பு என்பன நாட்டின் கிழக்கு உட்பட்ட பல பிரதேசங்களிலும் இடம்பெற்று வருகின்றன.

பொலிஸ் தேடுதலின் போது சந்தேக நபர்களாகக் கைது செய்ய முயன்றவர்கள் பின்னர் தப்பியோட முயற்சித்தபோது சுட்டுக்கொல்லப் பட்ட சம்பவங்களோடு இணைந்ததாக இந்த சம்பவங்களும் இடம் பெற்றுள்ளன. தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாளர்களாக இருப்பார்கள் என்னும் சந்தேகத்தின் பேரில் தமிழ் மக்களை அச்சுறுத்தும் வகையிலான தொலைபேசி அழைப்புக்களும் அவர்களை அச்சுறுத்தி பணம்பறித்தல் மற்றும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாளர்களாக இருப்பார்கள் என்னும் சந்தேகத்தின் பேரில் கடும் கண்காணிப்புக்கு ஆளாகியிருக்கும் தமிழ் மக்களை அச்சுறுத்தும் வகையிலான தொலைபேசி அழைப்புக்களாலும், அவர்களை அச்சுறுத்தி பணம் பறிப்பவர்களாலும் பெரும் துயரங்களுக்கு ஆளாக்கப் பட்டுள்ளனர். பாதுகாப்பு படையினரும் ஏனைய மக்களும் இம்மக்கள் தமிழீழ விடுதலைப் புலிகளையே ஆதரிப்பர் என்னும் சந்தேகத்திற்கு ஆளாகி இருப்பதால் பெரிதும் பாதிக்கப்படக்கூடியவர்களாக உள்ளனர். சட்ட நீதிமன்றங்களினால் விடுதலைச் செய்யப்பட்ட தமிழ் மக்களை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதுகாப்பு படையினர் மீண்டும் அவர்கள் தமிழீழ விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகளுடன் தொடர்புகளை கொண்டுள்ளவர்கள் எனக் கூறி கைது செய்யதுள்ளனர்.

முரண்பாடுகள் நிலவும் வடபகுதியிலும் ஏனைய பகுதிகளிலும் யதேச்சதிகாரமானதும், சட்டவிரோதமானதுமான நடவடிக்கைகளினால் அப்பாவிப் பொதுமக்களான தமிழ் மக்களது பாதுகாப்பு நிலைமைகளில் ஏற்பட்டுள்ள சீரழிவுகள் தொடர்பாக தேசிய சமாதானப் பேரவை பெரிதும் கரிசனம் கொண்டுள்ளது. மேலே குறிப்பிட்ட சட்டமும் ஒழுங்கும் தொடர்பான பிரச்சினையின் வேர்களில் ஒன்று அரசாங்கமும் மற்றும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிரான நடவடிக்கைகளை ஆதரித்துவரும் தமிழ் இராணுவ உதவிப் படையினருமாவர்.

எம்மில் பலருக்கு தெரியாததான ஒரு துயரச்சம்பவம் தொடர்பான நேரடி அனுபவம் ஓரிரு வாரங்களுக்கு முன்னர் எமக்குக் கிட்டியது. எமது நிறுவனத்தின் பணிப்பாளர் ஒருவரது தாய் அவருடைய வீட்டில் திருட வந்த ஒருவரால் கொல்லப்பட்டிருக்கின்றார். அதனைத் தொடர்ந்து எமது நிறுவனத்தின் நிர்வாகக் குழுவின் அங்கத்தவர் ஒருவரது 8 வயது மருமகள் ஒருவரும் பணயப் பணத்தை வாங்கிக் கொண்டதன் பின்னர் கொல்லப்பட்டுள்ளார். இவ்விருச் சம்பவங்களுமே கிழக்கில் தான் இடம்பெற்றன.

தேசிய சமாதானப் பேரவை அரசாங்கத்தின் அனைத்து இராணுவ உதவிக் குழுக்களிடமும் உள்ள ஆயுதங்களை கலைக்கும்படியும், பாதுகாப்புபடையினர் எவரேனும் சட்டவிரோத நடவடிக்கைகளில் ஈடுபடுவார்களேயானால் அவர்களுக்கு எதிராக ஒழுங்கு நடவடிக்கை களை மேற்கொள்ளுமாறும் பரிந்துரை செய்கிறது. வடக்கில் இப்போது நடைபெற்று வரும் யுத்தம் காரணமாக பல நூற்றுக்கணக்கான தமிழ் பொதுமக்கள் கடந்த சில தினங்களில் கொல்லப்பட்டுள்ளதாகவும் அல்லது காயமடைந்துள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இத்தகைய சூழலில் அரசாங்கம் சட்டபூர்வமான ஆட்சியினை செய்வதற்கு அர்ப்பணித்துள்ளதாக தமிழ் மக்களிடம் நம்பிக்கையை ஏற்படுத்த வேண்டுமானால், சர்வதேச ரீதியில் நம்பிக்கையை ஏற்படுத்திக் கொண்டுள்ள ஐ.நா. சபை போன்ற நிறுவனங்களை மீண்டும் சம்பந்தப்பட வைத்தல் அத்தியாவசியமாக உள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாறுபட்ட அபிப்பிராயங்களுக்கான வாய்ப்புக்கள் குறைந்து செல்கின்றன

....

அரசாங்கத்தினதும் அதன் நிறுவனங்களினதும் கருத்துக்களிலிருந்து வேறுபட்டதாகவும் தமது அவதானங்களையும் விசாரணைகளையும் அடிப்படையாக கொண்டு சுதந்திரமானதுமானதுமான கருத்துக்களை வெளியிடுவோர் மீது செய்யப்படும் மறைமுகமான அச்சுறுத்தல்களும் கைதுகளும் தொடர்பாக கடந்த சில வருடங்களாகவே தேசிய சமாதானப் பேரவை கரிசனமாக இருந்து வருகிறது. குறிப்பாக இது வடபகுதியில் காணப்படும் மனிதாபிமான நிலைவரங்கள் தொடர்பாக பெரிதும் ஏற்புடைத்தாகும். இந்தப் பகுதிகளுக்கு சுதந்திரமான முறையிலோ அல்லது தனிப்பட்ட வகையிலோ எவரும் செல்ல முடியாதென அரசாங்கம் தடை செய்து வருகிறது. இவ்வாறான தணிக்கைகளினால் சர்வதேச சமூகங்களின் அபிப்பிராயங்களில் எதுவித மாற்றத்தினையும் ஏற்படுத்துவதாகவும் இல்லை.

வன்னியின் நிலைவரங்கள் பற்றிய தவறான தகவல்கள் பரவச் செய்வது தடைசெய்யப்படுதல் வேண்டும் என்பதனை தேசிய சமாதானப் பேரவை அங்கீகரித்த போதிலும், நேரடியான அல்லது மறைமுகமான தணிக்கைகள் எதுவித பயனுள்ள விளைவுகளையும் கொண்டுவரப் போவதில்லை என்பதனையும் நம்புகின்றது. சர்வதேச சமூகங்களின் பார்வையில் இலங்கையில் சட்ட நிலை வெளிப்படையானதாகவும் சுதந்திரமானதாகவும் பேணப்படுவதாக இருத்தல் அவசியம்.

அரசாங்கம் வன்னிப் பகுதிகளில் நிலைவரங்களை மேம்படுத்தப் போவதாக அறிவித்துள்ளமையினை தேசிய சமாதானப் பேரவை கவனித்துள்ளது. அத்தகைய மேம்பாடுகள் உலகின் ஏனைய சமூகங்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களது கவனத்திற்கும் கொண்டுவரப்பட வேண்டும் என நாம் நம்பு கிறோம். இலங்கையின் இன முரண்பாடுகள் சனநாயகச் சூழலில் தீர்க்கப்பட வேண்டும் என்றே தேசிய சமாதானப் பேரவை நம்புகிறது. சனநாயகத்திற்கான முன்நிபந்தனை சுதந்திரமாக தகவல்களை வெளி யிடுவதும் தனிப்பட்ட முறையில் விமர்சன ரீதியாக சிந்திப்பதுமேயாகும். அவ்வாறான சுதந்திரங்கள் மூலமாகவே அரசாங்கங்கள் உண்மையான கருத்துக்களை அறிந்துகொள்ள முடிவதுடன், அதனால் நாடு தற்போது எதிர்நோக்கும் சவால்களுக்கான தீர்வுகளை கண்டறிவதற்கு பொருத்த மான மாற்று வழிகளை பெற்றுக் கொள்ளவும் முடியும்.

இவ்வாறாக பெறப்படும் மதிப்பீடுகள் மூலம் நாட்டு பிரசை களுக்கும் நாட்டில் நிலவும் பிரச்சினைகளுக்கும் தீர்வாக காணப்படும் மாற்று வழிகள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காகவும் அவற்றிற்கு சார்பாகவும் எதிராகவும் உள்ள கருத்துக்கள் விவாதிக்கப் படுவதற்கான வாய்ப்புக்கள் ஏற்படவும் முடியும். அவ்வாறான விவாதங்களினால் ஏற்பட வேண்டியதான தீர்வுகளின் சிறப்புக்கள் பற்றியும் குறைபாடுகள் பற்றியும் யாவரும் தெரிந்து கொள்ள வாய்ப்பு ஏற்படுகின்றது.

சுதந்திரமான உரையாடல்களுக்கான வாய்ப்புக்களுக்கு இட மில்லாத போது இலங்கையின் முரண்பாடுகளுக்கான ஆணிவேரை கண்டறிந்து அவற்றிற்கு ஏற்ற நிலைமாற்றத்தினை ஏற்படுத்துவதற்கான வாய்ப்புக்கள் இழக்கப்படலாம்.

இத்தகைய பின்னணியில் தேசிய கிறிஸ்ரியன் பேரவையின் சிரேஸ்ட அலுவலரும், மனித உரிமை ஆர்வலருமான சாந்த பெர்னாண்டோ அண்மையில் கைது செய்யப்பட்டமை குறித்து தேசிய சமாதானப் பேரவை பெரிதும் கரிசனம் கொண்டுள்ளது. அவர் இலங் கையின் தற்போது காணப்படும் மனிதாபிமான நெருக்கடிகள் பற்றிய கருத்தரங்கம் ஒன்றில் கலந்து கொள்ள இந்தியாவுக்கு செல்ல முனைந்த போது சர்வதேச விமான நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

அவர் தன்வசம் இலங்கையின் பாதுகாப்பு பொறுத்து பாதகமான ஆவணங்களை வைத்திருந்ததற்காகவே கைதுசெய்யப்பட்டதாக அவரது கைது பற்றி நியாயப்படுத்தப்பட்டுள்ளது. இன்று அரசாங்கத்தில் உள்ள சிரேஷ்ட தலைவர்கள் எதிரணியில் இருந்த காலத்தில் இதனைப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போன்றே நாட்டிற்குப் பாதகமான தகவல்களை நாட்டிலிருந்து எடுத்துச் சென்றபோது விமான நிலையத்தில் எதிர்நோக்கினர்.

எனவே, அத்தகையவர்களுக்கு இவ்வாறான மனித உரிமைகள் தொடர்பான நடவடிக்கைகளில் உள்ள அர்ப்பணிப்பு மற்றும் ஈடுபாடு என்பன பற்றிய விளக்கங்கள் கூடியளவில் தெரியும். தேசிய சமாதானப் பேரவை திரு.பெர்னாண்டோவின் கைதுபற்றியும் தொடர்ந்து தடுப்பு காவலில் வைத்திருப்பது பற்றியும் ஆழ்ந்த அக்கறை கொண்டிருப்பதோடு அவரை விடுதலை செய்யும்படியும் கேட்டுக் கொள்கிறது.

தேசிய சமாதானப் பேரவை, சுடர் ஒளி செய்தித்தாளின் பதிப் பாசிரியர் என்.வித்தியாதரனின் கைது பற்றிய அக்கறையாயுள்ளது. அண்மையில் கொழும்பு மீது கரும்புலிகளின் வான் பிரிவைச் சேர்ந்த தற்கொலைதாரி செய்த தாக்குதல் பற்றிய தகவல்கள் அவரிடம் இருந்ததாகவும் அதற்காக அவர் கைது செய்யப்பட்டதாகவும் கூறப் படுகிறது.

முன்னணியில் உள்ள ஒரு தமிழ் செய்தித்தாள் என்பதால் திரு. வித்யாதரனும் அவருடைய சக ஆசிரியர்களும் இச்சம்பவம் நடந்த தனை ஒட்டி புலனாய்வு செய்தமை குறித்து சந்தேகம் கொள்ளத் தேவையில்லை. இவர்களைப் போன்று தான் ஏனைய பொறுப்புமிக்க செய்தித்தாள் ஆசிரியர் குழாமினரும் இவ்வாறான சம்பவங்களை அடுத்து புலனாய்வு நடவடிக்கைகளில் ஈடுபடுவார்கள். தேசிய சமாதானப் பேரவையை பொறுத்து தற்கொலை குண்டுதாக்குதலில் அவர்களுக்கு பங்கு உண்டென்பதில் ஐயமே கொள்கிறது. இருந்த போதிலும் ஊடகங்களுக்கு அவர்கள் எந்த வகையில் இந்த தாக்குதலுக்கு பொறுப்பாயிருந்தனர் என்பதனை தெரிந்து கொள்ளும் உரிமையுண்டு. அவற்றை தெரிந்து கொண்டாலே அத்தகைய செய்திகளை மக்கள் தெரிந்து கொள்ளும் வகையில் பரவச் செய்ய முடியும்.

தேசிய சமாதானப் பேரவை பூபாலசிங்கம் புத்தக கடையின் உரிமையாளரை கைது செய்தமை தொடர்பாகவும் தனது அதிருப்தி யினைத் தெரிவித்துக் கொள்கிறது. அக்கடையில் தமிழ் மற்றும் ஆங்கில நூல்கள் விற்பனை செய்யப்படும். இக்கடைக்காரரை கைது செய்தமைக்கு சென்னையிலிருந்து வெளிவரும் ஆனந்த விகடன் என்னும் சஞ்சி கையினை விற்பனை செய்தது குற்றமாகக் கூறப்படுகிறது. குறித்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சஞ்சிகையில் கொழும்பு நகரை தமிழீழ விடுதலைப் புலியினர் விமான தாக்குதல் செய்தமை தொடர்பான செய்திகளும் புலிகளது அங்கத்த வர்களது படங்களும் வெளியாகியிருந்தன.

ஆனந்த விகடன் நெடுங்காலமாக இறக்குமதி செய்யப்பட்டு வரும் ஒரு பிரபல குடும்ப சஞ்சிகையாகும். தேசிய சமாதானப் பேரவை இப்போது அரசாங்கம் பூபாலசிங்கம் கடை உரிமையாளரை விடுதலைச் செய்ய முன்வந்திருப்பது குறித்து வரவேற்பினைத் தெரிவித்துக் கொள்கிறது. அரசாங்கம் ஆனந்த விகடனில் வெளியாகிய செய்திகளை மறுக்குமானால் குறிப்பிட்ட அந்த ஆனந்தவிடகனை பறிமுதல் செய்துவிட்டிருக்கலாம் என தேசிய சமாதானப் பேரவை நம்புகிறது.

மேற்கூறிய மூன்று கைதுகளுமே எந்தளவுக்கு கருத்து வேறு பாடுகளை கூறுவதற்கும் மாற்று அனுமானங்கள் பற்றிய கருத்துக்களை வெளியிடுவதற்குமான சனநாயக வழிமுறைகள் நாட்டில் குறுகி யுள்ளன என்பதனையே காட்டுவனவாக உள்ளன. அரசாங்கம் பயங்கர வாதத்திற்காக செய்யும் யுத்தத்தின்போது ஏற்படப்போகும் சனநாயக உரிமைகளின் அழிவுக்கு இவை முன்னோடிகளாக இருப்பதாக தேசிய சமாதானப் பேரவை கரிசனம் கொள்கிறது. அரசாங்கம் பயங்கர வாதத்திற்கு எதிராக மேற்கொண்டுள்ள யுத்தமே இவ்வாறான உரிமைகளை பாதுகாக்கத்தான் என்பதனையும் நம் அசட்டை செய்து பார்க்க முடியாது. ஆனால், மேற்கூறிய வகையில் அரசாங்கம் கைது களைச் செய்வதால் அதனால் மேற்கொள்ளப்படும் பயங்கரவாத்திற்கு எதிரான யுத்தம் என்னும் கோரிக்கையின் சட்ட ரீதியான பெறுமதி மழுங்கடிக்கப்படுவதாக உள்ளது.

இவற்றோடு இப்போது மோசமாகி வரும் அடையாளம் காணப் படாத குழுக்களாலும் தனிப்பட்டவர்களாலும் செய்யப்படும் ஆட்கடத் தல், பணயத் தொகை பெறுதல் என்பன அதிகரித்து வருவது பற்றி அக்கறை கொண்டிருக்கின்றோம். இவை சந்தர்ப்பவாத செயல்களோ, அல்லது திட்டவட்டமான செயல்களோ எதுவானாலும் இவ்வாறான குற்றச் செயல்களால் பொதுமக்கள் அச்சுறுத்தல்களுக்கு ஆளாகியுள்ளனர் என்பதே உண்மை. தேசிய சமாதானப் பேரவை அரசியல் தீர்வினை வற்புறுத்தி வரும் சமகாலத்தில் இலங்கை சமூகம் சமாதானமான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முறையில் கூடி, வாழுவதற்கு சனநாயக சட்ட வழியிலான ஆட்சியே மிக முக்கியமானது என்பதனையும் நம்புகிறது.

இப்போது முரண்பாட்டு வலயத்தில் இடம்பெற்று வரும் யுத்தத்தில் பொதுமக்கள் சிக்கிக் கொண்டுள்ளனர். அனைத்து தரப்பினரிடையேயும் பாதிப்புக்கள் ஏற்படுகின்றன என்பதனையும் யுத்தத்தின் சிக்கலான இயல்புகள் பற்றியும் தேசிய சமாதானப் பேரவை அறிந்து கொண்டுள்ளது.

இருந்த போதிலும் இந்த யுத்தத்தில் தொடர்பு கொண்டவர்களது சனநாயக உரிமைகளையும் சுதந்திரங்களையும் பாதுகாக்குமாறு நாம் கோரி வருகின்றோம். சனநாதிபதியினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த அனைத்து கட்சிகள் மகாநாட்டில் பிரேரிக்கப்பட்டவற்றினை வழி காட்டலாகக் கொண்டு அவற்றினை ஒத்த வகையிலான அரசியல் தீர்வினை எட்டுவதற்கு விரைவாக செயற்படுவதன் மூலமே நாட்டில் இப்போது நிலவும் முரண்பாடுகளுக்கு நிலை மாற்றத்தினைக் கொண்டு வரலாம் என தேசிய சமாதானப் பேரவை நம்புகிறது.

இவற்றோடு அந்த தீர்வு மேலும் விஸ்தரிக்கப்பட்டு சனநாயக எதிரணியினரான ஐ.தே.க., த.தே.கூ., ம.வி.மு. ஆகியவர்களையும் இணைத்துக் கொண்டால் தான் நாட்டின் அனைத்து அரசியல் சக்திகளையும் அடக்குமுறைக்கு உட்படுத்தாது சுதந்திரமாக கலந்துரையாடும் சூழ்நிலைக்கு கொண்டு செல்ல முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிக்கை- 34

# இலங்கையில் இடம்பெறும் முரண்பாடுகளுக்கு சமாதான முறையிலும் ஒழுங்குக்குட்பட்ட வகையிலும் முடிவினை கொண்டு வருவதற்கான சர்வதேச ஈடுபாட்டின் முக்கியத்துவம்

17-04-2009

கவலை தரும் வகையிலான சம்பவங்கள் இடம்பெறும் இக்காலகட்டத்தில் இலங்கை அரசாங்கம் நோர்வேஜியன் அரசாங்கத்திடம் தற்போதைய நிலைமைகள் தொடர்பாக எதுவித பங்கும் அந்நாட்டினால் அளிக்க வேண்டிய தேவை இல்லை என தான் நினைப்பதாக அறிவித்துள்ளது. நோர்வேயின் ஒஸ்லோ நகரில் உள்ள இலங்கை தூதரகம் தாக்குதல் களுக்குள்ளாகிய போது போதிய போலிஸ் பாதுகாப்பு அந்நாட்டினால் தரப்படவில்லை என்பதன் காரணமாகவே இரு நாடுகளுக்குமிடை யிலான உறவுகளில் பிளவு ஏற்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

இச்சம்பவம் இடம்பெறுவதற்கு சில நாட்களுக்கு முன்னர் இலங்கையின் வடபகுதியில் நிலவும் மனித உரிமைகள் தொடர்பான நெருக்கடிகள் பற்றி ஆவன செய்வதற்காக ஐக்கிய நாடுகள் சபைக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையே பேச்சுவார்த்தைக்கான வசதிகளை ஏற்பாடு செய்தமை தொடர்பாக இலங்கை அரசாங்கம் நோர்வேஜியன் அரசாங்கம் மீது தனது மகிழ்ச்சியின்மையினை தெரிவித்திருந்தது. இவ்வாறு அரசாங்கம், நோர்வே நாடு இப்போது 'வசதிகளையளிக்கும் நாடாக' செயற்படுவதனை இல்லாது செய்ய செய்துள்ள தீர்மானம் காரணமாக தற்போது இடம்பெறும் மனிதாபிமான நெருக்கடிகளில் நிலைமாற்றத்தை ஏற்படுத்த தமிழீழ விடுதலைப் புலிகளையும் ஈடுபடுத்தி பேச்சுவார்த்தைகளை மேற்கொள்வதற்கான வாய்ப்புக்கள் தடைசெய்யப்பட்டு விடுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழீழ விடுதலைப் புலிகளை சரணடையச் செய்யுமாறு செய்யக் கூடிய பேச்சுவார்த்தைகளுக்கான அனைத்து வழிகளும் கூட இதனால் மூடப்பட்டும் விட்டன. தமிழீழ விடுதலைப் புலிகளை எதுவித நிபந்தனைகளுமற்ற முறையில் சரணாகதி அடையுமாறு கோரும் நிலைப்பாட்டில் அரசாங்கம் நிற்கின்றது. சனாதிபதி மகிந்த ராஜபக்ச சிங்கள, தமிழ் புத்தாண்டை கௌரவிக்கும் முகமாக 'சுடுவதில்லை' என தீர்மானம் செய்துள்ள காலகட்டத்தில் யுத்த வலயத்தில் சிக்கிக் கொண்ட பொதுமக்கள் அரசாங்க கட்டுப்பாட்டிற்குள் உள்ள பகுதி களுக்கு சென்று விட வாய்ப்பாக அமைந்துள்ள சந்தர்ப்பத்தில் துரதிஷ்ட வசமாக நிகழ்ந்துள்ள சம்பவங்கள் குறித்து தேசிய சமாதானப் பேரவை வருந்துகின்றது.

இருந்த போதிலும் அரசாங்கத்தின் ஒருதலைப்பட்சமான இத் தீர்மானம் சர்வதேச சமூகத்தினையும் தமிழ் மக்களையும் ஏமாற்றும் வித்தை என்று கூறும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் இதற்கு ஒத்த வகையில் நடந்து கொள்ளவில்லை. மாறாக, தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் பொதுமக்கள் யுத்தகளத்தை விட்டு வெளியேறுவ தனை தடுத்து நிறுத்தி வருவதாகத் தெரிகிறது. பொதுமக்கள் வெளியேறு வதற்கான மனிதாபிமான இடைவெளி (Humanitarian Corridor) சர்வதேச சமூகத்தின் பங்கேற்புடன் உருவாக்கப்பட்டிருக்குமானால் பொதுமக்களும் உத்தரவாதத்தினை பெற்று கூடியளவில் இடம்பெயர்ந் திருக்க முடியும்.

கடந்த ஒரு தசாப்தமாக நோர்வேஜியன் 'வசதியளிக்கும்' தரப்பின் பிரதான நோக்கமாக இருந்த வடக்கின் யுத்தமானது மனிதாபிமான முறையுடன் முடிவுற வேண்டும் என்ற எண்ணத்தினை விரும்பாத சக்திகளது நடவடிக்கைகளின் பிரதிபலிப்பே தற்போதைய குழப்ப நிலையாகும்.

யுத்த களத்தில் ஏற்படக்கூடிய இராணுவ வெற்றி மாத்திரம் இறுதியில் சமாதானத்தினையும் அபிவிருத்தியினையும் கொண்டு வரக்கூடியது என்னும் நம்பிக்கை தேசிய சமாதானப் பேரவைக்கு இல்லை. மறுபுறத்தில் இராணுவ வெற்றி பெருமளவு இரத்தம் சிந்தலுடன்தான் ஏற்படுமானால் அது (அதுவே உண்மையாகவும் இருக்கும்) பரம்பரை பரம்பரையாக தொடரப்போகும் வடுக்களையும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெறுப்பினையும் ஏற்படுத்திச் செல்ல முடியும் என்பதும் நிச்சயம். யூதர்களின் ஒரு பிரிவினரது 'மசாடா' தற்கொலை அவர்களது தேசியத்தை ஆயிரம் வருடங்கள் வரை தக்கவைத்துள்ளது.

இதனை ஒத்த நிலை இங்கும் ஏற்பட்டு தமிழ் தேசியத்துவம் தொடர்பாக தமிழீழ விடுதலைப் புலிகள் இறுதிவரை போரிட நிர்ப் பந்திக்கப்படுமானாலும் உதவி ஏதுமற்ற தமிழ் பொதுமக்களது உயிர்கள் அதனால் இழக்கப்படுமேயானாலும் வஞ்சினம் தொடர்வதற்கான வாய்ப்புக்கள் பெருமளவினதாகயிருக்கும். தமிழ் நாட்டிலும் தமிழ் தேசியத்துவத்தின் உணர்வுகளுக்கு மேலும் தூபமிடப்பட்டு எதிர்வுகூற முடியாத விளைவுகளுக்கு வழி வகுக்கலாம். இது ஐக்கியப்பட்ட இலங்கையின் எதிர்காலத்திற்கு பெரும் மந்தமான சூழலையே உருவாக்கும் எனவும் அஞ்சுகிறோம்.

தமிழீழ விடுதலைப் புலிகளை நிபந்தனையின்றி சரணாகதியடையக் கோரும் அரசாங்கத்தின் நிபந்தனையை அது மறுபரிசீலனை செய்து சர்வதேச வசதியளிக்கும் சமூகங்களின் மூலம் பேச்சுவார்தைகளை மேற்கொண்டு தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தினரையும் அவர்களின் தலைவர்களையும் கௌரவமாக வெளியேற அரசாங்கம் வழிவகுக்கும் என தேசிய சமாதானப் பேரவை நம்புகின்றது.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கமும் சர்வதேச சமூகத்தின் வேண்டுகோள்களை ஏற்று பொதுமக்களை அவர்கள் சிக்கியுள்ள யுத்தகள பிரதேசங்களிலிருந்து பாதுகாப்பான பகுதிகளுக்கு இடம்பெயர அனுமதிக்க வேண்டும். சனாதிபதி மகிந்த ராஜபக்ச புதுவருடத்தின் போது பொதுமக்களது தேவைகளின் நிமித்தம் வழங்க முன்வரும் சலுகையானது எதிர்காலத்தில் நாட்டில் சமாதானத்துடனும் கௌரவத் துடனும் நல்லிணக்கம் கட்டியெழுப்பப்பட வேண்டும் என்ற எண்ணத் துடனாக இருத்தல் அவசியமாகும். இந்நிலையில் சர்வதேச ஆதர வுடனான வகையில் முரண்பாடுகளை சமாதானத்துடனும், ஒழுங்கு முறையுடனுமான வகையில் முடிவுக்கு கொண்டு வருவதற்கான முயற்சிகளே இப்போது தேவைப்படுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முரண்பாடு நிலவும் வலயங்களில் கண்காணிப்பு இருந்தால் மனிதாபிமானத்திற்கான மாற்றங்கள் ஏற்படுவது ஊக்குவிக்கப்படும்

18-03-2009

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகளுக்கான ஆணையாளர் நவநீதம்பிள்ளை அம்மையார் சுமத்தியுள்ள குற்றச்சாட்டுக்கள் இலங் கையின் முரண்பாடுகளின் இயக்கப்பண்புகள் பற்றிய வருந்தத்தக்க நினைவுறுத்தலாகும். இலங்கை இராணுவமும் தமிழீழ விடுதலைப் புலிகளும் மேற்கொண்டுள்ள சில நடவடிக்கைகள் சர்வதேச மனித உரிமைகள் மற்றும் மனிதாபிமான சட்டத்தினை மீறுவனவாக உள்ளதாக விரக்தியுடன் தனது கருத்தை அறிவித்துள்ளார்.

பலவந்தமாக படைக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் ஆட்சேர்ப்ப தாகவும், இலங்கை அரசாங்கம் கண்மூடித்தனமாகவும், அளவுப் பொருத்தம் இல்லாத வகையிலும் போர்த்திறன் நடவடிக்கைகளை மேற்கொள்வதாகவும் வந்துள்ள குற்றச்சாட்டுக்கள் மாற்றங்கள் ஏற்படுவது தொடர்பாக அச்சுறுத்தல்களை ஏற்படுவது மட்டுமன்றி, புதிய ஒரு குழப்ப நிலைமைகளுக்கும் வழிவகுத்துள்ளது.

அண்மையில் ஐ.நா. பணியாளர் ஒருவரையும் அவரது குடும் பத்தில் இருக்கும் 16 வயது பெண் ஒருவர் உட்பட்ட சில அங்கத்தவர் களையும் புலிகள் இயக்கம் பலவந்தமாக படைக்கு ஆட்சேர்ப்பது பற்றி தகவல்கள் வெளிவந்துள்ளன. உயர் ஸ்தானிகர் புலிகளுடைய கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் அப்பாவிப் பொதுமக்கள் புலிகளால் கொடுமையாகவும் மனிதாபிமானமற்ற முறையிலும் நடத்தப்படுவதாக வெளியிட்ட குற்றச்சாட்டு வெளிவந்த ஒரு சில நாட்களுக்குள் மீண்டும் இவ்வாறான புதிய குற்றச்சாட்டுக்கள் வெளிப்படுத்தப்பட்டுள்ளமை முரண்பாட்டின் நச்சுக் தன்மையினையே எடுத்துக் காட்டுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்காலப்பகுதியில் கணிசமான அளவிலான சிறுவர்கள் உட்பட பொதுமக்கள் பலவந்தமாகப் படைக்கு சேர்த்துக் கொள்ளப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது. அவ்வாறு பலவந்தமாகத் தமது படைக்கு சேர்த்துக் கொள்ளப்பட்டவர்களை விடுவிக்குமாறு புலிகள் இயக்கத் தினரை நாம் கேட்டுக் கொள்கிறோம். இதற்கு சமாந்தரமாக அரசாங் கமும் தொடர்ந்தும் அது பின்பற்றும் அண்மைக்கால இராணுவ நட வடிக்கைகள் பற்றியும் விமர்சனங்கள் கிடைக்கப்பெற்று வருகிறோம். பொதுமக்கள் சிக்கிக் கொண்டுள்ளப் பகுதிகளில் கனரக ஆயுதங்களைக் கொண்டு தாக்குவது தொடர்பாக நாம் கரிசனமும் கவலையுமடைகிறோம்.

தமது விருப்பத்திற்கு மாறாக சிக்கிக்கொண்டவர்கள் பன்முனைச் சுடலில் (Cross Fire) சிக்கிக் கொள்ளும் இடருண்டு. அப்பாவி மக்கள் பணயக் கைதியாக வைத்திருக்கப்படுவதாக கூறப்படுவது ஏற்றுக் கொள்ளப்படுமானால், அவர்களை பாதுகாத்து சுதந்திரமடையச் செய்பவர்களும் அவர்களை காப்பாற்றும் செய்முறையின்போது அவ்வாறாக சிக்கிக்கொண்டவர்கள் அடையும் துயரங்களை இயன்றளவு குறைந்தபட்சமாக்கும் வகையிலான முறையில் தமது நடவடிக்கை களை மேற்கொள்ளுதலும் வேண்டும்.

எவரொருவரும் அவருடைய விருப்பத்திற்கு எதிராக ஆயுதங்களை வைத்திருக்க நிர்பந்திக்கப்பட்டிருந்தால் அவர்களை சரணாகதி அடைய வாய்ப்புக்களை வழங்க வேண்டுமே ஒழிய, சண்டையிட்டுக் கொன்று விட முயற்சிக்கக்கூடாது. உலகின் பார்வை இலங்கையில் இடம்பெறும் இராணுவ நடவடிக்கைகள் மீதும் மனிதாபிமான நெருக்கடிகள் மீதும் குவியம் பெற்றுள்ளது. இந்நிலையில் ஐ.நா. சபையின் குற்றச்சாட் டுகள் பாரதூரமானவையாக இருப்பதால் அவற்றை அலட்சியம் செய்யவோ துச்சமாக மதிக்கவோ கூடாது.

சுதந்திர ஊடகத்தினரும் உதவிப் பணிகளில் ஈடுபட்டுள்ளோரும் மட்டுமே வரையறைகளுக்குட்பட்ட முரண்பாட்டு வலையதத்திற்குள் செல்ல அனுமதிக்கப்பட்டிருப்பதால் அங்கே இடம்பெறுவன தொடர் பாக வினா எழுப்புவதற்கு அப்பாற்பட்டதாக சுதந்திரமான முறையில் மூல ஆதாரங்களை பெறுதல் கடினமாக உள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையின் ஆணையாளர் சுமத்தியுள்ள குற்றச் சாட்டுக்களையும் பாதிக்கப்பட்டவர்களது எண்ணிக்கையினையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசாங்கம் மறுத்துள்ளது. அரசாங்க கட்டுப்பாட்டு பகுதிகள் நோக்கி இடம்பெயரும் பொதுமக்களை பரிசோதிப்பது மற்றும் முகாம்களில் இருக்க வைப்பது போன்ற அவர்களது நலன்கள் தொடர்பாக, அக்கறையான கரிசனங்கள் காட்டப்படுகின்றன. இருந்த போதிலும், அனைத்து தரப்பினரதும் நம்பிக்கைக்குப் பாத்திரமான ஒரு சாராரால் முரண்பாட்டு வலையத்தில் இடம்பெறுபவை பற்றி கண்காணிக்க வழி ஏற்பட்டால், வெளியுலகத்தினால் ஏற்றுக்கொள்ளக்கூடிய தகவல் களை அதனால் வழங்க முடியும்.

அவ்வாறாக சர்வதேச, உள்ளூர் பங்கேற்புடனான கண்காணிப்பும் பிரசன்னமும் ஏற்படுமனால் அதனால் முரண்பட்டுக் கொண்டிருக்கும் தரப்பினருக்கும் சர்வதேச தரங்களுக்குட்பட்ட வகையில் மனிதாபிமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வலிமையான ஊக்குவிப்பு ஏற்பட முடியும் என தேசிய சமாதானப் பேரவை நம்புகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறுங்கால இலாபங்களுக்காக நீண்டகால ஸ்திரத்தினை இழந்து விடலாகாது

25-02-2009

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் இலங்கை அரசாங்கத்துடன் அரசியல் பேச்சுவார்த்தைகளை நடத்த வழிசெய்யும் வகையில் ஒரு போர் நிறுத்தத்தினை மேற்கொள்வது தொடர்பாக சர்வதேச சமூகத்தினது ஆதரவினைக் கோரியுள்ளது. அதன் மூலம் மனித உயிர்களை பாதுகாக்க வழிசெய்ய முடியும் என்றும் அவர்கள் கூறியுள்ளனர். இலங்கை அரசாங்கம் தமிழீழ விடுதலைப் புலிகளிடம் எஞ்சியுள்ள கடைசி ஆட்சிப்பரப்பினையும் கைப்பற்றும் நிலைமையில் உள்ளபோதே இந்த போர்நிறுத்தக் கோரிக்கை வந்துள்ளது. தமிழீழ விடுதலைப் புலிகள் நிபந்தனையற்ற வகையில் சரணாகதி அடையாத பட்சத்தில் யுத்த நிறுத்தத்தினை ஏற்றுக்கொள்வதில்லை என அரசாங்கம் மறுத்து விட்டது. அதே வேளையில் வன்னியில் இராணுவ நடவடிக்கைகள் தொடர்கின்றன. வெளிப்பகுதிகளில் கெரில்லா தாக்குதல்களும் தொடர்கின்றன. இத்தாக்குதல்கள் பொதுமக்களை இலக்காக வைத்து செய்யப்படுவதால் தேசிய சமாதானப் பேரவை தயக்கம் ஏதுமின்றி அதனைக் கண்டிக்கின்றது.

தொடர்ந்தும் யுத்தத்தை செய்து கொண்டிருப்பதனைவிட யுத்த நிறுத்தமே மனிதாபிமானப் பார்வையில் சிறந்ததாகும். யுத்த நிறுத்தத்தால் உயிர்கள் பாதுகாக்கப்படுவதுடன் கசப்பு தரும் மனிதத் துயரங்களும் தவிர்க்கப்படலாம். தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலிருந்த ஆட்சிப்பரப்பு சுருங்கி வரும் நிலையில் ஆயிரக்கணக்கான பொதுமக்கள் அவற்றில் தொடர்ந்தும் சிக்கிக் கொண்டவராயுள்ளனர். ஐ.நா. சபையின் செயலாளர் நாயகம் பான் கீ மூன் அப்பாவி பொது மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு தப்பிச் செல்வதற்காக யுத்தத்தை நிறுத்தி வைக்குமாறு கோரியுள்ளார். இக்கோரிக்கை ஐரோப்பிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்றியத்தினாலும் ஏனைய நாடுகளினாலும் கூட விடுக்கப்பட்டுள்ளது. எனவே, அப்பாவி பொதுமக்களை யுத்த வலயத்திலிருந்து வெளி யேற்றும் நோக்கத்திற்காக யுத்த நிறுத்தத்தை தேசிய சமாதானப் பேரவை ஆதரிப்பதுடன் யுத்த வலையத்தில் சிக்கிக் கொண்ட பொது மக்களை அங்கிருந்து வெளியேற்றி சர்வதேச தரங்களிலான நலன்புரி நிலையங்களுக்கு அனுப்பிவைக்கும்படியும் கேட்டுக் கொள்கின்றது.

அரசியல் தீர்வுகளை நோக்கமாகக் கொண்டு அரசியல் பேச்சு வார்த்தைகள் ஏற்படுவதற்காக யுத்த நிறுத்தத்தை நீடிக்கவேண்டு மானால் தமிழீழ விடுதலைப் புலிகள் தமது ஆயுதங்களை கீழே வைக்க வேண்டும் என்றும் நாம் நம்புகிறோம். நம்பிக்கை ஏற்படுவதனை உறுதி செய்வதற்காக ஆயுதக்களைப்பினை சர்வதேச நிறுவனங்கள் இலங்கை அரசாங்கத்தின் ஒப்புதலுடன் கண்காணிக்கவும் ஏற்பாடு செய்யலாம். பொதுமக்களை வெளியேற்றுவதனை தொடர்ந்து அரசியல் தீர்வும், ஆயுதங்களை கீழே வைத்தலும் இடம்பெற வேண்டும் என தேசிய சமாதானப் பேரவை நம்புகிறது.

இவ்வாறான ஒரு செய்முறை அனைத்து சமூகங்களையும் சார்ந்த இலங்கை மக்களுக்கு எதிர்காலத்தில் சமாதானம் நல்லிணக்கம் என்பவற்றை சர்வதேச சமூகங்களின் ஆதரவுடன் பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்பினை அளிக்கும். தரப்பினரதும் கூட்டுறவுடனான பங்கேற்புடன் சிறந்த எதிர்காலத்திற்காக செயலாற்றுவதனையே நிலைத்து நிற்கக் கூடிய சமாதானம் வேண்டி நிற்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யுத்த களத்தைவிட்டு வெளியேறி வரும் பொதுமக்களது அச்சம் அகற்றப்படுதல் வேண்டும்

11-02-2009

தற்போது இலங்கையில் இடம்பெற்று வரும் இராணுவ முரண்பாட்டில் தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டின் கீழ் இன்னமும் இருந்து வரும் பொதுமக்கள் யுத்த வலயத்தில் இருப்பதால் எதிர்கொள்ளும் அவலங்களே பெரிதும் கொடுமையானவையாகும். இம்மக்கள் தொடர்ந்தும் இடம்பெயர்தலுக்கு ஆளாகியும் உணவு மற்றும் அத்தியாவசிய தேவைகளை பற்றாக்குறையாகவே பெற்று வருவதுடன் குண்டு வீச்சினால் பாதிக்கப்படும் அவலத்துடன் வாழ்வதுடன் அவ்விடங்களை விட்டு அகல முடியாதவாறு தமிழீழ விடுதலைப் புலிகளினால் தடுத்தும் வைக்கப்பட்டுள்ளனர்.

19 பொதுமக்கள் சுட்டும் கொல்லப்பட்டமையும் இன்னும் 70 பேர் காயப்படுத்தப்பட்டதும் அண்மையில் ஏற்பட்ட பெரும் கொடுமை யாகும். அதேவேளையில் தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப் பாட்டுக்கு வெளியே தற்கொலை குண்டு வெடிப்பு காரணமாக 10 பொதுமக்களும் இன்னும் பெருமளவிலானோரும் காயப்பட்டதோடு 20 இலங்கை இராணுவத்தினரும் கொல்லப்பட்டுள்ளனர்.

இவ்வாறான கொடிய செயல்களை தேசிய சமாதானப் பேரவை கண்டிப்பதுடன், சர்வதேச சட்டங்களுக்கு உட்பட்டவகையில் மக்கள் அவர்கள் விரும்பும் இடங்களுக்கு வெளியேறுவதனை அனுமதிக்கு மாறும் தமிழீழ விடுதலைப் புலிகளை கேட்டுக் கொள்கின்றது.

பொதுமக்கள் யுத்தப்பகுதிகளை விட்டு கடந்து வந்ததும் இலங்கை இராணுவத்தினரால் அவர்கள் வகைப்படுத்தியும் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டும் வருவதாக தெரிய வந்துள்ளது. அண்மையில் ஏற்பட்டுள்ள தற்கொலை குண்டுதாக்குதலில் இருந்து தமிழீழ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடுதலைப் புலிகளின் அங்கத்தவர்கள் பொது மக்களுடன் ஊடுறுவ முயற்சிப்பதாகவும் தெரியவந்துள்ளது. இத்தகைய நிலைமையில் சிலரை தடுத்து வைக்க வேண்டிய தேவை உண்டு என்பதனை ஏற்றுக்கொள்ளும் அதேவேளையில், அவ்வாறான தடுத்து வைத்தல் என்பதனை சர்வதேச சட்டங்களுக்கு உட்பட்ட வகையில் சந்தேகங்கள் ஏற்படாதவாறு நீதியாக செய்தல் அவசியமாகும் என்றும் நாம் நம்பு கிறோம்.

சிலரது குடும்ப அங்கத்தவர்கள் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தில் இணைந்திருப்பதால் பல பொதுமக்கள் அப்பகுதிகளை விட்டு வெளியே வரத் தயக்கம் காட்டுகின்றனர். வேறு சிலர் பொது மக்களாக இருந்தாலும் புலிகள் இயக்கத்தினால் பயிற்றப்பட்டுள்ளனர். தற்போது முரண்பாட்டு வலயங்களில் நிலைகொண்டு சர்வதேச செஞ்சிலுவை சங்க குழு மட்டுமே செயற்பட அனுமதிக்கப்பட்டுள்ள சர்வதேச நிறுவனமாகும்.

எனவே, அந்த நிறுவனம் அல்லது வேறு ஏதேனும் சுதந்திரமான முகவர் நிறுவனம் மக்கள் யுத்தப் பகுதிகளை விட்டு கடந்து வரும் மையங்களில் பிரசன்னமாக இருந்து அவ்வாறு கடந்து வரும் பொதுமக்களுக்கு அச்சம் அகற்றும் வகையில் பாதுகாப்பு வழங்குதல் அவசியமாகிறது. அவ்வாறான ஒரு ஏற்பாட்டின் மூலம் அரசாங்கத்தின் மீதான நம்பகத்தன்மை அதிகரிப்பதுடன் அது பொதுமக்கள் பாதுகாப் புடன் இடம்பெயருவதற்கும் வசதியளிப்பதாக இருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போர் நடவடிக்கைகள் முற்றுப்பெற உத்தரவாதங்கள் தேவை

06-02-2009

டோக்கியோ நன்கொடை வழங்குபவர்கள் மகாநாடு 2003ஆம் ஆண்டு நடைபெற்றபோது இணை தலைமைத்துவங்களாக பங்கேற்ற நோர்வே, யப்பான், ஐக்கிய அமெரிக்கா, ஐரோப்பிய யூனியன் ஆகியவை அதில் உற்சாகமாக பங்கேற்று அரசாங்கத்துடனான போர் நடவடிக்கை களை ஒரு முடிவுக்கு கொண்டு வருவதற்கான வழிமுறைகள் பற்றி தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் பேச முற்பட்டன.

இது ஆயுதங்களை கீழே வைத்தல், வன்முறைகளை துறத்தல், பொது மன்னிப்பை ஏற்றுக்கொள்ளுதல் மற்றும் நியாயமானதும் நிலைபேரானதுமானதுமான அரசியல் தீர்வினை அடையும் செய்முறை யினை அடைதல் என்பனவற்றை உள்ளடக்கிய நடவடிக்கையாகும். நிலைவரத்தினை கண்டறிந்தும், உயிர்களை பாதுகாப்பது தொடர்பான கரிசனமும் காரணமாக அவர்கள் (தலைவர்கள்) தமது அறிக்கையை நியாயப்படுத்தினர்.

இருந்த போதிலும், அரசாங்க பேச்சாளர்கள் சண்டையில்லாத ஒரு காலகட்டத்தினைப் பற்றிய பேச்சுவார்த்தைகளுக்கு ஒத்துக் கொள்ளாததுடன், அப்படி ஓயும் பட்சத்தில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் தம்மை மீள ஆயுதங்களைப் பெற்று பலப்படுத்திக் கொண்டு தாக்குதலுக்கு முற்படுவர் என்றும் எனவே புலிகள் நிபந்தனை யற்ற வகையில் சரணாகதியடைய வேண்டும் என்றும் வற்புறுத்தினர்.

இணை தலைமைத்துவங்கள் தமது அறிக்கையில் அரசாங்கத் திடமும் தமிழீழ விடுதலைப் புலிகளிடமும் நோயுற்றவர்கள், காயமுற்ற வர்கள் ஆகியோரை யுத்தப்பகுதிகளில் இருந்து வெளியேற்றவும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுமக்களுக்கு உதவிகளை வழங்குவதற்குமாக தற்காலிக போர் நிறுத்தத்தினை மேற்கொள்ளுமாறு கோரிக்கை விடுத்தன.

அத்துடன் அவர்கள் இந்தியா, இலங்கை, ஐக்கிய நாடுகள் சபை ஆகியவற்றுடன் இணைந்து பணியாற்றி வடபகுதியில் உள்ளூரில் இடம்பெயர்ந்துள்ள மக்களை ஐ.நா. முகவர்களும், சர்வதேச செஞ்சிலுவைச் சங்கமும் மற்றும் மனிதாபிமான பணிகளுக்கான நிறுவனங்களும் முழுமையாக அணுகத்தக்கதான இடங்களில் உள்ள தற்காலிக முகாம்களுக்கு இடமாற்றவும், அவற்றில் இவ்வாறு தற்காலிக மாக இடம்பெயர்ந்தவர்களை சர்வதேச தரங்களில் கவனித்து அவர் களுடைய சொந்த வீடுகளில் இயன்றளவு விரைவாக குடியமர்த்தவும் உறுதி வழங்கினர்.

யுத்தம் கடுமையாக தொடர்ந்து செல்வதால் யுத்த வலயங்களில் சிக்கிக்கொண்ட பொதுமக்களை கவனத்திற்கொண்டு யுத்தங்களில் பேணவேண்டிய சர்வதேச சம்பிரதாயங்களை கௌரவிக்கும் வகையில் நடந்து கொள்ளுமாறு தேசிய சமாதானப் பேரவை இரு தரப்பினரிடமும் வேண்டுகோள் விடுப்பதுடன், பொதுமக்கள் காயமடைந்து சிகிச்சை பெறும் மருத்துவமனைகள் குண்டு வீச்சுக்களாவதனையும் வேதனை யுடன் அறிவிக்க விரும்புகிறது. இணை தலைமைத்துவங்களின் ஆலோசனைகளை பாதிப்புள்ள வகையில் செய்முறைப்படுத்த சர்வ தேச கண்காணிப்பும், அனுசரணையும் தேவைப்படுகின்றன.

ஆயுதங்களை கீழே வைப்பதானால் அது ஏனைய யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட நாடுகளில் எவ்வாறு அதற்கான செய்முறைகள் வெற்றி கரமாக இடம்பெற்றனவோ அவ்வாறான வகையிலேயே இலங்கை யிலும் அது செயற்படுத்தப்படுதல் வேண்டும். பொதுமக்களது வாழ்க்கை அனைத்து தரப்புகளினாலும் பாதுகாக்கப்படுவதற்கான உத்தரவாதம் தேவை. ஏற்கனவே பெருமளவான உயிர்கள் பலிகொள்ளப் பட்டதனை மறக்காது மேற்கூறியவற்றை உறுதி செய்ய நியாயமானது நீடித்து நிலைக்கக்கூடியதுமான அரசியல் தீர்வு உறுதி செய்யப்படுலும் அவசியமாகிறது.

சனாதிபதி மகிந்த ராஜபக்சவின் சுதந்திர தினச் செய்தியில் யுத்தத் தின் பின்னர் தமிழ் மக்களுக்கு சமத்துவமான அந்தஸ்து வழங்குவதனை உறுதிப்படுத்தும் அரசாங்க தீர்மானம் பற்றிக் கூறப்பட்டிருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தற்போது தமிழ் பொதுமக்களை பாதுகாக்கவும் அவர்களது வாழ்க்கையை பாதுகாக்கவும் மேற்கொள்ளப்படும் பொதுவான நவடிக்கைகள் மூலமே அவருடைய இந்த உத்தரவாதத்தின் மீதான நம்பகத்தன்மை அதிகரிக்க முடியும்.

இணைத் தலைமைத்துவங்களில் கோரிக்கை கவனத்தில் எடுக்கப்படாதவிடத்து இப்போதும் எதிர்காலத்திலும் தமிழ் பொதுமக்கள் கொடுக்கப்போகும் விலை அளவுக்கு அதிகமானதாகிவிடும் என அஞ்சுகிறோம். இலங்கையின் எதிர்கால சமாதானத்திற்கும் நல்லிணக்கத்திற்கும் நல்லெண்ணம் கொண்ட அனைவரும் தம்மை அர்ப்பணித்துக் கொள்ளவே விரும்புவார்கள்.

ஆனால், மேற்படி சாதகமற்ற நிலைமைகள் இவற்றிற்குப் பெரும் அழிவினை தருவதாக இருக்கும். இதுவரை சிந்தப்பட்டுள்ள பெருமளவு இரத்தத்தின் பின்னர் நாட்டில் சமாதானமும் சனநாயகமும் நிலவ வேண்டுமானால் நல்லெண்ணம் கொண்ட ஒவ்வொருவரது அர்ப்பணமும் தேவைப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் மீதான தடையும் சிக்கிக் கொண்ட பொதுமக்களும்

ஏறத்தாழ ஏழுவருடங்களுக்கு முன்னர் அப்போதைய அரசாங்கம் தமிழீழ விடுதலைப் புலிகள் மேற்கொள்வதற்காகவும் இயக்கத்துடன் அரசியல் பேச்சுவார்த்தைகளை நடத்தவும், சமாதான செயல்முறை களை மேற்கொள்வதற்காகவும் அந்த இயக்கத்தின் மீதிருந்த தடை யினை அகற்றியிருந்தது. அதனை இப்போதைய அரசாங்கம் மீண்டும் தடைசெய்துள்ளது. தமிழீழ விடுதலைப் புலிகள் தமது கட்டுப்பாட்டிற்குள் உள்ள பிரதேசத்திற்குள் பொதுமக்களை தடுத்து நிறுத்தி வைத்து வெளியேற அனுமதிக்காததனை காரணங்காட்டி அரசாங்கம் தான் எடுத்துள்ள தீர்மானத்தை சரியென நியாயப்படுத்திக் கூறியுள்ளது.

அரசாங்கம் யுத்தத்தில் புலிகள் தமது கட்டுப்பாட்டிற்குள் வைத்திருந் ததும் கேந்திர மற்றும் அடையாள முக்கியத்துவம் வாய்ந்ததுமான ஆட்சிப் பரப்புக்களை மீண்டும் கைப்பற்றியதனை அடுத்து இந்த தடை நடைமுறைக்கு கொண்டுவரப்பட்டுள்ளது. தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டின் கீழ் இருக்கும் ஆட்சிப் பிரதேசத்தில் சிக்கிக் கொண்ட பொதுமக்களது துயரங்கள் அதிகரித்தவண்ணம் உள்ளன. தமிழீழ விடுதலைப் புலிகளை இலங்கை இராணுவம் நெருங்கி வருவதுடன் பொதுமக்களது உயிரிழப்புக்களும் அதிகரித்து வருவதாக அறிக்கைகள் வெளிவருகின்றன.

எவ்வாறாயினும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தை தடை செய்யும் அரசாங்கத்தின் தீர்மானத்தினால் பொதுமக்கள் கூடியளவு பாதுகாப்பான இடங்களை நோக்கி இடம்பெயர வசதியாக அவ்வியக்கம் மனிதாபிமான இடைவெளி ஒன்றினை உருவாக்கத் தூண்டப்படும் என்பதும் நிச்சயமற்றதாகும். எனவே, தமிழீழ விடுதலைப் புலிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயக்கத்தை தனிமைப்படுத்துவது என்பது பயனளிக்கக்கூடியது என நாம் நம்பவில்லை. எனவே அரசாங்கம் புலிகள் இயக்கத்துடன் அரசியல் ரீதியாக செயற்படுவதன் மூலமே சிக்கிக்கொண்ட பொது மக்களுக்கு சிறந்த சேவையினை ஆற்ற முடியும் என்பதனையும், அவ்வியக்கத்தினை முற்றாகத் தடைசெய்து ஒதுக்கிவிடுவதனால் அது முடியாது போகலாம் என்றும் தேசிய சமாதானப் பேரவை நம்புகிறது.

யுத்தப் பிரதேசத்தில் சிக்கிக் கொண்ட பொதுமக்களின் நன்மை கருதி மனிதாபிமான இடைவெளியினை அமைக்கப் பேச்சுவார்த்தைகள் மூலமாக தலையிடத்தயாராக இருப்பதாக நாட்டில் உள்ள சமயத் தலைவர்கள் பல தடவைகள் முன்வந்திருக்கின்றனர். பொது மக்களை காப்பாற்ற இந்த வழிமுறைபற்றி ஆராயும்படி அரசாங்கத்திடம் தேசிய சமாதானப் பேரவை வேண்டிக் கொள்கின்றது. அத்துடன் யுத்தப் பிரதேசங்களிலிருந்து பொதுமக்கள் வெளியேறத் தேவையான மனிதாபிமான இடைவெளியினை உருவாக்குவது தொடர்பாக பேச்சு வார்த்தைகள் நடாத்த அரசாங்கம் சர்வதேச நாடுகளின் உதவிகளை நாடும்படியும் வேண்டுகிறோம்.

தமிழீழ விடுதலைப் புலிகளுடைய சுருங்கிவரும் ஆட்சிப் பரப்பிற்குள் சிக்கியுள்ள பொதுமக்களுக்கு ஆதரவு வழங்க அரசு சாரா நிறுவனங்களுக்கும் மற்றும் சிவில் சமூக குழுக்களுக்கும் அனுமதி வழங்குமாறும் அரசாங்கத்திடம் கேட்டுக் கொள்கின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## லசந்த விக்ரமதுங்கவின் படுகொலை

09-01-2009

எம்.ரி.வி.தொலைக்காட்சி நிலையத்தினை ஆயுதந் தாங்கிய கும்பல் ஒன்று குண்டு எறிந்து முற்றாக அழித்து மூன்று நாட்களுக்குள் இலங்கையின் முன்னணி பத்திரிகையாளர்களில் ஒருவரான லசந்த விக்கிரமதுங்கவின் உயிர், ஆயுதம் தரித்த படுகொலையாளர்களால் பறிக்கப்பட்டுள்ளது. மிகுந்த துணிச்சலுடன் செயற்படுபவரான லசந்தவின் படுகொலையும், ஏற்கனவே பெருமளவில் ஏற்பட்டுள்ள தாக்குதல்களும் கூடிய அளவிலான ஊடகவியலாளர்கள் கொல்லப் பட்டுள்ளமையும் காரணமாக ஊடகங்களை அச்சுறுத்தல்களுக்கு ஆளாக்கியுள்ளமை நிலைமை மேலும் மோசமடைந்துள்ளது.

சன்டே லீடரின் பத்திரிகையாசிரியர் லசந்த விக்கரமதுங்க அரசாங் கத்தின் அரசியல் பலவீனங்களையும் ஊழல்களையும் அச்சமின்றி வெளிக்கொணர்பவர். அத்தோடு சமூகத்தின் பலவீனங்களையும் அதில் நிலவும் ஊழல்களையும் வெளிக்கொண்டுவருவதுடன் குற்ற மிழைத்தவர்கள் தண்டிக்கப்படாது பாதுகாக்கப்படுவது பற்றியும் விமர்சிப்பவர்.

அவர் பேச்சுவார்த்தை மூலமான அரசியல் தீர்வினை ஏற்படுத்தி இன முரண்பாடுகள் தீர்க்கப்பட வேண்டும் என்பதனை ஆதரிப்பவ ராகவும் அரசாங்கம் மேற்கொள்ளும் யுத்தம் தொடர்பான செலவினங்கள் பற்றியும் எடுத்துக்கூறி வந்தார். தனிப்பட்ட ஒருவராயிருந்த போதிலும் அவரே 'ஊடக நிறுவனத்தினையும்' உருவாக்கி தலைமையும் தாங்கி வந்தவர். அவரின் படுகொலை ஊடக சுதந்திரத்திற்கும் அவர் செய்து வந்த பணிகளுக்கும் சாவுமணி அடித்ததாகவே கொள்ளப்பட வேண்டும்.

ஊடகங்களே அரசியலில் அடிப்படை அறிவினைக் கொண்ட சமூகத்தை உருவாக்குவதில் ஊடகங்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவற்றின் மூலமாகவே சனநாயகத்தை பாதுகாக்க முடியும் என்னும் வகையில் ஊடகங்கள் பங்காற்ற முடியும் என நம்புபவர்கள் லசந்த விக்ரமதுங்கவை நெடுங்காலம் நினைவுகூரிவருவர்.

அவருடைய படுகொலையை தேசிய சமாதானப் பேரவை கண்டிப் பதுடன் அவருடைய இழப்பு குறித்து துக்கம் அனுஷ்டிக்கின்றது. அவருடைய குடும்பம், சகோதரர்கள், நண்பர்கள் அனைவரும் அடைந் துள்ள சோகத்தினை நாமும் பகிர்ந்து கொள்வதுடன் அவரை பலி கொண்ட இச்சம்பவத்துடன் இந்நாட்டில் நிலவிவருவதும் எம்மை தாண்டி அச்சுறுத்தி வருவதுமான குற்றமிழைத்துவிட்டு தண்டனையி லிருந்து தப்பித்துக் கொள்ளும் கலாசாரத்திற்கு ஒரு முடிவு வரும் என்றும் நம்புகின்றோம்.

இன்றைய சூழ்நிலையில் நல்லாயர் நிமோல்லர் கூறுவதைப் போன்று அடுத்தது யார்? என்றே சிந்திக்கும் இயல்புடைய மக்கள் சிந்திக்கத் தலைப்படுவர். இப்போது எதுவித உதவியுமற்ற நிலையில் அரசாங்கத்திடமும் எமது அரசியல் தலைவர்களிடமுமே சனநாயகத் தினை பின்பற்றவும், சரியானவற்றைச் செய்யவும், கருத்துச் சுதந்திரம், ஊடக சுதந்திரம், அனைவருக்குமான வாழும் உரிமை என்பனவற்றை பாதுகாக்கும்படி விண்ணப்பிக்க வேண்டியுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாராளுமன்ற ஆய்வுக் குழுவின் இடைக்கால அறிக்கை பற்றிய எமது கருத்து

23-12-2008

இலங்கையில் அரசு சாரா நிறுவனங்களது நடவடிக்கைகள் மற்றும் அவற்றின் நடவடிக்கைகளினால் ஏற்பட்டுள்ள தாக்கங்கள் பற்றி புலனாய்வு செய்வதற்காக நியமிக்கப்பட்ட பாராளுமன்ற சிறப்புக் குழுவின் இடைக்கால அறிக்கை ஊடகங்களினால் பரந்தளவில் பிரபல்யப்படுத்தப்பட்டுள்ளது. பாராளுமன்றக்குழு குறித்த வகை யிலான சில விமர்சனங்களை அரசு சாரா நிறுவனங்களது பங்கு, நிகழ்ச்சி நிரல் என்பன தொடர்பாக தேசிய சமாதானப் பேரவை உட்பட்ட பல நிறுவனங்கள் பற்றி அவ்வறிக்கையில் கூறியுள்ளது. தேசிய சமாதானப் பேரவையின் நோக்கங்கள், நடவடிக்கைகள் பற்றி சரியான முறையில் விபரங்கள் அந்த அறிக்கையில் உள்ளடக்கவில்லை என்பதன் காரணமாக நாம் விசனப்படுகின்றோம்.

'தேசிய சமாதானப் பேரவையும் ஓர் அரசு சாரா நிறுவனம் என்றும் அது சமஷ்டி முறைக்காக பிரசாரம் செய்வதற்காக செயற்படு வதாகவும் அவ்வறிக்கை கூறியுள்ளது. தேசிய சமாதானப் பேரவையின் ஏற்பாட்டாளர் ஒருவர் ஜெனிவாவில் ஓர் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டு பின்னர் நிகழ்ந்த கூட்டமொன்றில் உரையாற்றினார். அக் கூட்டத்தின் இறுதியில் தமிழீழ விடுதலைப் புலிகளை விடுதலை செய்யுமாறு பாட்டொன்றை பாடியுள்ளனர்.

'இந்நிறுவனம் (தேசிய சமாதானப் பேரவை) *இறைமையின் தேவை பற்றி வினா எழுப்பியுள்ளதுடன்*, இறைமை இரண்டாக அடுத்தடுத்து உள்ள நாடுகளில் பிரிந்து நிலவுதாகவும் கூறியுள்ளது. தேசிய சமாதானப் பேரவை இலங்கை மக்களை கருத்து மன மாற்றத் திற்கான போதனைகளில் பேர்ஹொப், (Berghof Foundation) நிறுவனத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தினை ஒத்தவகையில் ஈடுபட்டுள்ளது. அவர்கள் சமஷ்டியாட்சி தொடர்பாக பெரிதும் ஆர்வத்துடன் செயற்பட்டுள்ளனர்.'

தேசிய சமாதானப் பேரவை அதன் ஆரம்பகாலம் முதலாகவே கட்சி சார்பற்றும், சுதந்திரமாகவும் இயங்கி வந்தள்ளது. எனவே அது (தே.ச.பே) தமிழீழ விடுதலைப் புலிகளுக்கோ அல்லது வேறெந்த கட்சிக்கோ சார்பாக உள்ளதாக கூறப்படுவதனை மறுக்கின்றது. தேசிய சமாதானப் பேரவை இலங்கையை பிரிப்பதனையோ அதன் மூலம் அருகாமையில் அமைந்த இரண்டு நாடுகளின் தோற்றத்தையோ எப்போதுமே ஆதரித்ததில்லை.

இருந்த போதிலும் இன முரண்பாடுகளுக்கான ஓர் அரசியல் தீர்வினை, குறிப்பாக இனங்களிடையேயான அதிகாரப் பகிர்வு கொண்டதும் அதற்காக சமஷ்டி தீர்வினை ஒத்த ஒரு சார்பான மாற்று வழி குறித்து நாம் கருத்து கூறியுள்ளோம். இத்தகைய நிலைப்பாடு பல்வேறு காலங்களில் அரசாங்கத் தலைவர்களாலும் கூட முன்மொழியப் பட்டது. ஆயினும் அது முறையாக நடைமுறைப்படுத்தப்படவில்லை.

தேசிய சமாதானப் பேரவை சமாதான கல்வியூட்டல் நிகழ்ச்சி களை நடத்தி வருகின்றது. வரலாறு பற்றிய புரிந்துணர்வு, வேறான இனங்களிடையேயான கலாசார ஒற்றுமை, வேற்றுமைகள் பேச்சு வார்த்தை, நடுவராயிருந்து இணக்கத்திற்கு பணிபுரிதல், முரண்பாடுகளை முகாமைத்துவம் செய்தல் பற்றி புரிந்துணர்வு கொள்வதற்காகவும், இலங்கையின் இன முரண்பாடுகளை சர்வதேச பார்வையில் புரிந்து கொள்ள வசதியளிக்கும் வகையிலேயே செயற்படுகின்றது.

எனவே, பாராளுமன்ற ஆய்வுக்குழு தனது இறுதி அறிக்கையை தயாரிக்கும் போது தேசிய சமாதானப் பேரவைப் பற்றிய மதிப்பீட்டினை மீண்டும் ஆய்வுக்குட்படுத்துமாறும், அதன் மூலம் எமது நிறுவனம் பற்றிய நியாயமான மதிப்பீட்டினை செய்து எமது குறிக்கோள்கள், மக்களுடைய பங்கேற்புடன் இனமுரண்பாடுகள் தொடர்பாக சமாதான மானதும் நியாயமானதுமான தீர்வு ஏற்படுவதனை உறுதி செய்வ தற்கான பங்களிப்பு செய்வதுபற்றிய நோக்கங்களை சரியாக எடுத்து கூறும் எனவும் நம்புகிறோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மும்பாய் தாக்குதல் தொடர்பான முக்கியத்துவமிக்க எதிர்நடவடிக்கை

28-11-2008

மும்பாய் மீதான பயங்கரவாத தாக்குதலின் விளைவாக இதுவரை நூற்றுக்கணக்கான மக்கள் அங்கு கொல்லப்பட்டுள்ளமைக்காகவும் பல நூற்றுக்கணக்கானோர் காயமடைந்துள்ளமைக்காகவும் தேசிய சமாதானப் பேரவை தனது வன்மையான கண்டனங்களைத் தெரிவித்துக் கொள்கிறது. இத்தாக்குதலால் தமது அன்புக்குரியவர்களை இழந்த வர்களுக்கும் காயமடைந்து பாதிக்கப்பட்டவர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்கின்றோம்.

இவ்வாறான, தாக்குதல்கள் காரணமாகவும் அவற்றால் ஏற்பட்ட வேதனைகள், கோபம், அச்சம் காரணமாக அதனை செய்யக் காரண மாயிருந்தவர்கள் மீது இராணுவ ரீதியாக பழிவாங்க தூண்டப்படுவது யதார்த்தமாகும். இவ்வாறான மிலேச்சத்தனமான தாக்குதல்களால் ஏற்படும் துன்பங்கள் எதுவித அர்த்தமுமற்றதாக இருப்பதனைப் போன்றே, மனநோய் கொண்டவர்களைப் போன்று இத்தகைய தாக் குதல்களுக்கு அதே பாணியில் எதிர்த்தாக்குதல் செய்வதும் இலகு வானதாகும். ஆனால், இவ்வாறான வன்முறை கலந்த திடீர் தாக்கு தல்களின் பின்னணியில் உள்ள நிலைமைகள் பற்றிய விளக்கங்களைப் பற்றி அறிந்து விளங்கிக் கொள்ளுதல் அத்தியாவசியமானதாகும். இவ்வாறான பயங்கரவாதத் தாக்குதல்கள் அண்மைக்காலங்களில் ஒரு சீராகவும், செறிவான முறையிலும் இந்தியாவில் மாத்திரமன்றி முழு உலகிலுமே ஏற்பட்டு வருகின்றன. பயங்கரவாத செயல்களில் இருந்து இவ்வாறான துயரமிக்க சம்பவங்களுக்கான பொருத்தமான எதிர்நடவடிக்கை ஒன்றை கண்டறியாது விடாது போனால் எதிர்காலத்தில் மீண்டும் அவை தொடரலாம் என்றே தென்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தாக்குதல்கள் அனைத்திலுமே தற்போது நடைமுறையில் உள்ள செய்முறைகளையும் உறவுகளையும் தகர்ப்பதற்கான முயற்சியே பொதிந்துள்ளதாகத் தெரிகிறது. பயங்கரவாதத்திற்கு எதிரான எதிர் தீவிரவாத நடவடிக்கைள் அதனை (பயங்கரவாதத்தினை) தொடர வாய்ப்பளிப்பதாகவே இருக்கும். எவன் ஒருவன் கொல்லப்பட்டாலும், அவனே பயங்கரவாத நடவடிக்கைகளில் ஈடுபட்டவனானாலும் சரி உலகில் எங்கோ உள்ள குடும்பங்களில் அனுதாபப்படுவோர்களும் கோபம் அடைபவர்களும் இருப்பார்கள். இவ்வாறான துயரங்களும் கோபங்களுமே பயங்கரவாத இயக்கங்களை பலப்படுத்தும் வினையூக் கிகளாக உள்ளன.

இராணுவ எதிர் நடவடிக்கை பயங்கரவாதத்தை ஒரு முடிவுக்கு கொண்டுவரப்போவதில்லை என்பதனையும், அதனால் வன்முறைக் கான வட்டச் செயலே செறிவாவதுடன் மேலும் பயங்கரவாதிகள் உருவாக்கப்படுவார்கள் என்றும் தேசிய சமாதானப் பேரவை நம்புகிறது.

இந்தியா, இலங்கை மற்றும் பல்வேறு நாடுகள் உட்பட்ட உலக நாடுகள் முழுவதிலும் ஏற்பட்டுள்ள அனுபங்களில் இருந்து தீவிரவாத நடவடிக்கைகளுக்குப் பொறுப்பானவர்கள் ஏன் அவற்றில் ஈடுபடு கின்றனர் என்பது தொடர்பான காரணங்களை புலனாய்வு செய்து, அவர்கள் ஏன் பயங்கரவாத இயக்கங்களுடன் இணைந்துள்ளனர், தமது உயிரையே ஏன் பலிகொல்ல முன்வருகின்றனர் என்பதனையும் அறிந்து இவ்வாறான பயங்கரவாத நடவடிக்கைகளுக்கான ஆணிவேர் யாதென விளங்கி செயற்படுவதன் மூலமாக உலகெங்கும் வாழும் அப்பாவி பொதுமக்களது உயிர்களை எதிர்காலத்தில் பாதுகாக்க முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமாதான தலைவர்களது மனிதாபிமான முயற்சிகளை ஆதரிப்போம்

இலங்கையின் வடபகுதியில் இடம்பெற்று வரும் இராணுவ நடவடிக்கைகள் காரணமாக உள்ளூரில் இடம்பெயர்ந்த மக்கள், அவர்களது குடும்பங்கள் மற்றும் உள்ளூரில் வசிப்பவர்கள் யாவரையும் பெரும் அபாயத்திலும், இழப்புக்களுடனுமே தொடர்ந்தும் வாழச் செய்து வருகிறது.

அண்மையில் தேசிய சமாதானப் பேரவை இலங்கையின் சமய முக்கியத்துவம் வாய்ந்த அனுராதபுரம் நகரில், சமாதானத்திற்கான சமயங்களின் உலக மாநாடு என்னும் நிறுவனத்துடனும் இலங்கையில் இயங்கும் அதன் சக நிறுவனங்களுடனும் இணைந்து சமயங்களுக் கிடையேயான மாநாடு ஒன்றினை யுத்தப்பிரதேசத்தில் சிக்கிக் கொண்ட பொதுமக்களின் துயரங்களை நீக்க ஏற்றதாயுள்ள சமய ரீதியான முயற்சிகள் பற்றி கலந்துரையாட ஏற்பாடு செய்திருந்தது.

மாநாட்டில் கலந்து கொண்ட சமயத் தலைவர்கள் மாநாட்டு விவாதங்களின் போது பாதிக்கப்பட்ட பொதுமக்களது சோகமான நிலவரங்கள் பற்றி விபரித்ததோடு, பயங்கரவாதத்தை முடிவுக்கு கொண்டு வரவேண்டும் என்றும், இன்முரண்பாடுகளுக்கான ஆணி வேரை கண்டறிந்து அதற்கு ஏற்ற நியாயமான அரசியல் தீர்வினையும் கண்டறிய வேண்டும் என்றும் வாதித்தனர்.

அப்போது சமய வழிபாட்டு இடங்களில் ஏற்படும் தாக்குதல் சம்பவங்கள், அவற்றின் காரணமாக ஏற்படும் பதற்ற நிலைமைகள் தொடர்பான சமயங்களுக்கிடையேயான முரண்பாடுகள் பற்றியும் விவாதிக்கப்பட்டன. சமயத்தலைவர்கள் துன்பத்தில் உழலும் மனித இனத்திற்காக சமாதானத்தை ஏற்படுத்துவது தொடர்பாக தமது சமய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சம்பிரதாயங்கள் கொண்டுள்ள ஆர்வம், தாம் அதற்காக பின்பற்றும் ஒழுக்கப் பெறுமானங்கள், தமது அர்ப்பணிப்பு என்பன பற்றியும் எடுத்துக் கூறினார்கள்.

பொதுமக்கள் யுத்தப்பிரதேசத்திலிருந்து பாதுகாப்பாக வெளியேற அல்லது ஒதுங்கி வாழ தேவையான இடைவெளிகள் (Corridor) மற்றும் பாதுகாப்பு வலயங்களை உருவாக்க யுத்தத்தில் ஈடுபட்ட தரப் பினருடன் பேச்சுவார்த்தைகளை நடத்துவதற்கான மனிதாபிமான முயற்சிகளுக்கான வாய்ப்புக்களைப் பற்றி அறிந்து கொள்ளும் பொறுப்பினை சமயத்தலைவர்கள் ஏற்றுக்கொண்டனர்.

இது மாநாட்டினால் ஏற்பட்ட திட்டவட்டமான ஒரு நன்மையான விளைவாகும். சனாதிபதி, எதிரணித்தலைவர் மற்றும் சம்பந்தப்பட்ட அரசியல் தலைவர்கள், தமிழீழ விடுதலைப் புலிகள் ஆகியவர்களுடன் கூட்டங்களை நடத்தி, பேச்சுவார்த்தை நடத்தும் ஒரு திட்டத்தினையும் அவர்கள் பிரேரித்தனர்.

பல்சமயங்களின் முயற்சிகள் வாயிலாக மனிதாபிமான நெருக்கடி நிலைமைகள் தொடர்பாக எடுக்கப்படும் நடவடிக்கைகள் தொடர்பான மாற்றங்களுக்கும், எண்ணங்கள் தொடர்பான மாற்றங்களுக்கும் புதிய வாய்ப்புக்களை திறந்துவிடும் என்றும், அவையே சமயங்களினதும் ஆத்மீகத்தினதும் புலமாகும் (area) என்னும் அறிக்கை மாநாட்டினால் அங்கீகரித்து ஏற்றுக்கொள்ளப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனிதாபிமான நெருக்கடிகளின்போது சமயத் தலைவர்கள் தலையிட முன்வந்துள்ளனர்

23-11-2008

சமயங்களுக்கிடையேயான இலங்கை பேரவை அனுராதபுரத்தில் 'சமாதானத்திற்கான சமயங்கள்' என்னும் தலைப்பில் 23-11-2008ஆம் நாள் நடத்திய மாநாட்டில் கலந்துகொள்ள நாட்டின் வடக்கு, கிழக்கு தென் பகுதிகளிலிருந்து வருகை தந்திருந்த சிரேஷ்ட சமயத் தலைவர் களுடன் உலக சமயத் தலைவர்களும் இணைந்துக் கொண்டனர். சமாதானத்திற்கான சமயங்களின் உலக மாநாடு அமைப்பானது 'சமாதானத்திற்கான இலங்கை சமயங்கள்' மற்றும் 'தேசியசமாதானப் பேரவை' ஆகிய நிறுவனங்களுடன் பங்காளியாகக் கொண்டு மாநாட்டினை ஏற்பாடு செய்திருந்தது. 'இலங்கையின் சமாதானத் திற்கான சமயங்கள் சமயங்களுக்கிடையிலான பேரவை' இலங்கையில் உள்ள பல்வேறு சமயங்களையும் கூட்டாக கொண்ட ஒரே அமைப்பாகும்.

அதுவே நாட்டின் பல்சமய கருத்துக்களை பிரதிபலிக்கும் ஓர் அமைப்பு. அது இணக்கத்திற்கான வாய்ப்புக்களை அளிக்கவும், தீவிரவாத மனப்பான்மையினை ஒதுக்கிவிடவும், மக்களிடையே சார்பான சிந்தனைகளையும் சமூக ரீதியாக அதிகார நிலைமாற்றத்தினை ஏற்படுத்தக்கூடிய சமயங்களின்து நிலைமைகளையும் அவற்றின் ஒத்துழைப்பு என்பவைபற்றியும் போதிக்கும் திறமை கொண்ட ஓர் அமைப்புமாகும்.

'சமாதானத்திற்கான சமயங்களின் - சமயங்களுக்கிடையிலான இலங்கைப் பேரவை' அரசாங்கத்திற்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையே மனிதாபிமான இடைவெளிப் பகுதிகளையும், யுத்த நடவடிக்கைகளற்ற பகுதிகளையும் உருவாக்குவதற்கான பேச்சு வார்த்தைகளை நடத்தக் களமமைக்கத் தயாராயிருப்பதாக கருத்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறியுள்ளனர். அவ்வாறாக இடைவெளிகளையும், யுத்தமற்ற பிரதேசங் களையும் அமைத்து அவற்றை சர்வதேச நிறுவனங்களான ஐ.சி.ஆர்.சி. போன்றவற்றின் ஆதரவுடன் உள்நாட்டு சமய, சமூகங்களினால் பாதுகாத்தும் கண்காணித்தும் செயற்படுத்த முடியும்.

கோயில்கள், மசூதிகள் மற்றும் தேவாலயங்கள் ஆகியவற்றையும் அவற்றுக்கு இணையான வலைப்பின்னல் அமைப்புக்களையும் யுத்தமற்ற பகுதிகளில் இராணுவ நடவடிக்கைகளினால் பீடிக்கப்பட்ட உள்ளூரில் இடம்பெயர்ந்த மக்கள் அணுகக் கூடியவகையில் ஏற்பாடு செய்வதற்கு சமயத்தலைவர்கள் அர்ப்பணிப்புடன் செயற்படுவதாக ஏற்றுக்கொண்டனர். அத்துடன், சமாதானத்திற்கான சமயங்கள் - சமயங்களுக்கிடையேயான பேரவை தம்மை முறையாக அனைத்து கட்சிகள் மாநாட்டில் உத்தியோகபூர்வமான பார்வையாளராக கலந்து கொள்ள அங்கீகாரம் வழங்கும்படியும், அதன் மூலமாக தமிழீழ விடுதலைப் புலிகளுடன் மனிதாபிமான யுத்தமற்ற வலயங்களை ஸ்தாபிப்பதற்காக பேச்சுவார்த்தைகளில் ஈடுபட அனுமதிக்குமாறும் சனாதிபதியைக் கேட்டுக்கொண்டது.

கடுமையான மனிதாபிமான நெருக்கடிகளை இலங்கையின் வடக்கு வன்னிப் பிரதேசம் எதிர்நோக்குகின்றது. பாதுகாப்பு நிலை மைகள் தொடர்பான காரணங்களால் சர்வதேச மனிதாபிமானப் பணி யாளர்களும் வன்னியை விட்டு வெளியேறி விட்டனர். இவ்வாறான சூழ்நிலையில் யுத்த வலயங்களில் சிக்கிக் கொண்ட பொதுமக்களது நிலைமை தாங்க முடியாத துயர்மிக்கது என்பதனை அனைவராலும் விளங்கிக் கொள்ள முடியும். அவர்கள் யுத்தத்தினால் பாதிப்புக் குள்ளானவர்கள் என்ற பெரும் அச்சம் நிலவுகிறது. எனவே, யுத்த வலயங்களில் சிக்கிக் கொண்ட பொதுமக்கள் இப்போது மனித கேடயங்களாகிவிடாது பாதுகாக்கும் ஏற்பாடுகளை உறுதி செய்வது அத்தியாவசியமாகிறது. தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தில் போராகளிகளாக இருப்பவர்களது குடும்ப அங்கத்தவர்கள் புலிகளது கட்டுப்பாட்டுப் பகுதிகளிலேயே தாமாக விரும்பி இருக்க விரும்பலாம். ஆயினும் பொதுமக்கள் அப்பகுதிகளை விட்டு வெளியேறுவது புலிகளினால் தடைசெய்யப்படுவது பற்றிய தகவல்கள் கிடைக்கக் கூடியதாக உள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறான நிலைவரங்களில் சர்வதேச ரீதியாக அங்கீகரிக்கப் பட்ட மனித உரிமைகள் மற்றும் மனிதாபிமான சட்டங்களே அனுசரிக் கப்படுதல் வேண்டும். இடம்பெயர்ந்த மக்கள் முரண்பாடுகளுக்கு உட்பட்டுள்ள வலயங்களில் தான் தமது வீடுகளை கொண்டிருப் பார்களேயானால், அங்கு திரும்புவதற்கும் அல்லது நாட்டின் வேறெந்த பகுதியிலுமோ மீள அமர்த்தப்படுவதற்கான உரிமை உடையவர்கள். துரதிஷ்டவசமாக இலங்கையில் பெருமளவிலான இடம்பெயர்ந்த மக்களுக்குப் பல வருடங்களாக இவ்வாறான யதார்த்தங்கள் நிலவ வில்லை.

ஐ.நா. சபை மற்றும் மனிதாபிமான நிறுவனங்களுக்கும் சட்டங் களுக்கும் உட்பட்ட வகையில் மக்களது வாழ்க்கையை உறுதி செய்வது முக்கிய பணியாக உள்ளது. நிலைத்து நிற்கக்கூடிய வகையிலான சமாதானத்தையும் அதற்காக நாட்டின் அனைத்து பிரிவினைச் சார்ந்த மக்களிடையேயும் நல்லிணக்கத்தை ஏற்படுத்த விரும்பும் ஒரு சனநாயக அரசாங்கம், தனது மக்கள் தனது (அரசாங்கத்தின்) கட்டுப் பாட்டின் கீழ் வாழ்கின்றனரா அல்லது கிளர்ச்சியாளர்களின் கட்டுப் பாட்டின் கீழ் வாழ்கின்றனரா என்பதனை கவனத்திற் கொள்ளாது, அவர்களது (மக்களின்) வாழ்க்கையையும் பாதுகாப்பினையுமே முன்னுரிமைப்படுத்த வேண்டும்.

தற்போது கிளிநொச்சிப் பகுதியில் வாழும் பெரும்பாலான பொதுமக்கள் யுத்தத்தினால் பாதிக்கப்பட்டுவிடக்கூடாது என்பதற்காக தற்காலிகமாக வன்னியின் கிழக்குப் பகுதிகளுக்கு தப்பியோடியுள்ள தாகவும், அதனால் இதுவரை அவர்கள் வாழ்ந்த பகுதிகள் முற்றாக கைவிடப்பட்டுள்ளதாகவும் அறிக்கைகள் கூறுகின்றன. இருந்த போதும், இப்போதைய யுத்தத்தின் பின்னர், அது (யுத்தம்) முல்லைத்தீவு நோக்கி மேலும் கிழக்கு புறமாக அசைந்தாலும் கூட பிரச்சினைகள் மீண்டும் தோன்றுவதற்கான வாய்ப்புக்கள் உள்ளன என அஞ்சுகிறோம். அத் தகைய நிலையில் பொதுமக்கள் தப்பியோட எந்த இடமும் இல்லாத தாகிவிடும். இனிவரும் காலங்களில் இவ்வாறான சந்தர்ப்பத்திற்கு ஏற்றவகையில் சர்வதேச சட்டத்தின் வழியிலான நடவடிக்கைகளை மேற்கொள்ள ஏற்ற வழிவகைகள் பின்பற்றப்படுதல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடம்பெயர்ந்தவர்களுக்காகவும், வடக்கில் நடைபெறும் யுத்தத்தில் தாக்குப்பிடித்து வாழ வேண்டிய பொதுமக்கள் தொடர்பாகவும் சிவில் அமைப்பு நிறுவனங்கள் தமது கருத்துக்களுக்காக குரல் கொடுக்க வேண்டிய தருணம் இதுவென்றே நம்புகிறோம். யுத்த பிரதேசங்களில் சிக்கிக் கொண்டுள்ள மக்கள் அப்பகுதிகளை விட்டு வெளியேறத் தீர்மானிக்கும்போது அவர்கள் சுதந்திரமாக வெளியேறுவதற்காக சர்வதேச சட்டத்திற்கு உட்பட்ட வகையில் மனிதாபிமான இடைவெளிப் பகுதிகளை (Corridor) உருவாக்க வேண்டும் என சமயத் தலைவர்கள் என்ற வகையில் நாம் பரிந்துரை செய்கின்றோம்.

அத்தோடு சமயத் தலைவர்களாகிய நாம் அவ்வாறான மனிதாபிமான இடைவெளிப் பகுதிகளை அமைக்க தீர்மானிக்க வேண்டிய தரப்பினருடன் கலந்து பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டும், அவ்வாறாக மேற்கொள்ளப்படும் இருதரப்பினரது அங்கீகாரத்துடன் அமைக்கப்படும் இடைவெளியினை (Corridor) இடம் பெயர்ந்தவர்கள் பயன்படுத்தி தமது வீடுகளில் மீண்டும் குடியேறும் வரையில் பாதுகாப்பாக வாழ்ந்து வருவதனை கண்காணிக்கவும் நாம் தயாராக இருக்கின்றோம் என்பதனையும் அறிவித்துக் கொள்கின்றோம்.

அனைத்து சமூகங்களினாலும் ஏற்றுக்கொள்ளக்கூடிய அரசியல் தீர்வின் மூலமாக சமாதானத்தினை எய்துவதற்காகப் போராடுவதே இலங்கையின் முக்கிய இலக்காகும். எதிர்வரும் காலப்பகுதியில் ஏற்பட வேண்டிய சமாதானம் நோக்கியதான முன்னேற்றத்திற்காக சமயத்தின் அடிப்படையிலான சமூகங்கள் கொண்டுவர முயற்சிக்கும் 'மனப்பான்மை மாற்றம்' ஏற்படுதல் வேண்டும். பல்சமய முயற்சிகளின் பயனாக மனிதாபிமான நெருக்கடிகளை இனங்காணுவதற்காக செய்யப்படும் பிரேரணைகளினூடாக மாற்றங்களுக்கான புதிய வாய்ப்புக்களும், எண்ணங்களில் மாற்றங்களும் ஏற்பட (புதிய) வழிகள் திறக்கப்படலாம். சமயங்களினதும் ஆத்மீக சிந்தனைகளினதும் பெரும் விளைவு (உயர் புலம்) எண்ணங்களில் ஏற்படும் மாற்றங்களேயாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போர் நிறுத்தத்திற்கான புதிய பிரேரணை அரசியற் சட்டவரம்பின்றி சாத்தியமாகாது

14-11-2008

இலங்கையின் வடபகுதியில் வாழும் பொதுமக்கள் அடைந்துவரும் பெரும் துயரங்கள் காரணமாக இந்தியாவில் அதுவும் குறிப்பாக தமிழ் நாட்டில் போர் நிறுத்தத்தை உடனடியாக பிரகடனம் செய்ய நிர்ப்பந் திக்கும் வகையில் கிளர்ச்சிகள் அதிகளவில் ஏற்பட்டு வருகின்றன. தமிழீழ விடுதலைப் புலிகள் போர் நிறுத்தத்திற்குத் தாம் தயாராக இருப்பதாகவும் யுத்தம் தொடர வேண்டாம் என்றும் கூறுகின்றனர். இதற்கு பதிலளிக்கும் இலங்கை அரசாங்கம், அது போர் நிறுத்தத்திற்கு சம்மதம் தெரிவிப்பதானால் அதற்காக புலிகள் ஆயுதங்களை துறக்க வேண்டும் எனக் கூறியுள்ளது.

கடந்த காலங்களில் ஏற்பட்ட யுத்த நிறுத்தங்கள் தொடர்ந்தும் தவறின என்பது மட்டுமன்றி, பின்னர் உக்கிரமான சண்டைகளுக்கும் வழிவகுத்துள்ளதுடன் இரு தரப்பினரும் கூடிய ஆயுதங்களை சேர்த்துக்கொள்ளவும் போராளிகள் தம்மை ஒழுங்குபடுத்தி மீள அணிவகுக்கவுமே பயன்படுத்தப்பட்டுள்ளன.

தேசிய சமாதானப் பேரவை உண்மையானதும், நிரந்தரமானதும் இறுதியில் இன முரண்பாடுகளுக்கு ஓர் அரசியல் தீர்வினை கொண்டு வரக்கூடியதுமான யுத்த நிறுத்தத்தை ஆதரிக்கின்றது. செய்யப்படும் ஒப்பந்தங்கள் எதுவாயினும் அவை ஒழிவுமறைவற்றதாகவும் முரண் பாடுகளினால் பெரிதும் பாதிக்கப்பட்ட மக்களின் ஆர்வங்களை கவனிப்பதாகவும் இருத்தல் அவசியமாகும். மக்களே யுத்தத்திற்காக ஆகக்கூடிய விலையை அளித்திருக்கின்றனர். இவ்வாறான சூழ்நிலை யில் அரசியல் தீர்வுக்கு தமது அர்ப்பணத்தைக் காட்டாது யுத்த நிறுத் தத்திற்கு அழைப்பது என்பது ஒரு அரசியல் பிரசாரமாக மட்டுமே அமையும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தகைய அனுமானங்களின் அப்படையில் பார்க்கும் போது அரசியல் சட்ட வரம்பு, இராணுவ மயமாக்கலை ஒழித்தல், சர்வதேச கண்காணிப்பளர்களை நியமித்தல் என்பன இல்லாத யுத்த நிறுத்தம் எதுவித நன்மையினையும் ஏற்படுத்தப்போவதில்லை. இப்போதைய யுத்த நிறுத்தத்திற்கான கோரிக்கையினை நாம் ஆதரித்தாலும், வரலாறு தானாக மீண்டும் ஏற்படுவதோ, மக்களது சமாதானத்திற்கான எதிர் பார்ப்பும் நம்பிக்கையும் மீண்டும் இழப்புக்களுக்கு ஆளாகி விடும் விளைவுகளோ ஏற்பட்டுவிடக்கூடாது.

கடந்தகால தோல்விகளில் இருந்து நாம் பாடங்களை கற்றுக் கொள்ள வேண்டும். கடந்த கால யுத்த நிறுத்தங்கள் ஏற்பட்ட போது அவை யுத்தம் நடத்திய இரு தரப்பினரிடையேயும் அரசியல் தீர்வுக் கான சட்டவரம்பு பற்றிய ஓர் உடன்படிக்கை இல்லாதே தீர்மானிக்கப் பட்டவை.

கள நிலைமைகளை மேம்படுத்தும் நோக்கத்தை குவியமாகக் கொண்டதாகவே போர் நிறுத்தம் செய்யப்பட்டது. இதனால் யுத்த நிறுத்த காலப்பகுதி இராணுவ ரீதியாக தம்மைப் பலப்படுத்திக் கொள்ளும் நோக்கத்துடனேயே செய்யப்பட்டதாக சந்தேகம் ஏற்பட வாய்ப்பினை அளித்தது. இரு தரப்பினரும் தாம் எத்தகைய வரையறை களுக்குட்பட்ட காரணிகளுடனான அரசியற் தீர்வுக்கு சம்மதித்து போர் நிறுத்தம் செய்யப் போகிறோம் என்பதனை பகிரங்கமாக அறியத்தர வேண்டும் என தேசிய சமாதானப் பேரவை கேட்டுக் கொள்கின்றது. போர் நிறுத்தம் நிலைத்து நிற்கக் கூடியதான அரசியற் தீர்வுக்கான பேச்சுவார்த்தையோடு இணைந்ததாக அமைந்தால் மட்டுமே போர் நிறுத்தமானது வெற்றியடைய முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போதிய பாதுகாப்பளிக்கும் கடமை அரசாங்கத்திற்கு உண்டு

08-10-2008

வட மத்திய மாகாணசபையின் எதிர்க்கட்சித் தலைவரான ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் ஜானக பெரேரா படுகொலை செய்யப்பட்டமை சன நாயக செய்முறைகளை அவமதிக்கும் ஒரு பயங்கரவாத செயலாகும். அனுராதபுரம் நகரில் ஐக்கிய தேசியக் கட்சியின் (ஐ.தே.க.) தலை மையகக் கட்டடத்தை திறந்து வைக்கும்போது குண்டு வெடிப்பு ஏற்பட்டுள்ளது. தற்கொலை குண்டுதாரி எனச் சந்தேகிக்கப்பட்ட ஒருவரால் திருமதி பெரேரா ஐ.தே.க. மாவட்ட தேர்தல் ஒருங்கிணைப் பாளர் ராஜா ஜோன் புள்ளே, அவரது மனைவி திருமதி ஜோன் புள்ளே உட்பட 28 பேர் கொல்லப்பட்டதுடன் இன்னும் 90பேர் காயமுற்று முள்ளனர். காயமுற்றவர்களில் சிலர் மோசமான நிலையில் இருப்ப தாகவும் தெரிய வந்துள்ளது.

இச் சம்பவம் பெருமளவான அப்பாவி பொதுமக்களை இலக் காக்கியிருப்பதுடன் பலர் கொல்லப்பட்டும் இன்னும் பலர் காயப் படுத்தப்பட்டிருப்பதால் தேசிய சமாதானப் பேரவை இத்தாக்குதலைக் கண்டிக்கிறது.

மேஜர் ஜெனரல் பெரேரா இலங்கை இராணுவத்தில் முன்னாளில் பிரதம அதிகாரியாக இருந்ததுடன் வெற்றிகரமாக யுத்த களத்தில் நாட்டுக்காக பணிபுரிந்தவர். அவருடைய பதவிக்காலத்தில் அவர் வடக்கு யுத்த வலயத்தில் மனித உரிமைகளின் மீறல் தொடர்பாக விமர்சிக்கப்பட்டவரான போதிலும், அண்மைக்காலங்களில் நாட்டில் நிலவும் இன முரண்பாடுகள் தொடர்பாக நடுநிலைக் கருத்துக்களையும் முற்போக்கு நிலைப்பாட்டினையும் கொண்டிருந்தவராவார். அவர் அரசாங்கத்திடம் தனக்கு போதிய பாதுகாப்பு வழங்கும்படி கோரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்திருந்தார். அவரது உயிரை பாதுகாக்கக் கூடிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாமை குறித்து நாம் வேதனையடைகின்றோம்.

அரசியல்வாதிகளினதும் ஏனையவர்களினதும் பாதுகாப்பு தொடர்பாக அவர்கள் எந்த அரசியல் கட்சியைச் சார்ந்தவர்கள் என்ற பாகுபாடின்றி அவர்களுக்குத் தேவையான அளவில் பாதுகாப்பு ஏற்பாடுகளை உண்மையான முறையில் செய்து வைக்கும் பொறுப்பு அரசாங்கத்தினது என்பதன் காரணமாக அனைத்து பிரசைகளினதும் பாதுகாப்பிற்கு உறுதி வழங்கும் பொறுப்பினை ஏற்று ஆவண செய்யு மாறு தேசிய சமாதானப் பேரவை அரசாங்கத்திடம் வேண்டுகோள் விடுக்கின்றது.

தற்கொலை குண்டுதாரிகளை பயன்படுத்துவது தமிழீழ விடுதலைப் புலிகளது அடையாளமாகும். அவர்களைப் பயன்படுத்தி தமக்கு எதிரானவர்களை நீண்டகாலத்திற்கு பின்னரும் பலி எடுத்துள்ளனர். குண்டு வெடிப்புக்கு யார் பொறுப்பானவர்கள் என்பதும் அதன் விளைவுகள் என்ன என்பதும் தெட்டத் தெளிவாக உள்ளன. குண்டு வெடிப்புக்கான காரணமாக சம்பவம் நாட்டில் சட்டமும் ஒழுங்கும் சீரழிவுக்குள்ளாகியிருப்பதாகவும் அரச நிறுவனங்களின் நேர்மைப் பண்பின் மீது மக்களுக்கு நம்பிக்கை இழப்பும் அதிகரித்து வருகின்றது.

அரசாங்கம் மேஜர் ஜெனரல் பெரேராவுக்கு போதிய பாதுகாப்பு வழங்காதது குறித்தும், அது தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தி லிருந்து பிரிந்து வந்த தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் கூட்டாகச் செயற்படுவது குறித்தும் ஐக்கிய தேசியக் கட்சி எடுத்துக்கூறி விமர்சித்துள்ளது. தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் நாட்டின் பிரதான அரசியல் நீரோட்டத்தில் சங்கமித்து அரசாங்கத்தினை ஆதரிக்கும் கட்சியாக இயங்கியபோதும் ஆயுதம் தாங்கிய குழுவாகவே தொடர்ந்தும் இருந்துவருவது குறிப்பிடத்தக்கதாகும்.

அண்மைக்கால வன்முறைச் சம்பவமும் ஏனைய இதனை ஒத்த காடந்தகால சம்பவங்களும் காரணமாக இலங்கையில் சனநாயக சமூகம் ஊக்கமிழந்து வருவதனால் நாட்டின் அரசியல் வாழ்வில் வன்முறையற்ற நிலைமைகள் ஏற்படுவதனை உறுதி செய்வது அத்தியா வசியமாகிறது. பொறுப்பு கொண்ட அரசியற் கட்சிகள், ஒன்றிணைந்து செயற்படுதல் தேவையாகும். அவை தமது பொறுப்புக்களை தட்டிக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கழித்துவிட்டு நாட்டின் பிரச்சினைகளுக்கு இராணுவ தீர்வுகளையே நம்புவதனை விடுத்து அரசியல் செய்முறைகளைப் பயன்படுத்துவதன் மூலம் தீர்வுகாண முயற்சிக்க வேண்டும்.

நடைபெற்றுவரும் இராணுவ நடவடிக்கைகள் காரணமாக வடபகுதி மக்கள் எதிர்நோக்கும் துயரங்கள் பற்றியும் பொதுமக்கள் யுத்தப் பகுதிகளில் இருந்த வெளியேறுவதனை தமிழீழ விடுதலைப் புலிகள் தடைசெய்வதன் விளைவுகள் பற்றியும் தேசிய சமாதானப் பேரவை நன்கு அறிந்துள்ளது.

சட்ட விரோதமாகவும் பயங்கரவாத நடவடிக்கைகளினாலும் மக்கள் பாதிக்கப்படுவதிலிருந்து பாதுகாக்கப்படுவதனை உறுதி செய்ய அரசாங்கம் உண்மையாக முன்வருதல் வேண்டும். எதிரணியினரும் அரசாங்கத்திற்கு நியாயமான தேவைகளின் போது ஒத்துழைப்பினை வழங்கி அதன் மூலம் தற்போது நாட்டில் நிலவி வரும் பிரச்சினைகளுக்கு அரசியல் தீர்வினை கொண்டு வருமாறு அழுத்தம் கொடுப்பதே தற்போது நிலவிவரும் நாட்டின் இன முரண்பாடுகள் பொறுத்து மிக முக்கியமான நடவடிக்கையாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனித உரிமைகளுக்கான சட்டவல்லுனர் மற்றும் சிவில் சமூக பணியாளருக்கு எதிரான குண்டுத் தாக்குதல் அபாயகரமான போக்கினையே குறிப்பதாகும்

29-09-2008

சனிக்கிழமை இரவு இனங்காணப்படாத கும்பல் ஒன்று இலங்கை சர்வதேச டிரான்ஸ்பரன்சி (TISL) நிறுவனத்தின் பணிப்பாளர் சட்டத் தரணி J.C.வெலியமுன அவர்களின் வீட்டின் மீது இரண்டு கைக்குண்டு களை எறிந்து வெடிக்கச் செய்துள்ளது. அவருடைய வீடு கொஹுவலை பொலிஸ் நிலையத்திற்கு அண்மித்ததாக அமைந்துள்ளதுடன் கொஹுவலை பெப்பிலியான வீதியில் ஒரு இராணுவ முகாமும் அமைந்துள்ளது. இத்தாக்குதல்கள் மூலம் நாட்டில் சட்டமும் ஒழுங்கும் எந்தளவுக்கு முரட்டுத்தனமாக குற்றங்களில் ஈடுபடுவோரால் புறக் கணிக்கப்படுகிறது என்பதனை தெளிவுபடுத்துவதாயுள்ளது.

ஜே.சி.வெலியமுனவின் வீட்டை கைக்குண்டு கொண்டு தாக்கியமை யினை தேசிய சமாதானப் பேரவை கண்டிக்கிறது. இத்தாக்குதலானது மனித உரிமைகள், நல்லாட்சி மற்றும் பொது வாழ்வில் பொறுப்புக் கூறும் தகமை நேர்மை என்பவற்றிற்கு எதிரான வன்முறை தாக்குதல் என்பதன் காரணமாக இத்தாக்குதலுக்கு பொறுப்பானவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என தேசிய சமாதானப் பேரவை கோரி நிற்கின்றது. இச்சம்பவம் இரவு நேரத்தில் அவரது வீட்டில், தனது மனைவியுடனும் இரண்டு பிள்ளைகளுடனும் இருந்த சமயத்தில் ஏற்பட்டிருப்பதால் அதனை குறித்து கவலை யடைந்துள்ளோம். திரு.வெலியமுன எம்மை போன்ற சக சிவில் சமூக பணியாளராக செயற்படுவதுடன் எமது நடவடிக்கைகளில் பங்காளராகவும் பணிபுரிந்து வருகிறார். சட்டத்தின் அடிப்படையான ஆட்சிக்கும் பொதுவாழ்வில் நேர்மைக்குமாக அவர் காட்டும் அர்பணிப்பும் ஊக்கமும் பொறுத்து நாம் அவரை பாராட்டுகின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் தற்போது அடிப்படை உரிமைகள் மீதான தலையீடுகள் மற்றும் பொதுத் துறை ஆர்வங்கள் கொண்ட வழக்குகள் பலவற்றில் சம்பந்தப்பட்டுள்ளார். இப்போது அரசாங்க அதிகாரிகளும் போரில் படையினரும் தொடர்பான பல வழக்குகள் தீர்க்கப்படாது தேங்கி நிற்கின்றன. இவற்றை விட சக வழக்கறிஞர் ஒருவர் தனது தொழில் சார்ந்த கடமைகளை செய்வதன் காரணமாக கொலை அச்சுறுத்தல் களுக்கு ஆளாகியுள்ளதாகவும் ஒரு வழக்கை உயர் நீதிமன்றத்தில் தொகுத்திருக்கின்றார்.

எனவே திரு.வெலியாமுனவின் மீதான தாக்குதல் என்பது நாட்டின் சட்டத்தின் செய்முறைகள் மீது ஏற்பட்டுள்ள அச்சுறுத்தலையும் தலையீட்டினையுமே காட்டுகின்றது. சிவில் சமூக பணியாளரும் வழக்கறிஞருமான ஒருவரை துன்புறுத்தி அச்சுறுத்தல்கக்கு ஆளாக்கிய இத்தாக்குதலை மனித உரிமைகள், நல்லாட்சி, பொதுவாழ்வில் பொறுப்புக்கூறுதல், நேர்மை என்பவற்றை ஆதரித்து போராடும் சிவில் சமூக பணியாளர்களுக்கு அனுப்பப்படும் ஒரு எச்சரிக்கை என்றே தேசிய சமாதானப் பேரவை நம்புகிறது.

இவ்வாறான வன்செயல்களையும் அச்சுறுத்தல்களையும் அவை நாட்டில் நிலவும் அதிருப்தி நிலைமைபற்றி விமர்சனக்குரல் எழுப்பு வோரை அமைதியாக வாய் மூடி இருப்பதனை உறுதி செய்வதற்கான நடவடிக்கை என்றே வியாக்கியானம் செய்கிறோம்.

‘மேற்படி தாக்குதல் எம்மை மாத்திரமன்றி எமது தொழில்களினதும், நிறுவனங்களினதும் உருவாக்கத்திற்கான அடித்தளமான சனநாயக பெறுமானங்கள் மீது ஏற்படுத்தும் அச்சுறுத்தல்களாகும்’ என நம்புகின்ற சுதந்திர ஊடக இயக்கம் (FMM) சிவில் சமூகப் பணியாளர்கள், இலங்கைச் சட்டக் கழகம் (BASL) ஆகியவற்றுடன் நாமும் இணைந்து கண்டனத்தை தெரிவித்துக்கொள்கின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனிதாபிமான நோக்கங்களுடனான நிறுவனங்களால் இப்போது முக்கிய பங்கு வகிக்க முடியும்

12-09-2008

இன்று இலங்கையில் குறிப்பாக வடக்கு வன்னிப் பிரதேசத்தில் உள்ள முரண்பாடுகள் இடம்பெறும் வலயங்களில் மனிதாபிமான நெருக்கடிகள் மிகவும் மோசமாக எதிர்நோக்கப்படுகின்றன. அரசாங்கமும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தினரும் இராணுவ நடவடிக்கைகளை கிடுகிடுவென அதிகரித்துச் செல்கின்றன. இந்நிலையில் மனிதாபிமான பணிகளில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு தம்மால் பாதுகாப்பினை இனி மேலும் உத்தரவாதம் செய்ய முடியாதுள்ளது என்ற நிலைப்பாட்டில் உள்ள அரசாங்கம் அவர்களை அப்பகுதிகளில் இருந்து வெளியேறுமாறு கூறியுள்ளது.

ஆனாலும், இப்பிரச்சினை தொடர்பாக சர்வதேச செஞ்சிலுவைச் சங்க குழுவினை (ICRC) கிளிநொச்சிப் பகுதிகளில் இருக்க அனுமதித் துள்ளமையும் அதற்கான நெகிழ்ச்சி மிக்க வகையில் பேச்சுவார்த்தை களுக்கு முன்வந்துள்ளமையும் சார்பான நடவடிக்கைகளாகும். இதனைப் போன்றே நெகிழ்ச்சித்தன்மையுடன் ஏனைய மனிதாபிமான உதவி வழங்கும் முகவர்களையும் நடத்துமாறு தேசிய சமாதானப் பேரவை பரிந்துரை செய்கின்றது.

அடுத்தடுத்து வந்த அரசாங்கங்கள் கடந்த காலங்களில் ஆயுத முரண்பாடுகள் ஏற்பட்ட காலகட்டங்களில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அத்தியாவசிய தேவைகள் கிரமமாக சென்றடைவதனை உறுதி செய்வ தற்காக மனிதாபிமான பணிகளில் ஈடுபடும் உள்ளூர் மற்றும் சர்வதேச நிறுவனங்களது உதவிகளை நாடியிருந்தன. தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிற்குள் இருந்த பகுதிகளில் செயற்பட்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதாபிமான பணிபுரியும் முகவர்கள் இடம்பெயர்ந்த மற்றும் அவ்வப்பகுதிகளில் வாழும் பொதுமக்களுக்கு உதவிகளை கொண்டு சென்று வழங்குவதற்கு அரசாங்கத்திற்கு நெருக்கடியான நிலைவரங்களில் உதவிசெய்துள்ளனர்.

மனிதாபிமான பணிகளில் ஈடுபட்டுள்ள நிறுவனங்கள் அப்பகுதிகளில் செயற்படுவதனை இப்போது தடைசெய்திருப்பதால் அங்கே இவ்வாறான பணிகளை செய்வது தொடர்பாக ஏற்பட்டுள்ள வெறுமையினை அரசாங்கத்தினால் மாத்திரம் ஈடுசெய்ய முடியாது என்பதன் காரணமாக தேசிய சமாதானப் பேரவை இந்நிலைமை தொடர்பாக பெரிதும் கரிசனம் கொண்டுள்ளது. இடம்பெயர்ந்தவர்களும் மற்றும் முரண்பாடுகள் இடம்பெறும் பகுதிகளில் விடப்பட்ட உள்ளூர் பொதுமக்கள், இந்நிலைமைகளால் மனிதாபிமான உதவிகளைப் பெற்றுக் கொள்வதில் ஒரு சூனியமான நிலைமையினையே எதிர்கொள்ள வேண்டிவரும்.

எந்தவொரு சனநாயக அரசும் தனது ஆட்சிக்குட்பட்ட மக்களது பாதுகாப்பினையும் வாழ்வாதாரத்தினையும் உத்தரவாதப்படுத்துவது முக்கிய கடமையாகும். அம்மக்களில் எந்தவொரு பிரிவினரும், அவர்கள் கிளர்ச்சிக்காரர்களது கட்டுப்பாட்டில் உள்ளவர்களா இல்லையா என்பதற்காக இவ்வாறான சனநாயக பொறுப்புக் கடமைகளிலிருந்து விலகிவிட முடியாது. அதனை அரசாங்கத்தால் நிறைவேற்ற முடியாத சூழ்நிலை காணப்படுமானால் அப்போது அதனை செய்யக்கூடியவர்களைச் செய்ய அனுமதிக்க வேண்டும்.

அரசாங்கத்தினால் அதன் கடமைகளை செய்ய முடியாத நிலைமைகளில் சர்வதேச மனிதாபிமான முகவர்களை தனது பங்காளியாக ஏற்று செயற்பட விட வேண்டும். அத்துடன் அவர்களுடைய பணிகளுக்கு அனுசரணை வழங்குவதாக இருக்க வேண்டுமே ஒழிய அவற்றின் பணிகளை தடைசெய்வதாக இருக்கக்கூடாது.

மனிதாபிமான பணிகள் புரிவதற்கான ஆணை கொண்டதும் சிறப்பு நிபுணத்துவம் கொண்டதுமான ஐ.நா.அ.ஆ. (UNHCR) நிறுவனம் போன்றவை முரண்பாட்டிற்கு உட்பட்டுள்ள வலயங்களில் பணிபுரிய சிறப்பாக பயிற்றப்பட்டனவாகும். அந்நிறுவனங்கள் இடம்பெயர்ந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்றும் யுத்தத்தினால் பாதிக்கப்பட்டுள்ள வன்னி பிரதேசத்தில் உள்ள மக்களுக்கு பணிபுரிவதனை உறுதி செய்யுமாறு தேசிய சமாதானப் பேரவை அரசாங்கத்திடம் வேண்டுகோள் விடுக்கின்றது.

இந்நிறுவனங்கள் அவற்றின் நிறுவன ஆணையின் ஒரு பகுதியாக இடர்களை எதிர்கொண்டு பணிபுரிய முன்வருவதாக இருக்கின்றன. அவ்வாறு அவர்கள் யுத்த வலயங்களில் பணிபுரிய முன்வரும்பட்சத்தில் அவர்களை இவற்றிற்காக ஆதரித்து ஊக்கப்படுத்தல் தேவையாகும். இதற்காக பிரயாணத்திற்காகவும் விசா அனுமதிக்காகவும் விண்ணப்பிக்கும்போது ஐ.நா. வினதும் மனிதாபிமான முகவர் நிறுவனங்களினதும் கோரிக்கைகளை சார்பாக நடத்துவதுடன், சார்பான முறையில் பொது பாராட்டுச் செய்திகளையும் வெளியிட்டு ஊக்கப்படுத்துதல் அவசியமாகும்.

அதேநேரத்தில் இவ்வாறாக மனிதாபிமான பணிபுரியும் நிறுவனங்கள் இடம்பெயர்ந்த மக்களுக்கு அடிப்படை தேவைகளை வழங்கும்போது அந்நிறுவனங்களது சாதனங்கள் மற்றும் உடைமைகளை அகற்றாதும், பாதிக்கப்பட்ட மக்களுக்காக அனுப்பிவைக்கப்படும் மனிதாபிமான உதவிப் பொருட்களை தமது தேவைகளுக்காக கையாடாதும் செயற்பட்டு, ஆதரவு தருமாறு தமிழீழ விடுதலைப் புலிகளையும் தேசிய சமாதானப் பேரவை கேட்டுக் கொள்கின்றது. அத்துடன் மனிதாபிமான பணியில் ஈடுபட்டுள்ளவர்களது பாதுகாப்பினையும் உறுதிசெய்யுமாறு அவர்களை கேட்டுக் கொள்கின்றோம். அப்போதுதான் அவர்களால் அவர்களுடைய நிறுவன ஆணையினை செவ்வனே செய்ய முடியும்.

அரசாங்கமும், தமிழீழ விடுதலைப் புலிகளும் யுத்தம் செய்யும் போது பொதுமக்கள் காயமுற்று சேதமடையாது பாதுகாக்கப்பட வேண்டும் என்பதற்காக அனைத்து முன் ஏற்பாடுகளையும் செய்வதற்கு சற்றும் தயங்கக்கூடாது.

இதுதான் சர்வதேச மனிதாபிமான சட்டத்தின் உயிர்நாடி. முரண்பாட்டில் ஈடுபட்டுள்ள இரு தரப்பினரையும் உதவிகள் வழங்கும் முகவர் நிறுவனங்களுடன் ஒத்துழைத்து 'மனிதாபிமான இடைவெளி' (Humanitarian Corridor) ஒன்றினை உருவாக்கும்படி கேட்டுக் கொள்வ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துடன் அவ்வாறான இடைவெளியினை அமைப்பதால் பொதுமக்கள் பாதுகாப்பாக வெளியேறி தமக்குத் தேவையான மனிதாபிமான உதவி களைப் பெற்றுக்கொள்ள முடியும் என்பதனையும் தெரிவித்துக் கொள்கிறோம். சுதந்திரமானதும் நடுநிலையானதுமான ஐ.சி.ஆர்.சி போன்ற அவதானிப்பாளர்களுடைய பிரசன்னத்தில் பொதுமக்கள் பாதுகாப்பாக வெளியேறுவதும் உத்தரவாதப்படுத்தப்படுதல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராணுவத்தின் அவசர தேவைகளுக்காக பொது மக்களது நலன்களை பாதுகாக்கும் நிலைவரங்களுடன் சமரசம் செய்து கொள்ளக் கூடாது

13-08-2008

வடபகுதியில் நிகழ்ந்துக் கொண்டிருக்கும் சண்டைகள் காரணமாக ஆயிரக்கணக்கான மக்கள் தமது வீடுகளை விட்டும் கிராமங்களை விட்டும் இடம்பெயர்வுக்கு ஆளாகியுள்ளனர். தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள ஆட்சிப் பரப்புப் பகுதிகள் யுத்தகளமாகியிருக்கின்றன. அதனால், மக்கள் இடம் விட்டு இடம் தப்பியோடிவருகின்றனர்.

தற்போதைய அவசரகால சூழலில் வாழுமிடங்கள், நீர், கழிவகற்றல் போன்றவற்றிற்கான தேவைகள் பூர்த்தி செய்யப்பட முடியாதுள்ளன என்றும் பெரும் இடையூறுகளும் திறனின்மையும் காணப்படுவதாகவும் வடக்கில் பணியாற்றும் மனிதாபிமான நிறுவனங்கள் அறிவித்துள்ளன. அவ்வாறான மனிதாபிமான தேவைகளை வழங்கும் நிறுவனங்களிடம் தற்போதைய நெருக்கடிகளை சமாளித்து தேவைகளை பூர்த்தி செய்வ தற்கான உள்ளாந்த திறன் (Capacity) போதாதிருப்பது ஒருபுறமிருக்க, அரசாங்கத்தினால் அவர்கள் மீது விதிக்கப்பட்டிருக்கும் வரையறை களும் முக்கிய இடையூறாக உள்ளன.

மனிதாபிமான நிறுவனங்கள் தமது தேவைகளுக்காக கொண்டு வரும் பொருட்களை தமிழீழ விடுதலைப் புலிகள் ஒருபகுதியையோ அல்லது முற்றாகவோ தமது பாவனைக்காக எடுத்துக் கொள்வதாகவும், அதனால் அவ்வியக்கத்தின் யுத்தத்திற்கான பலம் வலுவடைவதாகவும் மனிதாபிமான நிறுவனங்களால் அனுப்பி வைக்கப்படும் பொதுமக்களது துயர் நீக்கத்திற்கான சாதனங்களும் ஏனைய பொருட்களும் தமிழீழ விடுதலைப் புலியினரிடம் சென்றடைந்துள்ளமைக்கு அரசாங்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சான்றுகளுடனான குற்றச்சாட்டுக்களை கூறி வருகின்றது. இருந்த போதிலும் இராணுவ தேவைகளை பாதுகாப்பதற்காக இலங்கைப் பிரசைகளின் நலன்களை பாதுகாப்பது ஒதுக்கிவிடப்படக்கூடாது என்பதில் தேசிய சமாதானப் பேரவை நம்பிக்கை கொண்டுள்ளது.

இவ்வாறாக மக்கள் எதிர்நோக்கும் இடர்களை மன்னார் பேராயர் வண.ராயப்பு ஜோசப் எடுத்துக்காட்டி, வடபகுதி பிரசைகளின் பாதுகாப்புக்கும் நலன்களுக்குமாக அரசாங்கம் வைத்திருக்கும் திட்டங்கள் யாவை? என விபரிக்குமாறு கோரி முழுமையான ஒரு அறிக்கையை வெளியிட்டுள்ளார்.

ஐ.நா. சபையின் முகவர்களும், அரசு சாரா நிறுவனங்களும் பாதிக்கப்பட்டுள்ள மக்களை சென்றடைந்து அவர்களது அடிப்படைத் தேவைகளை பூர்த்தி செய்வதற்காக உடனடியாக அனுமதி வழங்குவதற்கான நடவடிக்கைகளை எடுக்குமாறும் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளார். இவற்றோடு அவர் இப்போது நடைபெறும் யுத்தத்தினால் வட பகுதியில் பாதிப்புக்கு உள்ளாகியிருக்கும் மூன்று மாவட்டங்களிலும் 'முரண்பாடுகள் இல்லாத வலயங்களை' இனங்கண்டு ஸ்தாபித்து அவற்றை பொது மக்களின் பாதுகாப்புக்காக ஒதுக்கிக் கொடுப்பது தேவை என்பதனையும் வற்புறுத்திக் கூறியுள்ளார்.

தேசிய சமாதானப் பேரவை, பேராயர் ஜோசப் அவர்களின் இக்கோரிக்கைகளை ஆதரிப்பதுடன், அரசாங்கத்திடம் இவற்றிற்கு தாமதமின்றி ஆவன செய்யும்படியும் கேட்டுக் கொள்கின்றது. இராணுவத்தின் நெருக்கடிகளை பாதுகாத்து சரிசெய்வதற்காக அவற்றை பொதுமக்களது நலன்களுடன் சமரசம் செய்து கொள்ள முடியாது என்பதனை நாம் நம்புகிறோம். பொதுமக்கள் பணயக் கைதிகளாகாது பாதுகாப்பதுடன் அவர்களை மனித கேடயங்களாக்குவதனையும் எச்சூழ்நிலையிலும் ஆதரிக்க முடியாது. அத்துடன் பொதுமக்கள் வாழும் பகுதிகள் மீது வான் தாக்குதல்களையும் பீரங்கித் தாக்குதல்களையும் பயன்படுத்த வேண்டாம் என்றும் அரசாங்கத்திடம் கேட்டுக் கொள்கின்றோம்.

ஐ.நா. சபையின் முகவர்கள் மற்றும் சர்வதேச செஞ்சிலுவை சங்கம் என்பவற்றின் அனுசரணையுடன் மனித பாதுகாப்புக்காக யுத்த பிரதேசத்தில் 'பாதுகாப்பு இடைவெளி' யினை உருவாக்கினால் தமது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதேசங்களில் இடம்பெறும் யுத்த நடவடிக்கைகளிலிருந்து பாதுகாப்பு பெற மக்கள் அவற்றில் சென்று பாதுகாப்புடன் இருக்க வாய்ப்பு ஏற்படும். அதற்கு அரசாங்கமும் தமிழீழ விடுதலைப் புலிகளும் அவர்களுக்கு தேவைக்கேற்ப இடம்பெயருவதற்கான மனித உரிமை களை வழங்கி நடந்து கொள்ளுமாறும் கேட்டுக் கொள்கிறோம்.

யுத்தப் பகுதிகளிலிருந்து வெளியேறும் மக்களை, கௌரவமாகவும் கண்ணியமாகவும் அவர்களுடைய சுதந்திரமாக நடமாடும் உரிமைகளை மதித்தும் நடத்த வேண்டும். பேராயர் ஜோசப் குறிப்பிட்டுள்ளவாறு களிமோட்டை, சிறுகண்டல் ஆகிய பகுதிகளில் நலன்புரி நிலைய முகாம்களை அமைத்து அதற்குள்ளேயே அவர்களை அடைத்து வைத்திருப்பது தவிர்க்கப்பட்டு மக்கள் சுதந்திரமாக வாழ வகை செய்தல் வேண்டும். 'உள்ளூரில் இடம்பெயர்ந்தவர்கள்' தொடர்பாக முரண்பாட்டுடன் தொடர்பான தரப்பினர் பின்பற்ற வேண்டிய ஐ.நா. சபையின் வழிகாட்டலை தவறாது பின்பற்றும்படியும் நாம் பரிந்துரை செய்கின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யூலை 1983 நினைவுநாள் : தொடர்ந்தும் இருக்கப்போகும் இணைப்புப் பாலங்கள்

21-07-2008

1983ஆம் ஆண்டு யூலை மாதம் 23ஆம் திகதி இலங்கையின் ஓர் இருண்ட நாளாகும். அன்று இலங்கையில் அராஜகக் கும்பல்கள் வன்முறையில் ஈடுபட்டு, சட்டமும் ஒழுங்கும் முற்றாக நிலைகுலைந்த நிலையை உண்டாக்கி மக்களை பீதியடையச் செய்ததுடன், தமிழ் மக்களை வேறோடு களைந்தும் அவர்களுடைய உடைமைகளை கொள்ளையிட்டு சொத்துக்களை தீயிட்டதோடு பலரை கொன்று அரசு நாட்டில் இல்லையோ என்ற நிலைக்கு நாட்டை உட்படுத்திய கொடூர நாளாகும்.

அவ்வாறு அராஜகரீதியில் ஈடுபட்ட கும்பலை அப்போதிருந்த அரசாங்கத்தின் ஒரு பிரிவினர் தூண்டுவித்து நாட்டின் வடபகுதியில் உள்ள யாழ்ப்பாண நகரிலிருந்த தமிழீழ விடுதலைப் புலியினர் 13 இலங்கை இராணுவ வீரர்களை கொன்றார்கள் என்பதற்காக பழிவாங்கும் எண்ணத்துடன் இவ்வாறு செயற்பட்டதாக அரசாங்கம் விளக்கம் கூறியது. இற்றைக்கு இருபத்தைந்து வருடங்களுக்கு முன்னர் (யூலை 1983ஆம் வருடம்) பெருமளவிலான வன்முறை தமிழ் மக்களுக்கு எதிராக கட்டவிழ்த்து விடப்பட்டது. அப்போது தமிழ் மக்களாக இனங்காணப்பட்டவர்கள் பெருமளவில் பாதிப்புக்குள்ளாக்கப் பட்டனர்.

அது சர்வதேசமட்டத்தில் இலங்கைக்கு பெரும் அபகீர்த்தியை உண்டுபண்ணியதுடன், பின்னாளில் பெரும் பொருளாதார, அரசியல் துறைகளில் பெரும் சீரழிவை உண்டுபண்ணக்கூடிய மூளைசாலிகளின் வெளியேற்றத்திற்கும் வழிவகுத்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழர்களுக்கு எதிரான திட்டமிட்ட இனப்படுகொலைகள் மேலும் கூடிய இனமுரண்பாடுகளுக்கு காரணமாகியதோடு மட்டுமன்றி, தொடர்ந்தும் நிலைமையை சீர்குலையச் செய்வதற்கும் காரணமாகியது.

திட்டவட்டமான அரசியல் வரம்புகளுக்கு உட்பட்டவகையில் முரண்பாடுகளுக்கான தீர்வை காணுவதனை விடுத்து அப்போதைய அரசாங்கம் பிரச்சினையினை குறுகிய நோக்கத்தில் பயங்கரவாத பிரச்சினையாக இனங்காட்டி உடனடியான ஓர் இராணுவத் தீர்வினை மேற்கொள்ளும் வகையில் செயற்பட்டது. அராஜக கும்பல்களிடமிருந்து அரசாங்கம் தமிழ் மக்களை காப்பாற்றத் தவறியதுடன் இராணுவ நடவடிக்கைகளை முடுக்கியும் விட்டதனால் தமது அபிலாஷைகளை 'தனிநாடு' ஒன்றின் மூலமாகவே தீர்த்துக்கொள்ளலாம் என்ற எண்ணத் திற்கு தமிழ் மக்கள் தள்ளப்பட்டனர். 1983ஆம் ஆண்டின் திட்டமிட்ட இனப்படுகொலையின் நினைவுகளே தமிழ் தீவிரவாதத்தை அம்மக்கள் ஆதரிப்பதற்கான தனியானதும் நியாயபூர்வமானதுமான காரணியாக இன்றும் காணப்படுகின்றது.

நீண்டகாலமாக நிலவிவரும் அரசியல் உரிமைகளுக்கும் சுயாட் சிக்குமான கோரிக்கை தொடர்பாக இவ்வாறான சம்பவங்கள் நடந்து முடிந்த 25 வருடங்களின் பின்னரும் இலங்கை அரசாங்கம் தொடர்ந்தும் தனது கவனத்தை இராணுவ ரீதியாக இப்பிரச்சினைகளை தீர்க்க முடியாததும் அதனால் பெருமளவில் மனித துயரங்கள் தொடர்வதும் கொடூரமான துயரநிலையாகும். 1983ஆம் ஆண்டு யூலை மாத சம்பவங்கள் வன்முறைகளுக்கு ஆட்சி எல்லைப்பரப்பு வரையறை கிடையாது என்பதனையும் அல்லது சிவில் சமூகத்தின் அடிப்படை கோட்பாட்டுச் சித்தாந்தமான 'நாம் யாவரும் யுத்தத்தினால் பாதிப்புக்கு உள்ளாகியவர்கள் எமது மனித உரிமைகளும் சிவில் சுதந்திரங்களும் அச்சுறுத்தப்படுகின்றன' என்பதனையும் யதார்த்தமாகிவிட்டது.

மறுபுறத்தில் நாம் மக்களுக்கு ஆற்றிவரும் பணிகளில் இருந்து இலங்கை வழி எமது சக பிரசைகள் நியாயபூர்வமாக அனைவருக்கும் பாதுகாப்பளிக்கக்கூடிய வகையிலான அரசியல் தீர்வுக்கு தாம் தயாராக இருப்பதாக தெளிவுபடுத்தியுள்ளனர் என்பதும் தெரியவந்துள்ளது. இலங்கை மக்கள் அதிகாரப்பகிர்வு மற்றும் சமாதான சகவாழ்வு ஆகிய சித்தாந்தங்களை தொடர்ந்தும் நம்பி வருகன்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவ்வாறாயின் என்ன பற்றாக்குறையாக உள்ளது, தொடர்ந்தும் பற்றாக்குறையாகவே இருந்து வருகின்றது என்பதனையும் பார்த்தால் அது தீர்மானங்களை மேற்கொள்ளவும் தலைமைத்துவத்திலேயே, அதுவும் அரசியல் தீவிரவாத தலைமைத்துவங்கள் ஆகிய இரண் டிலுமே அது காணப்படுகின்றது என்பதும் தெரிய வருகிறது. அதாவது, கணிசமான அரசியல் தீர்வினை தலைமைத்துவங்களால் கண்டறிவதில் அதுவும் காகிதங்களில் இருந்து சமூகத்தின் அடித்தளத்திற்கு இடமாற்றம் செய்வதற்கான மனப்பான்மையும் மற்றும் அத்தகைய அரசியல் தீர்வானது தேவையான அளவில் அதிகார பகிர்வினுக்கு இடம் அளிக்கக்கூடியதாகவும் இருத்தல் அவசியமாகிறது.

கறுப்பு யூலை எனப்படும் சம்பவத்தின் 25ஆவது ஆண்டு நினைவு நாளில் இன வன்முறைகளால் பாதிக்கப்பட்டவர்களை நினைவுபடுத்தி கௌரவப்படுத்துவதில் தேசிய சமாதானப் பேரவையும் இணைந்து கொள்கிறது.

அத்துடன் முக்கியமாக அச்சம்பவத்தினால் பாதிக்கப்பட்டவர் களுக்கு இன வேறுபாடுகள் எதனையும் பொருட்படுத்தாது தமது சொந்த கலாசார அடையாளங்களை உதாசீனம் செய்தவர்களாகவும் சொந்த பாதுகாப்பினையும் கூட கவனத்திற் கொள்ளாத வகையில் இடர்களை எதிர்நோக்கி, உதவி வழங்கியவர்களுக்கும் எமது பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கின்றோம். இவ்வாறான இடர் நிறைந்த சந்தர்ப்பங்களிலேயே ஒவ்வொருவரதும் நெஞ்சுரம், மனிதாபிமான உணர்வுகளைப் பங்கிட்டுக் கொள்ளும் மனோபாவம் என்பன பலமாக வளர்கின்றன என்பதனை நாம் அவதானித்திருக்கின்றோம்.

இலங்கையின் வரலாற்றில் கரும்புள்ளிகளை காணக்கூடிய 1983 ஆண்டு அல்லது தமிழீழ விடுதலைப் புலிகளால் பெரியளவில் முஸ்லிம்களை வெளியேறுமாறு ஆணையிடப்பட்ட 1990ஆம் ஆண்டு, இயற்கையால் பேரழிவினை ஏற்படுத்திய 2004ஆம் ஆண்டு டிசம்பர் மாத சுனாமி என்பவற்றின் போதுதான் நாட்டின் ஒருங்கிணைந்த தேசிய அடையாளங்களின் உணர்வுகள் வெளிச்சத்திற்கு வந்தன. அவ்வாறான சம்பவங்களின் போதே பிளவுபட்டிருந்த சமூக மக்களிட மிருந்து ஒரு கூட்டொருமை சார்ந்த உணர்வுகள் வெளிப்படுவதனை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணக்கூடியதாயிருந்தது. இவ்வாறான மனித ஒத்துழைப்பும் சக வாழ்வும் தொடர்ந்தும் நிலவியே வருகின்றன. சில சூன்யமுற்ற காலகட்டங்களிலும் கூட மக்களுக்கு வாழ்வில் நம்பிக்கை இல்லாது போகாது நம்பிக்கையினை ஏற்படுத்தி சமூக, கலாசார உறவுகளை ஒன்றுபடுத்தும் நிலைமைகள் வேறுபட்ட சமூகங்களிடையே நிலவியதுடன், இறுதியாக அவை வலிமையுற்றமையினையும் காண முடியும்.

சமாதானம் வன்முறையற்ற வகையில் அரசியல் ரீதியாக மலர வேண்டும் என்பதிலும், எதிரிகள் என இனங்காணப்பட்ட தரப்பினர்கள் பேரம் பேசி சமாதானத்தை அடைய வேண்டும் என்பதிலும் தேசிய சமாதானப் பேரவை என்றும் நம்பிக்கையுடன் இருந்து வருகிறது. இப்போதைய கறுப்பு ஜுலை நினைவு தினத்தில் எமது மேற்கூறிய பெறுமானங்களுக்கு அரசு ஓர் ஒடுக்கும் சக்தியாக செயற்படாது அதன் அனைத்து இன, சமூக குழுக்களது ஆர்வங்களையும் செயற்படுவதனை உறுதிசெய்வதற்கு தம்மை அர்ப்பணித்துக் கொண்டவர்களுடன் இணைந்து பணிபுரிய நாம் உறுதி கூறுகிறோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசிய சமாதானப் பேரவையின் நிறைவேற்றுப் பணிப்பாளருக்கு சர்வதேச விருது

19-03-2008

தேசிய சமாதானப் பேரவையின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கலாநிதி ஜெஹான் பெரேராவுக்கு 'சுவீடனின் நல்லிணக்க தோழமையர்' (Swedish fellowship of reconciliation) என்னும் அமைப்பினால் இலங்கையில் தேசியத்துவம் தொடர்பான பிரச்சினைகளுக்கும் இன ரீதியான முனைவாக்கம் மற்றும் இராணுவ மயமாக்கல் என்பவற்றிற்கும் எதிராக வன்முறையற்ற தீர்வினை ஊக்குவிக்கும் அவரது பணிகளுக்காக 2007ஆம் ஆண்டுக்கான 'வன்முறையில்லாத (அகிம்சைவழி) விருது வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளது.

விருது வழங்கும் விழாவில் ஆற்றிய புகழுரையின் போது 'அதிகரித்த வகையில், தேசியத்துவம், இன ரீதியான முனைவாக்கம், இராணுவ மயாக்கம் என்பவற்றால் இலங்கை பாதிப்புக்குளாகி வருகையில் இலங்கை தேசிய சமதானப் பேரவையின் ஜெஹான் பெரேராவின் குரலே வன்முறைக்கு எதிராக ஒலித்துக்கொண்டிருக்கிறது' எனக் குறிப்பிடப்பட்டது.

பிரதானமாக இருதரப்பினராலும் முரண்பாடுகள் காரணமாக ஏற்படும் வன்முறைகளால் சமாதானமானதும் ஸ்திரமானதும், நீடித்திருக்கும் வகையிலானதுமான தீர்வுகள் ஏற்படுவதற்கான வாய்ப்புக்கள் குறைந்து செல்கின்றன என்பதனை அவர் வன்முறையற்ற அணுகு முறையினை ஆதரித்து வாதாடுவதன் மூலம் எடுத்துக் காட்டி வருகின்றார். இலங்கை அரசாங்கத்தினையும் அதேபோல் தமிழீழ விடுதலைப் புலிகளையும் விமர்சிப்பதன் மூலம் அனைத்து சாராருக்கும் நீண்டகால நோக்கில் நன்மைகளை கொண்டுவரக் கூடிய தீர்வுகளை எட்டுவதனை தலைவர்கள் உதாசீனப்படுத்தியுள்ளனர் என்பதும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரால் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. அவருடைய விமர்சனங்கள் யாவுமே எந்தளவுக்கு பிரச்சினைகளும் முரண்பாடுகளும் பாரதூர மானதாகவும், சிக்கலானதாகவும், முரண்பாடுகளுடனும் காணப் பட்டாலும் கூட அவற்றை பேச்சுவார்த்தைகள் மூலம் பேசித் தீர்த்துக் கொள்ளலாம் என்னும் நம்பிக்கையின் அடிப்படையிலேயே காணப் பட்டன.

கடந்த வருடம் (2006) ஏப்ரல் மாதம் க்வாஜா மொய்னுடீன் ஜிஸ்தி என்பவரது (இந்திய உபகண்டத்தில் உயர்வாக மதிக்கப்படும் முஸ்லிம் அருளாளர்) நினைவாக '2006ஆம் ஆண்டுக்கான தேசிய விருது' சமாதானம், சகிப்புத்தன்மை, இசைவு என்பனவற்றிற்காக 'இந்தியாவின் நம்பிக்கைகளுக்கிடையேயான நல்லிசைவுக்கான நிறுவனத்தினால்' (Inter Faith Harmony Foundation of India) புதுடில்லியில் இந்திய பிரதம மந்திரி கலாநிதி மன்மோகன்சிங் பிரசன்னமாயிருந்த நிகழ்ச்சியின் போது ஜெஹான் பெரேராவுக்கு வழங்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியலமைப்புச் சபைக்கு புத்துயிர் வழங்கச் செய்து நல்லாட்சியினை உறுதி செய்வதற்கான வாய்ப்பு

25-01-2008

இன முரண்பாடுகளினால் ஏற்படும் அழிவுகள் நாட்டின் மைய அரங்கில் இடம்பெறுவதுடன் நல்லாட்சி இல்லாமையும் பொதுவான நிலைமையாக இனங்காணப்பட்டுள்ளது. இவ்வாறான நிலைமையில் சிறிய அரசியல் கட்சிகளான மக்கள் விடுதலை முன்னணி, தமிழர் தேசிய கூட்டமைப்பு, ஜாதிக ஹெல உறுமய ஆகிய மூன்று கட்சி களும் அரசியலமைப்பு சபையின் வெற்றிடத்தை நிரப்புமாறு ஒன்றாக கோரிக்கை விடுத்துள்ளனமை ஒரு சார்பான அபிவிருத்தியாகும்.

உயர் தொழில் புரிபவர்களுக்கான கழகங்களின் நிறுவனம், ஓய்வுபெற்ற முன்னாள் கணக்காளர் நாயகமான எஸ்.சி.மாயாதுன்ன என்பவர் பொதுமக்கள் மத்தியிலும் பெரும்பாலான பாராளுமன்றப் பிரதிநிதிகள் மத்தியிலும் அங்கீகாரம் பெற்றவர் என்பதனால் அவரை அரசியலமைப்பு சபையின் வெற்றிடத்திற்கு சிபாரிசு செய்திருந்தது. இவ்வறிக்கையின் இறுதியில் கையெழுத்திட்டுள்ள சிவில் சமூக அமைப்புக்களாகிய நாம் ஏற்கனவே பாராளுமன்ற சபாநாயகர் W.J.M லொக்குபண்டாரவினால் சனாதிபதி மகிந்த ராஜபக்சவிடம் மேற்படி சபையின் பதவிக்கான பெயர்களை சமர்ப்பித்திருப்பதனை அறிவோம். எனவே, இந்த மிக முக்கியமான தேசிய நிறுவனம் செயற்படுவதற்காக எதுவித தாமதமும் இன்றி நியமனத்தை செய்யுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

எந்த ஒரு அரசாங்கமும் நியாயமாக செயற்பட வேண்டும் என்றே மக்கள் எதிர்பார்ப்பார்கள். அதாவது, அது சட்டத்தின் வாயிலான ஆட்சியினையும் யாப்பில் அங்கீகரிக்கப்பட்டுள்ள மனித உரிமை களுக்கும், அடிப்படை உரிமைகளுக்கும் மதிப்பளிக்கும் வகையிலான ஆட்சியும் பேணப்பட வேண்டும் என்பதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எந்தக் கட்சிக்கு தமது வாக்கினை அளித்திருந்தாலும், அனைத்து மக்களுமே சம உரிமையுடன் பொதுத்துறை தொழில்களை பெற்றுக் கொள்வதற்கான உரிமை கொண்டவர்கள். பொதுத்துறை தொழில் களுக்கு பொறுப்பானவர்களாக நியமிக்கப்பட்ட உயர் அதிகாரிகளும் ஏனையவர்களும் மற்றும் நீதித்துறைசேவை உயர் நீதிமன்றங்கள் ஆகியவற்றிற்கு பொறுப்பானவர்கள் தமது கடமைகளை உண்மை, நீதி என்பவற்றினை பாதுகாக்கும் வகையில் நடுநிலைநின்று நேர்மை யுடன் பணிபுரிவதற்கான சுதந்திரம் உத்தரவாதப்படுத்தப்பட்டிருக்க வேண்டும்.

அவர்கள் சனாதிபதி அல்லது அமைச்சரவை அங்கத்தவர் எவரொருவரது கட்டுப்பாட்டிற்கோ செல்வாக்கிற்கோ உட்பட்டவராக இருக்கக்கூடாது. அவ்வாறான நிலைமைகள் நிலவ வேண்டும் என்பதற்காகவே நியமனங்கள், பதவியுயர்வு, இடமாற்றம் ஒழுக்காற்று நடவடிக்கைகள் என்பன யாவும் உயர் அதிகாரிகளைப் பொறுத்து அவை சுதந்திரமான நிறுவனங்களிடம் விடப்பட்டுள்ளதுடன், அவை ஒரு சில காலத்திற்கு மாத்திரம் பதவியிலிருக்கும் அரசியல்வாதிகளின் கட்டுப்பாடுகளில் இருந்து விடுபட்டு சுதந்திரமாக செயற்படவும் வகை செய்யப்பட்டுள்ளது.

எனவேதான் நிறைவேற்று அதிகாரம் கொண்ட அரசியலுக்கும், சட்டம் நீதி என்பவற்றினை நிர்வாகம் செய்தல், நியமனங்களை செய்யும் அதிகாரங்கள், இடமாற்றம், பதவியுயர்வு, ஒழுக்காற்று நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் இடையே ஒரு தடை முகப்பு இருக்க வேண்டும் என்பதற்காகவே பொது அரச சேவை ஆணைக்குழு போன்றதும், தேசிய பொலிஸ் ஆணைக்குழு மற்றும் அவை போன்ற நிறுவனங்களது அங்கீகாரமும் சிபாரிசும் மேற்கூறிய அரச உயர் பதவிகளுக்கு அவற்றிற்கு தேவை என்னும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதற்காகவே யாப்பிற்கான 17வது திருத்தம் பாராளுமன்றத்தினால் ஏகமனதாக செய்யப்பட்டு அதன் மூலம் சபாநாயகரை தலைவராகவும் ஏனைய கட்சிகளில் இருந்து தெரியப்பட்ட அங்கத்தவர்களை உள்ளடக் கியதான அரசியலமைப்பு சபை உருவாக்கப்பட்டது.

அதனால் நியமிக்கப்படும் ஆணைக்குழு அங்கத்தவர்களை நியமிக்கும் அச்சபையே, அவ்வாறு நியமிக்கப்பட்ட ஆணைக்குழுக்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமது செயற்பாடுகளை சுதந்திரமாக மேற்கொள்ளப்படுவதுடன் சனாதிபதி மற்றும் அமைச்சரவையிலுள்ள அமைச்சர்களுக்கு இடையே ஒரு தடைமுகப்பாகவும் செயற்படும். இவ்வாறான சுதந்திரமான ஆணைக்குழுக்கள் செய்யும் சிபாரிசுகளின் அடிப்படையிலேயே உயரதிகாரிகள் தொடர்பாக நிருவாக அதிகாரமிக்க அரசியல் செயற்பட வேண்டும்.

துரதிஷ்டவசமாக கடந்த இரண்டு வருடங்களாக அரசியலமைப்பு சபையை சனாதிபதி நியமிக்காது தனது விருப்பு வெறுப்புகளுக்கு ஏற்ப அதன் அதிகாரங்களை நிர்வகித்து வந்தார். அல்லது அரசியலமைப்பு சபையை நியமிக்க மூன்று சிறிய அரசியல் கட்சிகளிடையே தமக்காக ஒரு அங்கத்தவரை நியமிப்பதில் இணக்கம் ஏற்படாமையே தன்னால் அதனை நிறுவ முடியவில்லை என சனாதிபதியால் காரணம் கூறப்பட்டும் வந்தது. இவ்வாறான பிரதான தேசிய நிறுவனங்களுக்கு தனது விருப்புரிமையினைப் மாத்திரம் பயன்படுத்தி சனாதிபதி நியமனங்களைச் செய்தமை அந்நியமனங்கள் மீதான நம்பகத்தன்மை, சட்ட ரீதியான அந்தஸ்து என்பவற்றை நலிவுறச் செய்துள்ளது.

இவற்றின் காரணமாக இந்நிறுவனங்கள் மீது பொதுமக்களினதும் சர்வதேச நாடுகளினதும் நம்பிக்கை அதுவும் தேசிய மனித உரிமைகள் ஆணைக்குழு உட்பட அனைத்து நிறுவனங்கள் மீதும் மிகத் தாழ்ந்த நிலையிலேயே உள்ளன. எவ்வாறாயினும், இப்போது திரு. மாயாதுன்னே என்பவரை நியமிக்க ஏற்பட்டுள்ள உடன்பாட்டால் அரசியலமைப்பு சபை உருவாக்கப்பட்டு அதன் நடவடிக்கைகள் இடம்பெற வாய்ப்பேற்பட்டுள்ளது. இந்த அரசியலமைப்பு சபை நிறுவப்பட்டவுடன் அதன் பரப்பெல்லைக்குள் வரும் நிறுவனங்களை அதன் தீர்மானங்களின்படி மீள நியமிக்கும்படி கேட்டுக்கொள்கிறோம். அதுவே நல்லாட்சி மீண்டும் மலர வழி வகுக்கும் என நம்புகிறோம்.

**கையெழுத்திட்டவர்கள்**

யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கான கழகம்

தொடர்பாடல் பயிற்சிக்கான மையம்

வீட்டு உரிமைகள் மற்றும் வெளியேற்றப்பட்டவர்களுக்கான மையம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமூக சமயம் என்பவற்றிற்கான மையம்

பெண்களும் அபிவிருத்திக்குமான மையம் - யாழ்ப்பாணம்

கிழக்கின் சுயமாக சார்ந்திருக்கும் சமூக விழிப்புணர்வு நிறுவனம் - மட்டக்களப்பு

கூடிவாழ்வதற்கான நிறுவனம்

சுதந்திர ஊடக இயக்கம்

கம்பஹா மாவட்ட மனித உரிமைகளுக்கான பிரசைகள் குழு

இன்போர்ம்

ஜனவாபொட கேந்திரய

சட்டம் மற்றும் சமூக நம்பிக்கை நிதியம்

மார்கா நிறுவனம்

மனித உரிமைகளுக்கும் சனநாயகத்திற்குமான மன்னார் பெண்கள்

இலங்கை தாய்மாரும் பெண்குழந்தைகளும்

முஸ்லிம் தகவல் மையம் - இலங்கை

முஸ்லிம் பெண்களுக்கான ஆராய்ச்சி மற்றும் செயல் அரங்கம்

நீலன் திருச்செல்வம் நம்பிக்கை நிதியம்

இலங்கை தேசிய சமாதானப் பேரவை

சமூகத்தின் மீள் எழுச்சிக்கான மக்கள் இயக்கம்

பிரயந்தா மக்கள் இயக்கம்

சமூக விஞ்ஞானிகள் சங்கம்

சுவீடெப் - மட்டக்களப்பு

பெண்கள் மற்றும் ஊடகங்களுக்கான கூட்டமைப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முரண்பாடான கொள்கை பிரகடனங்கள் முழு நாட்டிற்கும் தீமையை ஏற்படுத்தும்

01-07-2008

மனித உரிமைகள் மீறப்படலும் குற்றமிழைத்தவர்கள் தண்டனையிலிருந்து விலக்குரிமை அனுபவிப்பதும் மிக மோசமான நிலைக்கு சென்றுள்ளதால் நாட்டின் எதிர்கால நலன்கள் பெரிதும் பாதிப்புக்குள்ளாகும் நிலைபற்றி அஞ்சவேண்டியுள்ளது. அடுத்துவரும் மாதங்களில் பல சர்வதேச நிகழ்ச்சிகள் இலங்கையில் இடம்பெறவுள்ளன. சார்க் உச்சிமகாநாடு அடுத்தமாதம் இடம்பெறவிருக்கின்றது. அதனால், சமாதானம் தொடர்பாக சில சார்பானதும் சிறந்ததுமான மாற்றங்கள் ஏற்படக்கூடும் என்ற நம்பிக்கைகளுக்கும் இடம் ஏற்பட்டுள்ளது.

இருந்தபோதிலும் கொழும்பு உட்பட்ட நாட்டின் பல இடங்களிலும் மனித உரிமை மீறல்கள் தொடர்ந்து ஏற்பட்டு வருவது காரணமாகவும் குற்றமிழைத்தவர்கள் தண்டனைகளிலிருந்து விலக்கீட்டு உரிமையினை அனுபவித்துவருவது காரணமாகவும் ஐரோப்பிய யூனியனிடமிருந்து ஜி.எஸ்.பி. வரிச்சலுகையை பெறுதல் உட்பட்ட பல்வேறு நாட்டு நலன் தொடர்பான நோக்கங்களை ஈடேற்றி கொள்வதற்கான சாதக நிலைமைகள் நாட்டிற்கு இல்லாதொழிந்து செல்வது குறித்து தேசிய சமாதானப் பேரவை துயரடைந்துள்ளது.

இலங்கை அச்சுக் கூட நிறுவனத்தில் பணிபுரியும் பத்திரிகையாளர் நாமல் பெரேரா கொழும்பில் வைத்து வெள்ளை வானில் வந்த ஆயுதக் குழுவினரால் தாக்கப்பட்டமை குறித்து தேசிய சமாதானப் பேரவை தனது கண்டனங்களைத் தெரிவித்துக் கொள்கிறது. அவரும் அவருடன் காரை செலுத்திவந்த பிரித்தானிய உயர் தூதுவராலயத்தின் அரசியல் அலுவலர் மகேந்திரா ரட்ணவீரவும் காரில் வைத்தே கொடுமையான முறையில் ஆயுதங்களால் தாக்கப்பட்டுள்ளனர். இலங்கை அச்சுக்கூட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறுவனத்திற்கு எதிராக அரசாங்க கட்டுப்பாட்டில் உள்ள செய்தித்தாள் ஒன்று அவதூறு கூறும் வகையில் கதை ஒன்றை வெளியிட்டது தொடர்பாகவும், சற்று சில தினங்களுக்கு முன்னர் இராணுவ சீருடை அணிந்த ஆயுததாரிகள் சிலர் அங்கு வந்து அலுவலகத்தை தேடியமை காரணமாகவும் சட்ட நடவடிக்கை மேற்கொள்ள தீர்மானித்ததனை அடுத்து இத்தாக்குதல் இடம்பெற்றுள்ளது.

சமூகத்தில் சுதந்திரமான குரல் எழுப்புபவர்களை இவ்வாறு கடுமையான தாக்குதல்களுக்கு உள்ளாகச் செய்வது இன்று இலங் கையில் ஏற்பட்டு வரும் ஆனால், ஏற்றுக்கொள்ளப்பட முடியாத நிகழ்வுகளாகவும் மக்களது வாழ்க்கையின் யதார்த்தமுமாகிவிட்டது. நாட்டின் அதி சிரேஷ்ட தலைவர்களான சனாதிபதி மகிந்த ராஜபக்ச போன்றோர் மீண்டும் மீண்டும் மக்களது சனநாயக உரிமைகளை பாதுகாக்கும் பொருட்டு விடுக்கும் கோரிக்கைகளின் பின்னரும் மனித உரிமை மீறல்கள் தொடர்வது குறித்து பெரும் வேதனையடைகிறோம்.

அத்துடன் அரசாங்கத்தின் அனைத்து அலுவலர்களும் ஒரே தொனியில் மனித உரிமைகள் மற்றும் சனநாயக உரிமைகள் என்பன தொடர்பாக பேசாதது குறித்தும் வேதனையடைகிறோம். அரசாங்கம் சனநாயக சுதந்திரங்கள், மனித உரிமைகள் என்பன நாட்டில் பேணப் படுவதனை உறுதிப்படுத்துவதுடன் அவை தொடர்பாக ஒரே தொனி யிலும், ஒரு சீராகவும் கருத்து வெளியிடுவதனை உறுதி செய்யுமாறும் கேட்டுக் கொள்கிறோம். இதனை செய்யாத விடத்து அடக்குமுறையின் மூலம் ஒரு சிலர் அடையும் நலன்களையும் ஆர்வங்களையும் விட அதிகளவான நட்டங்கள் நாட்டிற்கு வந்துசேரலாம் என அஞ்சுகிறோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிழக்கு மாகாண தேர்தலின் பின்னர் சனநாயகப் பெறுமானங்களை அதிகரிக்கச் செய்தல் வேண்டும்

27-05-2008

கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம்கள் வாழும் பகுதிகளில் ஏற்பட்டுள்ள வன்முறையிலான மோதல்கள் காரணமாக பலர் கொல்லப்பட்டுள்ள தால் பதற்றங்கள் பெருமளவில் அதிகரித்து செல்லும் நிலைவரம் காணப்படுகிறது. கிழக்கு மாகாண சபைத் தேர்தல்களில் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் (த.ம.வி.பு.) இயக்கத்தினரும் போட்டியிட்டனர். அத்தேர்தலின் போது ஆயுதம் தாங்கிய குழுவினது பிரசன்னம் காரணமாக தேர்தலின் பின்னர் மோதல்கள் வெளிப்படையாகவே இடம்பெற்றன.

த.ம.வி.பு. இயக்க அங்கத்தவர்கள் முஸ்லிம் சமூகத்தினருக்கு எதிராக முரண்படுகின்றமையும் தேர்தலின் போது அளித்த வாக்குறுதிகள் மீறப்பட்டமையும் காரணமாக ஏற்பட்ட ஆழ்ந்த சந்தேகங்களையும் விரக்தியினையும் இப்போதைய மோதல்கள் பிரதிபலிப்பதாக உள்ளன. த.ம.வி.பு. இயக்கத்தினரால் ஆயுதங்கள் பயன்படுத்தப்படுதல் ஏற்றுக் கொள்ளப்பட முடியாததாகும். அவர்கள் கட்டுப்படுத்தப்படாது ஆயுதங்களுடன் செயற்பட விடப்பட்டால் மோதல்கள் மேலும் அதிகரிப்பதுடன் தமிழ் சமூகத்தினருக்கும் முஸ்லிம் சமூகத்தினருக்கும் இடையே பதற்றங்கள் அதிகரித்து செல்லலாம் என்பதால் இந்நிலை உடனடியாக நீக்கப்படவேண்டும் என தேசிய சமாதானப் பேரவை நம்புகின்றது.

கிழக்கு மாகாணத்தில் நடைபெற்ற தேர்தலில் சில குறைபாடுகள் நிலவிய போதிலும், அம்மாகாண மக்கள் சனநாயக முறையில் தமது எதிர்காலத்தை தீர்மானித்துக்கொள்ள எடுக்கப்பட்ட முக்கியமான ஒரு படி என அதனைக் கூறலாம். தேர்தலை அடுத்து வரும் காலப்பகுதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசாங்கமும் கிழக்கு மாகாணத்திற்கு புதிதாக தெரிவுசெய்யப் பட்டுள்ள மாகாண சபையும், அப்பிரதேச மக்களுக்கு சனநாயக செய்முறைகளை வழங்குவதற்கான தமது ஈடுபாட்டினை காட்டுவ தற்கும், இனங்களிடையே சுமூகமாக இணக்கத்தினை ஏற்படுத்துவ தற்கும் கிடைத்துள்ள இன்னுமோர் அரிய வாய்ப்பாக தேர்தலை அடுத்து வரும் காலப்பகுதி அமையும் என நம்புகிறோம்.

த.ம.வி.பு. இயக்கத் தலைவர் முதலமைச்சர் பிள்ளையான், முஸ்லிம் மக்களது தலைவரும் ஆளுங்கட்சி ஆதரவாளருமான எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாவையும் எதிரணித் தலைவர் ரவூப் ஹக்கீமையும் சந்தித்துப் பேச சம்மதம் தெரிவித்துள்ளமையினை நாம் வரவேற்கின்றோம். இவர்கள் யாவரும் கூட்டாக சமாதானத்திற்கும், வன்முறையின்மையினையும் மக்கள் மத்தியில் ஏற்படுத்த கோரிக்கை விடுவதனையும் அவர்களுடைய அங்கத்தினர்கள் அதற்கேற்ப நடந்து கொள்வதனை உறுதி செய்யுமாறும் நாம் வற்புறுத்தி கேட்டுக் கொள்கின்றோம்.

த.ம.வி.பு. இயக்கத்தினர் ஆயுததாரிகளாக தொடர்ந்தும் செயற்படு வதற்கு அனுமதிப்பது தொடர்பாக அரசாங்கத்தினை மீள்பரிசீலனை செய்யுமாறும் தேசிய சமாதானப் பேரவை கேட்டுக் கொள்கின்றது. சனநாயக வாழ்விற்கு திரும்பியுள்ள இக்குழுவினருக்கு அதிகபட்ச பாதுகாப்பினை வழங்குவதன் மூலம் ஆயுததாரிகளாக தொடர்வதனை பற்றி மாற்று ஏற்பாடுகள் செய்ய வழி ஏற்படலாம். இவற்றுடன் சட்ட ரீதியான அரசினுடைய ஆயுதம் தாங்கிய பாதுகாவலர்களான பொலிஸ் படையினரும் மற்றும் ஏனைய ஆயுத படையினரும் சட்டத்தை அமுலாக்கம் செய்வதில் எவ்வித குருட்டுத்தனத்துடனும் எவரையும் பக்கச்சார்புடன் ஆதரிக்குமாறு நிர்பந்திக்கப்படாமல் சுதந்திரமாக செயற்பட விடுதலும் அத்தியாவசியமாகும்.

சிவில் சமூகத்தின் அங்கத்தவர்கள் என்ற வகையில் நாம் கிழக்கு மாகாணததிற்கு சனநாயக செயற்பாடுகளை நோக்கிய நிலைமாற்றம் ஏற்படுவது குறித்து ஆதரவு தெரிவிப்பவர்கள். எனவே கிழக்கு மாகாணசபை தேர்தலின் பின்னர் அங்கே சமாதான சகவாழ்வுக்கான வாய்ப்புக்கள் பாதிப்புக்குள்ளாவது பற்றி ஆழ்ந்த வேதனைக்குள்ளாகி யுள்ளோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறிய ரக ஆயுதங்கள் பெருகி வருகின்றமை எம்மை கவலை யடையச் செய்கிறது. சனநாயக செய்முறைக்கு வரும் முன்னாள் ஆயுத குழுக்களை ஆயுதம் தாங்கியவர்களாக தொடர்ந்தும் செயற்பட அனுமதிப்பதும், பொது மக்களுக்கு பாதுகாப்பு வழங்குவதற்காக பொதுமக்களிடையே ஆயுதங்களை விநியோகித்தலும் பெரும் வேதனைக்குரிய நிலைமைகளாகும். இவ்வாறான நடவடிக்கைகள் தீவிரமான இராணுவ மயமாக்கலுக்கே இட்டுச் செல்வன. அதனால், இறுதியில் நாட்டில் சட்டத்தின் அடிப்படையிலான ஆட்சியின் வீழ்ச் சிக்கு வழிவகுக்கப்படுவதுடன், அதிலிருந்து எம்மை விடுவித்துக் கொள்வது என்பது பின்னர் எமக்கு முற்றாக இயலாததாகிவிடலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஊடக சுதந்திரம் மீது காட்டப்படும் முரண்பாடான நிலைப்பாட்டினால் குற்றவாளிகளை தண்டனையிலிருந்து விலக்களிப்பது ஊக்குவிக்கப்படுகின்றது.

30-05-2008

பத்திரிகையாளர்களை கொன்றும், அச்சுறுத்தியும் அவர்களை வெளிப் படையாக கருத்து தெரிவிக்க விடாது செய்வது இலங்கையில் ஒரு பெரும் பிரச்சினையாக காணப்படுகிறது. கடந்த இரண்டு வருடங்களில் கொல்லப்பட்ட ஒன்பதாவது பத்திரிகையாளர் பரணி ரூபசிங்கம் தேவகுமாரின் மரணத்தை ஒட்டி தேசிய சமாதானப் பேரவை தனது கண்டனத்தை தெரிவித்துக் கொள்கிறது. அவர் பயணம் செய்த போது கொடுமையான முறையில் வெட்டிக் கொலை செய்தமையை அறிந்து நாம் அனைவரும் அச்சமடைந்துள்ளோம். கொழும்பில் வைத்து சிரேஷ்ட பத்திரிகையாளர் கீத் நொயாரும் கொடுமையான வகையில் அடித்து சித்திரவதைக்குள்ளாகியதனை அடுத்து இந்த படுகொலையும் இடம்பெற்றுள்ளது.

சர்வதேச அனுபவங்களிலிருந்து எந்தவொரு அரசியல் தீர்வும் அந்நாட்டு மக்களால் ஏற்றுக் கொள்ளப்படுவதாயிருந்தால் மட்டுமே வெற்றியடைய முடியும் என்பது தெரியவந்துள்ளது. மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்துவதில் ஊடகங்கள் மத்திய பங்கினை வகிப்பவை. அவர்கள் மத்தியில் பிரச்சினைகளையும் அவற்றிற்கு ஏற்ற அரசியல் தீர்வுகள் என்பன பற்றி விளக்கிக்கூறி அவற்றின் மூலம் மக்களுடன் இணைந்து, நிலைத்து நிற்கக்கூடிய அரசியல் தீர்வுக்கான ஆணையைப் பெற்றுக்கொள்ள முடியும்.

அரசாங்கம் தொடர்ந்தும் இன முரண்பாடுகளுக்காக அரசியல் தீர்வு ஒன்றினையே தான் நம்பியிருப்பதாகவும் அதற்கான வசதிகளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழங்குவதற்காகவே இராணுவ நடவடிக்கைகள் மேற்கொள்வதாக கூறிவருகிறது.

இத்தகைய நிலைமைகளில் யாழ்ப்பாணத்தில் தேசிய தொலைக் காட்சி வலைப்பின்னல் அமைப்பில் பணியாற்றி வரும் பரணி ரூபசிங்கம் தேவகுமாரின் கொலை காரணமாக வடக்கு யுத்த வலயத் தில் இருந்து வரக்கூடிய சுதந்திரமான தகவல் பரிமாற்றம் மேலும் தடைப்படலாம். சிரேஷ்ட பத்திரிகையாளரான ஜே.எஸ்.திஸ்ஸநாயகம் கடந்த மூன்று மாதங்களாக நீதிமன்றத்திற்கு கொண்டு செல்லாததும் எதுவித குற்றச்சாட்டும் இன்றியும் சிறையில் அடைத்து வைத்திருப்பது தொடர்பாகவும் நாம் மீண்டும் கரிசணத்துடன் எதிர்ப்பை தெரிவிக் கின்றோம்.

பாதுகாப்பு அமைச்சின் சிரேஷ்ட அதிகாரி வெளியிட்டுள்ள அறிக்கையிலும் இராணுவத்தினையும் அதன் தலைமைத்துவத்தையும் பற்றி ஊடகங்களும் அரச கட்டுப்பாட்டில் உள்ள ஊடகங்களும் விமர்சிக்கக்கூடாதென்றும் அவற்றிற்கு அரசாங்கத்தைப் பற்றி விமர் சிக்க உரிமை கிடையாது என்றும் கூறியுள்ளமை எம்மை பெரிதும் சங்கடத்திற்காளாக்கியுள்ளது.

இது அரசாங்கத்தின் கொள்கையல்ல என ஊடக அமைச்சர் கூறியிருப்பதனை நாம் வரவேற்கின்றோம். எனவே, ஊடகங்கள் தொடர்பான கொள்கைபற்றிய ஒன்றுபடுத்தப்பட்ட கருத்தை அரசாங்கம் எமக்கு தெளிவாக்கும்படி கேட்டுக் கொள்கின்றோம். முரண்பாடான அறிக்கைகள் காரணமாக வேறான குழுக்கள் குற்றமிழைத்துவிட்டு தண்டனைகளிலிருந்து விலக்களிக்கப்படலாம் என்ற உற்சாகத்தில் மென்மேலும் ஊடகங்களுக்கு எதிராக செயற்படும் ஆபத்தினை தோற்றுவிக்க வழிவகுக்கலாம்.

உண்மை நிலைமையை மக்களிடம் வெளிப்படுத்தவேண்டி சேவை புரிவதற்காக தம்மை அர்ப்பணித்து கொண்டு தமது வாழ்வுக்கு இடர்களை நோக்கிய போதிலும் கூட, யதார்த்தங்களை வெளிப்படுத்து வதற்காக ஊக்கத்துடனும் ஈடுபாட்டுடனும் முன்வந்துள்ள பத்திரிகை யாளர்களுக்கு தேசிய சமாதானப் பேரவை தனது கூட்டொருமை சார்ந்த ஆதரவினைத் தெரிவித்துக்கொள்கிறது. ஆபத்துக்கள் நிறைந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடர்கள் பலகாணப்படும் போதும்கூட தமது பணியைத் தொடர்ந்தும் ஆற்றிவரும் ஊடகவியலாளர்ளை வியந்து பாராட்டுகின்றோம்.

தேசிய விவகாரங்கள் தொடர்பான தகவல்களை பெற்றுக் கொள்ளும் வசதிகளை அணுகும் உரிமை மக்களுக்கு உண்டெனபதால் இலங்கையில் பத்திரிகையாளர்களது பாதுகாப்பினை உறுதி செய்யும் வகையில் அவர்களுக்கான பாதுகாப்பு பொறிமுறைகளை பொருத்த மான வகையில் அமைத்து நடைமுறைப்படுத்துமாறு அரசாங்கத்திடம் கேட்டுக்கொள்கின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தண்டிக்கப்பட வேண்டியவர்களை பாதுகாக்கும் சூழலை சுதந்திர நிறுவனங்கள் சோதிக்கலாம்

27-05-2008

கொழும்பு உப நகரப் பகுதியான தெஹிவளையில் பெரிதும் சந்தடியான நேரத்தில் பிரயாணிகள் நெருக்கமாக கூடியிருந்த புகையிரதத்திற்கு குண்டு வைத்து தகர்த்ததனால் 9 பேர் கொல்லப்பட்டதுடன் 60 பேர் படுகாயமடைந்துள்ளனர். இந்தப் படுகொலை சம்பவத்தின் போது தப்பிப்பதற்காக புகையிரதத்திலிருந்து வெளியே பாய்ந்து காயமடைந்தவர்களும் இவற்றிலடங்குவர். இச்சம்பவம் புகையிரத வண்டியினுள் பொருட்கள் வைப்பதற்கான தட்டில் பொருத்தி வைக்கப்பட்டிருந்த குண்டினால் ஏற்பட்டதாக கூறப்படுகிறது. அரசாங்கம் தமிழீழ விடுதலைப் புலியினரே இதற்கு பொறுப்பென குற்றஞ்சாட்டியுள்ளது.

இந்தப் படுகொலைகள் சம்பவத்தை தேசிய சமாதானப் பேரவை கண்டிக்கின்றது. கடந்த இரண்டு வருடங்களாக அரசாங்கத்திற்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையே யுத்தம் மீண்டும் பெரியளவில் ஆரம்பித்ததன் பின்னர் பொதுமக்களை இலக்காக வைத்து நடாத்தப்படும் தாக்குதல்களே யுத்த பாணியாகிவிட்டது.

தேசிய சமாதானப் பேரவை தமிழீழ விடுதலைப் புலிகளின் நிருவாக மையமான கிளிநொச்சிக்கருகில் வைத்து பிரயாணிகளுக்கான வேன் ஒன்று தொலைக்கட்டுபாட்டில் இயக்கப்படும் கிளைமோர் கண்ணிவெடித் தாக்குதலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளமை தொடர்பாகவும் தனது கண்டனத்தைத் தெரிவித்துக் கொள்கிறது.

இத்தாக்குதலில் 20 பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளனர். இதுவும் அப்பாவி பொதுமக்களை இலக்காகக் கொண்ட தாக்குதலாகும். அவர்களில் பலர் குழந்தைகளாவர். தமிழீழ விடுதலைப் புலிகள் இத்தாக்குதலை இலங்கை இராணுவத்தின் ஆழ ஊடுருவும் தாக்குதல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூலமே' செய்திருப்பதாக அறிவித்துள்ளபோதிலும் இலங்கை இராணுவம் அதனை நிராகரித்துள்ளது.

அன்றாடம் இடம்பெறுகின்ற பொதுமக்கள் கொல்லப்படுதல், ஆட்கடத்தல் என்பன பற்றியும் அவற்றிற்கு எதிராகப் பேச முடியாது அச்சுறுத்தல்களுக்குள்ளாகியிருப்பது பற்றியும் தகவல்கள் வெளி வந்தவண்ணம் உள்ளன. இவ்வாறனவற்றில் அண்மைக்காலத்தில் கொழும்பைச் சேர்ந்த வெள்ளை வான் ஒன்றில் பொலிஸ் சீருடை யணிந்த ஒருவர் உட்பட வந்த சிலர் மட்டக்களப்பில் வீரக்குட்டி சுந்திர லிங்கம் என்பவரை கடத்திச் செல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

'கிழக்கின் சுயமாக தம்மில் தங்கியுள்ள சமூகத்தினை விழிப்புணர் வடையச் செய்யும் நிறுவனத்தின் பணிப்பாளர் இது தொடர்பாக செய்த முறைப்பாட்டின்படி கடத்தப்பட்டவர் மட்டக்களப்பைச் சேர்ந்த ஒரு சாரதியெனத் தெரியவருகிறது. மேற்படி நிறுவனத்தின் பணிப்பாளர் மற்றும் அவரது குழுவினருக்கு முன்னால் வைத்து அவர் (சாரதி) கடுமையாகத் தாக்கப்பட்டதுடன் மே 15ஆம் திகதி கடத்தியும் செல்லப்பட்டுள்ளார். அன்று முதல் அவர் காணாமல் போயுள்ளதுடன் அவருடைய சகாக்கள் அவரை கண்டறியச் செய்த அனைத்து முயற்சி களும் பலனளிக்காது போயுள்ளன.

இவ்வாறான வன்முறைச் சம்பவங்கள் அண்மைக்காலமாக வேகமாக அதிகரித்துச் செல்வதுடன் கட்டுப்பாட்டையம் மீறி சனநாயக ஆட்சியின் அத்திவாரத்தையே அச்சுறுத்துவதாகவும் காணப்படு கின்றன.

இவற்றின் காரணமாக நீண்ட காலத்திலும் கூட வன்முறையற்ற நிலைவரத்தினையும் சனநாய பெறுமானங்களையும் மீண்டும் கொண்டு வருதல் பெரிதும் கடினமாகவே இருக்குமோ என அஞ்சுகிறோம். இவற்றில் மிக மோசமானது மனித உரிமைகள் மீறல் தொடர்பான குற்றங்களை புரிபவர்கள் தண்டனைகளிலிருந்து விலக்களிக்கப்படுவ தாகும்.

குற்றம் புரிந்தவர்கள் பற்றிய புலனாய்வு நடவடிக்கைள் எவையுமே அவர்களை கண்டறிந்ததாகவோ கைது செய்ததாகவோ காணப்பட வில்லை. இவ்வாறாகக் குற்றவாளிகள் கண்டறியப்படாததால் மக்கள் வதந்திகளையும் மற்றும் புரளிகளையுமே நம்பியவர்களாக உள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவற்றின் பின்புலமானவர்களாக இருக்கும் சக்திகளான அரசாங்கம் மற்றும் தமிழீழப் புலிகள் தமது கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் பகுதிகளில் வாழும் மக்கள் அச்சத்துடன் வாழ்ந்து வருகின்றனர்.

'இலங்கையில் தேவையான நிறுவன சட்டக அமைப்புக்கள் இருந்த போதிலும் அவை தமது கடமைகளை பாதிப்புமிக்க வகையில் செய்து முடிக்கத் தேவையான அதிகாரங்கள் (வலிமைப்படுத்தல்) அவற்றிற்கு வழங்கப்படுதல் அத்தியாவசியமாயுள்ளது' என ஐக்கிய அமெரிக்காவிலிருந்து வருகை தந்திருந்த மனித உரிமைகளுக்கும் தொழிலாளர்களுக்குமான பதில் செயலாளர் எரிக்கா பார்க்ஸ் ரக்ல்ஸ் என்பவர் கருத்து வெளியிட்டுள்ளார். உள்நாட்டு மனித உரிமைகளுக்கான தேசிய நிறுவனங்கள் எவ்வாறான கடமைகளை ஆற்ற வேண்டும் என்ற நோக்கங்களுக்காக உருவாக்கப்பட்டனவோ அவ்வாறான கடமைகளை எதிர்பார்த்த முறையில் அவை செய்து முடிக்க முடியு மானால் சர்வதேச மனித உரிமைகளுக்கான நிறுவனங்களுக்கு வேலைகள் ஏதும் இருக்காது.

துரதிஷ்டவசமாக பாராளுமன்றத்தால் 2001ஆம் ஆண்டு அங்கீ கரிக்கப்பட்ட அரசியலமைப்புக்கான 17ஆவது திருத்தச் சட்டத்தை சனாதிபதி மகிந்த ராஜபக்ச நடைமுறைப்படுத்த தயங்குகிறார். அதனால் அந்த நிறுவனங்களின் சுதந்திரமும், நேர்மையான நடவடிக் கைகளின் காரணமாக அரச நிறுவனங்கள் மீது சனநாயக அமைப்பில் விதிக் கப்படும் 'சமநிலைத் தத்துவம்' (தவறான வழி செல்லாது சரியாக நடைபெறுவதனை பரிசீலிக்கும் தத்துவம்) முடக்கப்பட்டுள்ளமை துரதிஷ்டவசமாகும்.

நம்பிக்கைக்கும், நம்புதிறனுக்கும் பாத்திரமானதும், தனிப்பட்ட சுய அரசியற் கருத்துக்களுக்கு இடமளிக்காது அவ்வுணர்வுகளுக்கு அப்பால் நின்று அர்ப்பணிப்புடன் செயற்படக்கூடியவர்களையும் சமூகத்தின எஞ்சிய பிரிவினராலும் நம்பிக்கை வைக்கக்கூடியவர் களான பிரமுகர்களையும் அரசாங்கமும் எதிரணியினரும் பிரேரித்து பொலிஸ், நீதி, அரச சேவை, தேர்தல், மனித உரிமைகளுக்காக ஆணைக்குழுக்களுக்கு தலைமைத்தாங்கி செயற்படவும் அதன் மூலம் உடனடியாக 17வது திருத்தச் சட்டத்தினை நடைமுறைப்படுத்தும் படியும் தேசிய சமாதானப் பேரவை கேட்டுக் கொள்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பத்திரிகையாளர் கடத்தப்பட்டு பின்னர் விடுதலைச் செய்யப்பட்டார்: குற்றமிழைத்துவிட்டு தண்டனையிலிருந்து பாதுகாப்பு பெறும் நிலைமைகளை ஒரு முடிவுக்கு கொண்டு வருவோம்

23-05-2008

''அரசு'' (நேஷன்) செய்தித்தாளின் இணை ஆசிரியரான சிரேஷ்ட பத்திரிகையாளர் கீத் நொயார் கொழும்புக்கு வெளியே உள்ள வாழ்விட உபநகரில் அமைந்துள்ள அவருடைய வீட்டிற்கு சற்று வெளியிலிருந்து கடத்திச் செல்லப்பட்டமை, இலங்கையில் மனித உரிமைகள் மற்றும் ஊடகங்கள் எந்தளவுக்கு பாதிக்கப்படக்கூடியனவாக உள்ளன என்பதனை எடுத்துக்காட்டும் அதிர்ச்சி தரும் சம்பவமாகும்.

திரு. நொயார் தனது செய்தித் தாளின் பதிப்பாசிரியராகவும் அதேவேளையில் பாதுகாப்பு தொடர்பான அப்பத்திரிகையின் தனிப் பகுதி ஒன்றை எழுதுபவராகவும் பணியாற்றுபவர். மனித உரிமை மீறல்களினால் பாதிப்புக்குள்ளாகுபவர்கள் பெருமளவுக்கு பாதிப் படையச் செய்யும் இவ்வாறான ஆட்கடத்தலை தேசிய சமாதானப் பேரவை கண்டிக்கின்றது. ஐ.நா. சபையின் மனித உரிமைகள் பேரவையில் இலங்கை மீண்டும் அங்கத்துவம் பெற தெரிவுசெய்யத் தவறிய சந்தர்ப்பத்தில் இச்சம்பவம் நடைபெற்றமை வியப்படைய வேண்டியதில்லை. அச்சபையில் அங்கத்துவம் வகிப்பதானால் அதற்கு தமது நாட்டில் மனித உரிமை உயர் மட்டத்தில் பேணப்பட்டு வருவது அத்தியாவசியமானதாகும்.

இவ்வாறான ஆட்கடத்தல் இடம்பெறுவதில் கவனிக்கத்தக்க பண்பு யாதெனில், இவை அரசாங்கத்தின் உயர்மட்ட பாதுகாப்பு மற்றும் பரிசோதனை சாவடிகள் ஒழுங்கான இடைவெளிகளில் காணப் படும் பகுதிகளில்தான் ஏற்படுகின்றன என்பதாகும். ஆட்கடத்தற்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரர்கள் தாம் கடத்தும் நபர்களை இத்தகைய பாதுகாப்பு சாவடிகளில் பாதுகாப்பு படையினரிடம் சிக்காமல் கடத்தி செல்வது வியப்பான தாகும். இவற்றை விடப் பத்திரிகையாளர்கள் மீது பல தாக்குதல்களும் அண்மைக்காலங்களில் நடைபெற்றுள்ளன. சில சந்தர்ப்பங்களில் அவர்கள் கொல்லப்பட்டும் உள்ளனர். அப்படி பாரதூரமாக குற்றங்கள் நடைபெற்ற போதிலும் குற்றவாளிகள் தண்டிக்கப்படாமல் தப்பிச் சென்றுள்ளனர்.

அரசாங்கத்தின் உயர் மட்டத்தினருக்கு செய்த விண்ணப்பங்களின் பேரில் கீத் நொயார் விடுதலை செய்யப்பட்டமை குறித்து நாம் மகிழ்ச்சியடைகின்ற அதே வேளையில் கடத்தற் சம்பவம் பற்றி கேட்டு பெரிதும் அச்சமடைந்திருக்கின்றோம். அவர் நையப் புடைக்கப் பட்டுள்ளார்.

அவருடைய குடும்பத்தாருடனும் அவரை நேசிப்பவர்களுடனும் நாம் இணைந்து அவர் விரைவில் குணமடைய வேண்டுகிறோம். இவரை கடத்தத் தூண்டுமாறு கட்டளை பிறப்பித்தவர்களும், கடத்திய வர்களும் எந்தளவுக்கு விரைவாக இனங்காணப்பட்டு நீதியின் முன் நிறுத்தப்படுகின்றனரோ, அந்தளவுக்கே தனிப்பட்டவர்களது உரிமை களை மதிக்கும் ஒரு சமூகமாக அதுவும் மற்றவர்கள் எத்தகைய கருத்துக்களை கொண்டவர்களாக இருந்தாலும் கூட நாம் முன்நோக்கி பயணம் செய்து ஐக்கியப்பட்ட சனநாயக கருத்துக்களை மதிக்கும் ஒரு தேசமாக மீண்டும் எழுச்சியடைய முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தவறான சனநாய அமைப்பில் யுத்தத்திற்கு எதிராக குற்ற வழக்கு தொடர்வதால் சமாதானத்தை வென்றெடுத்துவிட முடியாது

16-05-2008

கொழும்பின் வர்த்தக பிரதேசமாக கோட்டையில் உள்ள சுறுசுறுப்பாக இயங்கும் வீதியில் கலகத்தடைக்கான பொலிஸாரது பஸ் வண்டியினை இலக்கு வைத்து செய்த குண்டு வெடிப்பு 10 பேரையாவது கொன்றும் அதன் பக்கமாக சென்ற மேலும் 95 பேரை காயப்படுத்தியும் உள்ளது. தமிழீழ விடுதலைப் புலிகளுடைய அடையாளம் தெரியும் இந்த தாக்குதலை தேசிய சமாதானப் பேரவை கண்டிக்கின்றது.

துரதிஷ்டவசமாக இத்தாக்குதல் கொழும்பின் இருதயப் பகுதியான வர்த்தக மையத்தில், ஹில்டன் ஹோட்டலுக்கு அருகாமையிலும் பௌத்த கோயிலுக்கு எதிர்புறத்திலும் இடம்பெற்றுள்ளது. இக்குண்டு தாக்குதல் நடைபெற்ற போது பலலட்சக்கணக்கான இலங்கையர்கள் கௌதம புத்தர் பிறந்த, ஞானம் பெற்ற மற்றும் சமாதியடைந்தமையினை கொண்டாடும் தினத்திற்கு தம்மை தயார் செய்துக் கொண்டிருந்தனர்.

அவருடைய முக்கிய போதனைகளில் முக்கியமானது உயிர்களை காவு கொள்ளக் கூடாது என்பதும் வெறுப்பினை அன்பினாலேயே எதிர்கொள்ள வேண்டும் என்பதுமாகும். ஆனால், புதிதாக தெரிவு செய்யப்பட்ட கிழக்கு மாகாண சபையின் நிருவாகத்தை ஆரம்பித்து வைப்பதற்கான வைபவம் சனாதிபதி செயலகத்தில் நடைபெறுவதனை பாதுகாக்க கலகத்தடை பொலிஸார் அங்கே நிறுத்தி வைக்கப்பட்டிருந் தனர். கிழக்கு மாகாண தேர்தல்கள் நடந்த முறையினை கண்டித்து எதிர்க்கட்சியினர் அப்போது கண்டன ஊர்வலம் செய்யவும் ஏற்பாடு செய்திருந்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிழக்கில் முன்னர் நடைபெற்ற மாகாணசபை, உள்ளூராட்சி சபை தேர்தல்கள் பெருமளவுக்கு தவறான முறைகளிலேயே நடைபெற்றுள்ளன. இலங்கையில் சர்வசன வாக்குரிமை அறிமுகமாகி 75 வருடங்களின் பின்னரும் கூட இவ்வாறாக சனநாயகத்தின் நிலைமையானது ஏமாற்றத்திற்கு உள்ளாகியுள்ளமை அவர்களால் எடுத்துக் காட்டப்பட்டது.

கிழக்கு மாகாணத்து மக்களுக்கு அதிகாரப் பரவலாக்கத்தை பெற்றுக்கொள்வதற்கான நம்பத்தகுந்த ஒரு செய்முறைக்கு வழிவகுத்துக் கொடுத்திருக்கும் சுதந்திரமானதும் நியாயமானதுமான தேர்தல்களை பயன்படுத்தும் வாய்ப்பையும் அவர்கள் பெற்றுக் கொள்ள முடியாது போயுள்ளது. இத்தகைய சூழ்நிலையில் அப்பகுதியில் மனித உரிமைகள் மனிதர்களுக்கான பாதுகாப்பு, அப்பிரதேசத்தின் அபிவிருத்தி ஆகிய மூன்றும் இணைந்து கரம் கோர்த்து செல்வதனை அரசாங்கமும் மாகாண நிருவாகமுமே உறுதி செய்ய வேண்டிய பொறுப்பினைக் கொண்டுள்ளன.

குண்டுத் தாக்குதலில் பாதிப்புக்குளாகியவர்களுக்கும் அவர்களது குடும்பத்தார்களுக்கும் தேசிய சமாதானப் பேரவை தனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறது. அரசாங்கமும் தமிழீழ விடுதலைப் புலிகளும் இராணுவத் தீர்வில் நம்பியிருப்பதனை விட்டு விட்டு இந்த புனித வெசாக் காலத்தில் மனித பெறுமானங்களையும் வன்முறையற்ற தத்துவங்களையும் அடிப்படையாகக் கொண்ட வழியில் பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டு தாம் பிரதிநிதித்துவம் செய்வதாக கோருகின்ற மக்களது ஆர்வங்களை உறுதி செய்யுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனித உரிமைகளுக்கு மதிப்பளிக்குமாறு வெசாக் காலத்தில் விடுக்கும் கோரிக்கை

15-05-2008

முன்னாளில் தமிழ் ஆயுதப் போராட்ட இயக்கமாக செயற்பட்டு இப்போது அரசாங்கத்துடன் இணைந்துள்ள ஈ.பி.டி.பி. கட்சியுடன் இணைந்து செயற்படும் 'மனித கௌரவத்திற்கான அரங்கத்தின்' தலைவராக செயற்பட்ட மகேஸ்வரி வேலாயுதம் கொல்லப்பட்டதோடு அரசியல் சமூகத்தின் இன்னுமோர் வலிமையான ஆளுமை கொண்ட தலைவர் அகற்றப்பட்டுள்ளார். ஏற்கனவே சில கொலைமுயற்சிகளில் இருந்து அவர் தன்னைக் காப்பாற்றிக் கொண்டவர். அதனால் அவருக்கு கொலை அச்சுறுத்தல் இருப்பது பற்றி நன்கு தெரியும்.

அதற்காக அவர் இலங்கை மக்களது உரிமைகளுக்காக பணி புரிவதிலிருந்து ஒதுங்கிக் கொள்ளவில்லை. யுத்தத்தினால் பாதிப்புக் குள்ளாகியவர்களுக்காகப் பணிபுரிந்ததுடன், நாம் ஏற்பாடு செய்த பல நிகழ்ச்சிகளிலும் பங்கு பற்றியதோடு அவர் முரண்பாடுகளில் ஈடுபட்டுள்ள தரப்பினரும் பொறிகளில் சிக்கியுள்ளமை தொடர்பாகவும் கரிசனம் கொண்டிருந்தவர். அவ்வாறான ஒருவரது படுகொலைக்காக தேசிய சமாதானப் பேரவை தனது கண்டனத்தை தெரிவித்துக் கொள்கிறது. அவர் ஊடகங்களினால் அறிவிக்கப்பட்டிருந்த யுத்தத் துடன் தொடர்பானதும் தமிழ் மக்களது மனித உரிமை மீறல்கள் தொடர்பானதுமான சம்பவங்களிலும் கரிசனமான முறையில் தலையிட்டு செயற்பட்டு வந்தார்.

அண்மையில் கிழக்கு மாகாண சபைக்காக தேர்தல்கள் நடைபெற்ற தினத்தன்று பாதுகாப்பு படையினர் பெருமளவில் கடமையின் பொருட்டு குவிந்திருந்த போது கல்முனையில் ஒரு குடும்பத்தின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அங்கத்தவர்கள் முன்னிலையிலேயே அவர்களது இரண்டு இளம் வயது பெண்களை வல்லுறவுக்குட்படுத்தியும் கடத்திச் சென்றமை போன்ற துன்பகரமான நிகழ்ச்சிகள் இடம்பெற்றமை பற்றி ஊடகங் களில் நன்கு வெளிப்படுத்தப்பட்டிருந்தது.

வெள்ளை வான் ஒன்றில் வந்த ஆயுததாரிகளே அச்சிறுமியர் மீது அத்தகைய பாலியல் வன்முறை குற்றம் புரிந்ததாக அக்குடும்பத்தினர் குற்றஞ்சாட்டியுள்ளனர். அச்சிறுமியரது தாயார் பொலிஸ் நிலையம் சென்று இச்சம்பவம் குறித்து முறைப்பாடு செய்ய முயன்றபோது அங்கிருந்த பொலிசார் பெரும்பாலான பொலிஸ் அதிகாரிகள் தேர்தல் கடமைகள் நிமித்தம் அங்கில்லை எனக்கூறி அவரை அங்கிருந்து வெளியேற்றிவிட்டனர். அன்றிரவே முன்னர் வந்த ஆயுததாரிகளே மீண்டும் அந்த வீட்டுக்கு சென்று மூத்த மகளை கடத்திச் சென்று விட்டனர்.

அப்போதிருந்தே அந்தப் பெண் காணாமல் போய்விட்டார். பொலிசாரால் இம்முறைப்பாடு ஏற்கப்படாததிலிருந்து, அரசு எந்தள வுக்கு தண்டனையிலிருந்து குற்றவாளிகளை காப்பாற்றி வருகிறது என்பது தெளிவாகிறது.

இவற்றுடன், கொழும்பில் தமிழர்களை கடத்திச் செல்வதும் அவர்கள் காணாமல் போவதும் ஒரு முடிவுக்கு வந்துவிட்டதாகக் கூறுவதிலும் முரண்பாடான நிலைமைகளையே காண முடிகிறது. சின்னத்துரை வரதராஜன் என்பவர் பிரசித்தி பெற்ற யாழ்ப்பாணத்து டியூசன் மாஸ்டர். அவரும் அவருடைய உறவினரும் கொழும்பின் மத்தியப் பகுதியில் வைத்து கடத்தப்பட்டுள்ளனர்.

அவர்கள் வெள்ளை வான் ஒன்றில் வந்த சீருடை தரித்த ஆயுத தாரிகளால் கொண்டுசெல்லப்பட்டதாகக் கூறப்படுகின்றது. அவர்கள் விசாரணைக்காக கொண்டுசெல்லப்பட்டதாக சாட்சிகள் கூறினர். ஆனால், அவர்கள் மீண்டும் வரவேயில்லை. அவர்களுடைய இருப் பிடத்தை கண்டறிந்து அவர்களை பாதுகாப்பாக அவர்களுடைய குடும்பத்தவருடன் இணைய ஆவன செய்யுமாறு அரசாங்கத்திடம் தேசிய சமாதானப் பேரவை கோருகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்துடன் அரசாங்கம் தனது பாதுகாப்பு உறுப்பினர்களையும் ஒழுங்குமுறையினையும் மீள் ஒழுங்கிற்கு உட்படுத்தி மேற்கூறிய மனித உரிமை மீறல்கள் தொடர்பாக குற்றம் செய்வோரை தண்டனை களிலிருந்து பாதுகாப்பதனால் மென்மேலும் இக்குற்றங்கள் ஏற்படாத வாறு பார்த்துக்கொள்ளுமாறும் நாம் கேட்டுக்கொள்கின்றோம்.

இவ்வாறாக குற்றம் இழைப்போர் தண்டனைகளிலிருந்து பாதுகாக் கப்படும் கலாசாரத்தை அரசாங்கம் இல்லாதொழிக்க வேண்டும். அனைத்து பிரசைகளையும் பாதுகாக்கவேண்டியது அரசு ஆற்ற வேண்டிய முக்கிய கடமையாகும். தமிழ் பொதுமக்களை அரசு காப்பாற்றத் தவறுமேயானால், இலங்கையின் பெரும்பான்மையின அரசுதான் தமிழர்களை ஒடுக்கி நடந்துகொள்வதன் காரணமாக தமிழ் மக்கள் தனிநாடு கோரதூண்டுவதாக சர்வதேச சமூகத்திற்கு செய்திகள் போகும் ஆபத்து ஏற்படலாம்.

இறுதியாக மூத்த பத்திரிகையாளரும், மனித உரிமைகள் ஆர்வலருமான ஜே.எஸ்.திஸ்ஸநாயகத்தை உடனடியாக விடுதலை செய்யுமாறும நாம் அரசாங்கத்திடம் கேட்டுக்கொள்கிறோம். அவர் அரசாங்க காவலில் நீண்டகாலமாக வைக்கப்பட்டுள்ளார். அவர் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் தொடர்புகளை வைத்திருப்பதாக குற்றஞ்சாட்டப்பட்டுள்ளார்.

ஆனால், அவரை இதுவரை எந்த ஒரு சட்ட நீதிமன்றத்திலும் நிறுத்தி குற்றங்களை சுமத்தி வழக்கு நடாத்தவில்லை. யுத்த நிறுத்த உடன்படிக்கை நிலவிய 2002 - 2006 ஆண்டு காலப்பகுதியில் சமாதான செய்முறைகள் இடம்பெற்றபோது பல்வேறு பத்திரிகை யாளர்கள் உட்பட பல ஊடகவியலாளர்களும் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் சட்டபூர்வமானதும், சமாதான தேவைகளுக்குமாக தொடர்புகளை ஏற்படுத்தியிருந்தனர்.

இப்போது புனித நாளான வெசாக் தினத்தை கொண்டாட நாடே தயாராகிவருகின்றது. புத்தபிரான் மனிதர்களுக்கு மாத்திரமன்றி விலங்குகளுக்கும் கூட அனுதாபம் காட்டவேண்டும் என உபதேசித் துள்ளமையினை வெசாக் காலப்பகுதியிலாவது நாம் மறந்துவிட முடியாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனுதாப உணர்வலைகள் எமது நாட்டில் தீர்மானங்களை செய்ப வர்களது இதயங்களை ஊடுருவியும், எமது சமய சம்பிரதாயங்களின் மூலம் பெற்றுக்கொண்ட மெய்யறிவு அவர்களுக்கு வழிகாட்டுதலின் மூலமும் மனித உரிமை மீறல்கள் காரணமாக பாதிக்கப்பட்டவர்கள் மீது அனுதாபத்தைக் காட்ட வழிசெய்யும் நிலைமைகள் ஏற்படுவதோடு அப்பாவி தமிழ் மக்களது உயிர்களுக்கு ஏதும் துன்பம் ஏற்படாத வகையில் நாட்டின் பிரச்சினைகளுக்கு தீர்வினை எட்டவும் வழி ஏற்பட வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிழக்கு மாகாணசபை தேர்தல்கள் மேலும் மனமுறிவுக்கு வழிவகுத்துவிடக்கூடாது

08-05-2008

மே மாதம் 10ஆம் திகதி சனிக்கிழமை கிழக்கு மாகாணத்தில் மிக முக்கியமான தேர்தல் நடைபெறவுள்ளது. அது நாட்டின் எதிர்கால அரசியலின் போக்கில் பெரும் தாக்கத்தினை ஏற்படுத்தவுள்ளதுடன் குறிப்பாக இப்போது இடம்பெற்று வரும் இன முரண்பாடுகள் தொடர் பாகவும் முக்கியமாகிறது. இந்த தேர்தல் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்ததாகும். ஏனெனில் இந்த தேர்தல்தான் முதன் முதலாக கிழக்கு மாகாண மக்களின் அபிப்பிராயங்களையும் எதிர்பார்ப்புக்களையும் கிழக்கு மாகாணத்திற்கு மாத்திரமேயான ஒரு தேர்தலின் மூலம் வெளிப்படுத்துவதற்கான ஒரு வாய்ப்பாக இருக்கின்றது.

அங்கே இடம்பெற்ற தேர்தல் பிரசார காலகட்டத்தில் வெளிப் படையாக வன்முறைகள் குறைந்து காணப்பட்ட போதிலும் வெளித் தோற்றாத ஆனால் மறைமுகமாக ஏற்படுத்தப்படும் அச்சுறுத்தல்கள் ஏற்பட்டுள்ளமை பொறுத்து தேசிய சமாதானப் பேரவை தனது கரிசனத்தை வெளியிடுகிறது. தேர்தல் நியாயமற்ற முறையில் இடம் பெறுமேயானால், அதனால் கிழக்குப் பிரதேச மக்களின் விருப்புக்கள் தேர்தலில் தவறாக பிரதிநிதித்துவப்படும். அம்மக்கள் மூன்று முக்கிய இனங்களையும் கணிசமான விகிதாசாரத்தில் கொண்டு தனித்தன்மை வாய்ந்த வகையில் காணப்படுபவர்கள்.

சனநாயக செய்முறைகள் மூலமாக இன முரண்பாடுகளை நியாய மானதும் சனநாயக முறையிலும் தீர்ப்பதற்கு கொண்டுள்ள அரசாங் கத்தினது அர்ப்பணிப்பினை எடுத்துக்காட்டும் வகையில் எதிர்வரும் தேர்தல்கள் அரசாங்கத்திற்கு ஒரு வாய்ப்பினை அளித்துள்ளதாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேசிய சமாதானப் பேரவை இத்தேர்தலைப் பார்க்கின்றது. இது வரையிலும் அங்கே வன்முறைகள் ஒப்பளவில் குறைந்தளவிலேயே ஏற்பட்டுள்ளமையினை ஒரு சாதகமாக நிலைவரம் என நம்புவதுடன், அது தேர்தல் நடைபெறும் மே மாதம் 10ஆம் திகதி வரை தொடர்வ துடன், தேர்தலின் பின்னரும் அமைதி நிலைமை தொடரும் எனவும் நாம் நம்புகிறோம்.

அதேநேரத்தில் கிடைக்கக்கூடிய ஆதாரங்களில் இருந்து பிரசார மானது கூடிய பாதுகாப்பு நடவடிக்கைகளினைக் கொண்ட ஒரு சூழலில் தான் நடைபெற்று வந்துள்ளது என்றும், அது சுதந்திரமானதும் நியாய மானதுமான தேர்தலுக்கு ஒவ்வாதது எனவும் தெரிய வருகிறது.

தேர்தல் நாளன்று இடம்பெறுவனவற்றை மாத்திரம் வைத்துக் கொண்டு ஒற்றுமையாக நியாயமான முறையில் தேர்தல் நடை பெற்றுள்ளதா என்பதனை நிர்ணயிக்க முடியாது. ஏனெனில் குடிமக்களதும் அரசியல் கட்சிகளினதும் தேர்தல் பங்கேற்பு, சனநாயக செய்முறைகளின் கீழ் ஏற்பட்டதா என்பதனை தீர்மானிப்பதற்கு வேறு பல காரணிகளும் உள்ளன. தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் (த.ம.வி.பு.) இயக்கம் முன்னர் ஒரு போராளி இயக்கமாயிருந்ததாகும். அது தனது சுயபாதுகாப்பிற்கு எனக் காரணங்கூறி இன்னும் ஆயுதங்களை தன்னிடம் வைத்துக் கொண்டிருக்கிறது. இது ஒரு முரண்பாடான நிலைவரமாகும்.

இவற்றுடன் இந்த தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் இயக்கம் அரசாங்கத்துடன் கூட்டு சேர்ந்து தேர்தலில் போட்டியிடுகின்றது. இது தேர்தலில் தவறான நடைமுறைகளை பயன்படுத்தி சமநிலைத் தத்துவ கோட்பாட்டினை கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் ஏற்பாட்டினை அழிவுக்குட்படுத்துவதாகும். சுதந்திரமானதும் நியாயமானதுமான தேர்தல் இடம்பெறுவதற்கான அடிப்படை தேவை என்பது அங்கே போட்டியிடும் தரப்பினர் எவரிடமும் ஆயுதம் இருக்கக்கூடாது. அரசியல் எதிர்ப்பாளர்களையோ அல்லது ஆயுதம் தரித்த கட்சியினர் மீதான அச்சம் காரணமாக அவர்களுடைய ஆதரவாளராக மாறிவிடக் கூடிய வாக்காளர்களையோ அச்சுறுத்தும் சூழ்நிலை ஏற்படாதவாறும் பார்த்துக் கொள்ளவேண்டும். தமிழ் மக்கள் விடுதலைப் புலிகளது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(த.ம.வி.பு.) ஆயுதங்களை கலையுமாறு தேர்தல் கண்காணிப்பு நிறுவனங்கள் நீதிமன்றங்களில் வழக்கும் தொடர்ந்துள்ளன.

சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தல் நடைபெறுவதனை உறுதி செய்ய வேண்டுமானால் அதற்கு ஆயுதம் களைவது தேவை எனப்பட்டது. ஆனால், நீதிமன்றங்களின் அதிகார எல்லைக்குள் இப்பிரச்சினை உள்ளடங்கவில்லை எனக் காரணம் காட்டப்பட்டுள்ளதால் விமோசம் ஏற்படவில்லை.

இத்தேர்தலில் போட்டியிடும் எதிர்கட்சியினரிடமிருந்தும் மற்றும் தேர்தல் கண்காணிப்பாளர்கள், ஊடகங்கள் என்பவற்றிடம் இருந்தும் பெற்றுக்கொண்ட அறிக்கைகளில் இருந்து எதிர்கட்சியினரது தேர்தல் பிரசாரம் கணிசமான அளவுக்கு அச்சுறுத்தல்களால் தடை செய்யப் பட்டிருந்ததாகத் தெரிய வருகின்றது. த.ம.வி.பு. கட்சி தமது அரசியலுக்கு எதிராகப் போட்டியிடுபவர்களை அச்சுறுத்தியுள்ளதாகவும் அதன் மூலம் த.ம.வி.பு. ஆயுதம் தாங்கி பிரசன்னமாயிருக்கும் பகுதிகளில் அவர்கள் பிரசாரம் செய்ய திராணியற்றும் இருந்தனர்.

எதிரணியினர் கிழக்கின் சில பிரதேசங்களில் மிகச் சிறியளவில் மட்டுமே பிரசாரங்களை செய்ததாக தேர்தல் கண்காணிப்பாளர்களும் ஊடகங்களும் அறிந்து தெரிவித்துள்ளனர். சில சந்தர்ப்பங்களில் வாக்காளர்களுக்கு வாக்காளர் அட்டைகள் வழங்கப்படவில்லை என்பதனையும் தமவிபு தாமே தயாரித்த அடையாள அட்டைகளை வாக்காளர்களுக்கு வழங்கி அவற்றை பயன்படுத்தி மோசடியான முறையில் வாக்குகள் அளிக்கப்பட்டுள்ளமையும் மேற்படி சான்றுகள் மூலம் தெரிய வந்துள்ளது.

அரசாங்கம் தேர்தல் அலுவலர்களுக்கும் பொலிசாருக்கும் போதியளவில் அதிகாரத்தினை அளித்து மே மாதம் 10ஆம் திகதி தேர்தல் செய்முறைகளை கையாடி மாற்றங்களை ஏற்படுத்தாது ஒழுங்காக தேர்தல் நடைபெறுவதனை உறுதி செய்ய வேண்டும் என தேசிய சமாதானப் பேரவை கோரிக்கை விடுக்கின்றது. கிழக்கில் வாழும் மக்களை சனநாயக ரீதியாக தமது எதிர்காலத்தை நிர்ணயித்துக் கொள்வதனை வலுப்படுத்தவே இத்தேர்தல் நடாத்தப்படுவதாக நாம் நம்புகிறோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு சில சிறிய குறைபாடுகள் இருந்தாலும் இந்நோக்கம் பெருமளவுக்கு ஈடேற வேண்டும். தேர்தல் செய்முறைகள் அச்சுறுத்தல்களுடனும் ஏனைய தவறான நடைமுறைகளுடனும் நடைபெறக் கூடாது. இறுதி நாட்களிலாவது அவை திருத்தப்படல் வேண்டும். இல்லாவிடின் சமாதானத்தையும் இனங்களுக்கிடையேயான இணக்கத்தினையும் நாட்டில் நிலைநாட்ட முடியாது போவதுடன் ஏற்கனவே வலுவிழந்தும் ஒதுக்கப்பட்டதுமான சிறுபான்மை இனத்தவர்கள் மேலும் பலமிழந்தவர்களாகிவிடுவர் என்பதனை நாம் குறிப்பிட விரும்புகிறோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகளாவிய பெறுமானங்கள் பேச்சுவார்த்தைக்கு அடிப்படையை வழங்குகின்றன

02-05-2008

இலங்கை சமூகத்தில் மானிட, பொருளாதார செலவினங்கள் யுத்தம் காரணமாக எப்போதுமில்லாத அளவில் அதிகரித்து வந்துள்ளன. வடபகுதியில் முகமாலை என்னுமிடத்தில் இடம்பெற்ற யுத்தம் காரணமாக பல நூற்றுக்கணக்கான போராளிகள் ஒன்றில் கொல்லப் பட்டோ அல்லது காயமுற்றோ போனதன் மூலம் போரினால் ஏற்படும் செலவினங்கள் போரின் காரணமாக ஏற்படும் பாரதூரமான செலவினங் களை நினைவுபடுத்துவனவாயுள்ளன.

அத்துடன் பொதுமக்கள் இலக்குகளுக்கு உள்ளாவது அதில் பெரிதும் கண்டிக்கத்தக்கதாகும். கொழும்புக்கு அருகாமையில் உள்ள பிலியந்தலை என்னுமிடத்தில் ஏற்பட்ட பஸ்வண்டி குண்டு வெடிப்பு, யுத்தத்தில் எவ்வாறேனும் வென்று விடவேண்டும் என்ற கொடிய மனப்பான்மை யுத்தத்துடன் இணைந்துள்ளது என்பதற்கான உதாரண மாகின்றது. தேசிய சமாதானப் பேரவை பஸ் குண்டு வெடிப்பினை முற்றாக கண்டிக்கிறது. இக்குண்டு வெடிப்புக்கு தமிழீழ விடுதலைப் புலிகளே காரணம் என அரசாங்கம் கூறுகிறது. நாம் பொதுமக்களது நலன்களை பாதிக்கும் அனைத்து வன்முறைகளையும் கண்டிப்பது போன்றே இதனையும் முற்றாக கண்டிக்கின்றோம்.

நாம் மீண்டும் அரசாங்கத்தினையும் தமிழீழ விடுதலைப் புலிகளையும் யுத்த நடவடிக்கைகளை கைவிட்டு போர் நிறுத்தத்திற்கான பேச்சுவார்த்தைகளுக்கு பேரம்பேசி முரண்பாடுகளுக்கான அடிப்படை பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் வகையிலான அரசியல் தீர்வினை கண்டறியும்படி வேண்டிக் கொள்கிறோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையில் ஏற்பட்டு வரும் இராணுவமயமாக்கலுக்கு ஏற்பட வேண்டிய மாற்றுவழியாக அரசியல் தீர்வுகாணுதலில் ஆர்வம் கொண்டு இலங்கையிலும் சர்வதேச நாடுகளிலும் உள்ள மக்கள் நல்லெண்ணங்களுடன் முயற்சிகளில் ஈடுபடுவது பொறுத்து நாம் அவர்களுக்கு பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம். 'உலகில் சமாதானத்திற்கான சமயங்கள்' என்னும் மாநாடு கண்டி, திருகோணமலை ஆகிய நகரங்களில் எமது பேரவையுடன் இணைந்து நடத்தப்பட்டது. அப்போது பிரசன்னமாயிருந்த பிரதிநிதிகள் சமயங்களின் உலகளாவிய பெறுமானங்கள் பேச்சுவார்த்தைகளுக்கும் பரஸ்பர புரிந்துணர்வு களுக்கும் இடமளிப்பதாக உள்ளமையினை எடுத்துக்கூறினார்கள்.

இக்கருத்துக்களுக்கு முற்றிலும் எதிர்மாறான முறையில் துன்பத்தையே தோற்றுவிப்பதான வகையில் உடனடியாகவே ஏற்பட்ட வன்முறை சம்பவங்கள் மானிட பொருளாதார செலவினங்கள் பொறுத்து சற்றும் அக்கறை காட்டாத வகையில் இராணுவ நடவடிக் கைகளே தொடரும் இருண்ட காட்சியினையே காட்டுவதாக உள்ளன. இரண்டு தரப்பினருமே ஆட்சிக்குரிய எல்லைப்பரப்பில் அடையும் ஆதாயங்களையும் எதிர்தரப்பினர் சார்ந்தவர்களை அவர்கள் பொது மக்களாயிருந்தாலும் கூடக் கவனிக்காது கொல்வதிலுமே ஆர்வம் காட்டுகின்றனர்.

அரசாங்கமும், தமிழீழ விடுதலைப் புலிகளும் பேச்சுவார்த்தை, பரஸ்பர புரிந்துணர்வு என்பன மூலம் நிலைமாற்றம் அடையாது வன்முறையைத் தொடர்கின்றன. அச்செய்முறைகளில் ஏற்றுக்கொள்ளக் கூடிய அரசியல் பிரேரணையை அரசாங்கம் முன்வைப்பதன் மூலமும், அதேநேரம் தமிழீழ விடுதலைப் புலிகள் ஐக்கியமான நாட்டினை ஏற்றுக்கொள்வதன் மூலமுமே இலங்கையில் சமாதானத்தினையும் நீதியினையும் எட்டமுடியும். இலங்கையில் தற்போது நிலவும் விரைவாக விஸ்தரிக்கப்பட்டு செல்லும் யுத்தமானது எதுவித பயனும் தராதது மாத்திரமன்றி, அனைவருக்கும் துன்பத்தையே விளைவிக்கின்ற ஒரு நிலைமையில் சமயங்களும் சிவில் சமூகங்களும் அவ்வாறான சமாதானத்திற்கான பணிகளுக்கு ஆதரவினை வழங்குமாறு தேசிய சமாதானப் பேரவை வற்புறுத்தி வேண்டி நிற்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வன்முறை வழியும் யுத்தமும் பெரும் செலவினத்தைக் கொண்டனவாகும்

08-04-2008

பெரும் வீதிகள் மற்றும் வீதிகள் அபிவிருத்தி அமைச்சரான ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளேயின் படுகொலையும், விளையாட்டு வீரர்கள் உட்பட்ட 14 பேர் கொல்லப்பட்டமை மற்றும் 80 பேர் காயமுற்றமை யாவும் புதுவருட மரதன் ஓட்டப் போட்டியின் போதான தற்கொலை குண்டுதாரியினால் செய்யப்பட்ட தாக்குதலின் பாதக விளைவுகளாகும். இவ்வாறான சம்பவங்களால் நாட்டின் இன முரண்பாடுகள் நீண்ட காலமாக தீர்க்கப்படாததால் ஏற்படும் அரசியல் தலைவர்கள் மற்றும் பொதுமக்களது படுகொலை தொடர்பான அட்டவணையினை நீட்டிக் கொண்டே செல்கின்றன.

தமிழீழ விடுதலைப் புலியினரால் செய்யப்பட்டதாகச் சந்தேகிக் கப்படும் இக்குண்டு தாக்குதல் சம்பவத்தை தேசிய சமாதானப் பேரவை கண்டிக்கின்றது. பொதுமக்களை இலக்காக்கியிருக்கும் வன்முறைகள் பெரிதும் குறைக்கூறப்பட வேண்டியவையாகும்.

அமைச்சர் பெர்னாண்டோபுள்ளே சமயம், இனம் என்பன பொறுத்து ஒரு சிறுபான்மையினத்தவராவார்: அவரால் வேறுபட்ட பல இனப்பிரிவினரிடையேயும், யுத்தம் புரிந்துக் கொண்டிருக்கும் தரப்பினரிடையேயும் மீள உறவுகளை கட்டியெழுப்புவதற்கு பெரும் பங்காற்றியிருக்க முடியும். ஆனால், அதற்கு பதிலாக அவரே அரசாங் கத்தின் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிரான இராணுவ நடவடிக் கைகளுக்கான உபாயங்களை முன்மொழிந்தவராக செயற்பட்டு இறுதியில் அவருடைய உயிரும் எடுக்கப்பட்டுவிட்டது. அதேநேரத்தில் அவர் சிவில் சமூக குழுக்களை, உதாரணமாக எமது நிறுவனம் நிலைமைகள் தொடர்பாக விமர்சனங்களை செய்து வந்தபோதிலும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூட அவரே அரசாங்கத்தின் சார்பில் சிவில் சமூகங்கள் மீது அதிகாரம் கொண்டவராக இருந்தவர் என்ற வகையில் அவர் எமக்கு சில சந்தர்ப்பங்களில் உதவிகளை செய்தும் வந்துள்ளார்.

அமைச்சர் பெர்னாண்டோபுள்ளே அரசாங்கத்தின் பிரதான பேச்சாளர். எதிர்வரும் கிழக்கு மாகாண சபை தேர்தலில் அவர் பிரதான பங்கினை வகிக்கக்கூடியவராதலால் அவருடைய இழப்பு அப்போது கூடியளவில் உணரப்படும். இப்போதைய தேர்தலில் கூடிய இடர்களை எதிர்நோக்கும் வேட்பாளர்களுக்கு, அதுவும் இப்போது பாதுகாப்பு குறைக்கப்பட்டதாக கூறப்படும் இலங்கை முஸ்லிம் காங்கிரசின் ரவூப் ஹக்கீம் போன்றோருக்கு மேலதிக பாதுகாப்பினை வழங்குமாறு நாம் அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்கிறோம்.

இன முரண்பாடுகளுக்கான தீர்வுகளை காணுவதற்கு அரசாங்கம் வன்முறையினையும் யுத்தத்தினையும் உபாயங்களாக பயன்படுத்து வதனை மீள்பரிசீலனை செய்யும்படி மீண்டும் ஒருமுறை வலிந்து பரிந்துரை செய்கிறோம். வன்முறைகள், யுத்தம் ஆகிய வழிகளில் செல்வதால் மனித உயிர் இழப்புக்கள் ஏற்படுவது மாத்திரமன்றி வாழ்க்கையை மக்கள் கொண்டு செல்வதில் ஏற்படும் இடையூறு களையும் எதிர்நோக்க வேண்டி வருவதோடு எந்தவொரு சனநாயக சமூகத்திற்கும் தாங்க முடியாத அளவில் பெரும் செலவினத்தினையும் ஏற்படுத்தக்கூடியதாயுள்ளன. அத்துடன் தமிழீழ விடுதலைப் புலி இயக்கத்தினரையும் தொடர்ந்தும் விடாப்பிடிவாதமாக வன்முறை யினையும், யுத்தத்தினை தொடர்ந்து நீடிக்கச் செய்யும் பிரசாரங் களையும் செய்வதனை விடுத்து, அரசியல் ரீதியான ஏற்பாடுகளுக்கு தயாராக இருப்பதாக முன்வந்து அதனை நம்பும் வகையில் தமது நிலைப்பாட்டினை வெளிப்படுத்துமாறும் நாம் வலிந்து கோரிக்கை விடுக்கின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மடு மாதா புனிதத்தலம் போரின் பாதிப்புக்களில் இருந்து பாதுகாக்கப்பட வேண்டும்

03-04-2008

இலங்கையின் மிக முக்கிய சமய தலமாகிய மடு மாதா புனிதத்தலத்தின் பாதுகாப்பு இப்போது நாட்டின் வடபகுதியில் இடம்பெற்று வரும் இராணுவ தாக்குதல்களுக்கு உள்ளாகியுள்ளமை வேதனைக்குரியதாகும். இலங்கையில் வாழும் வேறுபட்ட சமூகங்களினதும், வெவ்வேறு பகுதிகளில் வாழும் மக்களினதும் ஆத்மீக தேவைகளை கடந்த 400 வருடங்களுக்கு மேலாக இப்புனித தலம் பூர்த்தி செய்து வருகின்றது. அத்துடன் இப்போது நடைபெற்று வரும் யுத்தத்தின் காரணமாக தாம் வாழும் இடங்களையும் வீடுகளையும் விட்டு இடம்பெயர்ந்துள்ள ஆயிரக்கணக்கான மக்களுக்கு கடந்த இரண்டு தசாப்தங்களாக இப் புனித பிரதேசம் புகலிடம் அளித்தும் வந்துள்ளது.

இப்புனித தலம் இலங்கையில் மாத்திரமன்றி சர்வதேச நாடுகளிலும் கூட இந்த யுத்தத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு சிறந்த பாதுகாப்பான இடம் என நன்கறியப்பட்டுள்ளது. இத்தலத்தை சூழவுள்ளதும் அண்மித்துள்ளதுமான இடங்களில் யுத்தத்தை நடத்த விரும்புவதோ அல்லது அதனை கைப்பற்ற முயற்சிப்பது என்பதோ எந்தவொரு இராணுவ அல்லது அரசியல் நோக்கங்களினாலும் நியாயப்படுத்தப்பட முடியாததாகும்.

ஆலய வளாகத்திற்குள் 'ஷெல்' (குண்டுப் பொதி) வீசப்பட்டு விழுவதாகவும் அதனால் அங்கே அகதிகளாக தஞ்சம் புகுந்துள்ள இடம்பெயர்ந்த மக்கள் அவ்விடத்தை விட்டு தப்பிஓடவேண்டியிருப்பதாகவும் ஏனையோர் அங்கே அச்சத்துடன் வாழ்வதுடன் பாதுகாப்பாக இருப்பதற்காக பதுங்கு குழிகளுக்குள் செல்ல நிர்ப்பந்திக்கப்படுவதாகவும் அங்கிருக்கும் கத்தோலிக்க ஆலயத்தினர் கூறுகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வண. மன்னார் பேராயர் ராயப்பு ஜோசப் அரசாங்கத்திடமும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்திடமும் மடு மாதா புனிததலப் பிரதேசத்தினை ஒரு சமாதான வலயமாக மதித்து 1982ஆம் ஆண்டு யாத்ரீகர்களுக்கான அரச சட்டத்தின் கீழ் உட்படுத்தப்பட்டுள்ள மடுமாதா ஆலய ஒதுக்கிடமாக அடையாளம் செய்யப்பட்டுள்ள பகுதிகளை முற்றாக கத்தோலிக்க ஆலயத்தின் கீழ் இருப்பதனை உறுதி செய்யுமாறு கோரி மனு செய்திருக்கின்றார். இந்த மனுக் கோரிக்கையுடன் தேசிய சமாதானப் பேரவையும் இணைந்து அரசாங்கம், தமிழீழ விடுதலைப் புலிகள் ஆகிய இருசாராரையும் மடுமாதா புனித தலத்தினை அவர் களுடைய இராணுவ அல்லது அரசியல் தேவைகளுக்கு பயன்படுத்து வதிலிருந்து தவிர்த்துக் கொள்ளுமாறு வேண்டிக் கொள்கின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பத்திரிகையாளரை கைதுசெய்வது, அவர்கள் எந்தளவுக்கு பாதிப்புக்குள்ளாகக் கூடியவர்கள் என்பதனை சுட்டிக்காட்டுகின்றது

03-04-2008

கடந்த ஒரு மாதகாலமாக சிரேஷ்ட பத்திரிகையாளர் ஜயபிரகாஷ் திஸ்ஸநாயகத்தினை கைது செய்து தடுப்புக் காவலில் எதுவித குற்றச் சாட்டுகளுமின்றி, அரசாங்கம் தடுத்து வைத்திருக்கின்றது. இதன் காரணமாக பத்திரிகையாளர்கள் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் தொடர்புகளை வைத்திருப்பதாக கூறும் குற்றச்சாட்டுகளுக்கு உள்ளா கக் கூடியதும் அவ்வாறு பாதிக்கப்படுவதற்கான நிலைமை பற்றியும் வற்புறுத்திக் கூறப்படுகின்றது. இது பத்திரிகையாளர்கள் மத்தியில் கடுமையான கரிசனையினை ஏற்படுத்தியுள்ளது.

திரு. திஸ்ஸநாயகத்தின் அடிப்படை உரிமைகள் மீறப்படுவதாக செய்யப்பட்ட மனுவினை விசாரிக்க அனுமதி அளித்த உயர் நீதி மன்றம், அரசாங்கத் தரப்பு வழக்கறிஞர்கள் சமர்ப்பித்த அந்தரங்க அறிக்கையின் பின்னர் அவருக்கு துயர் துடைக்கும் வகையில் எதுவித விமோசனத்தினையும் அளிக்க மறுத்துவிட்டது.

அதேசமயம் பயங்கரவாத புலனாய்வு திணைக்களம் மஜிஸ்டிரேட் நீதிமன்றத்தில் ஓர் ஆணையை பெற்று திரு. திஸ்ஸநாயகம் பணிப் பாளராக பணிபுரிந்த அச்சியந்திரசாலையை மூடி முத்திரையிட்டு விட்டது. அவர் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு உதவிகள் செய்த தாகவும் அரசாங்கத்தினைப்பற்றி திரிபுபடுத்தப்பட்ட தவறான பிரச் சாரங்கள் செய்து அதன் நற்பெயருக்கு களங்கம் ஏற்படுத்தியதாகவும் குற்றஞ்சாட்டி இவ்வாறான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

தேசிய சமாதானப் பேரவை நாட்டில் அனைவரும் சட்டத்தை மதித்து அதனை பின்பற்றி எதுவித சட்டவிரோத நடவடிக்கைகளிலும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈடுபடக்கூடாது என்பதனை முற்றாக ஏற்றுக்கொள்கிறது. நாட்டில் முரண்பாடுகள் காணப்படும் சூழலில் அதுவும் அரசாங்கமும் அதில் ஒரு தரப்பாகக் காணப்படும் போது பத்திரிகையாளர்கள் அனைத்து தரப்பினரதும் தகவல், செய்திகளை உள்ளடக்கி செயற்படுகையில் பெரிதும் பாதிப்புக்குள்ளாகக் கூடியவர்களாகின்றனர்.

பொறுப்புடன் செயற்படும் பத்திரிகையாளர்கள் முரண்பாடுகளில் தொடர்புபட்ட அனைத்து தரப்பினருடனும் தொடர்பு கொண்டு தமக்கு கிடைக்கப்பெற்ற அனைத்து செய்திகளும் சரியானவையே என உறுதி செய்துகொள்ளும் கடப்பாடு கொண்டவர்கள்.

திரு.திஸ்ஸநாயகம் மீது ஏதேனும் குற்றச்சாட்டுகள் இருக்குமானால் எதுவித தாமதமுமின்றி அக்குற்றச்சாட்டுக்களை வெளியிடுமாறும் அல்லது அவர் மீது காணப்படும் குற்றங்களை நிரூபிப்பதற்கு மேலதிக தகவல்களை அரசு தரப்பு சேகரிக்க காலம் செல்லும் என கருதுவதனால் ஏதேனும் பொருத்தமான நிபந்தனைகளுடன் விசாரணை வரை அவரை பிணையில் விடுதலை செய்யுமாறும் தேசிய சமாதானப் பேரவை அரசாங்கத்திடம் கோரிக்கை விடுக்கின்றது.

திரு.திஸ்ஸநாயகம் மனித உரிமைகள், சமாதானம் என்பன குறித்து நீண்டகாலமாக ஆர்வத்துடன் செயலாற்றும் எமது ஒரு சகா என்பது மாத்திரமன்றி, அவரை நீண்டகாலத்திற்கு தடுப்புக் காவலில் வைத்திருப்பது என்பது அவர் ஆற்றிய பணியை ஒத்த பணி புரிவதில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு இவ்வாறான தீங்குகள் தமக்கும் ஏற்படலாம் என்பதனை நினைவுபடுத்துவதாகிவிடும் என நம்புகிறோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சட்டத்தின் அடிப்படையிலான ஆட்சி, மனித உரிமைகள், அதிகார பரவலாக்கம் என்பவற்றை பன்மைவாத மாநாடு முக்கியப்படுத்துகின்றது

26-03-2008

கனடிய அரசாங்கத்தின் ஆதரவோடு, சட்டத்தினை மதித்து செய்யப் படும் ஆட்சி, மனித உரிமைகள் மற்றும் அதிகார பரவலாக்கம் என்ப வற்றை முக்கியப்படுத்தும் 'தென்னாசியாவில் பன்மைவாதம்' என்னும் தலைப்பிலான இரண்டு நாள் மாநாடு தேசிய சமாதானப் பேரவையினால் கொழும்பில் ஏற்பாடு செய்யப்பட்டு, கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்று முடிவடைந்தது.

வங்காளதேசம், கனடா, இந்தியா, மாலைதீவுகள், நேபாளம், பாகிஸ்தான், இலங்கை நாடுகளிலிருந்து கற்றறிவாளர்கள், தீர்மானம் செய்பவர்கள், பத்திரிகையாளர்கள், சிவில் சமூகத்தலைவர்கள் என்போர் இந்நிகழ்ச்சியில் பங்குபற்றினார்கள்.

மாநாட்டை ஆரம்பித்துவைத்த இலங்கைக்கான கனடிய தூதுவர் அஞ்சேலா பொக்டான் தனது உரையில், கனடாவின் அடிப்படையான பெறுமானங்களில் பன்மைவாதம் ஒன்றென்று எடுத்துக்கூறி அதன் காரணமாக தனிப்பட்டவர்களும் சமூகங்களும் சமத்துவமான அந்தஸ்து கொண்டவர்களாகவும் ஒரு சமூகத்தின் நிறைவான அங்கத்தவராகவும் பங்கேற்கும் உரிமை கொண்டிருப்பதாகக் கூறினார்.

அவர் மேலும் உரையாற்றுகையில், பன்மைவாதம் என்பது சிறு பான்மை மற்றும் பெரும்பான்மை சமூகங்கள் யாவற்றிலும் ஒரு சிறந்த சமூகத்தை கட்டியெழுப்புவதற்கான சார்பான வகையில் ஒன்றிணையக் கூடியதாயிருந்ததாகவும், அங்கே பன்மைவாதம் அங்கீகாரத்திற்குட்பட்டதாயிருப்பதாகவும் குறிப்பிட்டார். அத்துடன் அவர் இந்த மாநாடு நடைபெற சாத்தியமான வகையில் உயர்மட்ட பங்கேற்பினையும் ஏனைய உதவிகளையும் வழங்கியமைக்காக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கை அரசாங்கத்திற்கு நன்றி கூறினார். அரசியலமைப்பு விவகாரங்கள் மற்றும் தேசிய ஒருங்கிணைப்பு அமைச்சர் டி.பி.டபிள்யூ. குணசேகர, இலங்கையில் மொழிப் பயிற்சியினை உயர்ச்சியடைய செய்வதற்கு வழங்கிவரும் உதவிகளுக்காக கனடிய அரசாங்கத்திற்கு நன்றி கூறினார். அரசாங்கம், நிருவாகசேவையில் தமிழ் மொழியில் போதிய அறிவு கொண்ட அலுவலர்களை தேவைப்படுமளவுக்கு நியமிக்க ஈடுபாடு காட்டி வருவதாகவும் அவர் கூறினார்.

வெளிவிவகார அமைச்சின் செயலாளர் கலாநிதி பாலித கொஹொன உரையாற்றியபோது அனைத்து கட்சி பிரதிநிதிகளைக் கொண்ட குழுவானது இப்போது இன முரண்பாடுகளுக்கு காத்திரமான இறுதி தீர்வை அடையாளம் காணுவதற்கான முயற்சியில் ஈடுபட்டுள்ள வேளையில் மாகாணங்களுக்கு அதிகாரங்களைப் பரவலாக்க வழி செய்த 13ஆவது திருத்தத்தினையே சார்பான ஆரம்பப் படியாக வைத்து செயலாற்றி வருவதாக குறிப்பிட்டார். நாட்டை மீண்டும் ஐக்கியப்பட்டதாக வளர்க்க சனநாயகத்தை உள்ளடக்கியதான அடித் தளமே அடிப்படையாகத் தேவையானது என்றும், முரண்பாடுகளால் ஏற்பட்டுள்ள காயங்களை ஆற்றுவதன் மூலம் அனைத்து பிரசை களினதும் தாயகமாக முழு நாடும் ஆக முடியும் என்றும் கூறினார்.

இலங்கையிலும் அதனை சூழ்ந்த பிரதேசத்திலும் பன்மைவாதத் தினை நடைமுறைப்படுத்துவது தொடர்பாக மாநாட்டில் பங்கேற்ற வர்கள் வெவ்வேறான செயல்முறைகள் பற்றி பிரேரணைகளை விடுத்திருந்தார்கள்.

அத்தோடு மாநாட்டில் கலந்துகொண்டவர்கள் பிரதேசத்தில் பன்மைவாதத்தினை ஊக்குவிக்க தற்போது உள்ள நிறுவன ரீதியான அமைப்பு முறைகள் பற்றி ஒப்பிட்டும் வேறுபடுத்தியும் பார்த்தமை, பிரசைகளின் பங்கேற்பு, சிறுபான்மையினரது உரிமை, பாதுகாப்பு, அரசியல் அமைப்பில் சம்பவங்களின் அடையாளங்கள், சிவில் சமூகங்களில் பன்மைவாதத்தினை வளர்த்தல், சமாதானத்திற்கான அடித்தளமாக பன்மைவாதத்தின் பயன்பற்றி விளங்கி பகிர்ந்து கொள்ளுதல், சனநாயக ஆட்சி, மனித உரிமைகள், வன்முறைமிக்க தீவிரவாதத்திற்கு எதிர் நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் என்பன விவாதிக்கப்பட்ட முக்கிய தலைப்புக்களாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சனநாயக சட்ட வழியிலான ஆட்சிக்கு படுகொலைகள் நேர் எதிர் முரணானவை

10-03-2008

யாழ்ப்பாண மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அங்கத்தவருமான கே.சிவநேசன் பாராளுமன்றத்தில் வாக்கெடுப்பில் கலந்து கொண்டு தனது குடும்பத்தினையும் நான்கு குழந்தைகளையும் காண வீடு திரும்பும் வேளையில் படுகொலை செய்யப்பட்டமை ஒரு வெறுக்கத்தக்க குற்றமாகும். அவருடைய வீடு அமைந்துள்ளதும் தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிற்கு உட்பட்டதுமான வன்னிப் பகுதியில் கிளைமோர் கண்ணிவெடி தாக்கலில் கொல்லப்பட்டுள்ளார். பாராளுமன்றத்திற்கு தெரிவு செய்யப் பட்டிருந்த ஒருவரை படுகொலை செய்ததனை தேசிய சமாதானப் பேரவை கண்டிக்கின்றது.

யுத்தம் 2005ஆம் ஆண்டு ஆரம்பித்ததன் பின்னர் இதுவரை மூன்று தமிழ் தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற பிரதிநிதிகள் கொல்லப் பட்டுள்ளனர். இலங்கை அடைய வேண்டிய சனநாயக வழியிலான சட்ட வழியிலான ஆட்சிக்கு இது முற்றிலும் நேர் எதிரானதும் முரணானதுமாகும்.

இப்படுகொலை நாட்டின் உட்பகுதிக்கு ஊடறுத்துச் சென்று செயற்படும் இலங்கை இராணுவப் பிரிவினரால் செய்யப்பட்டது என தமிழீழ விடுதலைப் புலியினர் கூறியுள்ளனர். ஆனால், இலங்கை இராணுவம் இதனை தமிழீழ விடுதலைப் புலிகளே செய்தனர் என திருப்பி குற்றம் சாட்டுகிறது. சட்டத்தினையும் நீதியினையும் நாட்டில் நிலைநாட்டி நடைபெற்ற குற்றங்கள் தொடர்பான தகவல்களை நம்பும் வகையில் உறுதிபடுத்துவதற்கான நிறுவனங்கள் இலங்கையில் தகமை யற்றிருப்பதன் காரணமாக இப்போது, அத்தகைய நிறுவனங்களை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தகமையுடைய வனவாக்க உரிய நடவடிக்கைகள் தேவையென்பதனை உறுதியாக்குகின்றது.

இலங்கையில் மனித உரிமைகள் மீறல்கள் தொடர்பான சனாதிபதியின் விசாரணை ஆணைக்குழு மீதான நம்புதிறனை உயர்த்தவும் அதன் செயற்திறன்மிக்க செயற்பாட்டிற்கு தேவையான தொழில்நுட்ப ஆலோசனைகளை வழங்கவும் இலங்கை அரசினால் வரவழைக்கப் பட்டிருந்த 'சர்வதேச புகழ்வாய்ந்த பிரமுகர்களின் குழு' வினர் நாட்டை விட்டு வெளியேறியுள்ளமை காரணமாகவும் குற்றமிழைத்தவர்களுக்கு தண்டனையிலிருந்து விலக்களிக்கும் நிலைவரம் குறித்தும் தேசிய சமாதானப் பேரவை பெரிதும் கவலையுற்றுள்ளது. மேற்படி குழுவினர் விடுத்துள்ள அறிக்கையில் இலங்கையில் அதிகாரம் கொண்டவர்கள் தமக்கு போதிய ஒத்துழைப்பை வழங்காததுடன் தம்மை மரியாதையுடன் நடாத்தவில்லை என்றும் தெரிவித்துள்ளமை பாரதூரமானதாகும். குற்றமிழைத்தவர்களை தண்டனையிலிருந்து விலக்களிக்கும் நிலைமைக்கு விமோசனம் கொண்டுவரப்படலாம் என எதிர்பார்த்தமை தொடர்பான நம்பிக்கையும் தோல்வியுற்றுள்ளது.

இத்தகைய சூழலில் தேசிய சமாதானப் பேரவை மீண்டும் அரசாங் கத்திடம் நம்பகத்தன்மை கொண்டதும், சுதந்திரமானதுமான அரச நிறுவனங்களான பொலிஸ், நீதி, மனித உரிமைகள் தொடர்பான ஆணைக்குழுக்களை ஸ்தாபிக்கக்கூடியதான அரசியலமைப்பிற்கான 17ஆவது திருத்தத்தினை நடைமுறைப்படுத்துமாறு கேட்டுக் கொள்கிறது. அத்தகைய நிறுவனங்கள் இல்லாத நிலையில், நம்பிக்கை யளிக்கும் 'சர்வதேச மனித உரிமைகள் கண்காணிப்பு பொறிமுறை யினை' நாட்டில் ஏற்படுத்துமாறு எழுப்பப்படும் பிரசித்தமான கோரஸ் குழுவினருடன் நாமும் இணைய வேண்டிய வகையில் மாற்று வழியின்றி தவிக்கின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குண்டுவீச்சு வெறுப்பினையே உருவாக்குவதுடன் சமரசம் ஏற்படுவதனை மேலும் கடினமாக்கும்

06-02-2008

நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் மேற்கொள்ளப்படும் பன்மக் குண்டுவீச்சு அது வெலிஓயா, மன்னார், கொழும்பு, தம்புள்ளை, புத்தள அல்லது வன்னி எங்கானாலும் மக்கள் வாழ்வில் கடுந்துயரங் களையும் நிச்சயமற்ற நிலைமைகளையுமே ஏற்படுத்தியுள்ளது. இத்தாக் குதல்கள் யாவுமே பொதுமக்களையே இலக்காகக் கொண்டு டசன் கணக்கானோரை கொன்றும் நூற்றுக்கணக்கானோரை காயப்படுத்தியும் உள்ளன. சில தாக்குதல்கள் நாட்டின் 60ஆவது சுதந்திர தினக் கொண்டாட்டங்களை இலக்காக வைத்து மேற்கொள்ளப்பட்டனவாகவும் தெரிகிறது. அத்துடன் இவ்வாறான தாக்குதல்கள் தடைசெய்யப்படாது எதிர்காலத்திலும் தொடரலாம் என்னும் அச்சமும் நிலவுகின்றது. இவ்வாறான அச்சம் காரணமாகவே கொழும்பில் ஒருவார காலத்திற்கு பாடசாலைகள் மூடப்பட்டுள்ளன.

அண்மையில் தமிழீழ விடுதலைப் புலிகளினால் செய்யப்பட்டது என்பதற்கான அறிகுறிகள் தென்படும் குண்டு வீச்சு தாக்குதல், கொழும்பு புகையிரத நிலையத்தில் 7 பாடசாலை மாணவர்களை கொன்றது உட்பட்ட வன்முறைகள் குறித்து தேசிய சமாதானப் பேரவை தனது கண்டனத்தை தெரிவித்துக் கொள்கிறது. இலங்கை அரசாங்கம் இப்போது புலிகளின் தலைமைத்துவத்தை தரை, வான் பரப்புக்களில் அழிப்பதற்காக செய்யும் குண்டுவீச்சுக்களால் அவர்கள் பிரதேசங்களில் வாழும் பொதுமக்கள் கொல்லப்படுவதன் காரணமாக புலிகள் இயக் கத்தின் தாக்குதல்களும் பொதுமக்களை இலக்காக வைத்து செய்யப் படுவதாக அறிவிக்கப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அண்மைக்கால குண்டுவீச்சுக்களால் கொல்லப்பட்டவர்களதும் காயப்பட்டவர்களதும் புகைப்படங்கள் கிடைக்கப்பெற்றுள்ளன. பாதிப்புக்குள்ளாகியவர்களில் சிலர் சமய அனுஷ்டானங்களுக்காக யாத்திரை சென்ற பெண்களாவர். இன்னும் சிலர் பாடசாலை மாணவர் களாவர். இவர்களை புலம்பலுடன் தூக்கிச் செல்லும் நண்பர்கள், உறவினர்களுடைய படங்களும் இவற்றில் அடங்குவன. துயருற்ற குழந்தைகளும் பெற்றோர்களும் சமாதானமும் நீதியும் நிலைநாட்டப் பட வேண்டும் என்ற காரணத்திற்காக மேற்கொள்ளப்படும் கொடுமை களினதும் குற்றங்களினதும் விளைவுகளை வீட்டில் அனுபவிக் கின்றனர். வன்னிப் பிரதேசத்தில் மேற்கொள்ளப்படும் இராணுவ நடவடிக்கைகளை கண்காணிக்க சுதந்திரமான கண்காணிப்பாளர்கள் அல்லது ஊடகங்கள் இல்லாதிருப்பதால் ஊடகங்களின் மூலம் எமக்கு அங்கே வேறெந்த (தாக்குதல்) நடவடிக்கைகளும் இடம்பெறவில்லை என்பதனை அறிவித்து உறுதி செய்ய முடியாதுள்ளது.

பஸ் வண்டிகளில் குண்டுவெடிக்கச் செய்தல் மற்றும் ஏனைய முறைகளில் பொதுமக்கள் கொல்லப்படுவதனால் பேச்சுவார்த்தை மூலமான அரசியல் தீர்வினை எட்டுவது தவிர்ந்த வேறெந்த முறை யுடனும் எம்மால் சமரசம் செய்துக் கொள்ள முடியாது உள்ளது. இச்சமயத்தில் பதவியில் இருக்கும் அரசாங்கமும், ஏனைய அரசியல் கட்சிகளும் குறிப்பாக ஐக்கிய தேசிய கட்சி என்பன விரைவாக அனைத்து கட்சி மாநாட்டை மீண்டும் கூட்டி பரஸ்பரமாக அனைத்து சாராரும் ஏற்றுக் கொள்ளக்கூடியதான இனமுரண்பாடுகளுக்கான ஒரு அரசியல் தீர்வினை கொண்டு வருதல் அத்தியாவசியமாகும்.

அரசியல் சீர்திருத்தம் மைய இடத்தினை வகிக்கும் சமாதான செய்முறையே அநியாயமாக இடம்பெறும் படுகொலைகளை நிறுத்து வதற்கான வழிமுறை என தேசிய சமாதானப் பேரவை நம்புகின்றது. நாம் இப்போது அவதானித்துவரும் போர் நடவடிக்கைகள் தொடருமே யானால் வெறுப்பிற்கான மரபுவழிச் சான்றுகளே பெருகிச் செல்வன வாயிருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனித உயிர்கள் தொடர்ந்தும் காவுகொள்ளப்படுவதால் யுத்த நடவடிக்கைகளில் மாற்றம் தேவைப்படுகிறது

01-02-2008

கடந்த செவ்வாய்க்கிழமை பாடசாலைக்கு செல்லும் சிறுவர்கள் பஸ் வண்டி ஒன்று தமிழீழ விடுதலைப் புலிகளுடைய கட்டுப்பாட்டிற்குள் உள்ள மன்னார் மடு வீதியில் சென்றுக் கொண்டிருக்கும் வேளையில் கிளைமோர் கண்ணிவெடி வெடித்ததனால் அதில் சென்ற 11 பாட சாலை மாணவர்கள் உட்பட 20 பேர் கொல்லப்பட்டுள்ளனர். அதேயள விலான இன்னும் சிலர் காயங்களுக்கு உள்ளாகியுள்ளனர். இந்த கொடிய குற்றச்செயலை தேசிய சமாதானப் பேரவை வன்மையாக கண்டிக்கின்றது.

இலக்கு வைக்கப்பட்டவர்கள் சிறுவர்கள் என்பதனால் மாத்திரம் இக்கண்டனம் கூறப்படவில்லை. இப்பகுதியானது மடுமாதா கத்தோலிக்க ஆலயம் வீற்றிருக்கும் பகுதி. அது கத்தோலிக்கர் களுக்கான புனித பிரதேசம். நாட்டின் அனைத்துப் பகுதிகளிலிருந்தும் யாத்ரிகர்கள் வருகின்றனர். அவர்கள் இப்பகுதியினை இராணுவ சூன்ய பிரதேசமாக்க வேண்டுமென விரும்புகின்றனர். மன்னார் பேராயர் வண. ராயப்பு ஜோசப் மடுப் பகுதி சமாதான வலயமாக பிரகடனம் செய்யப்பட வேண்டுமென விடுத்துவரும் கோரிக்கைகள் அலட்சியப்படுத்தப்பட்டு வருவது குறித்து நாம் வேதனையடைகிறோம்.

இச்சம்பவம் குறித்து தமிழீழ விடுதலைப் புலிகள் அரசாங்கத்தை குற்றஞ்சாட்ட, அரசாங்கமோ அதனை நிராகரித்து இவ்வாறான குற்றச் சாட்டு புலிகளின் பிரசார நடவடிக்கை எனக் கூறுகிறது. யுத்த நிறுத்த உடன்படிக்கை கைவிடப்பட்டதனால், பக்கச்சார்பற்ற கண்காணிப் பாளர்களாக பணிபுரிந்த 'இலங்கை கண்காணிப்புக்குழு' போன்ற நிறுவனங்கள் இப்போது இல்லாதுள்ள குறைபாடு பெரிதும் உணரப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படுகின்றது. பாடசாலை சிறுவர்களை தாக்கும் குற்றச் செயலை புரிந்த உங்களுடைய அடையாளங்களை திட்டவட்டமான ஆதாரங்களுடன் கண்டறிய எம்மால் முடியாது என்றாலும் இத்தகைய கொடுங்கோன்மை யானவர்கள் பாசாங்கு செய்பவர்களாகவும் கொடிய குற்றங்களை புரிபவர்களாகவும் இருந்து கொண்டு நியாயம் பெறுவதற்கு வன்முறை யான வழிமுறைகளை பயன்படுத்துகின்றனர் என்பது தெரிகிறது.

இத்தாக்குதல் சில வாரங்களுக்கு முன்னர் புத்தள பகுதியில் வைத்து தமிழீழ விடுதலைப் புலிகளால் செய்யப்பட்டதாக சந்தேகிக் கப்பட்ட கிளைமோர் கண்ணிவெடி தாக்குதலைப் போன்றதாகும். புத்தள சம்பவத்தில் பொதுமக்களை இலக்காக வைத்து குண்டை வெடிக்கச் செய்த போது 27பேர் கொல்லப்பட்டதோடு 60பேர் காய முற்றனர். இதுவரை இருந்த போர் நிறுத்த உடன்படிக்கை முடிவுக்கு வந்ததுடன் இவ்வாறான வன்முறை சம்பவங்களுடனேயே 2008ஆம் ஆண்டு ஆரம்பித்துள்ளது.

ஒரு வாரத்திற்கு முன்னர் கெப்பிட்டிகொல்லாவ பகுதிக்கு அண்மையில் உள்ள காட்டில் ஏனைய பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என நம்பப்பட்ட 16 பேரது சிதைவுற்றிருந்த உடல்கள் கண்டெடுக்கப் பட்டன. அதேயிடத்தில் தான் இரண்டு வருடங்களுக்கு முன்னர் இரண்டு பஸ் குண்டு தாக்குதலில் 80 பேருக்கு மேலானவர்கள் கொல்லப்பட்டனர்.

வியாழக்கிழமை யாழ்ப்பாணத்தில் ஏற்பட்ட குண்டு வெடிப்பில் 5 பேர் கொல்லப்பட்டனர். 15 பொதுமக்கள் காயமுற்றனர். தேசிய சமாதானப் பேரவை இவ்வாறான மோசமடைந்து செல்லும் வன்முறை களையும், குற்றம் புரிந்தவர்கள் தண்டனையிலிருந்து பாதுகாப்பளிக் கப்படுவதுமான வட்டச் செய்முறை குறித்தும் அவற்றின் விளைவுகள் குறித்தும் அவற்றிற்கு காரணமான வன்முறைகளை தடுத்து நிறுத்தும் அரசியல் முயற்சிகள் ஏதுமில்லாதது தொடர்பாகவும் ஆறாத்துயரத்தில் ஆழ்ந்துள்ளது.

இவ்வாறாக தொடர்ந்தும் மனித உயிர்கள் காவு கொள்ளப்பட்டு இந்நாட்டு மக்கள் அழிக்கப்படுவதனை தவிர்க்க வேண்டும் என்ப தற்காக முரண்பாடுகளில் ஈடுபட்டுள்ள தரப்பினர் தம்மிடையேயான முரண்பாடுகளை தீர்த்துக் கொள்வதற்காக வேறு வழியினை தெரிந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்பற்றுதல் அவசியமாகும். வன்முறை நடவடிக்கைகளை ஒழித்து விட்டு அரசியல் தீர்வினை மேற்கொள்ளாது இராணுவ தீர்வினையே நோக்கமாகக் கொண்டு சிறுவர்களது உரிமை, சமய அனுஷ்டான உரிமைகள் உட்பட பலவற்றை தியாகம் செய்து வரும் தரப்பினரை நாம் கண்டிக்கின்றோம். பொதுமக்கள் பலியாவதனை தவிர்ப்பதற்கான ஒரே வழி வன்முறைகளை ஒரு முடிவுக்கு கொண்டு வருவதாகும். முரண்பாடுகளில் ஈடுபட்டுள்ள தரப்பினர் தாம் இழைக்கும் வன்முறைகளை பொறுத்துக் கொண்டிருக்கும் மக்களுக்கு பொறுப்பு கூறவேண்டிவர்கள் என தேசிய சமாதானப் பேரவை கோரிக்கை விடுக்கின்றது.

அதேநேரம் போராட்டங்களில் சம்பந்தப்படாத அனைத்து மக்களையும் பாதுகாத்து சர்வதேச மனிதாபிமான சட்டத்திற்கு உட்பட்ட பொறுப்புக்களை நிறைவேற்றுமாறும் முரண்பாடுகளில் ஈடுபட்டுள்ள இரண்டு தரப்பினரையும் கேட்டுக் கொள்கிறோம். இற்றைக்கு அறுபது ஆண்டுகளின் முன்னர் ஒரு துளி இரத்தமேனும் சிந்தாது பெற்றுக் கொண்ட சுதந்திரத்தினை பெப்ரவரி 4ஆம் திகதியன்று இலங்கை மக்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய வகையிலும், அர்த்தமுள்ள வகையிலும் கொண்டாட ஏற்ற ஒரு வழியினை இன்னும் கண்டறிய முடியாது உள்ளமை துர்ப்பாக்கியமானதாகும். இலங்கை மக்கள் சமாதானத்துடன் வாழவும் பயணம் செய்யவும் உரித்துடையவர்கள். துக்கம், விரக்தியுடன் வாழ்வதனை விட சிறந்த நிலையில் வாழவும் உரித்துடையவர்கள். இவற்றிற்காக வன்முறையினை எமது பார்வையி லிருந்தே இல்லாது ஒழித்துவிட வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போர் நிறுத்த உடன்படிக்கை விட்டொழிக்கப்படுமேயானால் வன்முறை படிப்படியாக உயர்ந்து செல்லும்

03-01-2008

நோர்வே அரசாங்கத்தின் அனுசரணையுடன் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் 2002ஆம் ஆண்டு போர் நிறுத்தத்திற்காக அரசாங்கம் கையெழுத்திட்டு செய்து கொண்ட உடன்படிக்கையை கள யதார்த்தங்கள், பயங்கரவாதம் தொடர்கின்றமை, யுத்தம் தொடர்வதற்கான நிலை வரங்கள் காணப்படுகின்றமை என்பன காரணமாக தான் (அரசாங்கம்) விட்டொழிக்கப்போவதாக அறிவித்துள்ளது.

கடந்த இரண்டு வருடங்களாகவே தமிழீழ விடுதலைப் புலிகளும் அரசாங்கமும் போரை ஒத்த வகையினதான யுத்த நடவடிக்கைகளில் உதாரணமாக தத்தமது பாதுகாப்பு எல்லைகளை மீறுதல் எதிர் தரப்பினரது ஆட்சி எல்லையைக் கைப்பற்றுதல், இராணுவ கடல், வான் பகுதிகளில் குண்டுத் தாக்குதல், என்பவற்றால் பெருமளவு மக்களை இடம்பெயரச் செய்தல் போன்றதான மனித உரிமைகள் மீறல் என்பவற்றில் ஈடுபட்டிருந்தனர்.

மக்கள் விடுதலை முன்னணியும் ஏனைய தேசியத்துவ கட்சிகளும் போர் நிறுத்த உடன்படிக்கையை விட்டொழிக்குமாறு மீண்டும் மீண்டும் வற்புறுத்தியமையினை தொடர்ந்து அரசாங்கமும் போர் நிறுத்த உடன்படிக்கையை விட்டொழிப்பதென்ற தீர்மானத்தை செய்துள்ளது. ஆயினும் அரசாங்கத்தின் அங்கத்தவர்கள் தமிழீழ விடுதலைப் புலிகள் அல்லாத ஏனைய தமிழ் கட்சியினருடன் சமாதானத்திற்கான செய்முறைகளும் அரசியல் பேச்சுவார்த்தைகளும் தொடரும் எனக் கூறியுள்ளனர். தமிழீழ விடுதலைப் புலிகள் அல்லாத தமிழ் கட்சிகளை அரசியல் பேச்சுவார்த்தைகளில் இணைத்துக் கொள்வதற்கான தேவை உண்டு என்பது உண்மையாயினும் அதனை தமிழீழ விடுதலைப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புலிகளை ஒதுக்கிவிட்டு செய்வது என்பதும் சரியாகாது. தமிழீழ விடுதலைப் புலிகளுடன் கடந்த காலங்களில் செய்திருந்த சமாதான செய்முறைகளை முற்றாக நிராகரித்து விடுதல் என்பது பெரும் செலவினங்களைக் கொண்டதும், வெற்றிக்கு உத்தரவாதம் இல்லாததும், மீண்டும் பழைய நிலைக்கு திரும்ப முடியாத நிலைக்குத் தள்ளிச் செல்லும் வகையில் முரண்பாடுகள் முடியும் வரையிலான ஒரு யுத்தத்திற்கு வழி வகுப்பதாகவே அமையும்.

இவற்றுடன், போர் நிறுத்த உடன்படிக்கையை கைவிடுவதனால் அவ்வுடன்படிக்கையின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட 'இலங்கை கண்காணிப்புக் குழு' (SLMM) அளித்துவரும் பங்களிப்பும் முடிவுக்கு கொண்டு வரவேண்டியதாகிவிடும். இலங்கை கண்காணிப்புக் குழுவில் அங்கம் வகித்த சர்வதேச கண்காணிப்பு குழுவினர் யுத்தம் மற்றும் மனித உரிமை மீறல்கள் ஏற்படுவதனை தடுக்க முடியாதிருந்த போதிலும், அவர்கள் நேரடியாகவே முரண்பாடுகள் இடம்பெறும் வலயங்களில் பிரசன்னமாயிருந்து நடைபெற்ற சம்பவங்களை பதிவு செய்து முரண்பட்டுக்கொண்டிருக்கும் தரப்பினரிடமும் சர்வதேச சமூகத்தினரிடமும் அறிவித்துக் கொண்டிருந்தனர்.

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் தொடர்பான அமைப்பானது களத்தில் செயற்படுவதற்கு அரசாங்கம் மறுத்திருக் கின்றமையும், 'விசாரணை ஆணைக்குழுவினாலும்' (Col) 'சுதந்திரமான மாண்புமிகுந்த நபர்களைக் கொண்ட குழுவினாலும்' அவர்களுக்கு வழங்கப்பட்டிருந்த பணிகளை பயனுள்ளவகையில் செய்து முடிக்க முடியாது போயுள்ளமையும், தேசிய மனித உரிமைகள் ஆணைக்குழு தரங்குறைக்கப்பட்டுள்ளமையும் காரணமாக இலங்கையில் மனித உரிமைகளுக்கு தகுந்த இடமளிக்கும் முயற்சிகளுக்கு மேலும் கூடிய இடையூறுகள் ஏற்பட்டுள்ளன.

தற்போதைய சூழ்நிலையில் யுத்தநிறுத்த உடன்படிக்கை விட்டொழிக்கப்படுவது குறித்து தேசிய சமாதானப் பேரவை ஆழ்ந்த கவலையடைந்துள்ளது. ஏனெனில், முரண்பாடுகளுக்கு உட்பட்டுள்ள வலயங்களில் வாழும் துயருற்றுள்ள குடிமக்களுக்கு இதனால் தமது முறைப்பாடுகளை எடுத்துக்கூற தகுதிவாய்ந்த அதிகார நிறுவனம் இல்லாது போய்விடும் ஆபத்துண்டு என்பதாலாகும். அத்துடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனால் வெளி உலகுக்கு நம்பிக்கைக்குரிய வகையில் தகவல்கள் செல்வதற்கும் தடை ஏற்பட்டுவிடும்.

இவ்விடைவெளி காரணமாக மனித உரிமை தொடர்பான பணிகள் இக்கட்டான நிலைமைக்கு தள்ளப்படுவதுடன் குற்றமிழைத்துவிட்டு தண்டனைகளில் இருந்து தப்பித்துக்கொள்பவர்கள் தொடர்பாகவும் மனித உரிமை மீறல்களை ஒரு முடிவுக்கு கொண்டு வருவதற்காகவும் நடவடிக்கைகள் எடுக்குமாறு முரண்பாடுகளில் மோதிக் கொள்ளும் தரப்பினருக்கு அழுத்தங்களை கொடுத்தும் சமாதானத்தை ஊக்கு வித்தும் வரும் குழுக்களுக்கும் பெரும் இடையூறாகவே அமையப் போகின்றது.

புதுவருட ஆரம்பகாலத்தில் இலங்கையின் மிகப் பெரிய எதிர்க் கட்சியினை சார்ந்த அரசியல்வாதியும் தமிழ் மொழி பேசுவோரது மனவேதனைகளை எடுத்து கூறி வருபவருமான ஒருவரை படுகொலை செய்தமையும், கொழும்பு நகரின் இருதயப் பகுதியில் இராணுவ பஸ்வண்டியை குண்டுவைத்து தகர்த்தபோது குடிமக்கள் பலர் கொல்லப் பட்டமையும், போர் நிறுத்த உடன்படிக்கை விட்டொழிக்கப்படு கின்றமையும், அதன் காரணமாக அதனால் நிறுவப்பட்ட இலங்கை கண்காணிப்புக்குழு போன்றவை இல்லாதாக்கப்படுகின்றமையும் காரணமாக தேசிய சமாதானப் பேரவை ஆழ்ந்த அக்கரையும் துயரும் அடைந்துள்ளது.

இப்போதைய யுத்தமும், அச்சுறுத்தும் நிலைவரங்களும் வெகு விரைவில் ஒரு முடிவுக்கு வந்துவிட வேண்டும் என்றும், பகுத்தறிவு வாதமும் மனித உரிமைகள் மீதான முழு அக்கறையும் முரண்பாடு களில் ஈடுபட்டுள்ள தரப்பினரிடம் ஏற்பட்டு, பேச்சுவார்த்தைக்கு மீண்டும் வந்து பகையுணர்ச்சியுடனான செயல்களையும் அரசியல் படுகொலைகளையும் குற்றச் செயல்களையும் உள்ளடக்கிய பயங் கரங்கள் யாவற்றையும் ஒரு முடிவுக்கு கொண்டுவர வேண்டுமென நாம் பிரார்த்தித்து அவை ஏற்படும் என நம்பிக் கொண்டிருக்க மட்டுமே முடிகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீவிரவாதமும் சுயநலமும் கொண்ட அரசியலை ஒழித்துவிட்டு சர்வதேச சட்டத்தினை நிலைநிறுத்துவோம்

17-01-2008

இலங்கையின் தென்கிழக்கில் உள்ள புத்தள பகுதியில் வைத்து பிரயாணிகள் பயணிக்கும் பஸ்வண்டியில் கிளைமோர் கண்ணிவெடி வைத்து 27 பொதுமக்களை கொன்றும் ஏனைய 60 பேர்களை காயப் படுத்திய சம்பவம் இதுவரை பொதுமக்களை தாக்கிய சம்பவங்களின் வரிசையில் மிக அண்மையில் ஏற்பட்ட ஒன்றாகும். தமிழீழ விடுதலைப் புலிகளே இந்த தாக்குதலுக்கு பொறுப்பானவர்கள் என சந்தேகிக்கப்படுகின்றனர்.

இச்சம்பவத்தினை தேசிய சமாதானப் பேரவை வன்மையாகக் கண்டிக்கின்றது. அப்பாவி பொதுமக்களை குறிவைத்து தொலைவில் இருந்து கட்டுப்படுத்தும் வெடிகுண்டு கருவிகளைப் பயன்படுத்தி தாக்குவது ஒரு கொடிய குற்றமாகும். இவ்வாறான பயங்கரவாத செயல்கள் சமூகத்தில் மேலும் தீவிரவாதம் பொறுமை இழந்து செல்லும் நிலைமைகளை வலிமையடையச் செய்வனவாதலால் அவற்றிற்கு எதிராக கடுமையான பாதுகாப்பு அவசியமாகின்றது.

இவ்வாறான செயல்களால் இழந்த உயிர்களுக்கும், உதாசீனம் செய்யப்பட்ட மனிதாபிமான உணர்வுகளுக்குமாக தேசிய சமாதானப் பேரவை தனது ஆழ்ந்த துக்கத்தினையும் வேதனையையும் தெரிவித்துக் கொள்கிறது. தற்போது நிகழ்ந்துவரும் முரண்பாடுகள் காரணமாக பொதுமக்களுக்கும் அனைத்து சமூகங்களுக்கும் எதிரான கொடுமைகள் விளைவிக்கப்படுகின்றமை வேதனைக்குரியதாகும். நாகரிக மன உணர்வுடனான தீர்மானங்களை மேற்கொண்டு நாட்டை வேறான வழியில் கொண்டு செல்லாவிட்டால் இவ்வாறான சம்பவங்கள் நாட்டில் தொடர்ந்து கொண்டே செல்லும் ஆபத்து கண்டு அஞ்சுகிறோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தகைய பின்னணியில் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகளுக்கான உயர் ஸ்தானிகர் லூயிஸ் ஆர்பர், சர்வதேச சட்டம் அனைத்து பொதுமக்களையும் பாதுகாக்கும் பொருட்டு அனைத்து தரப்பினரையும் தான்தோன்றித் தனமாக உயிர்களை பலிகொள்வ தனையும், மக்களை தடுத்து வைத்தல், பலவந்தமாக இடம்பெயரச் செய்தல், பலவந்தமாக காணாமற் போகச் செய்தல், சித்திரவதை மற்றும் கொடூரமானதும் மனிதாபிமானமற்ற வகையில் அல்லது தரங்குறைந்த வகையில் நடாத்துதல் அல்லது தண்டித்தல், சிறுவர்களை யுத்த நடவடிக்கைகளுக்கு பயன்படுத்துவது என்பவற்றினை இல்லா தொழிக்கும் கடப்பாடுடையவர்களாக செயற்படவேண்டும் என எதிர்பார்ப்பதாக வெளியிட்ட அறிக்கையினை நாம் வரவேற்கின்றோம்.

இவற்றைத் தொடர்ந்து அவர் மேலும் கூறுகையில் மேற்கூறிய வற்றை மீறுபவர்களையும், அக்காலகட்டத்தில் அதிகாரத்தில் இருப்ப வர்களையும் சர்வதேச குற்றவியல் சட்டத்தின் கீழ் பொறுப்புக்கூறுமாறு வற்புறுத்தி கேட்டு நிர்ப்பந்திக்கலாம் எனக் கூறினார். இலங்கையில் கண்காணிப்பு குழுவிலிருந்து செயற்பட்ட நோர்டிக் நாட்டு கண்காணிப் பாளர்களுக்கு முரண்பாடு நிலவும் காலத்தின் போது நிலைவரங்களை பற்றிய தகவல்களை வழங்கிக் கொண்டிருந்த கள மட்ட கண்காணிப்பு சாதனங்கள் இல்லாதொழிக்கப்படுவதற்கு அரசாங்கத்தினால் கைவிடப் பட்ட யுத்த நிறுத்த உடன்படிக்கை வழிவகுத்திருந்தமை துரதிஷ்ட வசமானதாகும்.

ஐக்கிய நாடுகள் சபையினால் மேற்கொள்ளப்பட்ட கள (முரண்பாடு நிலவும்) கண்காணிப்பிற்கு அரசாங்கம் எதிர்ப்பு தெரிவித்தது. இதனால் ஏற்பட்ட குறைபாட்டை நிவர்த்தி செய்யும் வகையில் கண்காணிப்புப் பணியில் அனுபவங்கள் கொண்டதும், சர்வதேச மனித உரிமைகள் தொடர்பாக கடந்த காலங்களில் சிறப்பாக பணியாற்றிய அனுபவமும் அங்கீகாரம் பெற்றதும் அதற்காக கள மட்டத்திறன் கொண்டதுமான, சிவில் சமூக அமைப்புக்களை கண்காணிப்பு பொறிமுறைகளை மீண்டும் நடைமுறைப்படுத்தி செய்யப்படுவதனை உறுதி செய்வ தற்காகத் தேவைப்படும்போது பயன்படுத்தும்படி தேசிய சமாதானப் பேரவை அரசாங்கத்திடம் கோரிக்கை விடுக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றைய நாட்டு நிலைவரங்களின்படி வன்முறைகள் உச்சமடைந்து காணப்படுகின்றமையினால் நாட்டின் பிரதான அரசியல் கட்சிகளிடம் தீவிரவாதமானதும், சுயநலமிக்கதுமான அரசியலை தவிர்த்து விட்டு மனிதாபிமானதும், நியாயமானதுமான அரசியல் உபாயங்களை சர்வதேச சட்டங்களுக்கு உட்பட்ட வகையில் வடிவமைத்து நீண்ட காலமாக தொடர்ந்துகொண்டிருக்கும் இன முரண்பாடுகளுக்குத் தீர்வு காணும்படி தேசிய சமாதானப் பேரவை கேட்டுக் கொள்கின்றது.

தற்போது 'அனைத்துக் கட்சிகளுடைய பிரதிநிதிகள் குழு' உள்ளடக்கியுள்ள அனைத்து அரசியல் கட்சிகளும் நீண்டகாலமாக எதிர்பார்த்திருக்கும் அரசியல் பிரேரணையை ஜனவரி 23ஆம் திகதி தமிழ் மக்களுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் ஒரு சார்பான சமிக்ஞையினை அனுப்புவதற்கான வாய்ப்பு ஏற்பட்டிருப்பதாக நம்புகிறோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேச மனிதாபிமான நிறுவனங்களுடனான சிவில் சமூகத்தின் கூட்டொருமைப்பாடு

17-01-2008

கடந்த சில மாதங்களாக இலங்கையின் அரசியலில் உள்ள சில பிரிவினரும் மற்றும் ஊடகங்களும் ஒன்று சேர்ந்து திட்டமிட்ட வகையில் சர்வதேச மனிதாபிமான நிறுவனங்களையும் ஐக்கிய நாடுகள் சபையினது நிறுவனங்களையும் அவர்கள் தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்கள் எனக் குற்றஞ்சுமத்தி அவதூறுகளுக்கு உள்ளாக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. கீழே கையெழுத்திட்டுள்ள நாம் யாவரும் சிவில் சமூக அங்கத்தவர்கள்.

இலங்கையில் யுத்த காலத்தின் போது அழிவுகளுக்கு உள்ளாகியும் மற்றும் வறுமையினால் பாதிக்கப்பட்ட இலங்கை மக்களுக்கு நீண்ட காலமாகவே பல்வேறுவகைகளிலும் பயனுள்ள முறையில் பணியாற்றி வந்துள்ள இந்நிறுவனங்களுக்கும் ஏனைய அரசு சாரா நிறுவனங் களுக்கும் எதிராக மேற்கூறிய வகையில் அவர்களுடைய நல்லெண்ணங் களுக்கு அவதூறு கூறும் வகையிலான குற்றச்சாட்டுகளை கூறுவது பொறுத்தும் அவர்களை நடத்தும் விதத்தைப் பொறுத்தும் பெரிதும் அக்கறையுடன் (விசனத்துடன்) அவதானித்து வந்துள்ளோம்.

நாட்டின் வடக்கு, கிழக்குப் பகுதிகளில் வாழும், யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மேற்கூறிய நிறுவனங்களே நிறுவன ரீதியாக ஆறுதல் தரும் வகையில் பணியாற்றும் நிறுவனங்களாக இருந்து வந்துள்ளன. நாம் வடக்கு, கிழக்குப் பகுதிகளில் உள்ள உள்ளூரில் இடம்பெயர்ந்துள்ள மக்கள் தங்கியிருக்கும் அகதி முகாம்களில் அம் மக்களுக்கு ஆறுதல் தரும் வகையில் தொடர்ச்சியாகவும் ஒரு சீராகவும் ஆதரவு தருவதன் மூலம் சர்வதேச மனிதாபிமான நிறுவனங்களே தொண்டாற்றி வருவதாக நேரடியாக கேட்டறிந்து கொண்டோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையின் தென்பகுதியில் சுனாமியினால் பாதிப்புக்குள்ளாகி யிருந்த பாடசாலைகளை யுனெஸ்கோ நிறுவனம் புனர் நிர்மாணம் செய்து வருகிறது. கிளிநொச்சியில் இயங்கும் புலிகளின் குரல் என்னும் புலிகளுடைய வானொலி ஒலிபரப்பு நிலையத்தை தாக்கியபோது பொதுமக்களும் பாதிக்கப்பட்டமைக்கு எதிராக யுனஸ்கோ நிறுவனம் கண்டித்ததற்காக அந்நிறுவனம் கடுமையாக (அரசியல்வாதிகளால்) விமர்சனத்திற்கு ஆளாகியது. வானொலி ஒலிபரப்பு நிலையம் இராணுவ இலக்கு அல்ல என்பதால் ஏனைய சுதந்திர ஊடகங்களுக்கான நிறுவனங்களும் இத்தாக்குதலை கண்டித்திருந்தன. அத்தாக்குதலின் போது 'புலிகளின் குரல்' வானொலி நிலைய அலுவலர்கள் மூவரும் ஆறு பொதுமக்களும் கொல்லப்பட்டிருந்தனர்.

அத்துடன் பெர்கொப் (Berghuf) நிறுவனமானது அரசாங்கத்திற்கும் சிவில் சமூக அலுவலர்களுக்கும் கணிசமான ஆதரவு வழங்கிவரும் நிறுவனமாகும். அந்நிறுவனமும் கூட கடுமையான விமர்சனங்களுக்கு ஆளாகியது மாத்திரமன்றி, அந்நிறுவனத்தின் இயக்குனரது விசாவும் இரண்டு முறைகள் நீக்கப்பட்டன.

மேற்கூறியவாறு யுனிசெப் மற்றும் 'இலங்கை சிறுவர்களை பாதுகாப்போம்' ஆகிய நிறுவனங்களும் கடும் விமர்சனங்களுக்கும் கண்டனங்களுக்கும் ஆளாகியுள்ளன. SLRC நிறுவனத்தின் இரண்டு அலுவலர்கள் கடத்திச் செல்லப்பட்டமைக்காகவும் பின்னர் கொல்லப் பட்டதற்காகவும் யுனிசெப் நிறுவனத்தின் சர்வதேச, உள்ளூர் அலுவலர் கள் தமது எதிர்ப்பினை தெரிவிக்கும் வகையிலான ஊர்வலம் ஒன்றில் 2007ஆம் ஆண்டு கலந்து கொண்டதற்காக விமர்சிக்கப்பட்டனர். அனைத்து சிறுவர்களதும் உரிமைகளும் உலகெங்கும் அங்கீகரிக்கப் பட்டு அவர்களை பாதுகாப்பதற்கான பொறுப்பினை அனைவருமே ஏற்றுக்கொள்வதான ஓர் உலகினை கட்டியெழுப்புவதனை ஊக்கு விக்கும் ஒரு சக்தியாக யுனிசெப் செயற்படுகிறது. 'இலங்கையில் சிறுவர்களை பாதுகாப்போம்' நிறுவனமானது உலகின் பழைமையான நிறுவனமான 'சிறுவர்களுக்கான சுதந்திரமான சர்வதேச கூட்டமைப்பு' சிறுவர்களது உரிமைகள் முழுமையாக அவர்களுக்கு கிட்டுவதற்காக பணியாற்றும் நிறுவனமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இது முன்னர் சிறுவர்களை பாதுகாப்பதற்கான நிதியம் SCF என அடையாளம் காணப்பட்டதாகும். 'யுனிசெப்' நிறுவனமும் 'இலங்கையில் சிறுவர்களை பாதுகாப்போம்' நிறுவனமும் இலங்கையின் தேசிய சிறுவர்களை பாதுகாப்பதற்கான அதிகாரசபையுடன் நெருக்கமாக இணைந்து செயற்படுகின்றன. இலங்கையின் தேசிய சிறுவர்களை பாதுகாப்பதற்கான அதிகாரசபை சிறுவர்களை துஷ்பிரயோகம் செய்தலி லிருந்து பாதுகாத்து புனருத்தாரணத்திற்கு வகைசெய்தல் போன்றவற்றில் ஈடுபட்டுள்ள நிறுவனமாகும். மேற்கூறிய இரு நிறுவனங்களும் (யுனிசெப், SCSL) இலங்கையில் சிறுவர்களது நலன்களை பாதுகாப்ப தனை ஊக்குவிப்பதிலும், அதற்கான மனிதாபிமான உதவிகளை வழங்குவதிலும் நீண்டகாலமாக பங்களிப்பினை அளித்து வந்துள்ளன. அவற்றில் குறிப்பாக தமிழீழ விடுதலைப் புலிகள், சிறுவர்களை போருக்காக சேர்த்துக்கொண்டமையினை கவனத்தில் கொண்டு ஆவன செய்துள்ளமையும் அதுவும் அண்மையில் கருணா பிரிவினர் இவ்வாறாக செயற்பட்டு சர்வதேச பரிசீலனைக்கு அவற்றை கொண்டு வந்தமையினையும் குறிப்பிடலாம்.

இவ்விரு நிறுவனங்களும் சிறுவர்களுக்கு கல்வி வசதிகளை வழங்குதல், இடம்பெயர்ந்தவர்களுக்கு நீர், கழிவகற்றலுக்கான வசதி களை வழங்குதல் போன்ற அத்தியாவசிய சேவைகளை வழங்கி வந்ததன் மூலம் மிக முக்கிய பங்கினை வகித்துள்ளன.

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு ஆயுத கொள்வனவுக்காக நிதி சேகரித்து வழங்குவதற்கு அனுசரணையாக செயற்பட்டதாகக் கூறப் படும் தமிழ் நிவாரண நிறுவனம் (TRO) ஐக்கிய அமெரிக்காவிலும் இலங்கையிலும் அதன் நிமித்தம் தடைசெய்யப்பட்ட நிறுவனமாகும். அவ்வாறான அந்நிறுவனத்துடன் இவை (யுனிசெப் SCSL) இரண்டும் கூட்டாக செயற்பட்டதாகவும் கூறப்பட்ட குற்றச்சாட்டுக்கள் முக்கிய மானவை.

இவ்விரு நிறுவனங்களும் தமிழ் நிவாரண நிறுவனத்துடன் பல்வேறு திட்டங்களில் இணைந்து செயற்பட்டிருந்தது உண்மை என்றாலும், அரசாங்கம் அதனை (TRO) அதிகரித்த அளவில் கண்காணித்து இலங்கை வங்கிகளில் அது வைத்திருந்த வங்கிக் கணக்குகளை கைப்பற்றியதனால் 2006ஆம் ஆண்டோடு, தமது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்புகளை நிறுத்திக் கொண்டன. எவ்வாறாயினும் இந்நிலைமைகளின் தோற்றத்திற்கு முன்னர், குறிப்பாக முன்னர் பதவியிலிருந்த இரண்டு அரசாங்கங்களின் ஆட்சியின் போதும், சமாதான செய்முறைகள் உச்ச நிலையில் இருந்தபோதும் மற்றும் சுனாமியின் பின்னரும் மனிதாபிமான நிறுவனங்களை தமிழ் நிவாரண நிறுவனத்துடன் இணைந்து பங்காளிகளாக செயலாற்றுமாறு அரசாங்கம் ஊக்குவித்தது மாத்திரமன்றி, அதனை (TRO) ஒரு அரசுசாரா நிறுவனமாகவும் கூட பதிவுசெய்திருந்தது. இந்நிலையில் இந்த இரு நிறுவனங்களும் தமது நம்பக தன்மையினை நிரூபிக்கும் வகையில் அரசாங்கத்தை தமக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக பரிசீலனை செய்யும்படி தாமாக முன்வந்து கேட்டுக்கொண்டன. இது அவர்களது நம்பக தன்மைக்கு நல்ல சான்றாகும்.

அத்துடன் அவற்றின் நேர்மைக்கும் அது உதாரணமாவதுடன் நாட்டில் ஏனையோருக்கும் ஒரு முன்மாதிரியாகவும் இருந்தது. இருந்த போதிலும். இவ்விரு நிறுவனங்களையும் பரிசீலனைக்கு உட்படுத்தி அவற்றின் இயக்கமே தடை செய்யப்பட்டு விட்டன. ஏனெனில், அந்நிறுவனங்களை கடந்த பல வருடங்கள் தொடர்பான தகவல்களை சமர்ப்பிக்கும்படி நிர்ப்பந்தித்து அவர்களை அவர்களுடைய ஏனைய பணிகளை செய்யவிடாது நெருக்கடி செய்ததுடன், தொடர்ந்து அந்நிறுவனங்களுக்கு எதிரான பிரசாரங்களை செய்து அவற்றின் அலுவலர்களை ஊக்கமிழக்கவும் செய்ததனால் இயல்பாகவே அந்நிறுவனங்கள் தமது பிரதான கடமைகளில் ஈடுபட முடியாது போயிற்று.

அண்மையில் மனிதாபிமான உதவிகளுக்கான அரசாங்கத்தின் ஆலோசனைக் குழு (CCHA) சர்வதேச நிதிவழங்குபவர்களுடன் இணைந்து தேங்கி நிற்கும் பரிசீலனைகள் முடிவடையும் வரையிலும் மற்றும் சம்பந்தப்பட்டவர்கள் தமது விளக்கங்களை சமர்ப்பிக்கும் வரையிலும் பொதுத்துறை விமர்சனங்களை கண்டிக்க முயன்றது. இவ்வாறாக அரசாங்கமும் CCHA யும் இணைந்து ஐக்கிய நாடுகள் சபையையும் மற்றும் மனிதாபிமான உதவிகளை வழங்கும் அதன் ஏனைய நிறுவனங்களையும் ஆதரிக்கும் வகையில் செயற்படுவதனை நாம் பாராட்டுகின்றோம். இவ்வாறான நடத்தை கடந்த காலங்களில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்த விமர்சனங்கள் தேவையற்றவை என்னும் கருத்தை ஏற்றுக் கொண்டமையினை காட்டுகின்றது.

யுனிசெப், மற்றும் SCSL நிறுவனங்களை இழிவுபடுத்தல் என்பது இலங்கையில் பெரிதும் பாதிப்புக்குள்ளாகி பெருமளவு தேவைகளை கொண்ட மக்கள் பிரிவினரது மனங்களை நோகச் செய்வதாகும். இவர்களில் பெரும்பான்மையினருக்கு அரசாங்கம் அவர்களது அடிப்படையானதும் அத்தியாவசியமானதுமான பல சேவைகளை வழங்க வேண்டிய பொறுப்புக்களை கொண்டிருந்தாலும், அதனால் அவற்றை வழங்கக்கூடிய தயார் நிலையில் அது இல்லை என்பதனை யும் இங்கே குறிப்பிட்டும் கூற வேண்டியுள்ளது. யுனிசெப் SCSL ஆகிய நிறுவனங்கள் மீதான விமர்சனம் என்பது அவை வழங்கும் மனிதாபிமான, அபிவிருத்திப் பணிகளை (இலங்கை) தியாகம் செய்யத் தயாரான ஒரு சமரச நிலையினைக் காட்டுவதாகவும் அந்நிறுவனப் பணியாளர்களது பாதுகாப்பிற்கு நெருக்கடியும் அச்சுறுத்தலும் ஏற்பட்டுள்ளதாகவும் கருத வேண்டியுள்ளது. அரசியல்வாதிகளும் ஊடகங்களும் அந்நிறுவனங்களின் பணியாளர்களை பெயர் கூறி அடையாளம் செய்வது காரணமாக அவர்கள் கொண்டுள்ள அச்சம் அதிகரித்துள்ளதுடன் ஏனைய மனிதாபிமான நிறுவனங்களின் ஊழியர்களையும் தொடர்ந்து செயற்படுவது குறித்து ஊக்கமிழக்கவும் செய்துள்ளது. இவ்விரு நிறுவனங்கள் மீதுமான தாக்குதல்கள் மனிதாபி மான நிறுவனங்கள் மீதான தாக்குதல்களின் ஒரு பகுதியேயாகும்.

கடந்த இரண்டு வருடங்களில் மனிதாபிமான நிறுவனங்களின் ஊழியர்கள் கொலை செய்யப்பட்டும் காணாமல் போனது மாத்திர மன்றி அலுவலர்களுக்கும் வாகனங்களுக்கும் கூட சேதம் விளைவிக்கப் பட்டுள்ளது. அத்துடன் அச்சுறுத்தல்கள், பயமுறுத்தல்கள் என்பன காரணமாக இப்போது இலங்கையில் இவ்வாறான நிறுவனங்கள் பணியாற்றுவது பெரும் சவாலுக்குள்ளாகியுள்ளது.

அரசு சாரா நிறுவனங்களின் ஊடாக மனிதாபிமான உதவிகளை வழங்குவது என்பது இலங்கையில் மட்டுமன்றி பூகோள ரீதியாகவே உதவிகளை கொண்டு செல்வது தொடர்பான ஒரு முக்கிய பிரச்சினை யாகும். சர்வதேச அரசு சாரா நிறுவனங்களும் மற்றும் அரசு சாரா நிறுவனங்களும் திறந்த முறையில் வெளிப்படையாக அவர்களது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிதி மற்றும் நடைமுறைகள் தொடர்பாக ஐயமற்ற முறையில் நடந்து கொள்ள வேண்டும் என்பதனை நாம் ஏற்றுக்கொள்கிறோம்.

நிதிகளை தவாறகப் பயன்படுத்துவது தொடர்பான குற்றச்சாட்டு கள் பரிசீலனை செய்யப்பட வேண்டும். அரசாங்கம் அதன் கண்காணிப்பு பொறிமுறைகளை பலப்படுத்தி அரசு சாரா நிறுவனங்களுக்கான செயலகத்தை செயற்றிறன் மிக்கதாக்க வேண்டும் என்பதனையும் நாங்கள் சிபாரிசு செய்கின்றோம். ஆனால், இவ்வாறான முயற்சிகள் 'சூனியக்காரிகளை வேட்டையாடும்' செய்முறையாக அமைந்து அரசு சாரா நிறுவனங்களை அழிக்கும் முயற்சிகளில் ஈடுபடுவதாக இருக்கக் கூடாது. அவ்வாறு செய்வது அந்நிறுவனங்களின் நற்பெயருக்கு பங்கம் விளைவிக்கச் செய்வதுடன் அவர்கள் மீதான குற்றச்சாட்டுக் களுக்கு தகுந்த பதிலளிக்க வாய்ப்பளிக்காமல், போவதால் இறுதியில் இவற்றின் விளைவாக இலங்கையில் பெரிதும் பாதிப்புக்குள்ளாகி தேவைகள் பூர்த்தி செய்யப்படாது துன்புறும் மக்களே இழப்புக்களுக் குள்ளாகி துன்பமடைய நேரிடும்.

ஒருசில அரசு சாரா நிறுவனங்கள் தமது நிதிகளை தவறாகப் பயன்படுத்துவதாகவும், துஷ்பிரயோகம் செய்வதாகவும் இருக்கலாம். அதன் காரணமாக அனைத்து நிறுவனங்களையும் கண்டிக்கவோ, குறைகூறவோ முயற்சிக்கக்கூடாது. அத்துடன் சர்வதேச ஆதரவினை குறிப்பாக ஐ.நா. சபையின் ஆதரவுகளை நிராகரிக்க முடியாது. ஏனெனில், அவற்றின் வாயிலாக இலங்கையில் பெருமளவுக்கு பாதிப்புக்குள்ளாகக் கூடியதும் தமது தேவைகளை பூர்த்தி செய்து கொள்ள முடியாத பிரிவினர் தொடர்ந்தும் நன்மையைடைந்து வருகின்றனர்.

பெறுகின்ற நிதிக்கு சரியாகவும் நேர்மையாகவும் திறந்த முறையில் ஐயமற்றதாக கணக்கு சமர்ப்பிக்க வேண்டும் என கோரிக்கை விடுக்கும் அதேவேளையில் அரசாங்கம், அரசியல்வாதிகள், ஆயுதக் குழுக்கள் மற்றும் ஊடகங்கள் உட்பட்ட அனைத்துசாராரையும் அவர்கள் நிறுவனங்கள் மீது குற்றஞ் சுமத்தும் போது பொறுப்புடன் செயலாற்று மாறும் கேட்டுக்கொள்கின்றோம்.

உள்ளூரில் செயற்படும் சிவில் சமூகப் பிரதிநிதிகள் ஆகிய நாம் சர்வதேச சிவில் சமூகத்துடன் பங்காளிகளாக பணிபுரிவதனை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம்புகிறோம். தேசிய, சர்வதேச நிறுவனங்களின் அலுவலர்களுடனும் நிறுவனங்களுடனும் அதுவும் குறிப்பாக சமாதானம், அபிவிருத்தி, சனநாயகம், இலங்கையில் மனித உரிமைகளை மதித்தல் என்பன தொடர்பாக ஈடுபாடு கொண்டவர்களுடன் எமது கூட்டொருமைப்பாடு எப்போதும் நிலைத்திருக்கும். எமது நாட்டில் இப்போது தெளிவாகத் தோன்றும் மனித உரிமை மீறல்களுக்கு எதிர்ப்புத் தெரிவிப்பதற்காக எம்முடன் இணைந்துள்ள அனைவரதும் ஊக்கத்தினை நாம் வரவேற்ப துடன், அதன் காரணமாக அவர்கள் விமர்சனங்களுக்கு ஆளாகின்றமை குறித்து எமது ஆழ்ந்த வேதனையையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**கையெழுத்திட்ட நிறுவனங்கள்**

யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கான கழகம்

மனித உரிமைகளுக்கும் அபிவிருத்திக்குமான மையம் - கொழும்பு

மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம்

சமத்துவத்திற்கான தளம், இலங்கை

சுதந்திர ஊடக இயக்கம்

இன்போர்ம்

இன உறவு ஆய்வுகளுக்கான சர்வதேச மையம், கொழும்பு

சர்வதேச இயக்கம் முரணானது (IMA)

சட்டம் மற்றும் சமூக அறக்கட்டளை

இலங்கை தாய்மாரும் பெண் குழந்தைகளும்

முஸ்லிம் தகவல் மையம் - இலங்கை

இலங்கை தேசிய சமாதானப் பேரவை

சனநாயகத்திற்கான உரிமைகளை ஒன்றுதிரட்டும் மையம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வன்முறை கலாசாரம் முழுநாட்டிலும் பரவிவிடலாம் என்னும் அச்சுறுத்தல்

09-01-2008

தேசத்தை கட்டியெழுப்பும் அமைச்சர் டி.எம். திசாநாயக்கா கொழும்பு நகரின் புறப்பகுதியில் பாராளுமன்றம் செல்லும் வழியில் தமிழீழ விடுதலைப் புலிகளுடைய நடவடிக்கையென சந்தேகிக்கப்படும் கிளைமோர் நிலக்கண்ணிவெடியினால் படுகொலை செய்யப் பட்டுள்ளார். எதிர்க்கட்சி பாராளுமன்ற பிரதிநிதியான ரி.மகேஸ்வரன் படுகொலை செய்யப்பட்ட ஒரு வாரத்திற்குள் இப்படுகொலையும் இடம்பெற்றுள்ளது.

இவ்வாறாக அண்மைக்காலத்தில் மக்களால் தெரிவுசெய்யப்பட்ட அரசியல்வாதிகளை எதுவித நியாயமும் அற்ற வகையில் படுகொலை செய்தமையினையும், அவர்களோடு அச்சந்தர்ப்பத்தில் இருந்த பொது மக்கள் சிலரை கொன்றும் காயப்படுத்தியமையும் குறித்து தேசிய சமாதானப் பேரவை தனது கடும் கண்டனங்களை தெரிவித்துக் கொள்கிறது. இவை நாட்டில் வன்முறை கலாசாரங்கள் மென்மேலும் பெருங்குழப்பங்கள் ஏற்படவும் வழியேற்படலாம் எனவும் அஞ்ச வேண்டியுள்ளது.

அமைச்சர் தசநாயக்கா ஒரு மாகாணமட்ட அரசியல்வாதி. அவர் அரசாங்கத்தில் எதுவித முக்கிய பங்கினையும் வகிக்காதவர். அது மட்டுமன்றி, அவர் யுத்தம் தொடர்பான எதுவித குற்றச்சாட்டுக்கும் உட்பட்டவரும் அல்ல. இன முரண்பாடுகளில் எதுவித முதன்மை பங்காளியும் அல்ல. இவற்றின் காரணமாக அரசாங்க அரசியல்வாதிகள் அனைவருமே தமிழீழ விடுதலைப் புலிகளது படுகொலைக்கு இலக்காகலாம் என்றே அனுமானிக்கப்படக்கூடியதாக இருக்கிறது. இது மாத்திரமன்றி அதே தினம் கொழும்பில் உள்ள விமானப்படை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைமையகத்திற்கு அருகாமையிலும் இன்னுமோர் கிளைமோர் கண்ணிவெடியும் வெடித்துள்ளது. குண்டு வெடிப்பதற்கு சில வினாடி களுக்கு முன்னர் விமானப்படை தலைவர் அவ்வழியே சென்றிருக் கின்றார். எனவே, அது அவரை இலக்கு வைத்ததாகவும் இருக்கலாம். இது தமிழீழ விடுதலைப் புலிகளின் உள்வாரியான புலனாய்வுப் பிரிவின் தலைவரை அரசாங்கப்படைகள் பதுங்கியிருந்து தாக்கியதன் இரண்டு நாட்களுக்கு பின்னர் ஏற்பட்ட தாக்குதலாகும். இவையாவும் அரசாங்கம் யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை முடிவுக்கு கொண்டு வந்ததன் பின்னர் உடனடியாக ஏற்பட்டிருப்பதனால் நாடு மீண்டும் அமைதி வாழ்வில் பின்நோக்கிச் சென்று வன்முறைகளை தொடர்ந்தும் அனுபவிக்கப் போகின்றமையினையே உறுதி செய்வதாகிறது.

அரசாங்கம் தான் தனது வடபகுதி இராணுவ நடவடிக்கைகள் மூலம் தமிழீழ விடுதலைப் புலிகளை பலவீனப்படுத்தியுள்ளதாக கோருகின்றது. ஆனால், இவ்வாறான சம்பவங்கள் காரணமாக இத்தருணத்தில் வடக்கு, கிழக்கு மற்றும் ஏனைய பகுதிகளில் வாழும் பொது மக்களது பாதுகாப்புக்கு அரசாங்கத்தினால் உறுதி கூற முடியுமா என வினா எழுப்புகின்றோம்.

வடபகுதி மக்கள் தம்மீது பிணை வைத்து செய்யப்படும் இவ்வா றான பாதிப்புக்கள் காரணமாக பெரும் அச்சத்துடன் வாழ்கின்றனர். தமிழீழ விடுதலைப் புலிகள் தமது கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்கும் பகுதிகளை இராணுவ நடவடிக்கைகள் மூலம் அரசாங்கம் மீட்டெடுத் தாலும், வடக்கு, கிழக்குப் பகுதிகளில் ஏற்படக்கூடிய கெரில்லா தாக்கு தல்களால் வடக்கு, கிழக்கு பகுதிகளிலும் நாட்டின் ஏனைய பகுதி களிலும் பரஸ்பர அழிவுகளே உடனடியாகவோ அல்லது சிறிது காலம் தாழ்த்தியோ இடம்பெறப்போகின்றன. எனவே முரண்படும் தரப்பினர் ஒரு புதிய போர் நிறுத்த உடன்படிக்கைக்கு பேச்சுவார்த்தைகள் மூலமாக வரதீர்மானித்து அதன் மூலம் அரசியல் தீர்வுக்கான பேச்சு வார்த்தைகளுக்கு முன்வருவதன் மூலமே பெருமளவு உயிர்களை பாதுகாக்கமுடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயங்கரவாதத்திற்கு எதிரான யுத்தம் அதிகரித்தளவிலான வன்முறையினை தோற்றுவிக்கின்றது

03-01-2008

புது வருடத்தினத்தன்று கொழும்பு மாவட்ட பாராளுமன்றப் பிரதிநிதி தியாகராஜா மகேஸ்வரன் கொழும்பில் உள்ள இந்து கோயிலினுள் வைத்துப் படுகொலை செய்யப்பட்டமை அதிர்ச்சியினை அளிப்பதுடன், நாட்டில் நிலவும் உள்நாட்டு சண்டை காரணமாக நிலைமையை கட்டுப்படுத்த இயலாதுள்ளதுடன் நாகரிக தரங்கள் முற்றாக நிராகரிக்கப் பட்டுள்ளமையினையே தெளிவாகக் காட்டுகின்றது.

இரண்டு வருடங்களுக்கு முன்னர் கிறிஸ்மஸ் பண்டிகை அன்று மட்டக்களப்பு கத்தோலிக்க ஆலயத்தில் வைத்து மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற பிரதிநிதி ஜோசப் பரராஜசிங்கம் படுகொலை செய்யப் பட்ட முறையிலேயே இந்த படுகொலையும் இடம்பெற்றுள்ளது.

இலங்கையின் பல்லினங்களையும் கொண்ட மிகப் பெரிய எதிரணியான ஐக்கிய தேசிய கட்சியின் அங்கத்தவரும் வன்முறையற்ற அரசியலுக்கு பலியானவருமான ஒரு அரசியல்வாதியின் படுகொலையினை தேசிய சமாதானப் பேரவை வன்மையாகக் கண்டிக்கின்றது. யாழ்ப்பாண மாவட்டத்தின் முன்னாள் பாராளுமன்ற பிரதிநிதியாக பணியாற்றிய காலத்தில் அங்கே நீதிக்குப் புறம்பான வகையிலான கொலைகள் வழக்கமாக இடம்பெற்று வந்த வன்முறை சூழலில் மக்கள் படும் அவலங்களை துணிவுடன் எடுத்துக் கூறி வந்தவர். தொலைக் காட்சியில் சில நாட்களுக்கு முன்னர் ஒலிபரப்பாகிய பேட்டியில் யாழ்ப்பாணத்தின் நிலைவரங்கள் தொடர்பான விபரங்களை பாராளுமன்றத்தின் தான் அடுத்த கூட்டத்தில் வெளியிடப் போவதாகவும் கூறியிருந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்குறிப்பிட்டது போன்ற படுகொலைகளுக்குப் பொறுப்பான கொலைகாரர்களில் ஒருவரையேனும் இன்று வரை கைது செய்து தண்டனைக்குட்படுத்தப்படாததன் காரணமாக இந்நாட்டில் பொறுப்புக் கூறும் நிலைவரம் இல்லாதுள்ளது என்பதனை நாம் அழுத்திக் கூற வேண்டியுள்ளது.

கொலை செய்தவர்கள் தண்டனையிலிருந்து பாதுகாக்கப்படும் ஒரு சூழல் நாட்டில் இடம்பெறுகிறது. குற்றஞ்சாட்டப்பட்டு கைதானவர் களும் கூட தற்போது மருத்துவமனைகளிலேயே கைவக்கப்பட்டிருப் பதால் சரியான முறையில் விசாரணைகளை செய்வதன் மூலம் படுகொலை செய்தவர்களை மாத்திரமன்றி அத்தகைய படுகொலை யைச் செய்ய தூண்டியவர்களையும் கண்டறிய வாய்ப்புக்கள் உள்ளன. அவருக்கு (கைது செய்யப்பட்டவருக்கு) அதிகபட்ச பாதுகாப்பினை அளித்து விரைவாக பொறுப்பு கூறக்கூடியதும் நம்பகத்தன்மை மிக்கதும், ஒழிவுமறைவற்றதுமான விசாரணையை மேற்கொண்டு உண்மையை கண்டறிய வேண்டும். அவ்வாறாக விசாரணை செய்யா விடின் அரசாங்கம் சட்டத்தின் அடிப்படையிலான ஆட்சியையும் நடைமுறைகளையும் பின்பற்றுவதற்கு தன்னை அர்ப்பணித்து செயற் படவில்லை என்னும் கடுமையான குற்றச்சாட்டுக்கு ஆளாக நேரிடும்.

சட்டத்தை நடைமுறைப்படுத்தி அதனை மீறுபவர்களை கண்டறிந்து விசாரித்து நடவடிக்கை எடுப்பதே அரசினுடைய பிரதான கடமையாகும். குற்றச் செயல்களைப் புரிந்தவர்களை கைது செய்ய பாதுகாப்புப் படையினர் தவறுவதன் காரணமாக, அண்மைக்காலங்களில் ஏற்பட்ட வன்முறைகள் என்பவை அவர்களுடைய திறமையின்மையினையும், ஆற்றலின்மையினையும் வெளிப்படுத்துவதுடன் மறுபுறத்தில் குற்றம் புரிபவர்கள் தண்டனையிலிருந்து விலக்களிக்கப்பட்டு பாதுகாப்பு பெறுவது தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்ள கண்காணிப் பாளர்களை ஊக்குவிப்பதாகவும் உள்ளது. இவ்வாறன நிலைவரங் களால் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் கண்காணிப்பு குழுவினை இலங்கையில் பிரசன்னமாயிருக்கும்படி சர்வதேச அழுத் தங்கள் ஏற்படுவது பலப்படுத்தப்படுவதுடன் நியாயப்படுத்தப்படவும் வாய்ப்பு ஏற்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அச்சுறுத்தல்களுக்கு ஆளாகிய மற்றும் அரசாங்கத்தினை விமர்சிக்கும் அரசியல்வாதிகளுக்கு வழங்கப்படும் பாதுகாப்பு அரசாங்கத்தினால் குறைக்கப்படும் நடைமுறை தொடர்பாகவும் நாம் விசனத்தை தெரிவித்துக் கொள்கிறோம். மகேஸ்வரனுடைய பாதுகாப்பாளர்களின் எண்ணிக்கை கடந்த மாதம் 18ஆக இருந்தது பின்னர் இரண்டே பேர்களாக குறைக்கப்பட்டிருந்தது. அத்துடன் கொழும்பு மாவட்ட பாராளுமன்ற பிரதிநிதியான மனோ கணேசன் மனித உரிமைகள் மீறல்கள், குறிப்பாக காணாமல் போனோர் கடத்தப்பட்டோர் தொடர்பாக போராடும் ஓர் அரசியல்வாதி. அவர் தனது பாதுகாப்பை மீண்டும் தரும்படி அரசாங்கத்திற்கு விடுத்த கோரிக்கைகள் பலனளிக்காது போனதால் அவரது உயிருக்கு அச்சுறுத்தல் நிலவுவதன் காரணமாக தற்போது வெளிநாடு சென்றுள்ளதாக அறிய முடிகிறது.

தமிழீழ விடுதலைப் புலிகளை இராணுவ ரீதியாக தோல்வியடையச் செய்ய அரசாங்கம் முயற்சிக்கும் அதேவேளையில் சனநாயக அரசியலில் ஈடுபட்டுள்ள தமிழ் அரசியல்வாதிகளை கொல்லும் நடவடிக்கைகளும் நாட்டில் இடம்பெற்று வருகின்றன. கடந்த இரண்டு வருடங்களில் படுகொலை செய்யப்பட்ட மூன்றாவது தமிழ் பாராளுமன்ற பிரதிநிதி மகேஸ்வரனாவார். திரு.பரராஜசிங்கத்துடன் யாழ் மாவட்டத்தைப் பிரதிநிதித்துவம் செய்த திரு.நடராஜா கொழும்பில் வைத்து கொல்லப்பட்டார். இந்த படுகொலைகள் தொடர்பாக செய்யப்பட்ட புலனாய்வுகள் மூலம் எவரும் இதுவரையிலும் அரசாங்கத்தினால் கைது செய்யப்படவும் இல்லை முடிவு ஏதும் ஏற்படவும் இல்லை.

பல அரசாங்கத் தலைவர்கள் புதுவருடம் யுத்தத்தினைக் கொண்டதாக இருப்பதாகவும் பயங்கரவாதம் இறுதியில் வெல்லப்படும் என்றும் விபரித்துள்ளனர். எவ்வாறாயினும் தன்னியக்கம் கொண்ட கிளைமோர் நிலக்கண்ணிவெடியினால் கொழும்பின் இருதயமாகக் கருதப்படும் வர்த்தகப் பகுதியில் புதுவருடத்தை அடுத்த நாளில் இராணுவ பஸ்வண்டி ஒன்று வெடித்து சிதறியதில் மூன்று குடிமக்கள் உட்பட நான்கு பேர் கொல்லப்பட்டுள்ளமை, நாடு பெரிய அபராதத்தினை செலுத்த வேண்டியமைக்கான அறிகுறியாக இவை காணப்படுகின்றன. தமிழீழ விடுதலைப் புலிகளால் செய்யப்பட்டதாகச் சந்தேகிக்கப்படும் தாக்குதல் பொதுமக்கள் கூட்டம் கூட்டமாக நடமாடும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பகுதிகளில் இடம்பெற்றிருப்பதால், அப்பாவி மக்கள் இன்னும் பெருமளவில் அழிக்கப்படலாம் என்ற அச்சத்தால் இதனை தேசிய சமாதானப் பேரவை பெரிதும் கண்டிக்கிறது.

புது வருடத்தின் ஆரம்ப காலத்திலேயே வன்முறைச் சம்பவங்கள் ஏற்பட்டுள்ளமை எதிர்வரும் காலங்களில் கொழும்பில் மாத்திரமன்றி, முரண்பாட்டு வலயங்களான வடக்கு, கிழக்குப் பகுதிகளிலும் மேலும் மோசமாக இடம்பெறலாம் என்பதற்கு இவை அறிகுறிகளாக இருப்பதாக எண்ணி அஞ்சவேண்டியுள்ளது. முரண்பாடுகளில் ஈடுபட்டுள்ள தரப்பினரை ஜெனிவா ஒப்பந்தத்தை மதித்தும் பின்பற்றியும் பொது மக்களது உயிர்களுக்கு பாதுகாப்பளிப்பதனை உறுதி செய்யுமாறு தேசிய சமாதானப் பேரவை வலுவாகப் பரிந்துரை செய்கிறது. அத்தோடு அரசாங்கத்தினையும் தமிழீழ விடுதலைப் புலிகளையும் நாம் நீண்ட காலமாகவே கோரிவருவதனைப் போன்று இரத்தம் சிந்தலை நிறுத்தி இன முரண்பாடுகளை அரசியல் வழிமுறைகள் மூலம் தீர்த்துக் கொள்ளுமாறு மீண்டும் வற்புறுத்தி கேட்டுக் கொள்கிறோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிக்கை- 74

# போர் நிறுத்த ஒப்பந்தம் கைவிடப்படுமானால் வன்முறைகள் கிடுகிடுவென உயரலாம்

17-01-2008

நோர்வே அரசாங்கத்தின் அனுசரணையுடன் 2002ஆம் ஆண்டு தமிழீழ விடுதலைப் புலிகளுடன் போர் நிறுத்தத்திற்காக கையெழுத்திட்ட ஒப்பந்தத்தை கைவிடப்போவதாக அரசாங்கம் செய்துள்ள தீர்மானம் பொறுத்து இந்த கூட்டறிக்கையின் இறுதியில் கையெழுத்திட்டுள்ள சிவில் சமூக நிறுவனங்கள் தமது ஆழ்ந்த கரிசனத்தினையும் விசனத் தையும் தெரிவித்துக் கொண்டனர். தற்காலிக போர் நிறுத்தங்களின் போது பேச்சுவார்த்தைகள் மூலமாக சமாதானத்திற்கான ஒப்பந்தத்தினை எட்டியிராது இருந்திருப்பார்களேயானால் அப்போர் நிறுத்தங்கள் நீண்டகாலம் தொடர்ந்ததில்லை என்பதே கடந்த காலங்களிலும் கண்டறிந்த அனுபவங்களாகும்.

முரண்பாட்டிற்கு பொறுப்பான தரப்பினர் போர் நிறுத்த ஒப்பந்தம் காரணமாக ஏற்பட்ட சமாதான செய்முறைகளை பயன்படுத்தி அரசியல் தீர்வினைக் காணுவதற்கு மனம் ஒத்து முயற்சிக்கவில்லை.

அதனைப் பயன்படுத்தி 1. அரசாங்கம் 2. தமிழீழ விடுதலைப் புலிகள் மற்றும் 3. இலங்கை மக்கள் ஆகிய முச்சாராரும் இணைந்து தீர்வினை எட்ட முயற்சித்திருக்கலாம். அதனை விடுத்து கடந்த இரண்டு வருடங்களாக அரசாங்கமும் தமிழீழ விடுதலைப் புலிகளும் வாய்ப் பேச்சில் போர் நிறுத்தத்தை ஆதரித்தனரே ஒழிய உண்மையாக இரு தரப்பினருமே மனித உரிமைகளை மீறுதல், மற்றவரது பாதுகாப்பு எல்லைக் கோட்டைத் தாண்டிச் செல்லுதல், எதிர்த்தரப்பினரது கட்டுப் பாட்டு எல்லைகளுக்குள் நுழைதல், பீரங்கி தாக்குதல், கடல் வான் வழியாக குண்டுகளை வீசுதல் போன்றவற்றினை தவிர்ப்பதற்காக ஆவன செய்யவில்லை. மாறாக யுத்தத்தினை தூண்டுவிப்பதற்கான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடவடிக்கைகளில் ஈடுபட்டதனால் அவற்றினால் பெருமளவு மக்கள் இடம்பெயரவும் நேரிட்டது.

போர் நிறுத்த உடன்படிக்கை கையெழுத்திடப்பட்டதால் இலங்கை பிரசைகளுக்கு பல்வேறு நன்மைகள் வந்து சேர்ந்தன என்பதும் உண்மைதான். அது ஒப்பளவில் ஒரு சமாதான காலத்திற்கு நாட்டையும் மக்களையும் இட்டுச் சென்றது. முரண்பாட்டினால் நேரடியாகப் பாதிக் கப்பட்ட பொதுமக்கள் தமது வாழ்க்கையை மீண்டும் கட்டியெழுப்பிக் கொள்ள வாய்ப்பளித்ததுடன், வீடுகளை திருத்தி வாழ்வாதாரத்தினை பலப்படுத்திக் கொள்ளவும் வாய்ப்புக்களை ஏற்படுத்தியது.

அத்துடன் எவருக்கும் உரிமையற்றதான நிலப்பிரப்பின் இரு புறத்திலும் பொதுமக்கள் சுதந்திரமாக பயணம் செய்யவும் ஒப்பளவில் யுத்தத்தினால் ஏற்பட்ட அச்சுறுத்தல்களில் இருந்து விடுவிக்கப்பட்ட துடன் பாதுகாப்புடன் இருப்பதாகவும் உணர்வதாக காணப்பட்டனர். போர் நிறுத்த உடன்படிக்கை காரணமாக ஏற்பட்ட 'யுத்தமும் இல்லை - சமாதானமும் இல்லை' என்ற நிலைமையின் விளைவாக அரசாங் கத்திற்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் பேச்சு வார்த்தைக்கான சூழ்நிலை உருவாக்கப்பட்டது மாத்திரமன்றி, பொருளாதார வளர்ச்சியினை அதிகரிக்கச் செய்வதற்கும், இலங்கைக்கு வெளிநாட்டு உதவிகளை பெற்றுக் கொள்வதற்குமான சாதகமான சூழலையும் உருவாக்கியிருந்தது.

சிவில் சமூக நிறுவனங்கள் சமாதானம் மற்றும் மனித உரிமைகள் என்பன பொறுத்து ஆழ்ந்த கரிசனம் கொண்டிருப்பதால் நாம் அனைவருமே போர் நிறுத்த உடன்படிக்கையினை முற்றாக ஆதரிக்க முன்வந்தோம். ஆயினும் போர் நிறுத்த உடன்படிக்கை இப்போது மீறப்படுவது காரணமாக நாம் ஆழ்ந்த வேதனையடைகிறோம். இக் காலப்பகுதியில் மனித உரிமைகள் மீறப்படுதல், வன்முறை சம்பவங்கள் இடம்பெறுகின்றமை என்பன குறித்தும் வேதனையடைகிறோம். எனவே போர் நிறுத்த ஒப்பந்தத்தை அமுலாக்கம் செய்வதில் குறிப் பிடத்தக்க மேம்பாடுகள் தேவையென்பதனை எங்களால் இனங்காண முடிகிறது.

வன்முறைகள் அதிகரிப்பதாலும் மற்றவர் மீதான நம்பிக்கை யின்மை காணப்படுவதனாலும் சமாதானப் பேச்சுவார்த்தை முறிவ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டைந்தது. எனவே போர் நிறுத்த உடன்படிக்கையினை வலிமையடையச் செய்யவும், தேவையானால் அதில் திருத்தங்களை கொண்டு வர வேண்டும் என்பதனையும் பல சாராரும் இனங்கண்டுள்ளனர். ஆயினும், இரத்தம் சிந்தலுக்கான வன்முறை சம்பவங்களை நிறுத்தவோ அல்லது அதற்கு உடன்படவோ சம்பந்தப்பட்டவர்கள் முன்வரவில்லை.

மக்கள் விடுதலை முன்னணியும் (ம.வி.மு.) ஏனைய தேசியவாத கட்சிகளும் யுத்த நிறுத்தத்தை கைவிடுமாறு தொடர்ந்தும் வற்புறுத்தி வருவதனைத் தொடர்ந்து அரசாங்கமும் போர் நிறுத்த உடன்படிக்கையை கைவிடுவதற்கான தீர்மானத்தை மேற்கொண்டுள்ளது. அரசாங்கத்தின் அங்கத்தவர்கள் தாம் சமாதானத்திற்கான செய்முறைகளையும் தமிழீழ விடுதலைப் புலிகள் அல்லாத ஏனைய தமிழ் கட்சிகளுடனான அரசியல் பேச்சுவார்த்தைகளையும் தொடருவோம் எனக் கூறிவருகின்றனர்.

தமிழீழ விடுதலைப் புலிகளல்லாத கட்சிகளுடன் அரசியல் பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டு இன முரண்பாடுகளுக்கான ஒரு தீர்வினை கொண்டு வருவது மிக முக்கியமானது என்பது ஒரு தெளிவான தேவையாயிருக்கும் அதேவேளையில், பேச்சுவார்த்தை களில் தமிழீழ விடுதலைப் புலிகளை ஒதுக்கி விட்டுத்தான் செயற் படலாம் என்பதும் இயலாத காரியமாகும். தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பின்பற்றிய கடந்த கால சமாதான செய்முறைகளை முற்றாக ஒழித்துக் கட்டிவிடும் அரசின் நிலைப்பாடான மீண்டும் புதிதாக சண்டையிட்டு ஒரு முடிவைக் காணும் செய்முறை என்பது பெரும் செலவினங்களைக் கொண்டிருப்பதுடன் வெற்றியடைவதற்கும் உத்தரவாதமற்று காணப்படுகின்றது. அத்துடன் மீண்டும் பழைய நிலைக்கு செல்லக்கூடிய வாய்ப்புக்கள் இல்லாது போகும் ஆபத்து முண்டு.

போர் நிறுத்த உடன்படிக்கை கைவிடப்படுவதோடு அந்த உடன்படிக்கையின் கீழ் உருவாக்கப்பட்ட 'இலங்கை யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழு' ஆற்றிய பங்கும் முடிவுக்கு வந்துவிடப் போவதனையிட்டு நாம் வேதனையடைகிறோம். இலங்கை, யுத்த நிறுத்த கண்காணிப்புக்குழுவில் அங்கம் வகித்த சர்வதேச கண்காணிப் பாளர்களால் யுத்தம் மற்றும் மனித உரிமைகள் மீறல்கள் தொடர்பாக சம்பவங்கள் இடம்பெற்ற அனைத்து சம்பவங்களையும் தவிர்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடியாதிருந்த போதிலும் அக்குழு முரண்பாடுகள் இடம்பெற்ற மையங்களில் ஒரு மூன்றாவது தரப்பாக பிரசன்னமாயிருந்து, சம்பவங்களை ஆவணப்படுத்தியும் அவற்றை முரண்படும் தரப்பினருக்கும் சர்வதேச சமூகங்களுக்கும் முறையாக அறிவித்தும் வந்துள்ளனர்.

அக்குழுவின் பிரசன்னம் காரணமாக மேலதிக வன்முறைகளும் உடன்படிக்கை மீறல்களும் ஒரு அளவில் தடுக்கப்பட்டிருந்தன என்பதும் உண்மையாகும். இப்போது அக்கண்காணிப்புக் குழு அகற்றப்பட போவதால் வடக்கு, கிழக்கு, தெற்குப் பகுதிகளில் வாழும் பொதுமக்கள் கூடியளவான இடர்களுக்கு உள்ளாகப் போகின்றனர். ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் தொடர்பான பிரதிநிதிகள் களத்தில் பிரசன்னமாவதை அரசாங்கம் நிராகரித்துள்ளது.

விசாரணைக்கான ஆணைக்குழு (COI) மற்றும் நன்கு பிரபல்யமான நபர்களைக் கொண்ட சர்வதேச ரீதியிலான சுதந்திரமான குழு (ILGEP) என்பவற்றிற்கு கொடுக்கப்பட்டிருந்த கடமைகளை அவற்றால் சிறப்பான முறையில் செய்து முடிக்க இயலாது போனமை மற்றும் தேசிய மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் அதனது கடமைகளையும், பொறுப்புக்களையும் சரியாக செய்து முடிக்க முடியாது போனமை என்பன காரணமாக இலங்கையில் மனித உரிமைகளுக்கு போதிய இடம் வழங்குவதற்கான வாய்ப்புக்கள் அழிவுக்குள்ளாகின என்றே கூறவேண்டியுள்ளது.

போர் நிறுத்தம் கைவிடப்படுவதால் இப்போதுள்ள சூழ்நிலையில் முரண்பாடுகள் நிலவும் வலயத்தில் துரதிஷ்டமிக்க பொதுமக்களுக்கு தமது குறைபாடுகளை முறைப்பாடு செய்ய நம்பிக்கைக்குகந்த அதிகார நிறுவனங்கள் இல்லாது போகும் நிலையேற்படும். அத்துடன் நிறுவனங்கள் இல்லாது போகும் நிலைமையும் ஏற்படும். அத்துடன் ஒவ்வொரு சம்பவத்தினையும் நடுநிலையிலிருந்து அவற்றின் பண்பினை சீர்தூக்கிப் பார்த்து ஆவணப்படுத்தி அறிவிக்க எவரும் இல்லாது போகும் குறைபாடும் நிலவப் போவதால் ஆயுதம் தாங்கிய தரப்பினர் தாம் செய்யும் பாரதூரமான வன்முறைகளையும் அத்துமீறல்களையும் தாம் செய்யவில்லை என இலகுவாக மறுப்புக்கூறி விசாரணைகளில் இருந்து தப்பிக் கொள்ள முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவற்றின் விளைவாக மனித உரிமைகள் மீறல், மற்றும் முரண் படும் தரப்பினர் மீது அழுத்தங்களை கொடுத்து தண்டனையிலிருந்து விலக்களிக்கப்படும் பிரச்சினைகள் தொடர்பாக அழுத்தங்களை கொடுக்க மனித உரிமைகளுக்கும் சமாதானத்திற்குமாக செயற்படும் குழுக்களுக்கு இடையூறுகள் ஏற்பட முடியும். மறுபுறத்தில் யுத்தத்தில் ஈடுபட்டுள்ள தரப்பினர் எதிர்தரப்பினரைப் பற்றிய சம்பவங்களை மிகைப்படுத்தியும் உண்மைக்கு மாறாக பெரிதுபடுத்தியும் ஆரம் பித்ததை அடுத்து பாராளுமன்ற உறுப்பினர்கள் கொல்லப்பட்டமை, வடக்கில் கடுமையாக குற்றஞ்சுமத்தவும் முடிவதால் உண்மை எதுவென தெரிந்துக் கொள்வதில் தப்பான முடிவுகளுக்கு நடுநிலை பேணுபவர்களை இட்டுச் செல்லவும் முடியும்.

புதுவருடம் யுத்தம் நடைபெற்று பொதுமக்களை இடம்பெயரச் செய்துள்ளமை என்பவற்றுடன் இப்போது போர் நிறுத்த உடன்படிக் கையும் கைவிடப்பட்டு, அதன் காரணமாக முன்னர் நிறுவப்பட்ட நிறுவனங்கள் இப்போது இல்லாதாக்கப்படுகின்றமை என்பவற்றால் நாம் அதிர்ச்சியடைந்துள்ளதுடன் அது தொடர்பாக ஆழ்ந்த கவலை யுடனும் இருக்கின்றோம். இக்காலத்தில் ஏற்பட்ட யுத்தமும் வன்முறை கள் வெகு விரைவில் ஒரு முடிவுக்கு வரவேண்டும், முரண்பாட்டில் ஈடுபட்டுள்ள தரப்பினர் மீண்டும் பேச்சுவார்த்தைக்கு திரும்ப வேண்டும், அனைத்து எதிர்ப்பு நடவடிக்கைகளையும் முடிவுக்கு கொண்டுவர வேண்டும், அரசியல் கொலைகள் மற்றும் குற்ற நடவடிக் கைகளை கைவிடவேண்டும் என்பதில் பெரிதும் ஆர்வமாக இருக் கின்றோம்.

இலங்கையில் பேச்சுவார்த்தைகளின் மூலம் சமாதானத்தை கொண்டுவர வேண்டும் என்பதில் அக்கறையுடன் ஈடுபாடு காட்டி வரும் சர்வதேச சமூகங்களிடம், எமது வரலாற்றில் மிகவும் கடுமை யான இக்காலகட்டத்தில் வாழ்ந்து வரும் எங்களுடன் இணைந்து செயற்படுமாறு கோரிக்கை விடுப்பதுடன் இலங்கை அரசாங்கம், தமிழீழ விடுதலைப் புலிகள் மற்றும் இலங்கையின் அரசியலில் உள்ள அனைத்து தரப்பினரிடமும் அவர்களால் என்னென்ன முறைகளில் தலையிட்டு யுத்த வழியிலான நடவடிக்கைகளை கைவிட்டுவிட்டு, உடனடியாக சமாதானத்திற்கான செய்முறைகளுக்கு வரச் செய்ய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடியுமோ அந்தளவுக்கு தமது செல்வாக்கைப் பயன்படுத்துமாறும் கேட்டுக் கொள்கின்றோம்.

**கையெழுத்திட்ட நிறுவனங்கள்**

யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கான கழகம்

சமூகம், சமயம் என்பவற்றிற்கான மையம்

மனித உரிமைகளுக்கும் அபிவிருத்திக்குமான மையம் - கொழும்பு

மாற்றுக் கொள்கைகளுக்கான மையம்

சமூக நடவடிக்கைக்கான கிறிஸ்தவ உறவு

மனிதாபிமான நிறுவனங்களுக்கான இணையம்

சமத்துவத்திற்கான தளம், இலங்கை

இன்போர்ம்

மனித உரிமைகளுக்கான இல்லம், கொழும்பு

மனித அபிவிருத்தி நிலையம்

மனித உரிமைகளுக்கான வள மையம்

இன உறவு ஆய்வுகளுக்கான சர்வதேச மையம், கொழும்பு

சர்வதேச இயக்கம் முரணானது (IMA)

வேறுபாடுகாணல் மற்றும் இனவாதம் (நிறுவனம்)

சட்டம் மற்றும் சமூக அறக்கட்டளை

இலங்கை தாய்மாரும் பெண் குழந்தைகளும்

மனித உரிமைகளுக்கும் சனநாயகத்துக்குமான மன்னார் பெண்கள்

முஸ்லிம் தகவல் மையம் - இலங்கை

முஸ்லிம் பெண்களுக்கான ஆய்வுக்கும் நடவடிக்கைகளுக்குமான அரங்கம்

இலங்கை தேசிய சமாதானப் பேரவை

சனநாயகத்திற்கான உரிமைகளை ஒன்றுதிரட்டும் மையம்

செட்டிக் (Setik) கண்டி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கை தேசிய சமாதானப் பேரவை
12/14, புராண விஹாரை வீதி, கொழும்பு - 06
தொ.பே.இல.- 0094 11 28818344, 2854127
தொலைநகல் - 0094 11 2819064
இணையத்தளம் - www.peace.srilanka.org
மின்னஞ்சல் - info@peace-srilanka.org

ISBN 978-955-1274-68-9

Printed by Kumaran Press (Pvt) Ltd. kumbhlk@gmail.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org